
திக்குத்
தெரியாத
காட்டில்
ரமணிசந்திரன்

# திக்குத் தெரியாத காட்டில்



## 1

**கா**ரிலிருந்து இறங்கி ஓடியேனும் திருமணம் நடக்கும் ஹோட்டலுக்குப் போய்விடலாமா? என்று, பிரியரஞ்சனின் உடல் பரபரத்தது! உடன் பிறந்த ஒரே தங்கையின் திருமணம்! உயிரான நண்பன் மாப் பிள்ளை! அவர்களின் திருமணத்துக்கு, நாலு நாட்கள் முன்னதாக வந்திருந்து, கேலி கிண்டலோடு, வேலை யெல்லாம் பார்த்துப் பெற்றோருக்கு உதவிகளும் செய்து கொண்டிருக்க வேண்டியவன்!

உரிமையோடு, பொறுப்பும் உள்ள உயர் அதிகாரி என்பதால், அவன் விரும்பிய அளவு விடுமுறை பிரச்சனையாக இருக்கவில்லை!

ஆனால், கிளம்புகிறபோது பார்த்து, 'ப்ராஜெக்ட்' வேலையில் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டுவிட்டது!



அடுத்தமட்ட அதிகாரியிடம் பொறுப்பை விட்டு விட்டு வந்தால், பெரிதாக அவனை யாரும் குற்றம் சொல்லி விடப் போவதில்லைதான்! அதற்குரிய தைரியமும், யாருக்கும் வராது!

ஆனாலும், ஒரு மிகவும் முக்கியமான ஆள்... அவர் தான், கடமையுணர்ச்சி மிக்க அவனது மனச்சாட்சி, அதை அனுமதிக்க மறுத்துவிடவே, இரண்டு நாள் தங்கி இருந்து சிக்கலைச் சீர் செய்துவிட்டே கிளம் பினான்!

அப்போதும், திருமணத்துக்கு முன்தினம் காலையி லேயே வந்துவிடலாம் என்று எதிர்பார்த்தால், ரயில் தாமதம், ரயிலில் இறங்கி, வெயிட்டிங் ரூமில் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்து டாக்சியில் ஏறினால், போக்குவரத்து நெரிசல் என்று எல்லாமே அவனது பொறுமையை மிகவும் சோதித்தன.

பயணக் களைப்பும் கசங்கி நலுங்கிய உடையுமாகத் திருமணத்துக்கு வந்திருக்கும் உறவினர் முன் வந்து நிற்க மனமற்று, குளிக்கப் போனது தப்போ என்றுகூட, அவனுக்குத் தோன்றலாயிற்று!

ஷேவ் பண்ணி, குளித்து, உடை மாற்றி... அதில் குறைந்தது அரை மணி நேரம் ஆகியிருக்கும்! அந்த அரை மணி நேரம் முன்னதாக டாக்சியில் ஏறியிருந் தால், இந்தப் போக்குவரத்து நெரிசல் தொடங்கு முன்னதாகவே, இந்த இடத்தைக் கடந்திருக்கலாமோ?

யார் கண்டது? வாகனங்கள் நிற்கும் தூரத்தைப் பார்த் தால், அந்த அரைமணி நேரத்தில், இன்னும் கொஞ்ச தூரம் முன்னே போய் நின்றிருக்கக் கூடும், அவ்வளவே!



அந்த மட்டும் ஒரு நாள் தாடி குறைந்ததில், இப் போது முகமேனும் கொஞ்சம் பளிச்சென்றிருக்கும்! குளித்து, உடையும் மாற்றி விட்டதால், போன உட னேயே கல்யாண வேலைகளில் ஈடுபடவும் முடியும்!

ஆனால், இவ்வளவு நேரத்துக்குப் பிறகு, அவன் போய்ச் செய்வதற்கு என்ன வேலை மீதி இருக்கக் கூடும்?

சும்மாவே, "ஹோட்டலில் திருமணம் என்பதாலும், ஹோட்டலோடு தொடர்பு கொண்ட இது போன்ற விழாக்களை நடத்தித் தரும் நிறுவனம் ஒன்றிடம் மண விழா ஏற்பாடுகளை ஒப்படைத்திருப்பதாலும், நமக்கு வேண்டிய சில பல பொருட்களை வாங்குவது தவிர வேலை ஒன்றும் இல்லை, கண்ணா!" என்று காலையில் பேசியபோது, தாயார் தெரிவித்திருந்தாள்.

அவனைக் கூட்டிப் போக, ரயில் நிலையத்துக்கு வருவதாகக் கூடத் தந்தை சொன்னார்!

அவன்தான், கிளம்பும்போதே தாமதமாகக் கிளம்பிய ரயில், சென்னையை அடைய இன்னும் எவ்வளவு நேரம் தாமதம் ஆகுமோ. தந்தை வந்து வீணாகக் காத்திருப்பானேன் என்று எண்ணித் தானே வருவதாகச் சொல்லிவிட்டான்!

அப்பா ஹோட்டலிலேயே இருந்தால், அங்கே, அம்மா வுக்கும் தங்கைக்கும் உதவியாக இருக்கலாமே!

ஆனால், மணப் பெண் அலங்காரத்துக்குக் கூட, ஹோட்டலை விட்டு வெளியே போகத் தேவையில்லை, அங்கேயே, அதற்கும் வசதி இருக்கிறது என்று, தங்கையும் தாயுமாகச் சந்தோஷமாகச் சொன்னார்கள்.

''என்ன, டெல்லியில் என்றால் சுந்தரோடு இலகுவாகப் பேசிக் கொண்டிருக்க முடியும், இங்கே ஊர்ப் பக்கத்து உறவினர்கள் மத்தியில், அதற்குத் தயக்கமாக இருக்கிறது!'' என்று, அதை மட்டும் சொல்லி வருத்தப் பட்டாள் சௌமினி.

ஒரே ஹோட்டலில் தங்கியிருந்தும்கூட, உணவருந்தச் செல்லும்போது தவிர, அவனைப் பார்ப்பது அதிசயமாக இருக்கிறதாம்!

அங்கே போய்ச் சேர்ந்த உடனே, ஏதாவது சாக்கிட்டு, சுந்தரைப் பிடித்துச் சௌமினியிடம் இழுத்துப் போய் நிறுத்த வேண்டும்!

டெல்லியில், தினமும் வீட்டுக்கு வந்து, எல்லோர் முன்னிலையிலும் செளமியைக் கையைப் பிடித்துக் கூட்டிப் போகிறவனுக்கு, மாப்பிள்ளை ஆனதும் வெட்கம் வந்துவிட்டதாமா?

அல்லது, மாப்பிள்ளை முறுக்கா?

அப்படி மட்டுர் இருக்கட்டும்., மவனே, பார்த்துக் கொள்ளுகிறேன்!

நண்பனைப் பற்றியும், தங்கையைப் பற்றியுமான இனிய கனவு, கற்பனைகளில் பிரியரஞ்சன் சற்று நேரம் தன்னை மறக்க, ஒரு வழியாக வண்டிகளும் நகரத் தொடங்கின.

சற்று வேகமான ஊர்வலம் போலச் சென்று, ஹோட்டலை அடைந்து, டாக்சிக்குப் பணத்தைக் கொடுத்து விட்டுப் பெட்டியோடு உள்ளே சென்றால், மேலே செல்ல 'லிஃப்ட்' கதவுகள் மூடத் தொடங்கியிருந்தன!



இது, மீண்டும் எப்போது கீழே வருமோ? குறைந்தது, நாலைந்து நிமிஷங்கள் ஆகாது?

நாலைந்து நிமிஷங்கள்! இன்னுமா?

ஓடிப் போய், பாதி மூடிக் கொண்டிருந்த கதவுகளின் இடையே பெட்டியை நீட்டி, 'லிஃப்ட்' கதவு மூடாமல் தடுத்தபடி உள்ளே பார்த்தவனுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரி ஆகிவிட்டது!

உள்ளே, ஒரே ஒரு பெண் நின்றிருந்தாள்.

பதுமை போல!

அவன் பெட்டியை இடைக் கொடுத்து, 'லிஃப்ட்' கதவைத் திறந்ததை, அவள் தப்பாக எண்ணியிருப்பாளோ?

அவள் தனியே செல்வதைக் கவனித்துவிட்டு, எவனோ வில்லன் அதிரடியாக உள்ளே வருவதாக...?

ஆனால்; அந்தப் பாவாடை தாவணிப் பெண்ணிடம், பயம் போல எந்த மாற்றமும் இல்லை! அவள் தன் போக்கில், தரையைப் பார்த்தபடி, அசையாமலே நின்றாள்!

அதுதான், அழகான ஒரு பதுமை போல!

ஒருவேளை, பயத்தில்தான் உறைந்து போய் நின்றாளோ?

சற்றுத் தயங்கிவிட்டு, ''எக்ஸ்க்யூஸ் மீ! நான்... ஆறாவது தளர் செல்ல வேண்டும்! இப்போது, நான் கூட வருவதில், உங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையே?'' என்று நயந்த குரலில், ஒரு நகாசுடன், கம்பீரம் காட்டிக் கேட்டான் பிரியரஞ்சன்!



ஹோட்டல் 'லிஃப்ட்' என்பது பொதுதான்! அதைப் பயன்படுத்துவதற்கு, அந்தப் பெண்ணைப் போலவே, அவனுக்கும் உரிமை உண்டுதான்!

ஆனாலும், பக்காத் தமிழ்ப் பெண் என்பதற்கு அடையாளமாகப் பாவாடை தாவணியில் இருக்கிறாளே! ஓர் அன்னியனோடு, தனியே 'லிஃப்'டில் வரச் சங்கடப் படுவாளோ, பாவம் என்ற எண்ணம் அவனுக்கு!

அத்தோடு, சமீபத்தில் ஒரு பெண்ணைக் கொடியவன் ஒருவன் 'லிஃப்'டில் வைத்துக் கற்பழித்துக் கொன்று, அதற்காக அவனுக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப் பட்ட வழக்கு ஒன்று பத்திரிகைகளில், பத்தி பத்தியாக விவரிக்கப்பட்டிருந்தது!

எனவே, 'லிஃப்ட்' கிளம்புகிற நேரம், வாட்ட சாட்டமான ஓர் இளைஞன், முரட்டு வேகத்தோடு உள்ளே வந்து, உடனே பயணித்தால், இந்தப் பெண் பயப் படுவது இயல்புதானே?

அதனால்தான், அவளுக்குத் தயக்கமாக இருந்தால், 'லிஃப்ட்' மேலே போய் இறங்கி வரும்வரை காத்திருந்து, அப்புறமாகப் போய்க் கொள்ளலாம். இவ்வளவு நேரம் ஆகிவிட்ட பிறகு, இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்கள் பொறுத்திருப்பதில் என்ன ஆகி விடும் என்று பெருந்தன்மையோடு எண்ணி அவளிடம் அவன், அவ்வளவு இதமாய் வினவியது!

அவள் மௌனக் கெட்டிருக்கவே வேண்டாம்!

அவன் கேட்டது காதில் விழுந்தது என்பதற்கு அடையாளமாக அவளிடமிருந்து, ''இல்லை!'' என்று, வெறும் ஓர் ஒற்றை வார்த்தைப் பதில் மட்டுமே வந்தது!



மற்றபடி, அந்தப் பெண் அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை! அதாவது அவனை ஒரு பொருட்டாகவே, அந்தப் பெண் நினைக்கவில்லை!

முகத்தில் அடித்த மாதிரி இருந்தது, அவனுக்கு!

எல்லாப் பெண்களும், தன்னையே சுற்ற வேண்டும், யாரும் தன்னை அலட்சியம் செய்ய முடியாது என்கிற அகம்பாவமோ, கர்வமோ, பிரியரஞ்சனுக்குக் கிடையாது!

ஆனால், முகத்தைக் கூடப் பார்க்கப் பிடிக்காமல் அவனை யாரும் உதாசீனம் செய்து, அவனுக்குப் பழக்கமில்லை! மாறாக, அவனது தோற்றமும், பழகும் முறையும் பிறரை வசீகரித்து விடுவதுதான் வழக்கமாயிருந்தது!

வழக்கத்துக்கு மாறாக, அவள் முகத்தில், பயம், வெட்கம்., ஆத்திரம், வெறுப்பு போல எதிர்மறை உணர்ச்சிகள் என்றாலும்கூட, ஏதோ ஓர் உணர்ச்சி அவள் முகத்தில் தோன்றினால், நன்றாயிருக்கும் போல, அவனுக்குத் தோன்றியது!

ஆனால், அவன் உள்ளே வந்து, பட்டனை அழுத்தி, 'லிஃப்ட்' செல்லத் தொடங்கிய பிறகும்கூட, அவள், அவனை நிமிர்ந்தும் பார்த்தாளில்லை!

என்ன திமிர், இந்தப் பெண்ணுக்கு! அத்தோடு, எவ்வளவு முட்டாள்தனம்!

இப்படிப் 'பொய்யோ எனும் இடையாளா'க இருந்து கொண்டு, அவனைப் போல ஒரு வாலிபனிடம் அலட்சியம் காட்டலாமா?

அது, ஒருவகைச் சீண்டல் அல்லவா?

இப்போது, இவளைப் பற்றி இழுத்து, இறுக அணைத்து, முத்தமிட்டால், இவளால் என்ன செய்ய முடியும் என்று எண்ணியவன், தன் எண்ணம் போன போக்கில், அவனே திகைத்துப் போனான்!

பெண்களைப் பற்றி, இப்படியெல்லாம் எண்ணுகிறவன், அவன் அல்லவே!

பொதுவாகப் பெண்களிடம் யாரேனும் சீண்டினாலே, அந்த இடத்தில் தங்கையை வைத்துக் கற்பனை செய்துப் பார்த்துக் கொதித்துப் போகிறவன்!

அவனா, இப்படி நினைத்தது?

இல்லை! இந்தப் பொல்லாத பெண் நினைக்க வைத்திருக்கிறாள்!

ரொம்பவும் அபாயகரமானவள்! இவளிடமிருந்து, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தூரம் ஓடிவிட வேண்டும்!

ஆனால், எவ்வளவு அழகாக இருக்கிறாள்... என்று நினைக்கும்போதே, ஆறாவது தளம் வந்து, 'லிஃப்டி'ன் தானியங்கிக் கதவுகளும் திறந்துவிட, ஒரு வகையான நிம்மதியோடு, பிரியரஞ்சன் 'லிஃப்'டை விட்டு வெளியேறினான்.

அதன் பிறகு, அவனைப் பார்த்த தங்கையின் ஆனந்தக் கூச்சலிலும், பெற்றோர், மற்ற உறவினரின் மகிழ்ச்சியிலும், அப்புறமாக மாப்பிள்ளைத் தோழனாக சுந்தரைக் கேலி பேசியபடி இழுத்து வந்து, தங்கைக்குத் தரிசனம் கொடுக்கச் செய்வது போன்ற எத்தனையோ



கலாட்டாக்களில், அந்தப் பாவாடை தாவணியை அவன் மறந்தே போனான்!

ஆனால், அத்தனை கேலியிலும், "என்னப்பா, மாப்பிள்ளை முறுக்கா? நீ எட்டிகூடப் பார்க்கவில்லை என்று என் தங்கை வாடி மெலிந்து, வளை சோர நிற்கிறாள். பார்! இரவு நீ போடப் போகிற மோதிரமே, அப்படி விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஏன் இந்தப் பாராமுகம், சுந்தர்?" என்று கேட்கத் தவறவில்லை!

அசடு வழியச் சமாளிப்பதற்குப் பதிலாக, சுந்தரின் முகம், வருத்தத்தைக் காட்டியது! "அதில்லைப்பா மாமா பெண் பற்றிச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? அந்தச் சின்னப் பெண்ணின் மனதை, நான்தான் கணவன் என்று கெடுத்து வைத்திருக்கிறார்கள்! எடுத்துச் சொன்னேன்தான்! ஆனாலும் அவள் அந்த உறுத்தலில்... அதுதான், அங்கேயே இருந்து விட்டேன்!" என்றான் சுந்தர்.

"ஏய், என்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே, இன்னொருத்தியை பற்றிப் பேசுகிறீர்களே! பெத்த பெருமையாக்கும்?" என்று கிண்டலடித்தபோதும், சௌமினியின் முகத்திலும், சிறு கலக்கம் தெரிந்தது!

"அட விடுங்கப்பா! இந்த மாதிரி முறை, கிறை என்று பேசுவது, கிராமப்புறங்களில் சகஜம்! அந்தப் பெண்ணே, இதை ரொம்பப் பெரிதாக எண்ணியிருக்க மாட்டாள்! இன்றைக்கே, வேறு ஒருவனுக்கு மண முடித்து வைத்தால், 'பிராணநாதா' என்று அவனுக்காக, அவள் உயிரையும் கொடுப்பாள், பார் அங்கெல்லாம், தாலிக்குத்தான் மதிப்பு அதிகம்! அதுவரை, இதெல்



லாம் வெறும் பேச்சுதான்! எத்தனை 'ப்ராஜெக்ட் சைட்'களில் பார்த்திருக்கிறேன் தெரியுமா? அறிந்தவன் சொல்லுகிறேன்! ஆமாம் என்று கேட்டு, சந்தோஷமாக இருங்கள்!" என்று பிரியரஞ்சன் அழுத்தமாகச் சொல்ல, மணமக்களின் முகங்களும் தெளிந்து மலர்ந்தன!

மாலையில், மாப்பிள்ளை அழைப்பும், மணமகளுக்கு நிச்சயப் பட்டுக் கட்டுவதும், அதன் பின் மணமகன் மகளுக்கு மோதிரம் அணிவிப்பது என்று, மறு நாளையத் திருமணத்துக்கு முன்னோடியான பல சடங்குகள் திட்டமிடப்பட்டிருந்தன!

மாப்பிள்ளையை வரவேற்று மாலை, சங்கிலி அணிவித்து, ஒன்றுவிட்ட சகோதரிகள் மணமகனுக்கு ஆலம் சுற்றுவதைக் கவனித்து, மாப்பிள்ளை வீட்டு ஆண்களை வரவேற்று, உபசரித்து, உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்து, என்று பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தவனுக்கு, மாப்பிள்ளையின் பின்னே தட்டுத் தூக்கி வந்த பெண்கள் கூட்டத்தில் கவனம் பதியவில்லை!

இளம் பெண்களை வெறிப்பது, அவனுக்கு வழக்கமுமில்லை!

ஆனால், சௌமினிக்கு மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த புதுப் பட்டு சேலை கட்டி, நலுங்கு சுற்றியதை, ரசித்துப் பார்த்த சுந்தரைக் கிண்டல் செய்தபடி அவனோடு பிரியரஞ்சன் நின்றிருந்தபோது, நலுங்கு சுற்றிவிட்டு வந்த ஒரு மூதாட்டி, மேடையிலிருந்து இறங்கிப் போகிற வழியில் ஓரமாக நின்றிருந்த அவர்களிடம் வந்தாள்.



"படித்தால் என்ன, சொந்தம் விட்டுப் போகுமா? அவளுக்கென்ன அழகுக்குத்தான் குறைச்சலா? உன்னையே நினைத்து வளர்ந்த பெண்ணை, இப்படிக் கை விட்டு விட்டியேப்பா!' என்று வருத்தத்துடன் கேட்டுவிட்டுப் போக, சுந்தரின் முகம் மீண்டும் சற்று வாடிப் போயிற்று!

எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல், "ஏன் சுந்தர், இந்தக் கும்பலில், யார் அந்த அதிரூப சுந்தரியான மாமன் மகள்?" என்று வேண்டுமென்றே வருவித்த, சற்று இலகுவான குரலில் வினவினான்.

பிறர் கவனத்தைக் கவராத வண்ணம், "அதோ, இப்போது பேசிவிட்டுப் போனார்களே, அந்தப் பாட்டி பக்கத்தில் பார். பச்சை நிறத்தில் நெருங்க ஜரிகைக் கட்டமிட்ட பாவாடை கட்டித் தூணோரமாகப் பாதி மறைந்தாற் போல நிற்கிறாளே, அவள்தான்." என்று சுந்தர் முணுமுணுக்க, தூணின் பின்னே ஒதுங்கினாற் போல நின்ற அந்த பச்சை ஜரிகைக் கட்டப் பாவாடை தாவணிக்காரியை, எட்டி நன்றாகப் பார்த்த பிரியரஞ்சன் திகைத்தான்.

ஏனெனில், அவள்தான், அந்த அழகான பதுமை! திமிர்ப் பிடித்த 'லிஃப்ட்' பாவாடை தாவணிப் பெண்!

அவள் திமிர்ப் பிடித்தவள் இல்லையோ என்ற சந்தேகம் அவனுக்கு, இப்போது உண்டாயிற்று!



## 2

பிரியரஞ்சனுக்குச் சந்தேகம் வந்தது. அதில்... அந்தப் பெண் திமிர்ப் பிடித்தவளா, இல்லையா என்பதில் மட்டும் அல்ல!

வந்ததும், நண்பன், தங்கையின் கலக்கம் தீர்வதற்காகச் சொன்னானே, அதிலும்தான்!

'லிஃப்'டில், அவள், அவனை அலட்சியம் செய்யவில்லை! துக்கத்தில் இறுகியிருந்த அவளுக்கு, அவன் ஒரு மனிதன் என்பதே, மனதில் படவில்லை!

ஓர் இயந்திரம்போல, அவளது காதில் விழுந்த கேள்விக்கு, வாயால் பதில் சொன்னாளே தவிர, அவன் ஓர் ஆண் என்பதையோ, அவனது கேள்வியின் பொருளையோ, அவள் உள்வாங்கிக் கொள்ளவே இல்லை!

அந்த அளவுக்கு நெஞ்சை அடைத்த வேதனை!

இவள் எப்படி சுந்தரை மறந்து, இன்னொருவனைப் 'பிராணநாதா' என்பாள்?

அதற்கு முன், இவள் எப்படி இன்னொருவனை மணக்கச் சம்மதிப்பாள்?

முதல் தடவையாக, 'லிஃப்ட்' உள்ளே கிட்டத்தட்ட இரண்டு நிமிஷ நேரம் பார்த்த அவளது மரத்த பதுமை முகத்தை நினைத்து கூர்கையில், சந்தேகத்துக்கே



இடமில்லாமல், நூறு சதவீதமாய் எதிர்மறை விடைதான் அவனுக்கு வந்தது!

ஆனால், அதை அப்படி விட முடியாதே!

அவனுடைய அருமைத் தங்கையும், ஆருயிர் நண்பனும், குற்ற உணர்வோடா வாழ்க்கையைத் தொடங்குவது?

அப்படித் தொடங்கும்படி விட்டுவிட்டால், அப்புறம், அவனென்ன ஓர் அண்ணன்? என்ன மாதிரி நண்பன்?

மனதில் இல்லாத இலகுத் தன்மையை முகத்திலும், குரலிலும் கொணர்ந்து, "என்ன ஒரு பேரழகி! என்னப்பா, நான் முயற்சிக்கலாமில்லையா?" என்று சுந்தரிடம் கேட்டான் அவன்!

சிறு வியப்புடன் நண்பனைப் பார்த்துவிட்டு, "சும்மாச் சீண்ட வேண்டாம், ரஞ்சி! ஆனால், அவள் கொஞ்சமேனும், இந்தப் பைத்தியக்காரச் சிக்கலில் இருந்து மீள்வாள் என்றால், எனக்கு எவ்வளவோ, நிம்மதியாக இருக்கும்! உன் தங்கைக்கும்தான்!" என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தான் சுந்தர்!

மற்ற எதையும் விட, சுந்தரின் இந்தப் பெருமூச்சு, பிரியரஞ்சனை முடிவெடுக்க வைத்தது!

அந்தப் பச்சை வண்ணப் பாவாடையிடம் என்ன பேசலாம் என்று யோசித்தபடி, மெல்ல அவள் புறமாகப் பிரியரஞ்சன் கவனித்தபோது, இன்னொரு விசித்திரத்தையும், அவன் காண நேர்ந்தது!

திருமணத்துக்கு வந்தவர்களுள், மாப்பிள்ளை வீட்டாரில் பல பேர், சுந்தரையும், அந்தப் பெண்ணையுமே, மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர்!

அவள்
பார்ப்புடன் போது அழப் போகிறாள் என்று ஓர் எதிர்
பிரியரஞ்ச கவனிக்கிறார்கள் என்பதை, இப்போது
ல் உணர முடிந்தது!

பல கா
மகன், இட ாகக் கணவனாக எண்ணி வந்த அத்தை
கண்டு, இ போது அடுத்தவளைக் கரம் பிடிப்பதைக்
அழுவாளா ப் பெண் எப்படியெப்படித் தவிக்கிறாள்,
என்பதை அல்லது அழாமலே சமாளித்து விடுவாளா
லோரும் ல்லாம், ஒரு குரூர ஆர்வத்துடன், எல்
ளுக்கு, உட ளிப்பாகக் கவனிப்பதைக் கண்ட அவ
அவளது ப பிறந்தவளின் மிக முக்கியமான நாளில்,
எரிச்சல் ஒ பூரண மகிழ்ச்சியைக் கெடுக்கிறவள் என்ற
பரிதாபமு புறம் இருந்தாலும், அந்தப் பெண்ணிடம்
உண்டானது!

இத்தகை
யான அம் பேரின் பார்வையும், அவளைக் கூர்மை
களாகத் துளைக்குமே!

இவள்
இருந்து, இ சாமல், இந்தத் திருமணத்துக்கு வராமலே
ந்த அம்புகளில் இருந்து தப்பியிருக்கலாம்.

தலைவ
சொன்னா , வயிற்றுவலி... இவள் எந்தக் காரணம்
அப்படி இ ம், அதை நம்புவது கடினமே என்றாலும்,
லை என்று நிரூபிப்பதும் முடியாதுதானே?

ஏன், இ
போலக் கா போதும்தான், அவள் வாயைச் சிரிப்பது
உள்ளார்ந்த வரை இழுத்துப் பிடித்து வைத்திருப்பதை,
நார்களா, மகிழ்ச்சி என்று யாரேனும் நம்பப் போகி
என?

அப்படி
வர்கள் நம் அவளது சாக்குப் போக்குகளை, மற்ற
விட்டால்தான் என்ன?



பொய் சொன்னாயே என்று, அவளது காதைப் பிடித்துத் திருகிவிடவா போகிறார்கள்?

நாலு நாட்களில், இந்தத் திருமணத்தையே மறந்து விடுவார்கள்., இந்தப் பெண் தலைவலி என்று நடித் ததையா, நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்? இது புரியாமல், வேதனையையும் விழுங்கிக் கொண்டு எல்லோருக்கும் காட்சிப் பொருளாக இங்கேயே நின்று கொண்டிருக்கிறாளே!

இதற்கு அவசியம் இல்லை என்று யாரேனும் அவளுக்குக் குறிப்பாகவேனும் சொன்னால், நன்றாக இருக்கும்! அல்லது, சற்று நேரத்தில் அவளாகவே புரிந்து கொள்ள மாட்டாளா?

சற்று நேரம் பொறுமையாக, மாப்பிள்ளைத் தோழன் பணியைச் செய்தவாறே, அந்தப் பெண்ணிடமும் ஒரு கண்ணை வைத்திருந்த பிரியரஞ்சன், அவள் அங் கிருந்து அசைவதாகவே இல்லை என்று தோன்றவும் பொறுமையிழந்தான்!

அந்தத் தூண் மறைவு, பெரிய திரை என்று எண்ணிக் கொண்டிருக்கிறாள் போல! முட்டாள்! அவனைப் போல, எத்தனை பேர் அவளை நன்றாகப் பார்க்க முடியும் என்று புரியவில்லையே!

அவளைப் பலர் பரிதாபமாகப் பார்த்ததும், பிரிய ரஞ்சனுக்குப் பிடிக்கவில்லை! அதே சமயம், ஒருவரை ஒருவர் சங்கேதமாகப் பார்த்தபடி, சிலர் அவளை ஏளன நகையோடு நோக்கியதும், அவனுக்கு வெறுப் பளித்தது!

ஒருவர் துன்பத்தில் மகிழ்கிறார்களே, என்ன மனிதர்கள் இவர்கள் என்று அருவருப்போடு எண்ணினான்!

இதற்கெல்லாம் இடம் கொடுத்துக் கொண்டு, இங்கேயே நிற்கிறதே இந்த மட்டிப் பெண் என்று ஆத்திரமும் வந்தது!

சௌமினிக்கு நலுங்கு சுற்றி முடித்துக் கொண்டிருந்தார்கள். ''கடைசியாக, மூன்று பேராகச் சேர்ந்து ஆலம் சுற்ற வேண்டும்'' என்று சொல்லி, அதற்குரிய உறவும், மரியாதையும் உள்ள பெண்களை, 'வாவா' என்று கூப்பிடத் தொடங்கவும், இதற்குமேல் பொறுத்திருப்பது தவறு என்று பிரியரஞ்சன் நினைத்தான்.

அடுத்து, சுந்தர் சௌமினிக்கு மோதிரம் அணிவிப்பான்! அவர்கள் இருவரையும் பற்றிப் பிரியரஞ்சனுக்குக் கொஞ்சமேனும் தெரியும் என்றால், நிச்சயமாக ஏதேனும் சில்மிஷம் நடக்கும்!

அதை, அந்தப் பெண் தாங்குவது கடினம்.

அவள் உடைகிறாளா, சமாளிக்கிறாளா என்று சுவாரசியமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கும் கும்பலுக்குக் காட்சிப் பொருளாக நிற்க விடாமல், அதற்குள்ளாக அவளை அப்புறப்படுத்தியே ஆக வேண்டும்!

சுந்தரின் கவனம், அவனுடைய வருங்கால மனைவியிடம் பதிந்திருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, நைசாக அங்கிருந்து நழுவிப் பச்சைப் பட்டிடம் சென்றான்.

தொண்டையைச் செருமி, அவளது கவனத்தை ஈர்க்க முயன்றவனுக்கு தோல்வியே கிடைத்தது!



ஆனால், ஓரளவு இதை எதிர்பார்த்திருந்ததால், ''எக்ஸ்கியூஸ் மி, மிஸ்..'' என்று, அவளுக்கு நேர் எதிரே நின்று அழைத்தவனுக்கு, அந்தப் பெண்ணின் பெயரைக் கேளாமல் வந்த மடத்தனம் உறைத்தது!

பாராத பார்வையுடன் நின்றவள், அவளது பெயரைத் தெரிவித்து உதவப் போவதில்லை என்பதும், அவனுக்கு நிச்சயமே!

ஆனால், அதற்காகத் திரும்பி விடாமல், ''நீங்கள் தானே, சுந்தருடைய மாமா பெண்? அங்கே, நலுங்கு முடியப் போகிறது! சாப்பாடு தயார்! முதல் பந்தியில் மாப்பிள்ளை வீட்டாரை உட்காரச் சொல்லுவதுதான் மரியாதையாம். உங்கள் அப்பாதானே, பையன் வீட்டில் ரொம்பவும் முக்கியமானவராமே! அவரிடம் சொல்லச் சொல்லிப் பெண்ணுடைய அப்பா சொல்லியனுப்பினார். சாரிடம் என்னைக் கூட்டிப் போகிறீர்களா?'' என்று அவளிடம் கேட்டான்.

நல்லவேளையாக, இது பெண்கள் சடங்கு என்று போரடித்துக் கிட்டத்தட்ட எல்லா ஆண்களுமே, அந்த ஹாலுக்கு வெளியே செல்வதைப் பிரியரஞ்சன் ஏற்கனவே கண்டிருந்தான்!

இந்த ஆராய்ச்சி நோட்டங்களிலிருந்து தப்பிப் போவதற்கு, இவளுக்கு இது நல்ல வாய்ப்பு., கொஞ்சமேனும் மூளை இருந்தால், பயன்படுத்திக் கொள்வாள் என்று எண்ணும்போதே, தன்னோடு அவள் தனியே வருவாளா என்று சந்தேகமும் உண்டாயிற்று!

உறவைச் சொல்லி, மேலே நெருங்கிப் பேச முற்படுவானோ என்று, அவள் எண்ணினால்?



அதற்கேற்ப, அவளும் ஓர் எட்டு எடுத்து வைத்து விட்டு, உடனே அணுகவும், அவசரமாக, ''உங்கள் தந்தை, நீங்கள் தங்கியிருக்கும் அறைப் பக்கம் தங்கியிருக்கிறாரோ, என்னவோ? முதலில், அங்கே போய்ப் பார்த்துவிட்டுப் போகிறீர்களா? நான் இங்கேயே காத்து நிற்கிறேன்!'' என்றான் அவன்.

ஒரு சன்னப் பெருமூச்சுடன் அவள் அங்கிருந்து செல்லவும், அவனுக்கு அப்பாடி என்றிருந்தது!

கூடவே, வேடிக்கையாகவும்!

அவனது அத்தனை வார்த்தைகளுக்கு, அவள் ஒரு வார்த்தை கூடப் பதிலென்று சொல்லவில்லை!

அவன் முகத்தை, அவள் தெளிவாகப் பார்க்கவும் இல்லை! வந்து பேசுகிறானே என்று, அவனது பேச்சைக் கவனிப்பதாகக் காட்டிக்கொள்ள இமைகளை உயர்த்தினாளே தவிர, அவளது பார்வை அவன் மீது பதியவே இல்லை!

இன்னொரு தரம் சந்தித்தால், தன்னை அவளுக்கு அடையாளம் தெரியாது என்பது அவனுக்கு நிச்சயம்! ஏன், அன்று முற்பகலில், 'லிஃப்'டில் கூட வந்தவனும், அவனும் ஒருவனே என்றுகூட, அறிந்திருக்க மாட்டாள், அவள்!

இப்படி ஒரு பெண் தன்னை நடத்தக் கூடுமா? ஆச்சரியம்தான்!

ஹாலை விட்டு வெளியேறி, அவள் கண்ணுக்கு மறைந்த பிறகும், வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தான் பிரியரஞ்சன்!



பாவம்! அரிதாகக் கிடைத்த தனிமையில், நெஞ்சைப் பிளக்கும் விம்மல்களில், அந்தக் கொடிமேனி, இப்போது குலுங்கிக் கொண்டிருக்கக் கூடும்!

ஓர் உயிர் அங்கே துடித்துக் கொண்டிருப்பதை அறிந்த பிறகு, திரும்பிச் சென்று, மீண்டும் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள, அவனுக்கு மனம் வரவில்லை!

மாறாக, அந்தப் பெண்ணைத் தனியே அனுப்பியது தவறோ என்று உள்ளூர ஓர் உறுத்தல் உண்டாயிற்று!

சோகப் பதுமையாக, அவளை முதலில் பார்த்தது நினைவு வந்தது!

கடவுளே, அவள் ஏதேனும் தப்புத் தவறான முடிவுக்கு வந்துவிட்டால்?

விழாச் சடங்குகள், உணவு என்று எல்லோரும் இங்கிருக்க, ஒரு தப்பான முடிவை நிறைவேற்றுவதற்கு அவளுக்குத் தேவையான தனிமை கிடைப்பதற்கு அல்லவோ, அவன் வழி செய்து கொடுத்து விட்டான்!

மேற்கொண்டு, அங்கே நிற்க முடியாமல், அந்தப் பெண் சென்ற வழியைப் பின் பற்றிச் சென்று, ஹாலுக்கு வெளியே பார்த்தான் பிரியரஞ்சன்!

'லிஃப்ட்' மூடியிருந்தது.

பட்டனை அழுத்தியபடி யோசித்தான்.

மாப்பிள்ளை வீட்டார் இருப்பது, எந்தத் தளத்தில்?

யாரிடமாவது கேட்கலாமா என்று திரும்புகையில், கண்ணாடி வழியே, எதிர்ப்புறம் சாலை தெரிந்தது!

ஜரிகைக் கட்டங்கள் பளிச்சிடச் சாலையைக் கடந்து, எதிர்ப்புறம் சென்று கொண்டிருந்த பச்சைப் பட்டுப் பாவாடையும்!

வெளியே எங்கே செல்கிறாள்?

'லிஃப்ட்' வந்து கதவு திறக்கவும், அவசரமாகக் கீழிறங்கிச் சென்றான் பிரியரஞ்சன்.

ஹோட்டல் நுழைவாயிலில் நின்று பார்க்கையில், எதிர்ப்புறமாக இருந்த மருந்துக் கடையும், அதற்குள் பச்சைப் பாவாடை செல்வதும் தெரிய, ஆசுவாசமாகப் பெருமூச்சு விட்டான் அவன்.

பாவம்! தலைவலி மாத்திரை ஏதும் வாங்க வந்திருப்பாள்!

ஆனால், அதுவும் நிலைக்கவில்லை.

மாத்திரையை வாங்கிக் கொண்டு, அவள் ஏன் இன்னும் திரும்பி வரவில்லை என்று உள்ளே குடையத் தொடங்கியது!

அப்படி ஒன்றும், நேரம் நள்ளிரவாகி விடவில்லை! மணி எட்டைத் தாண்டி.. ஏழே நிமிஷங்கள்தான் ஆகிறது! வாகனப் போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும், விளக்கொளியுமாகச் சுற்றுப்புறம் 'ஜேஜே' என்றுதான் இருக்கிறது!

ஆனாலும், காந்தி கனவு கண்ட, ராம்ராஜ்ஜியம், கனவில்கூட எட்டாத தூரத்துக்குச் சென்று விட்டதால், உள்ளம் துணுக்குற, பிரியரஞ்சனும் சாலையைக் கடந்து எதிர்ப்புறம் சென்றான்.



இங்கே வந்த நேரம், இந்தப் பெண்ணைப் பார்த்த நேரம் எதுவுமே சரியில்லை! அங்கே சௌமினி, சுந்தர், அப்பா அம்மா எல்லோரும், அவனைத் தேடத் தொடங்கியிருப்பார்கள்! அவனானால், ஒரு முட்டாள் பெண்ணுக்கு என்ன ஆகிவிடுமோ என்று, அவள் பின்னே சுற்றிக் கொண்டு இருக்கிறான்!

தன்மீதே எரிச்சலுற்றவனாகப் பிரியரஞ்சன் எதிர்ப்புறத்தை அடைந்தபோது, மருந்துக் கடையின் ஒரு புறத்தில் அந்த முட்டாள் பெண் நிற்பதைக் கண்டான்!

கூடவே, "சொன்னால் கேளுங்கம்மா! இந்த அளவு வீரியம் உள்ள தூக்க மாத்திரையை டாக்டர் சீட்டு இல்லாமல் கொடுக்கக் கூடாதும்மா! அதுவும், முழு அட்டையும் வேண்டும் என்கிறீர்கள்! நீங்கள் யார், என்ன என்றே தெரியாது! இப்படிப் பட்டும் நகையுமாக வந்து நின்று... வேண்டாம்மா! அப்புறம், ஒன்று கிடக்க ஒன்று ஆனால், எங்கள் பிழைப்புப் போய் விடும்! கடையை மூடி, முத்திரை வைத்து விடுவார்கள். அதனால், தயவு பண்ணிப் போங்க! சீக்கிரமாகப் போய் விடுங்க!" என்று கடைக்காரர் சொல்வதும் காதில் விழவும், திகைப்புற்றுத் தயங்கி நின்றான் அவன்.

ஆக, இவள் நிஜமாகவே முட்டாளேதான்!



3

"இல்லை, சார், மாத்திரை கட்டாயமாக வேண்டும். குடும்பத்தில் பெரியவர்கள் எல்லோருக்குமே, இது இல்லாமல் தூ... தூக்கமே வராது! அதனால..."



இங்கே வந்து, தூக்க மாத்திரை வாங்க வந்திருக்கிறாளே! மொத்தமாக முழுங்கிவிட்டு, வாயைப் பிளந்து விட்டால், எல்லாம் சரியாகி விடுமாமா?

அவ்வளவு சுயநலமா? இவளுக்குத் துன்பம் தீர்ந்து விடலாம். ஆனால், ஒட்டு மொத்தமாக மற்ற அத்தனை பேர் நிலைமையும் என்ன ஆகும் என்று, ஒரு கணம் யோசிப்பதில்லையா?

சந்தேகப்பட்டு, அவளைத் தேடி வந்ததும், நல்லதாயிற்று என்று பிரியரஞ்சன் எண்ணினான்! இப்போது...

யோசனையோடு கடையின் உள்ளே சென்றவன், "ஒரே அலைச்சலும், பாட்டுச் சத்தமுமாகத் தலைவலி! 'பாராசெட்டாமல்' ஏதாவது ஒன்று கொடுங்கள்" என்று கடைக்காரரிடம் கேட்டவன், தற்செயல் போலத் திரும்பி, "அடெடே, நீங்களா? எல்லோரையும் சாப்பிட அனுப்பிவிட்டு, மருந்து மாத்திரை வாங்க, நீங்கள் இங்கே வந்தீர்கள் போல! உங்களை, அங்கே சாப்பிடத் தேடினார்கள் போலிருந்தது! மருந்து வாங்கி விட்டால், வாருங்களேன், சேர்ந்தே போகலாம்! ஏனென்றால், இவ்வளவு நகைகளுடன், சின்னப் பெண்ணாக வேறு இருக்கிறீர்கள். உங்களைத் தனியே விட்டு விட்டுப் போகக் கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது! நம் மகாத்மா காந்தி என்னவோ, சுதந்திரம் வந்து விட்டால், நம் நாட்டில் 'ராமராஜ்ஜியம்' நடக்கும்., நிறைய நகை பூட்டிய இளம் பெண்கள், நள்ளிரவில் கூடப் பயமின்றி நடந்து செல்ல முடியும் என்றெல்லாம் எண்ணினார்! ஆனால் நடப்பு நேர் மாறாகப் பகலில்கூட, உங்களைப் போன்றவர்களுக்கு ஆபத்தாகத்தான் இருக்கிறது!



அதனால், ஹோட்டல் வரை துணை வந்துவிட்டு, அப்புறம் என் வழியே போகிறேன்! வருகிறீர்களா?" என்று வேகமாகப் படபடவென்று பேசியபடி, மாத்திரையை வாங்கிக் கொண்டு, உரிய பணத்தை எடுத்துக் கடைக்காரரிடம் கொடுத்தான்.

பணத்தை வாங்கி உள்ளே போட்டபடி, "அதைத்தான் சார், நானும் இவ்வளவு நேரம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்! இப்படிப் பட்டும் நகையுமாக, இந்த நேரத்தில் வெளியே நிற்க வேண்டாம். சீக்கிரமாகச் சொந்தக்காரர்கள் இருக்கிற இடத்துக்குப் போங்க, போய்விடுங்கள் என்றுதான். நீங்கள் வரும் போதுகூடச் சொல்லிக் கொண்டிருந்தேன்!" என்று ஒத்துப் பாடினார் கடைக்காரர்!

ஒரு கணம் அந்தப் பெண்ணின் கண்களில் சீற்றம் ஜொலித்தது!

ஆனால், உடனேயே அதை மறைத்து இமைகள் தாழ்ந்துவிட, யோசனையின் அறிகுறியாகப் புருவம் சுருங்கியது.

"நானும் போய்விடலாம் என்றுதான் பார்க்கிறேன். ஆனால், நீங்கள்தான் மாத்திரையைத் தர மாட்டேன் என்கிறீர்களே!" என்று, கடைக்காரரிடம் குறைபட்டவள், பிரியரஞ்சனின் புறம் திரும்பி, "யார் என்றே தெரியாது., அதனால் மாத்திரையைத் தர முடியாது என்கிறார்! உங்களுக்குத்தான் என்னைத் தெரியுமே, யார் என்று சொல்லி, மாத்திரையை வாங்கிக் கொடுங்களேன், சார்!" என்று அவனிடம் கேட்டுக் கொண்டாள்!

இவள், ஒரேயடியாக முட்டாள் இல்லை! தேவைப் படும்போது கெட்டிக்காரியாகவும் இருப்பாள் போலும்!

இரண்டு சந்திப்புகளில், அவன் முகத்தை நிமிர்ந்தும் பாராதவள் இப்போதும், அவனை எட்டியும் பார்க்க வில்லை! அந்த அளவுக்கு ஆர்வம், மரியாதை எதுவும் இல்லை! ஆனால், கடைக்காரரிடம் சொல்லி, இந்தம் மாள் தின்று விட்டுச் சாவதற்கு, மாத்திரை மட்டும் வாங்கிக் கொடுக்க வேண்டுமாம்.

வாங்கிக் கொடுக்கிறேன் பெண்ணே, வாங்கிக் கொடுக் கிறேன்! அப்புறம் பார், நான் யாரென்று!

மனதில் நினைத்ததை வெளியே காட்டாமல், "என்ன கடைக்காரர் சார் அப்படியா? நிஜமாகவா, அவர்கள் கேட்ட மாத்திரையைக் கொடுக்க மாட்டேன் என் கிறீர்கள்? காசை வாங்கிக் கொண்டு மாத்திரையைக் கொடுத்தால் உங்களுக்கு ஒரு விற்பனை தானே? லாபம்தானே? அதற்காகத்தானே, நீங்கள் கடை வைத் திருப்பதே! எனக்கெல்லாம் கொடுத்தீர்களே!" என்று வியந்தான் அவன்!

அவனது பேச்சின் நடுவே குறுக்கிட முயன்று, முடியாமல் விட்டுவிட்டு அவன் பேசி முடிக்கும் வரை காத்திருந்து, கடைக்காரர் சொன்னார். "நீங்கள் கேட்ட மாதிரி மாத்திரையை இந்தப் பெண் கேட்டிருந்தால், நானும் கொடுத்திருப்பேன், சார்! ஆனால், பாருங்கள், இவர்களுக்குத் தூக்க மாத்திரை வேண்டுமாம்! அது வும் இவ்வளவு வீரியத்தில்! முழு அட்டையும் தேவை யாம்!



இவர்களைப் பற்றி எதுவுமே தெரியாதபோது, எப் படி சார், கொடுப்பது? ஏதாவது ஆகிவிட்டால், அப் புறமாக, நான் அல்லவா, கம்பி எண்ண வேண்டும்?"

அவள் எழுதிக் கொண்டு வந்திருந்த சீட்டைப் பிரியரஞ்சனிடம் காட்டி "டாக்டர் சீட்டுகூட இல்லாமல், முன்னே பின்னே தெரியாதவர்களுக்கு இதை நான் கொடுக்க முடியுமா, சார்? நீங்களே சொல்லுங்கள்!" என்று, அவனை மத்தியஸ்தத்துக்கு அழைத்தார் அவர்!

தூக்க மாத்திரை பற்றி, ஒன்றுமே அறியாதவன் அல்ல, பிரியரஞ்சன். இந்த வீரியத்தில் உள்ள, இத்தனை மாத்திரைகள் என்றால், தப்பிக்க வாய்ப்பே கிடையாது!

ஆனால், இப்போது இதைத் தடுத்தாலும், வேறு வழி ஒன்றைத் தேடிக் கண்டு விடலாம்!

"வீரியம் அதிகம்தான்! அதுவும், காலையில் விழித்துத் திருமண வேலைகளைக் கவனிக்க வேண்டும். எனும் போது, இதில பாதி போதும்! ஏன் சார், என் பேச்சை நம்பி, இதில் பாதி வீரியம் உள்ள அட்டையை, இவர் களுக்குக் கொடுப்பீர்களா? மாப்பிள்ளைக்குத் தங்கை உறவு சார்! இவர்கள் தேவையில்லாமல் கேட்க மாட்டார்கள்! திருமணத்துக்கு வரும்போது மாத்திரை, மருந்துச் சீட்டு எல்லாவற்றையும், ஊரிலே மறந்து விட்டு விட்டு வந்து விட்டார்கள்! பாருங்கள், இது என் 'விசிட்டிங் கார்டு' நீங்களே, வைத்துக் கொள்ளுங்கள்! பில்லில், அவர்களின் கையெழுத்தையும் வாங்கிக் கொள்ளுங்கள்! அதன் பிறகேனும், மாத்திரையைக் கொடுக்கலாம் அல்லவா? பாவம்! சார் எல்லோரும் ஆழ்ந்து தூங்க வேண்டாமா? தூங்கினால் தானே,



நாளைக்கு நடக்க வேண்டியதைப் பார்க்கவும் முடியும்!" என்று, பிரியரஞ்சன் அவளுக்கு ஆதரவாகப் பேசிய வேகத்தில், மாத்திரையின் சக்தி குறைவது பற்றி, அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை!

அத்தோடு, கணக்கிட்டுப் பார்த்தால், இதுவும் போதும் என்றுதான் அவளுக்குத் தோன்றியது! என்ன, கூடக் கொஞ்சம் நேரம் பிடிக்கக் கூடும்! அதுவரை யாரும் தொல்லை பண்ணாமல் பார்த்துக் கொண்டால், சரியாகிவிடும்! மற்றபடி மறுத்தால், இதுகூடக் கிடைக் காமல் போய்விடலாம்! இதுவேனும், அவளுக்குக் கட்டாயம் வேண்டுமே!

அவளது கணக்கீட்டைக் கவனியாதவன் போல, கடைக்காரரை மேலும் லற்புறுத்தும் பாவனையில், பிரியரஞ்சன் பேசிக் கொண்டே இருந்தான்.

"உங்களுக்குத் தேவை என்றால், அவர்கள் ஊர், அங்கே அவர்களுடைய மருத்துவரின் பெயர், எல்லா வற்றையுமே, உங்கள் பில்லில் ஓரமாகக் குறிப்பிட்டு விட்டால் போதும்தானே? பில்லைப் போடுங்கள், சார்!" என்று அவரை உந்தினான் அவன்.

பில்லில் அவன் சொன்ன குறிப்புகளை எழுதிவிட்டு, அவள் பணத்தை எடுத்துக் கொடுக்கையில், பில்லையும் மருந்தையும் தானே வாங்கி, மரியாதையுடன் மாத் திரை அட்டையை அவளிடம் கொடுத்தான்.

கை நடுக்கத்தை அடக்கியபடி மாத்திரை அட்டையை வாங்கிப் பைக்குள் வைத்துக் கொண்டு, "நன்றி!" என்ற முணுமுணுப்புடன், ஹோட்டல் பக்கம் திரும்பினாள் அவள்.



"வருகிறோம், சார்! ரொம்ப நன்றி!" என்று அவனும் கிளம்பலானான்.

"நன்றியெல்லாம் வேண்டாம், சார்! என்னை வம்பில் மாட்டிவிடாமல் இருந்தால், எனக்கு அது போதும்!" என்றார் கடைக்காரர்.

"என் கார்டைப் பார்த்தீர்கள் அல்லவா? ஒரு நல்ல நிலையில் உள்ளவனின் சத்தியம் சார், உங்களுக்குப் பாதிப்பு வராது! அது என் பொறுப்பு" என்றபடி, விரைந்து சென்று, முன்னே சென்று கொண்டிருந்த அவளோடு சேர்ந்து, சாலையைக் குறுக்கே கடந்தான் அவன்!

வேலை முடிந்ததும், என்ன வேகமாக ஓடுகிறாள்! பயங்கரமான காரியவாதி போலும்!

"ரொம்ப அவசரமாகப் போகிறீர்களே, மாத்திரை களை உடனேயா போட்டாக வேண்டும்?"

'விலுக்'கென்று அவள் நின்ற வேகத்தில், வழியே சென்றிருக்க வேண்டிய பைக் ஒன்று 'சடன் பிரேக்' போட்டுத் தடுமாறியது.

பைக் ஓட்டி இறங்கித் திட்டுமுன், "சாரிம்மா!" என்று அவசரமாக அவனிடம் மன்னிப்பு கேட்டு விட்டு, அவளைக் கைபிடித்து இழுத்துக் கொண்டு ஹோட்டல் வளாகத்துள் வேகமாக நடந்தான் பிரிய ரஞ்சன்.

அனிச்சையாக கையை அவள் உதறியபோது, தடுக்காமல் விட்டுவிட்டு, "உங்கள் குடும்பத்துப் பெரியவர்கள் மாத்திரையைப் போடுவது, உணவருந் தியதுமேயா, அல்லது, படுக்கும்போதா? அவசரமாகக்

கொண்டு போகிறீர்களே என்று கேட்டேன்'' என்று அவனது முந்தையக் கேள்விக்குத் தானாகவே விளக்கம் சொன்னான்!

அவளது இறுக்கம் தளர்ந்தபோதும், நின்று, அவனுக்குப் பதில் சொல்ல, அவளுக்குப் பிரியம் இல்லை என்பது நன்றாகவே தெரிந்தது!

மாத்திரையை வாங்க உதவி செய்வதோடு, அவனது பயன்பாடு தீர்ந்தது! அதற்கு மேல், அவளது வேலையைப் பார்க்கப் போய்த் தொலையாமல், அவளோடு கூடவே வந்து, இது என்ன தொல்லை என்று தோன்றுகிறதாக்கும்!

தோன்றும்.. தோன்றும் என்று கறுவியபடி, பதிலுக்காகக் காத்திருப்பதைக் காட்டிக் கொண்டான் அவன்.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு, ''கல்யாணத்தில், பெண் வீட்டாராய் உங்கள் தரப்பில், உங்களுக்கு எத்தனையோ வேலை இருக்கும்! அது என்னால் தடைப்பட வேண்டாம்! இந்த மாத்திரையை யாருக்கு, எப்படிக் கொடுப்பது என்று எனக்குத் தெரியும். நீங்கள் போங்கள்!'' என்று விட்டு, நேராக நோக்கியபடி 'லிஃப்ட்' பக்கம் விரைந்தாள்.

உனக்கு மட்டுமென்ன, எனக்கும்தான், இந்த மாத்திரையை யாருக்கு எப்படிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறாய் என்று நன்றாகவே தெரிகிறது என்று எண்ணியவாறு தொடர்ந்து அவளுடனேயே நடந்தபடி, ''நான் பந்தி உபசாரத்துக்காகச் சாப்பாட்டு ஹாலுக்குப் போகப் போகிறேன். அங்கே, உங்கள் தந்தையிடம், நீங்கள் தூக்க மாத்திரைகளை வாங்கிவிட்டது பற்றிச்



சொல்லி விடட்டுமா?'' என்று பிரியரஞ்சன் கேட்கவும் அவள் மீண்டும் அதிர்ச்சியுற்றவளாய்ச் சட்டென நின்றாள்.

அவளது அகன்ற விழிகள் மேலும் அகன்று, முதல் முறையாக அவனது முகத்தில் பதிய, வாய் பேச மாட்டாமல் திகைத்து விழித்தாள் அவள்!

இந்த மாத்திரைகளை, இவள் ஏன் வாங்குகிறாள் என்பது பற்றிக் கொஞ்ச நஞ்சம் சந்தேகம் பிரியரஞ்சனுக்கு இருந்திருந்தாலும், அது இப்போது, அடியோடு மறைந்தது!

சிறு கடுப்புடன் நோக்கிய பிரியரஞ்சனின் கண்கள் மெல்ல இளகுகையில், ''ஏ... ஏன் சொல்ல வேண்டும்?'' என்று தடுமாறினாள் அவள்.

''ஏன் என்றால்? ஒரு வேளை, உங்களால் மாத்திரைகளை வாங்க முடியவில்லையோ என்று, அவர் இன்னும் யாரையேனும் மருந்துக் கடைக்கு அனுப்பி வைக்கலாம் அல்லவா? எதற்கு வீணாக?''

மூச்சிரைப்பு குறைய, ''இ... இல்லை! அப்பாவிடம் நா...னே தெரிவித்து விடுகிறேன்! நீங்கள் பாவம், அனாவசியமாகச் சிரமப்படாதீர்கள்!'' என்று அவள் மிகவும் சிரமப்பட்டுக் கொணர்ந்த இயல்பான குரலில் கூறி முடித்தபோது 'லிஃப்'டை இருவரும் நெருங்கியிருந்தனர்.

'லிஃப்'டில் மேலும் சில பேர் இருந்தார்கள்.

அவர்களைக் கவனியாதவனாய், ''சாப்பாட்டு ஹாலுக்குத்தானே?'' என்று அவளிடம் கேட்டவாறு,



ஹால் இருந்த ஏழாவது தளத்துப் பட்டனை அழுத்தினான் பிரியரஞ்சன்.

''இல்லை! எங்கள் அறைக்குப் போய், இதை வைத்து விட்டு, இன்னும் சில வேலை செய்து விட்டு வர வேண்டும்!'' என்று, ஆறாவது பட்டனை, அவள் அழுத்தினாள்!

''சீக்கிரமாக வந்து விடுங்கள். உங்களைச் சாப்பாட்டுக்கு அழைப்பதற்கு ஆள் அனுப்பும்படிச் செய்து விடாதீர்கள்!'' என்று பிரியரஞ்சன் மறைமுகமாக எச்சரிக்கும்போதே, ஆறாம் தளத்தில் 'லிஃப்ட்' நின்று கதவு திறக்கவும் அவனுக்குப் பதிலேதும் கூறாமலே, வேகமாக வெளியேறிச் சென்று விட்டாள் அவள்.

இப்போது பின்னோடு செல்வதில் பயன் இராது என்று உணர்ந்து, தான் அழுத்திய ஏழாவது தளத்தில், மற்றுமுள்ளோருடன் வெளி வந்தான் அவன்.

ஆனால், மற்றவர்கள் எல்லோரும் உணவறைக்குச் செல்லுகையில், ஒதுங்கி நின்று, பிரியரஞ்சன், தான் ஏற்கனவே பத்திரப்படுத்தி வைத்திருந்த மருந்துக் கடை பில்லை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

முத்தான கையெழுத்தில், மனோகரி என்று, அவளது பெயர், அதில் எழுதப்பட்டிருந்தது!

மனோகரி! தோற்றம் மனோகரமானதாகத்தான் தெரிந்தது! மனதுதான் பிரச்சனை போலும்! ஆனால், பிரச்சனை என்பதே சீராக்கப் பட வேண்டிய ஒன்றுதானே?

வெகு விழிப்புடன் கவனித்துக் கொண்டிருந்ததால், விரைவிலேயே, ஒரு சின்னப் பெண், இங்குமங்கும்



பார்த்தபடி, ஒரு ரகசியத் தோற்றத்துடன் சுந்தருடைய தாய் மாமனை அணுகுவதைப் பிரியரஞ்சன் உடனேயே கண்டு கொண்டான்.

அந்தப் பெண், அவரது காதில் எதையோ ஓதிவிட்டு விளையாட ஓடிப்போய், குருநாதன் மனைவியை அழைத்து, ''மனோ தலைவலி என்று மாத்திரை போட்டுக் கொண்டு தூங்கப் போகிறாளாம். இங்கே அலுவல் முடிந்து நாம் படுக்கச் செல்லும்போது, அவள் தூங்கிக் கொண்டிருந்தால் எழுப்ப வேண்டாமாம்! சொல்லியனுப்பியிருக்கிறாள். நீ சும்மாப் பாலைக்குடி, பழத்தைச் சாப்பிடு என்று, அவளை எழுப்பிவிடாதே! வலிக்கு மாத்திரையைப் போட்டு விட்டுத் தூங்கும்போது இடையில் எழுப்பினால், வேதனை அதிகமாயிடும்! அதனால், அவளை, அப்படியே தூங்க விட்டுவிடு!'' என்று கரிசனத்துடன் கூற, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் வருத்தத்துடன் பார்த்துக் கொள்வதைக் கவனியாத பாவனையில் கவனித்த பிரியரஞ்சனுக்கு அவர்கள் மீது இரக்கமும், மனோகரி மேல் கோபமும் உண்டாயிற்று!

இந்த அன்பான பெற்றோரை நினைக்கத் தோன்றவில்லையே! அவளுக்குத் தன் சொந்த வேதனை மட்டும்தான் உலகமா? மற்ற எல்லாமே மறந்து விடுமா? நாளைய திருமணம் என்ன ஆகும என்று கூடவா தோன்றாது?

சற்றும், அடுத்தவரை நினையாத சுயநலமா?

எல்லாமே நினைக்க வைக்கிறேன் பெண்ணே, நிச்சயமாய் நினைக்க வைக்கிறேன் என்று தனக்குள்ளேயே

சொல்லிக் கொண்டபடி, அங்கிருந்து நழுவினான் அவன்.

'லிஃப்'டில் ஏறி இறங்கி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் பார்வையைக்கூடத் தவிர்க்க விரும்பி, படிகளிலேயே இறங்கி அடுத்த தளத்தை அடைந்தான் அவன்.

சாப்பாட்டுக்கு அழைக்க வரக்கூடும் என்று பிரியரஞ்சன் மறைமுகமாக எச்சரிக்கை விடுத்ததே, ஒரு நேரக் கணக்குக்குத்தான்!

அந்தச் சின்னப் பெண் தூது வந்து, இன்னமும் அதிக நேரம் ஆகவில்லை.

ஆனால், மனோகரி அவனை அனுப்பிய பிறகு, இடையில் எங்காவது நின்று அவள் விளையாடி விட்டு வந்திருந்தால்...

அவனது இதயத் துடிப்போடு, நடை வேகமும் அதிகரித்தபோதும் எப்படியும் காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கையும் இருந்ததால், அவன் அப்படியொன்றும், அரண்டு போய்விடவில்லை!

எல்லோரும் உணவருந்தப் போயிருந்தது வசதியாக, குருநாதனுடைய குடும்பத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையின் அழைப்பு மணியை அடித்து கதவு திறக்கப்படாதிருக்கையில், தொடர்ந்து அறைக் கதவைப் பிரியரஞ்சன் தட்டியபோது, அதை விசித்திரமாகப் பார்க்க, அங்கே யாரும் இருக்கவில்லை!

அப்போது மட்டுமின்றி, கதவைத் திறக்கும்வரை அவன் தொடர்ந்து தட்டியதையும், ஒரு வழியாகக்



கதவு திறக்கப்பட்டதும், அவன் சட்டென்று அந்தப் பெண் மனோகரியை உள்ளே இழுத்துச் சென்று, "என்ன? எல்லா தூக்க மாத்திரைகளையும் விழுங்கி முடித்தாயிற்றா?" என்று ஏளனமாகக் கேட்டதையும் கூட!



4

**சி**ல கணங்கள் மனோகரிக்கு ஒன்றுமே புரியாத நிலை!

மாத்திரை வாங்குவதில், ஏதோ ஒரு விதமாக உதவி செய்தவன் சொன்னதுபோல, யாரேனும் வெகு கரிசனமாக உணவருந்துவதற்காக அழைக்க வந்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்து, சற்று தூரத்து உறவுக்காரச் சிறுமி ஒருத்தியைப் பிடித்து, அவளுக்குச் சாக்லேட் எல்லாம் கொடுத்துத் தாஜாப் பண்ணித் தந்தைக்குத் தகவல் அனுப்பிவிட்டு, எழுத வேண்டிய இரு கடிதங்களையும் - ஒன்று, தன் சாவுக்கு யாரும் காரணம் இல்லை என்று போலீஸ் கமிஷனருக்கும், அடுத்து, இந்த முடிவெடுத்ததற்காகத் தன்னை மன்னிக்குமாறு பரிதாபத்துக்குரிய தன் பெற்றோருக்கும், எழுதினாள்.

இந்த விடுதலை பற்றிய ஐடியா தோன்றியதிலிருந்து அதே யோசனையாக இருந்ததால், கடிதங்களை எழுதுவதும் அவளுக்குக் கடினமாக இருக்கவில்லை!

பெற்றோருக்குக் கடிதம் எழுதும்போது, மகளை இழந்து அவர்கள் வருந்துவார்களே என்று, அவளுக்குக்

கொஞ்சம் வேதனையாகத்தான் இருந்தது! ஆனால், அவர்கள் இருவருமே, ஊருக்கும் உழைப்பவர்கள். மற்றவரை மகிழ வைப்பதிலேயே தானும் மகிழ்கிற வர்கள். எனவே, மகள் நினைவிலேயே முடங்கிப் போய் விட மாட்டார்கள் என்ற திடமும் இருந்ததால், விடாமல், சீக்கிரமே, அந்தக் கடிதத்தையும் எழுதி முடித்தாள்.

கடிதங்களை மடித்து, இலகுவாகப் பார்க்கும் இடத்தில் வைத்துவிட்டு, மாத்திரைகளை அட்டையிலிருந்து பிரித்து எடுத்து ஒன்றாக ஒரு தாளில் வைத்துக் கொண்டு, எல்லாவற்றையும் சேர்த்து விழுங்குவதற்காகத் தண்ணீரை எடுக்கச் செல்லும்போதுதான், முதலில் அழைப்பு மணி ஒலித்தது!

ஒரு கணம், மனோகரி அப்படியே உறைந்து நின்றாள்.

இப்போது யார், இடையூறாக?

சத்தமின்றிச் சும்மா இருந்தால், உள்ளே யாரும் இல்லை என்று, போய்விட மாட்டார்களா என்று, சற்று நேரம், அப்படியே அசையாமல் நின்று பார்த்தாள்! ஆனால், கதவை யார், இப்படித் தொடர்ந்து தட்டக் கூடும்?

தந்தை, உறவினர் என்றால், பெயர் சொல்லிக் கூப்பிட்டிருப்பார்கள்!

ஒரு வேளை, 'ரூம் சர்வீஸ்' யாராவதாக இருந்து, உள்ளே இருந்து கொண்டு திறக்கவில்லை. என்னவோ, ஏதோ என்று நிர்வாகத்தில் சொல்லிக் கலாட்டாவாக ஆகி விடக்கூடாதே. அப்புறம் தன் எண்ணம் நிறைவேறாதே என்று, அந்தப் பயத்தில்தான். அவள் கதவைத் திறந்தது!



ஹோட்டல் ஆளை, அறை வாயிலிலேயே நிறுத்திப் பேசி அனுப்பி விடும் எண்ணத்தோடும்தான்.

ஆனால்... யார் என்று சரியாகப் பார்க்கு முன்பாகவே, முரட்டடியாக அவளையும் உள்ளே இழுத்து வந்து அவன் கேட்ட கேள்வி, அவளைத் திணறடித்து விட்டது!

அவன்... மருந்துக் கடையில், மாத்திரை வாங்க உதவி செய்தவன்!

ஆனால், அவன், அவளுக்கு உதவியாக அதைச் செய்யவில்லை போலிருக்கிறதே!

தன்னையறியாமல் மாத்திரைக் குவியலின் மீது பாய முயன்ற பார்வையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அப்படியே, தன்னையும் சுதாரித்து, "பாருங்கள் மிஸ்டர், இது, இந்த ஹோட்டலில் எங்கள் குடும்பத்துக்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் அறை. இங்கே வந்து, தனியே இருக்கும் பெண்ணிடம் கலாட்டா செய்வது சரியில்லை! நிர்வாகத்திடம் புகார் செய்தேன் என்றால், உங்களுக்குத்தான் கேவலம்! அதனால், மரியாதையாக, உடனே போய் விடுங்கள்!" என்று, இயன்றவரை கம்பீரமாகக் கூறினாள்.

அவன் சற்றும் கலங்காமல், "புகார்தானே? தாராளமாகச் செய்! அதற்குரிய துணிச்சல் உனக்கு இருந்தால், தாராளமாகப் பண்ணு!" என்றபடி, கூர்மையான பார்வையோடு, அந்த அறையை ஆராய்ந்தான்.

அவளே, மற்றவர் பார்வையில் இலகுவாகப் பட வேண்டும் என்று வைத்ததுதானே? அவனது கழுகுப் பார்வையில் படாதிருக்குமா?



நிலைக் கண்ணாடியின் முன், மேஜையில் வைக்கப்பட்டிருந்த கடிதங்களைப் பாய்ந்து எடுத்தவன் எடுத்த வேகத்தில் பிரித்துப் படிக்கவும், மனோகரி மேலும் அதிர்ந்தாள்.

"ஏய் மிஸ்டர், அதெல்லாம் தொடாதீர்கள்! அவை, என்னுடையவை! முதலில் கீழே வையுங்கள்!" என்று அதட்ட முயன்றவளுக்குக் குரலே எழும்பவில்லை! அந்தக் கடிதங்களை, அவன் படித்து விட்டானே!

இப்போது என்ன செய்யப் போகிறானோ என்று, அவள் கண்ணகல நோக்குகையிலேயே, அந்தக் கடிதங்களை, அவனது பைக்குள் வைத்துக் கொண்டான் அவன்.

தொடர்ந்து, அவனது பார்வை மாத்திரைகளின் மீது விழ, "இன்னமும் விழுங்கி முடிக்கவில்லையாக்கும்?" என்றவாறு, அவன் அவைகளையும் எடுத்துக் காகிதத்தோடு சுருட்டி, கடிதங்களோடு சேர்த்துச் சட்டைப் பைக்குள் சேர்க்கவும், மனோகரி ரொம்பவும் கலங்கிப் போனாள்!

என்னவோ சொல்லுவார்களே, சண்டைக்காரன் காலில் விழுவது என்று, அது நினைவு வர, "பா... பாருங்கள் மிஸ்டர், அவை, என்னுடையவை! உங்களுக்கு என் நிலைமை தெரியாது... எல்லாம், எனக்கு ரொம்பவும் தேவை.

அது... எல்லாவற்றையும் தந்து விடுங்கள்! ப்ளீஸ்..." என்று கெஞ்சிக் கேட்டாள்!

"ஏன்? இத்தனை மாத்திரைகள் போடா விட்டால், உனக்குப் பொட்டுத் தூக்கம் வாராதாக்கும்?"



எப்படியோ எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கும் இவனிடம், உண்மை சொல்வது ஒன்றுதான் வழி என்று மனோகரிக்குத் தோன்றியது! இவனது மனம் இரங்கினால் ஒழிய, அவளது விடுதலைக்கு, வேறு வழியே கிடையாது! விடுதலை கிடைக்கா விட்டால்...

கண் கலங்க, "தூக்கம் வருவதற்காக அல்ல! என் துக்கம் தீர்வதற்கு, அவை கட்டாயம் வேண்டும். தயவு பண்ணிக் கொடுத்து விடுங்கள்!" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் அவள்.

அவளை வெறித்து நோக்கிவிட்டு, "அடேயப்பா! இந்தத் திருமணத்தை நிறுத்துவதற்காக, என்னவெல்லாம் ஆகாத்தியம் செய்கிறாய்! ஆனாலும், ஒரு பெண்ணுக்கு, இவ்வளவு சுயநலவெறி இருக்கக் கூடாது. பெண்ணே!" என்றான் பிரியரஞ்சன் கடுமையாக.

நியாயமற்ற இந்தக் குற்றச்சாட்டு, அவளைச் சீற வைத்தது!

"உண்மை தெரியாமல் உளராதீர்கள்! சுயநலம் பிடித்தவள் எங்கேயாவது, தன் உயிரை விடுவாளோ?" என்றாள் ஆத்திரத்துடன்.

"வெறி! சுயநலவெறி! உயிரையே விட்டாவது, உனக்குப் பிடிக்காத இந்தத் திருமணத்தை நிறுத்தியாக வேண்டும் என்கிற வெறி!" என்றான் அவனும் கோபமாகவே.

"நான் யாரையும் திருமணத்தை நிறுத்தச் சொல்லவில்லையே! கடிதங்களைத்தான் படித்தீர்களே! எதிலாவது, அப்படி எழுதியிருக்கிறேனா?"

''எழுதினால்தானா? ஒரு வேளை, உன் பிணத்தின் முன்பு, அதைச் சாட்சியாக வைத்துக் கொண்டு, சுந்தர், சௌமினி கழுத்தில் தாலி கட்ட, அதை ஆவி ரூபமாக வந்து, ஆசீர்வதிக்கலாம் என்ற ஐடியாவா? இந்த சினிமாக்களில், வெள்ளை வெளேரென்று புகை மாதிரி ஆவி வருமே, அது போலக் கற்பனை செய்தாயாக்கும்!..''

அப்படித்தான் நடக்குமா?

அற்பாயுளில், அகால மரணம் அடைகிறவர்கள் ஆவியாக அலைவார்கள் என்பார்களே, அவளும் அப்படித்தான் அலையப் போகிறாளா? இவன் சொல்லுகிற மாதிரி, சுந்தர் அத்தானின் கல்யாணத்தில்கூட...

''.... நீ மட்டும் தற்கொலையில் மடிந்தால், அதற்குப் பிறகு, இங்கே கல்யாணம் என்று ஒன்று நடக்க முடியுமா? போலீஸ் வந்து, உன் கடிதத்தை அப்படியே ஒத்துக் கொண்டு, அமைதியாகப் போய் விடுமா? என்னென்ன கூத்து நடக்கும்? அதெல்லாவற்றையும் விடு.. உன் மரணத்துக்குப் பிறகு, ஓர் அகால மரணத்தைப் பற்றிய அக்கறையே இல்லாமல், சந்தோஷமாகத் திருமணத்தை முடித்துக் கொள்வதற்குச் சுந்தரும் என் தங்கையும், கல் மனம் படைத்தவர்கள் என்றா எண்ணினாய்? அவர்கள்...''

இதே ரீதியில் அவன் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டே போக, அவள் அதிர்ந்து, இடையிலே குறுக்கிட்டாள்! ''சுந்தரும் 'யாரும்' என்றீர்கள்? தங்கையா? அப்படியானால், கல்யாணப் பெண்... உங்கள்...''



இப்போது அவள் குறுக்கிட்டு, ''தங்கை!'' என்று பதில் சொல்லு முன்பாகவே அவளுக்குப் புரிந்து போயிற்று!

பிள்ளை வீட்டார் முதலில் சாப்பிடுவது மரியாதை என்று, பொறுப்பாய் அழைக்க வந்தானே! நிமிர்ந்து பார்க்கக் கூடத் தோன்றாமல் நின்றாளே, அப்போதே, இவனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது போல! தங்கை திருமணத்தில், இவள் ஏதாவது தகராறு பண்ணக் கூடும் என்று, கண்காணித்திருக்கிறான்!

அதன் தொடர்ச்சிதான் மருந்துக் கடைக்கு வந்ததும்!

பிறகும், கவனித்துக் கொண்டே இருந்து, சரியான நேரத்தில் தடுத்து விட்டானே!

அவள்தான் ஒன்றும் தெரியாத முட்டாளாக... இருந்திருந்து இவனிடம் போய், மாட்டிக் கொண்டானே!

''... நான் அவளுடைய அண்ணன், பிரியரஞ்சன்! சௌமினி என் கூடப் பிறந்த, அன்பான, ஒரே தங்கை! மிக மிக மென்மையான உள்ளம் படைத்தவள்! ஒரு பெண்ணின் தற்கொலைக்குக் காரணம் ஆகி விட்டோம் என்று, அவள் மனம் என்ன பாடுபடும், தெரியுமா?''

ஏன், அவள் மனம் மட்டும்தான் பாடுபடுமா? இந்த மனோகரிக்கு நோகாதா? ஒரு வேளை, தங்கை தவிர மற்றவர்களுக்கு மனமே கிடையாது என்று எண்ணினானா?

அப்படியில்லை என்று காட்டுவானாய், யார் யாருக்கு மனம் உண்டு, அது எப்படி நோகும் என்று, அவன் வரிசையாக அடுக்கினான்!



''அடுத்து, சுந்தர்? என் உயிர் நண்பன்! ஆனாலும், அவன் காதல் என்றதும், அவனுக்கு என் தங்கையைக் கட்டிக் கொடுக்க, நான் உடனே தலையாட்டக் காரணம், அவனது பண்பான உள்ளம்! அவன் மேல் ஆசைப் பட்டிருப்பாயோ என்ற எண்ணமே உறுத்துகிறது என்கிறவன், அந்த ஆசையில் உயிரை விட்டாய் என்று ஆனால், எப்படிப் பொறுப்பான்?

''அதற்கு மேலாக, உன் பெற்றோர்! உனக்கென்ன, இருபது, இருபத்தோரு வயது இருக்குமா? ஒரே பெண் என்று கேள்வி! ஆசையாகப் பெற்று, இத்தனை ஆண்டுகள் பேணி வளர்த்த அவர்கள் என்ன மாதிரி நரக வேதனை அனுபவிப்பார்கள் என்று யோசித்தாயா?

''ஏன்? என் பெற்றோருக்கும்கூட, இன்னொரு பெண்ணின் மரணத்தில், நம் வீட்டுப் பெண்ணின் வாழ்வா என்று, உள்ளே உறுத்தாதா? இன்னும் எனக்குக் கூட...''

விட்டால், உன் வீட்டு நாய்க் குட்டிக்கும் வருத்தம் என்று கூடச் சொல்லுவாய் போல இருக்கிறதே! இத்தனை பேரின் முன், மனோகரி மட்டும் வெறும் தூசா?

சட்டெனப் பொங்கினாள் அவள்!

''உன் தங்கைக்கு, சுந்தருக்கு, என் பெற்றோர், உன் பெற்றோர், நீ என்று அடுக்குகிறாயே! எனக்கு எப்படி இருக்கும் என்று, ஒரு தரம் யோசிக்கக் கூடத் தோன்றவில்லையா? ஆசைப்பட்டுத் தின்பதற்கு, இந்தத் தூக்க மாத்திரை என்ன, சாக்கலேட்டா?'' என்று கசப்பும் வெறுப்புமாகக் கத்தினாள்!



இருந்த கொதிப்பில், இதுவரை பயன்படுத்திய மரியாதைப் பன்மை மறந்து, ஏக வசனத்தில் பேசுகிறோம் என்பதுகூட அவளுக்கு உணர்வில்லை!

ஒரு கணம் திகைத்தவனின் முகம் உடனே கடினமுற, ''இல்லை! யோசிக்கவில்லை! தற்கொலையை ஒரு தீர்வாகக் கொள்ளுகிற அசட்டு உள்ளம் பற்றி, எனக்கு எதுவும் தெரியாது! நன்கு தெரிந்தவள், நீதான் சொல், பார்ப்போம்!'' என்றான் அவன், சிறு ஏளனம் தவிர, வேறு எந்த வித உணர்ச்சியும் இல்லாத குரலில்!

பரபரப்புற்று, ''சொன்னால், மாத்திரையைத் தருவீர்களா?'' என்று கேட்டாள் மனோகரி!

அவளுக்கு எப்படியேனும், விடுதலை வேண்டுமே! நாளைக்குள்! நாளையை, நிச்சயமாக அவளால் தாங்கவே முடியாது! இன்றைய அனுபவத்தோடு, எல்லாம் போதும்!

ஆனால், அவன் வாக்குக் கொடுப்பதாக இல்லை! மாறாக, மறுக்கவும் இல்லாமல், ''நீ சொன்னால் தானே, தெரியும்!'' என்றான் பொதுவாக.

நெஞ்சுக்குள்ளே இருந்த வலியை, உள்ளே போய் நேரிலே பார்த்துவிட்டு வருகிறவள் போலக் கண்ணை மூடித் திறந்து, ''என் மனம் சுக்கல் சுக்கலாக உடைந்து விட்டது!'' என்றாள் அவள், மெல்லிய குரலில்!

புருவம் உயர்த்தி, ''சுக்கல் சுக்கலாக உடைவதற்கு, உன் மனம் என்ன, கண்ணாடிப் பாத்திரமா? அல்லது மண் பாண்டமா? அப்படியே உடைந்தாலும், எதை ஒட்டுவதற்கும், இப்போதெல்லாம் கோந்து கண்டு

பிடித்து விட்டார்கள், தெரியுமா? டீவியில், பத்திரிகைகளில் விளம்பரங்கள் பார்த்ததில்லை?'' என்றான் அவன் அசட்டையாக!

கோந்தா?

ஒரு பெண்ணின் உயிர்த் துடிப்பு, உனக்கு அவ்வளவு அலட்சியமாகவா இருக்கிறது என்று மனோகரியின் மனம் சீறியது!

ஆனால், தொடர்ந்து அவன் விளம்பரங்கள் பற்றிக் கூறவும், சட்டென அவளது கண்கள் பளிச்சிட்டன. ஓர் அலட்சியத் தோள் குலுக்கலுடன், ''விளம்பரங்களா? அதில்கூட, எல்லாவற்றையும் ஒட்டலாம். இதயத்தைத் தவிர என்றுதானே சொல்லுகிறார்கள்! இனியேனும், விளம்பரங்களைச் சரியாகப் பார்த்துவிட்டுப் பேசுங்கள்!'' என்றாள் எடுப்பாக!

அவளை ஆச்சரியமாக நோக்கிவிட்டு, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான் அவன். ''உன்னைப் பார்த்தால், முட்டாளாகத் தெரியவில்லையே! பின்னே ஏன் இப்படி... சுந்தர், சௌமினியை நேசிப்பது தெரிந்த பிறகும், அவளது வாழ்வை நாசம் செய்வதில் குறியாக இருக்கிறாய்?'' என்று, சற்றுத் தணிந்த குரலில் வினவினான் பிரியரஞ்சன்.

''நான் ஒன்றும், யார் வாழ்வையும் நாசம் செய்ய நினைக்கவில்லை!'' என்றாள் அவள், எரிச்சலுடன்.

என்னவோ, இவனுடைய தங்கையின் வாழ்வைக் கெடுப்பதுதான், அவளது ஒரே குறிக்கோள் என்பது



போலப் பேசுகிறானே! அவளுக்கென்ன, வேறு வேலையே கிடையாதா?

''பின்னே இதற்கு'' என்று சட்டைப் பையைத் தட்டிக் காட்டி விட்டுக் கேட்டான் அவன். ''இதற்கு என்ன அர்த்தம்?'' என்று நம்பாத குரலில் விசாரித்தான்.

எத்தனையோ இருக்கிறது! அவளது இழப்பு, ஏமாற்றம்! அவளது வேதனை, வருத்தம்! அத்தனையையும் மறைத்து, முகத்தில் மகிழ்ச்சியைக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம், காட்டுகிற சித்திரவதை!

அத்தனைக்கும் மேலாக... அது ஒட்டகத் துரும்பா? அல்லது, உச்சி மேல் இடியா? கடவுளே!

நீ சொல்லித்தான் ஆக வேண்டும்., சொல்லாமல் விட மாட்டேன் என்பது போல, அழுத்தத்துடன் உட்கார்ந்திருந்த அவனை, விரிந்த விழிகளால் வெறித்துப் பார்த்தாள் மனோகரி!



## 5

மனோகரியுடைய ஒரே அத்தை கருணா. அவளுடைய கணவர் கதிரேசன். அவர்களது திருமணத்தின் போதே, டெல்லியில் பெரிய அதிகாரி.

சிறு வயதில், ஆண்டுதோறும் கோடை விடுமுறைக்குத் தாய் மாமா வீட்டுக்குத்தான் சுந்தர் வருவான். கான்வாஸ் ஷூ போட்டுக் கொண்டு, அழுக்குப் படாமல் சுற்றி வரும் அவனைப் பற்றி, வீட்டில் எல்லோருக்குமே பெருமிதம்தான்.



தன் உறவினர் என்று, மனோகரிக்கும் சந்தோஷமாக இருக்கும்!

அத்தை, மாமா மக்கள், முறை என்று, சூழ உள்ளோரின் பேச்சும் உண்டு!

அத்தையுடைய கணவர் பக்கத்து ஊர்க்காரர்தான் என்பதால், அவருக்கு, அந்தப் பக்கம் நிலபுலன்கள் நிறையவே உண்டு.

அவருக்கு, மத்திய அரசாங்கத்தில் பெரிய வேலை! அயல்நாட்டு இலாகாவில்! பாதி நேரம். அவர் ஆகாய விமானத்தில்தான் பறந்து கொண்டிருப்பார்!

அதனால்தான்.. நேரடியாகப் பார்த்துப் பராமரிக்க நேரம் இல்லாததால், அவர்கள் நிலத்தை, மைத்துனன் வசம் விட்டிருந்தார்போலும்!

ஆனால், ஊர்ப்பக்கம் வேறு மாதிரியான பேச்சு வளரக் காரணமாகிப் போனது! என்றைக்கு இருந்தாலும், இரண்டும் ஒன்றாகப் போகிற சொத்துதானே., இன்றைக்கே கையில் கொடுத்துவிட்டார்கள் என்று பேசினார்கள்!

முக்கியமாக, அப்பாவையும், அத்தையையும் பெற்ற பாட்டியின் உருப் போடலே, அதுதான்!

எதிர்பார்த்த விதமாகவே பேச்சு செல்லவும், பிரியரஞ்சன், சற்று வசதியாகச் சாய்ந்து அமர்ந்து கவனித்தான்!

மகள் வயிற்றுப் பேரனுக்கும், மகன் வயிற்றுப் பேத்திக்கும் திருமணம் செய்து, அவர்கள் இருவருக்கும் பிறக்கப் போகும் கொள்ளுப் பேரக் குழந்தையைப்



பார்த்து விட்டுத்தான் கண்ணை மூடப் போவதாக, தினத்துக்கு ஒரு முறையாவது சொல்லாமல், அமிர்தம் மாவால் இருக்க முடியாது!

பத்தாவதில், பிளஸ் டூவில், மனோகரி நல்ல மதிப்பெண் வாங்கிப் பாஸ் பண்ணிய போதெல்லாம், அவர்களது சொத்து வருமானத்திலிருந்து, விலை உயர்ந்த நகை செட் ஒன்றை, அவளுக்குப் பிடித்த மாதிரியில் வாங்கிக் கொடுக்குமாறு, கடிதம் வரும்!

வருங்கால மருமகள் என்று முத்திரை பதிப்பதாக, இங்கே எல்லோரும் எண்ணிக் கொண்டார்கள்!

வெளிநாடு சென்று படித்தவனான, தங்கை மகனுக்குத்தான் மகள் என்று, குருநாதனுக்கு ரொம்பவே நிச்சயம்! அவனுக்கு ஏற்றபடி இருக்க வேண்டும் என்று, மகளை ஹாஸ்டலில் தங்க வைத்துப் படிக்க வைத்ததோடு, அதைச் சற்று அதிகப்படிப் பெருமிதத்துடன் சொல்லவும் செய்வார்!

அவருக்குத் தங்கையின் வாழ்க்கை முறை பற்றிப் பிரமிப்புடன் கூடிய பெருமை உண்டு! அதே போல, மகள் வாழ வேண்டும் என்ற ஆசையும்! அப்படித்தான் வாழப் போகிறாள் என்ற நிச்சயமும் இருந்தது!

அதனாலேயே, மனோவைப் பெண் கேட்டு வந்த சிலரை, அவர் சற்று இளக்காரமாகப் பேசியதும் உண்டு!

பாவம்! அவருக்கு இப்போது எப்படி இருக்கும் என்று உருகும்போதே அதுதான் காரணமாக இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம், மனோகரிக்கு இப்போது தோன்றியது!

ஆனாலும், அது என்ன பேச்சு?

உள்ளூரத் தவிப்பில் மனோகரியின் பேச்சு நிற்க, "அப்புறம்?" என்று உந்தினான் பிரியரஞ்சன்.

அவளென்ன கதையா சொல்கிறாள் என்ற ஆத்திரத்துடன் அவள் பார்க்கவும், "பாரம்மா, இப்போதே, முதல் பந்தி முடிகிற நேரம் ஆகி விட்டது. மற்றவர்கள் சாப்பாட்டைக் கவனித்து விட்டு, உன் பெற்றோர் அடுத்து உட்கார்ந்து விடுவார்கள். அவர்கள் உணவருந்தி முடிப்பதற்குள், நீ உன் கதையை முடித்து, நாம் பேசியும் முடித்தாக வேண்டும்! நீ, இப்படி வார்த்தைகளில் ஒவ்வொன்றாக முத்து உதிர்த்து, அதை நான் தேடி எடுத்துக் கோத்துக் கொண்டிருந்தால், எதற்கும் அவகாசம் இராது! அப்புறம் உன் பெற்றோரிடம், நான் விஷயத்தைப் போட்டு உடைக்கத்தான் வேண்டியிருக்கும் வேறு வழியிராது!" என்றான் அவன்.

மறைமுகமான மிரட்டல்! ஆனால், எதிர்த்து நிற்க வகையில்லாததோடு, அவனை இளகச் செய்வதற்காக வேனும், அவளும் தொடர்ந்து சொல்லத்தான் வேண்டியிருந்தது!

பின் நாட்களில், சுந்தர் அதிகமாக ஊருக்கு வந்தது கிடையாது! படிப்பில் மும்முரமாக இருக்கிறான் என்று, அவர்கள் எண்ணிக் கொண்டார்கள்.

ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின், திடுமெனக் குடும்பத்துடன் வந்த தங்கை, "மகன் கூடப் படித்த பையனுடைய தங்கையை மணக்க விரும்புகிறான்! விஷயத்தை உங்களிடம் தெரிவித்துவிட்டுக் கோயிலில்



பொங்கல் வைத்துக் கும்பிடலாம் என்று வந்தோம்!" என்று கூறியபோது, எல்லோருக்குமே தலையில் இடி விழுந்த வேதனைதான்!

ஆனால், அப்போதும்கூட, வருத்தத்தை உள்ளடக்கிக் கொண்டு, குருநாதன், தங்கை சொன்ன கோயில் பொங்கலுக்குத்தான் ஏற்பாடு செய்தார்.

பாட்டி அப்படிச் சும்மா இருக்கவில்லை!

மகளிடம் தனிமையில், "ஏண்டி, உனக்குக் கொஞ்சமேனும் அறிவு இருக்கிறதா? சொத்தும் சொத்தும் சேரும்! கூடவே, அண்ணன் என்றைக்கும் உனக்கே தூணாகத் துணையிருப்பான்! எல்லாம் யோசித்துத்தானே சுந்தரத்துக்கு, மனோவைக் கட்டி வை என்று சொன்னேன்! அப்போது பெருமாள் மாடு மாதிரித் தலையாட்டிவிட்டு, இப்போது, இப்படிக் குண்டு போடுகிறாயே!" என்று மகளைக் கடிந்தாள்! "எப்படியாவது, அந்தப் புதுப் பேச்சை நிறுத்தி, அண்ணன் மகளையே முடிக்கப் பார்!" என்று ஆலோசனையும் சொன்னாள்!

பக்கத்து அறையில், மடித்த துணிகளை அலமாரியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த மனோகரிக்கும், பாட்டி சொல்படி, அத்தை செய்துவிட மாட்டாளா என்ற ஆசைதான்!

பாட்டியின் காரணங்கள் எப்படியோ இருக்கட்டும்.. அவளே, சுந்தரைத்தானே, இன்று வரை கணவனாக எண்ணி வந்திருக்கிறாள்! இனி எப்படி மாறுவது?

ஆனால், "ஷ்... குரலைத் தணித்துப் பேசுங்கள், அம்மா! சும்மாவே, நெருங்கிய சொந்தத்துக்குள்



வேண்டாம் என்று, உங்கள் மாப் பிள்ளை சொல்லிக் கொண்டிருந்தார்! பிற்பாடு, அடு த்த தலைமுறைக்கு நல்லதில்லையாம்! பையனும், அதே போல, உற வுக்குள் வேண்டாம் என்கிறான் ! இதுவரை, ஒரு தங்கை மாதிரிதான், மனோவை அவன் நினைத்திருக் கிறானாம்! எப்படியும், இன்னொ ருத்தி மேலே ஆசை என்கிற பிள்ளையிடம், மனோ வைத்தான் கட்டிக் கொள்ள வேண்டும் என்று, நா எப்படிம்மா, கட் டாயப் படுத்த முடியும்? அதனால், இந்தப் பேச்சைப் பேசியதாகக்கூட, யாருக்கும் தெரிய வேண்டாம்! அடியோடு மறந்தே விடுங்கள்!" என்றாள் அத்தை தீர்மானமாக.

ஆனால், தங்கை மாதிரியா என்று தவிப்பாக இருந்தது. மனோகரிக்கு கூடவே வ, இதை எப்படி மறப்பது என்றும்!

அத்தோடு, ஊரில், உடனொ த்த தோழிகளிடம் இதைச் சொன்னால், 'முறைப் பெ ண் எப்படித் தங்கை ஆக முடியும்? உன்னைப் பிடி க்கவில்லை என்று நேராகச் சொல்வதற்குப் பதிலாக ச் சும்மாச் சாக்கு!' என்று அவளை ஏளனமாக நோ க்கிச் சிரிக்க மாட் டார்களா?

ஆனால், அதெல்லாம் அத்தைக்கு ப் புரியவில்லையே!

"தாலியைக் கட்டிவிட்டால், தங் கை என்று, நானா சொன்னேன் என்று கேட்பான்!" என்று பாட்டி வலியுறுத்திச் சொன்னதை, ஒத்து க் கொள்ளாமல், அந்தப் பேச்சை அத்தோடு விட ச் சொல்லி விட்டு அத்தை போய்விட்டாள்.



ஆனால், மகளின் பேச்சை ஏற்றுப் பாட்டி அப்படி ஒன்றும் அந்தப் பேச்சை விட்டு விடவில்லை போலும்! பேரனிடம் போய்ப் பேசியிருக்கிறாள் என்பது, அந்தப் பேத்திக்கு விரைவிலேயே புரிந்தது!

"முன்னே வந்தபோது, இங்கே வீட்டுப் பின்புறம் ஊர் ஓடை பார்த்த நினைவு இருக்கிறது! சின்னச் சின்ன மீன்கள் கூட்டம் கூட்டமாய், அழகாக ஓடுமே! வழி காட்டுகிறாயா, போய்ப் பார்த்துவிட்டு வருவோம்?" என்று கேட்டு, ஓடைக்கு அவளை அழைத்துச் சென்றான் சுந்தர்.

அவன் தனிமையில் ஏதோ சொல்லப் போகிறான் என்று மனோகரிக்குப் புரிந்தது! மற்றபடி, ஊர் வயல்கள் அனைத்தையும் சுற்றிச் செல்லும் ஓடைக்கு, வழிகாட்ட ஆள் எதற்கு?

அந்தப் பெண்ணிடம் ஆசை வந்தது பற்றிச் சொல்லப் போகிறானோ?

ஆனால், அவளும்தானே, மனதில் ஆசையை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள்!

அதை, அவளும் வாய்விட்டுச் சொன்னால், என்ன பண்ணுவான்?

ஆனால், இன்னொருத்தியை மணக்க விரும்புகிறவனிடம் அப்படிப் பேசுவது கேவலம் இல்லையா?

அங்கே போனதும், "ஊர்க்காரர்கள், முறை, கிறை என்று, அப்படித்தான் கண்டபடி பேசுவார்கள்! உனக்கு அப்படி ஒன்றும் இல்லைதானே, மனோ? பல முன்னேறிய நாடுகளில், நெருங்கிய சொந்தத்துக்குள்

மணம் புரியக் கூடாது என்று சட்டமே இருக்கிறது! சட்டத்தை விடு! நீ படித்திருக்கிறாய்! பெரியப்பா, பெரியம்மா பிள்ளைகள் என்றாலும், மாமா அத்தை பிள்ளைகள் என்றாலும், ரத்தத் தொடர்பைப் பொறுத்த வரையில் ஒரே மாதிரிதானே? நாம் இருவரும், அண்ணன் தங்கை போலத்தானே?'' என்று, அவளிடமே நேரடியாகக் கேட்டான் சுந்தர்!

இப்படிக் கேட்கிறவனிடம், 'அய்யய்யோ, அப்படியில்லை! எனக்கு உன் மீது ஆசை' என்றா சொல்ல முடியும்? அவளுக்கும் மானம், ரோஷம் எல்லாம் இருக்கிறதுதானே?

எனவே, வருத்தத்தை மறைத்து, ''ஆமாம். அப்படியே தான்!'' என்று விட்டாள் அவளும்!

இவன்.. 'தங்கையின் வாழ்வை நாசமாக்குவது தான் அவளது குறி' என்கிறானே. 'அது மட்டும் நிஜமாக இருந்தால், அந்த நேரத்தில், அதைச் செய்திருக்க மாட்டாளா?' அத்தான், நான் உன்னையே நினைத்து வளர்ந்தேன், மீறியிருப்பானா?

ஆனால் மனோகரி பெருந்தன்மையாக ஒதுங்கிக் கொண்டாளே, அதைப் பாராட்ட வேண்டாம்? அதை விட்டுக் குறைப்படுவதா?

குற்றம் சாட்டும் பார்வையைக் கண்டுகொள்ளாமல் ஒதுக்கி, ''அதைப் பற்றிப் பிறகு பார்ப்போம்! ஆனால், அவ்வளவு பெருந்தன்மையாக ஒதுங்கிக் கொண்டவளுக்கு, இப்போது என்ன ஆயிற்று? திடீரென்று, மனம் அந்தப் பெருந்தன்மையைக் குப்பைத் தொட்டி



யில் தூக்கிப் போட்டு விட்டதா?'' என்று கேட்டான் பிரியரஞ்சன்.

ஆத்திரத்துடன் முறைத்தவளின் பார்வை, அவனது சட்டைப் பையில் நிலைத்தது! நெஞ்சைப் புழுவாய் அரிக்கும் இந்தத் துன்பத்தில் இருந்து, அவளது விடுதலைக்கான வழி, அவனது பைக்குள் அல்லவா மாட்டிக் கொண்டிருக்கிறது!

அதை, அவளிடம் தந்து விட்டுப் போய்த் தொலைகிறவரை...

ஒரு பெருமூச்சுடன் மீண்டும் தன்னிலை விளக்கத்தைத் தொடர்ந்தாள் மனோகரி.

மனம் நொந்து தவித்தபோதும், அவர்களுடைய சிறு குடும்பத்தில் யாரும், அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை!

சரியாகச் சொல்லப் போனால், ஊரில்தான் எல்லோரும், முறைப் பையன்., இவன்தான் மாப்பிள்ளை என்றார்களே தவிர, அத்தை, மாமா வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் எதுவும் வந்ததாக, எவ்வளவுதான் மூளையைக் கசக்கி யோசித்தபோதும், மனோகரிக்கு நினைவு வரவில்லை!

அவளுக்கு அளிக்கப்பட்ட பரிசுகள் கூடப் பெண் மகவு இல்லாத கருணா, கூடப் பிறந்த அண்ணன் மகளுக்கு ஆசையாகச் செய்ததாக இருக்கும் என்று, காலம் கடந்து, இப்போதல்லவா குடும்பத்தில் எல்லோருக்கும் புரிகிறது!

முக்கியமாக மனோகரிக்கு!



புரிந்த பிறகு, அதற்கேற்ப மனதைத் தேற்றிக்கொள்ள, குறைந்த பட்சமாக மனதைத் திடப்படுத்திக் கொள்ள, மனோகரி அரும்பாடு படத்தான் செய்தாள்!

தனக்காக இல்லை என்றாலும், தன்னைப பார்த்துப் பார்த்து நோகும் பெற்றோரின் மன அமைதிக்காகவே, அவள் பெரிதும் முயன்றாள் எனலாம்!

மெல்ல மெல்ல, அவள் வெற்றியும் பெற்றிருக்கக் கூடும்!

ஆனால், அதற்குள் சுந்தரின் திருமண நாள் நெருங்கி வந்துவிட்டது!

டெல்லியிலிருந்து இவ்வளவு தூரம் அருகில் வந்து விட்டதால், பிறந்து வளர்ந்த ஊர்க்காரர்கள் எல்லோரையும் கருணாவும், அவளுடைய கணவரும், தங்கள் செல்வ மகனின் திருமணத்துக்கு விரும்பி அழைத்ததோடு, அவர்களுக்கு நல்ல விதத்தில் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யவே, பெரும்பாலோர் அழைப்பை ஏற்று வந்துமிருந்தனர்.

முந்திய நாள் மாப்பிள்ளை அழைப்பு, நிச்சயதார்த்தம்., மறுநாள் காலையில் திருமணம், மாலையில் வரவேற்பு வேறு ஏற்பாடு செய்திருந்தார்கள்!

எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு, கருணா அன்பாக அழைத்த விதத்தில், கிட்டத்தட்ட எல்லோருமே, அதற்கேற்ப வந்துமிருந்தனர்!

உண்பதும், உறங்குவதும் தவிர வேறு வேலையற்றிருந்த உறவினர் கூட்டம் வெறும் பேச்சில் பொழுதைக் கழிக்க நேர்ந்தது.



அந்தப் பொழுது போக்குப் பேச்சின் சுவாரசியமான விஷயமாக மனோகரி ஆகிவிடவே, தன் மனதைத் திடப்படுத்த அவள் மேற்கண்ட முயற்சியும் படுதோல்வி அடைய நேர்ந்தது!

அவர்கள் குடும்பத்தில் ரொம்ப நாளைக்குப் பிறகு நடக்கப் போகிற திருமணம் அது என்பது, உண்மை தான்!

ஆனால் அதற்காக, அந்தத் திருமணத்தைப் பற்றித் தவிர வேறு பேச்சே பேசக் கூடாது என்று அரசாங்கத்தில், ஏதேனும் சட்டம், கிட்டம் புதிதாகப் போட்டு வைத்திருக்கிறார்களா, என்ன? அப்படித்தான் போல, யாரைப் பார்த்தாலும், நண்டு சிண்டிலிருந்து, வயதான கிழடு கட்டை வரை, யாருக்கும் வேறு பேச்சே இருக்கவில்லை!

சொன்னதையே சொல்லி, பேசியதையே பேசி, சரியான ரம்பம் மாதிரி அறுக்கிறார்களே, இவர்களுக்கு அலுத்துப் போகாதா என்று, மனோகரி தவிக்கும் அளவுக்குப் பேசினார்கள்!

ஆனால், யாருக்கும் அப்படி அலுத்த மாதிரிக் கொஞ்சமும் தெரியவில்லை!

அதுவும், மனோகரியைக் கண்டாலே, பலருக்குப் புது ரத்தம் பாய்ந்துவிடும் போலும்!

பக்கத்தில் இருந்து பார்த்த மாதிரி, விலாவாரியாக, விவரித்துப் பேசுவார்கள்!

பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும், கண்டதும் காதலாகி, ஆண்டுக் கணக்கில் அதை வளர்த்து, இப்போது

வாய்ப்புக் கிடைத்ததும், திருமணத்தை முடிக்கிறார்களாம்!

பெண், சுந்தரோடு கூடப் படித்த சினேகிதனுடைய தங்கையாம்! அழகியாம்! நல்ல குணவதியாம்!

இவருடைய பெற்றோருக்கும் நல்ல பழக்கம் என்பதால், பிள்ளைகள் ஆசை என்றதும், சரிதான் என்று, உடனே ஒத்துக் கொண்டார்களாம்!

இவ்வளவும் மனோகரியை வைத்துக் கொண்டு, ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தபடியே நடக்கும் கதாகாலட்சேபம்!

எதற்காக? என்ன அவசியம்?

இந்தத் திருமணம் நடக்கக் கூடாது என்று, மனோகரி யாரிடமேனும், எப்போதேனும் சொன்னதுண்டா?

ஊமையைப் பாட்டதுபோல, உள்ளூர எவ்வளவு வேதனை இருந்தபோதும், வாய் திறந்து, அந்த மாதிரி ஒரு வார்த்தை சொல்லியிருப்பாளா? முகத்தில்கூட, வாட்டம் தெரிந்து விடாமல், எவ்வளவு கவனத்தோடு நடந்து கொள்ளுகிறாள்!

முகம் சிரித்தாற்போலத் தோன்ற வேண்டும் என்பதற்காக உதடுகளை இழுத்துப் பிடித்து வைத்திருப்பதில், கன்னமும் தாடையும் வலிகூட எடுத்துவிட்டது!

அந்த அளவுக்கு நடித்தும், ஒருவரையும், அவள் நம்ப வைத்ததாகத் தெரியவில்லையே!

இத்தனைக்கும், பேசியவர்களில் பாதிப் பேருக்கு மேல், அவளிடம் பெருமளவு அன்பும் பிரியமும் உடையவர்களே!



இப்போது பரிவும், பச்சாதாபமும் கூட!

''அத்தை பிள்ளைதானே என்று, அலட்சியமாக இருந்து விட்டாய்! அப்போதே, பிடித்துக் கட்டிப் போட்டிருக்க வேண்டும்! அதை விட்டு, இப்போது தும்பை விட்டுவிட்டு, வாலையும் பிடிக்க முடியாமல் ஒரேயடியாக விட்டுவிட்டு, இப்படி அலமந்து நிற்கிறாய்! அதே சமயம், அவளைப் பார்! அண்ணன்காரன் சினேகிதனை அப்படியே வளைத்துப் பிடித்து விட்டாள்! அங்கே ஏதோ கசமுசா நடந்திருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது! அதனால்தான், உன் அத்தையே சரியென்றிருக்கிறாள்!...'' என்று, நடக்க இருக்கும் கல்யாணத்துக்கு ஒரு காரணம் கற்பித்தது, ஒரு மூத்த தலைமுறை!

''அப்படியெல்லாம் கிடையாது, சின்னப் பாட்டி! அத்தான் அப்படிப்பட்டவர் இல்லை!'' என்று, அப்போது கூட அத்தை மகனைத் தாங்கியே, மனோகரி பேசியிருக்கிறாள்!

என்னதான் அவன் வேறு பெண்ணை விரும்பி மணந்தாலும், அவளுடைய ஹீரோ அவன்தானே? அவனை ஒருவர் குறைத்துப் பேசுவதை, அவள் எப்படித் தாங்குவாள்?

''அடப் போடிச் சின்னக் குட்டி, அவனுக்குப் பொருத்தமாக இருக்க வேணுமின்னு, மாங்கு மாங்கு என்று பள்ளிக்கூடப் பாடத்தைப் படித்தியே தவிர, இந்தச் சிலுமிஷம் எல்லாம், உனக்கு என்ன தெரியும்? தெரிந்திருந்தால்தான், அந்த சுந்தரம் பயலை, நீயே வளைத்துப் போட்டியிருப்பியே! அடியே, நீ ஒரே



பொண்ணு. உனக்கு எவ்வளவு சொத்து வரும்? அதையெல்லாம் விட்டுவிட்டு, எவளோ ஒருத்தியைத் தன் பையனுக்கு, உன் அத்தை கட்டி வைக்கிறாள் என்றால், அங்கே நிச்சயமாக, என்னமோ நடந்தே இருக்குது! உன்னோட இந்தச் சின்னப் பாட்டி ஒன்று சொன்னால், அது சத்திய வாக்கு பேத்தியாளே, வேணுமானால், உன் பள்ளிக்கூட நோட்டுப் புஸ்தகத்திலேயே, எழுதி வைத்துக் கொள்ளு!'' என்று சவால் விட்டாள் சின்னப் பாட்டி!

கேட்டுக் கொண்டிருந்தவனின் முகம், இப்போது கடுப்பதை, உள்ளூரத் திருப்தியுடன் கண்டாள் மனோகரி.

தங்கையைச் சொன்னதும் வலிக்கிறதா? அவளை மட்டும், என்னவெல்லாம் சொன்னான்? முக்கியமானதைச் சொல்ல முடியாமல், வேறு பேச்செடுத்துப் பேசியதும் நல்லதுதான்!

பிரியரஞ்சன் ஏதாவது கூறினால், நன்றாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று மனோகரி காத்திருந்தால், அது புரிந்தோ, என்னவோ, அவன் வாயே திறக்கவில்லை!

மேலே தொடரும்படி, சைகை மட்டும் காட்டினான்!

மனோகரியுடைய தாயைப் பெற்ற பாட்டியுடைய தங்கை, அந்தச் சின்னப் பாட்டி! அவள் வீட்டில் எல்லாப் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் பிறந்தது, பையன்களே! தன் முரட்டுப் பேரன்களின் இடையில், அக்கா பேத்தியாளை, இந்த அழகிய பெண்ணிடம், அவளுக்குத் தனிப் பிரியம் உண்டு!



ஆனால், அதை இப்படித்தானா, காட்டிக்கொள்ள வேண்டும் என்று மனோகரிக்குமே வருத்தம்தான்? அதுவும், இத்தனை பேர் முன்னிலையில்!

விடிந்தால், சுந்தருக்குத் திருமணம்! இன்னொரு பெண்ணுடன்!

இப்போதுபோய், அவனை விட்டு விட்டியே, விட்டு விட்டியே என்று அங்கலாய்த்தால்?

அவள் வீட்டு உள் விவரம் ஒன்றுமே தெரியாதவர்களுக்குக் கூட, என்ன விஷயமோ என்று குறுகுறுப்பும் ஆர்வமும் தோன்றி விடாதா?

பெரிய வீட்டுப் பெண் என்று சும்மாவே பொச்சரிப்புப் பட்டுக் கொண்டிருந்த கும்பலின் வாய்க்கு, இது எவ்வளவு பிரமாதமான அவல்! அப்புறம், அவர்கள் அசைபோடக் கேட்பானேன்?

''பொண்ணு கொஞ்சம் கண்ணுக்கு லட்சணமாக இருக்கிறாளேன்னு, எங்க பையனுக்குக் கட்டித் தரச் சொல்லிக் கேட்டோம்! என்னமோ, அவங்க சொத்துக்காக வந்ததாக நினைத்து, மூஞ்சியில் அடித்த மாதிரி, அந்த அண்ணன் பேசிவிட்டார்! தங்கச்சி பையனை மனசிலே வைத்துக்கிட்டு, படித்த பையனுக்குத்தான் கொடுப்பேன். படிக்காத பட்டிக்காட்டு முடப் பசங்களுக்கு இல்லை என்று, என் மனசு நோகச் சொன்னார்! இப்போ என்ன நடந்தது? அவரு பொண்ணையே பட்டிக்காட்டு முடமின்னு, கழித்துக் கட்டி விட்டாங்க!''

இதுவும், மேடை ரகசியமாக, அவளது காதில் விழும்படியாகவே கூறப்பட்டது!

இப்படித் தாங்கிப் பேசுகிறேன் என்று ஒரு கூட்டமும், வாயைக் கிண்டி வம்பு அளக்கத் துடிக்கும் ஒரு கூட்டமுமாகச் சேர்ந்து, மனோகரி மறக்க முயன்றது எந்த இடத்திலும் மறக்க விடாமல், அவளை வாட்டி வதைத்தனர்!

மெல்ல அந்த இடத்தை விட்டு அகன்று போய் விடலாம் என்று பார்த்தால், எந்த இடத்திலும், முதுகில் ஊசியாய்க் குத்தும் பார்வைகள்!

சும்மாவே, தவிப்பு! அத்தோடு, உறவினரின் ஆராய்ச்சிக் கண்ணுக்கு, அதை மறைப்பது, பெரும் பாடாக இருந்தது! யார் கண்ணிலும் படாத இடம் எதற்கேனும் ஓடிவிடலாமா என்று இருந்தது!

ஆனால், அப்படி எங்கே ஓடுவது?

ஓடுவதானால், இந்த உலகத்தை விட்டுத்தான் ஓட வேண்டும் என்று வெறுப்புடன் நினைத்தாள் மனோகரி!

அப்போது, வெறும் நினைப்புதான்!

ஆனால், வெகு விரைவிலேயே அதற்குத் தீவிரமாக முயற்சி செய்யப் போகிறாள் என்று, அப்போது அவளுக்கே தெரியாது!



## 6

பிரியரஞ்சனின் பார்வையில் கூர்மை கூடியது!

விஷயம் வெளிவரப் போகிறது! எவ்வளவோ திடமாக, இவ்வளவு பொறுத்தவள், உலகை வெறுத்த கதை!



மணமகனுக்குத் தாய்மாமன் என்ற முறையில் குருநாதனும், தாய்மாமனுடைய மனைவியாகச் செந்திருவும், உபசாரம் உட்படப் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுச் செய்ய வேண்டியிருந்தது!

பழக்கம் அற்ற ஹோட்டல் அறையில் மகளைத் தனியே இருக்கவிட மனமற்று, "மற்றவர்களோடு சேர்ந்து பேசிக் கொண்டிரும்மா," என்று சொல்லிச் சென்றனர்.

மகள் தன்னந் தனியே இருந்து மனம் குமையக் கூடாதே என்ற எண்ணமும் காரணம்!

அதே காரணத்தினால்தான் மனோகரியும், யாராவது உறவினர் குழுமியிருந்த இடம் பார்த்துச் சென்று அமர்ந்ததும்!

ஆனால், எல்லோரும் அவளது இழப்பைப் பற்றியே பேசவும், உறவினர் அருகாமை வெகு விரைவிலேயே வெறுத்துப் போயிற்று!

எழுந்து சென்று காரிடார்க் கண்ணாடி அடைப்புகளின் வழியே வெளியே பார்த்து ரசிப்பது போலப் பாவனை செய்தாலும், பக்கத்தில் வந்து சீண்டிப் பேசினார்கள்! அல்லது, அவளது காது கேட்கும் அளவு தெளிவாக உரையாடினர்!

ஒருவேளை, அவர்களது பேச்சைக் கேட்டு, அவள் அழுதிருந்தாலோ, கத்தி ஆர்ப்பாட்டம் செய்திருந்தாலோ, அவர்களுக்குத் திருப்தியாகிப் போயிருக்கலாம்! ஆனால், அடக்கிக் கொண்டு, அவள் அமைதியாகவே இருந்தது, வம்பர்களைத் தூண்டி விட்டது போலும்!



வெறுப்புற்று, இங்கும் அங்குமாக அலையத் தொடங்கும்போதே, மனோகரிக்கு மனம் தாங்க முடியாத பாரமாகத் தோன்றத் தொடங்கியிருந்தது!

பெற்றோரிடம் போய் நின்று, அவர்களையும் வருத்த, அவளுக்கு மனம் வரவில்லை.

அறிந்த முகங்களைத் தானாகத் தவிர்ப்பதற்காகப் படிகளில் ஏறியோ, தெரிந்தவர்கள் இல்லாதபோது 'லிஃப்ட்' வழியேயோ தளத்துக்குத் தளம் அவள் ஓடி ஒளிந்து, அந்த உறவினரைத் தவிர்க்க முயன்றாள். ஆனால், அப்போதும் அந்த மாதிரி, அவள் சென்ற ஒரு நேரத்தில்தான், பிரியரஞ்சன் அவளை முதலில் கண்டது போலும்!

அப்போதைய அபிப்பிராயம் இப்போது மாறிய போதும், அவன் அதை, முகத்தில் காட்டிக் கொள்ளவில்லை. அவளிடமிருந்து இன்னும் ஏதோ வர வேண்டியிருக்கிறது என்று உணர்ந்து, அவள் முகத்தைப் பார்த்தபடி சும்மாவே இருந்தான்.

மனோகரிக்கு, மேலே சொல்லப் பிரியம் இல்லை!

தன்னைப் பற்றிய அந்தப் பேச்சைக் கேட்டபோது ஏற்பட்ட அதிர்ச்சி, அவளுக்கு இப்போதும், அப்படியே இருந்தது!

அதை நினைக்கும்போது, மனம் கூசியபோது, வாயால் எப்படிச் சொல்வது?

ஆனால், அதைச் சொல்லாமல், இந்தக் கல்லுளி மங்கனுக்கு எதுவும் புரியப் போவது இல்லை., மாத்திரையைத் தரப் போவதும் இல்லை!



சொன்னாலுமே, இவனுக்குப் புரியுமோ, என்னவோ?

ரொம்ப நேரம் தயங்கக்கூட, அவளுக்குப் பயமாக இருந்தது!

நேரம் செல்லச் செல்ல, அவளுக்கு அல்லவா, ஆபத்து!

எனவே, ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு, அவள் சொன்னாள். "கடைசியாக, இரண்டு பேர் சுந்தர் அத்தானுக்குக் காதல் என்பதெல்லாம் பொய்., அவள் அத்தை வீட்டில் மனோகரியை வேண்டாம் என்றதற்கு உண்மைக் காரணமே வேறு என்றார்கள். அது என்ன என்று, இன்னோர் அம்மா கேட்டதற்கு, மனோகரி நடத்தை கெட்டவள்., கருச் சிதைவு கூடச் செய்திருக்கிறாள் என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டதால் தான்..." என்றவள், மேலே பேச முடியாமல் நிறுத்தினாள்.

கீழுதட்டின் மீது, பற்கள் அழுத்திய இடத்தில் ரத்தம் கசிந்தது!

பாசமும் பரிவுமாக வீட்டின் செல்லப் பெண்ணாக வளர்ந்தவளுக்குப் பேரதிர்ச்சிதான். அனுபவித்து அறியாத பெருவலியாக இருந்திருக்கும் என்பது, பிரியரஞ்சனுக்குப் புரிந்தது!

இதில்தான், இவள் அடியோடு உடைந்திருக்கிறாள்!

ஆனால், தன் பரிதாபத்தை இப்போது காட்டுவது சரியல்ல என்று அவனுக்குத் தோன்றியது.

ஒன்று, அவள் மேலும் உடையக் கூடும்! அடுத்து, அவனும் தன்னோடு ஒத்துப் போக வேண்டும் என்று எதிர்பார்க்கத் தோன்றும்!

இது, இன்னமும் ஆபத்தானது!

எனவே, "அந்தப் பேச்சு உண்மையல்ல என்று தெரிகிறது." என்று, ஏதோ புரியாதவன் போல இழுத்தான், அவன்.

சாட்டையடி பட்டாற்போல விறைத்து நிமிர்ந்து, "பின்னே?" என்று சீறினாள் மனோகரி. "என்னை, யார் என்று நினைத்தீர்கள்? நான் ஒன்றும் அப்படிப் பட்ட பெண் அல்ல!"

"அதுதான் என் நம்பிக்கையும்! ஆனால், எனக்குப் புரியாதது, இதுதான்! யாரோ இரண்டு வம்பிகள் ஏதோ உளறினால், அதற்காக என் தங்கையின் வாழ்வை நாசமாக்க முனைவானேன்?"

பேச்சிழந்து, பிரியரஞ்சனை வெறித்துப் பார்த்தாள் மனோகரி.

திரும்பத் திரும்ப, தங்கை வாழ்வு நாசம், நாசம் என்று அதையே சொல்லுகிறானே!

அப்படியென்ன, சுந்தர் அத்தான் அந்த சௌமினியைக் கைவிட்டு விடவா போகிறார்? நாளை இல்லாவிட்டாலும், நாலு நாள் கழித்து, சத்தமின்றி அவள் கழுத்தில் தாலியைக் கட்டி, இரண்டு பேரும் சந்தோஷமாக வாழத்தான் போகிறார்கள்!

அப்படியிருக்க, இவனுடைய தங்கை சௌமினியின் வாழ்வு எப்படிப் பாழாகும்?

ஆனால், அவளது - இந்த மனோகரியின் விஷயம் அப்படியல்ல!



ஏற்கனவே விண்டு போய்விட்ட உள்ளம்! இப்போது, சுக்கல் சுக்கலா உடைந்திருக்கிறது! இன்னும் பொடிப் பொடியாகிக் காற்றில் பறப்பதுதான் மிச்சம்!

நாளைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நேர்ந்தால், அதுதான் நடக்கும்! ஏனென்றால், இதற்கு மேல், அவளால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாது! திருமணச் சடங்குகளின் சமயத்தில், அந்த வம்புப் பேச்சுக்காரர்களைக் கண்ணால் பார்க்க நேர்ந்தாலே போதும். அதற்கு மேல் என்ன நடக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது!

அடக்க மாட்டாமல் அழுது புலம்பி, அந்த வம்பிகள் இன்னமும் அதிகமாகப் பேச இடம் கொடுப்பதைவிட, இன்றைக்கே செத்து விடுவது மேல்!

இனிமேல், வாழ்வதும்தான் எதற்காக?

"என்ன, அதுதான் நோக்கமா?"

வெறுப்புடன் நோக்கி, "சுந்தர் அத்தான் ஒன்றும், உங்கள் தங்கையைக் கைவிட்டு விடமாட்டார்!" என்றாள் மனோகரி.

"ஒருவேளை, கைவிட்டுவிட்டால்?" என்றான் அவன் விடாமல்." என்னைப் பொறுத்தவரையில், என் தங்கைக்காக நான் எதுவும் செய்வேன். உன்னைத் தங்கை மாதிரி நினைப்பவன், சுந்தர் தன் தங்கையை இழக்கக் காரணம் ஆனவள் என்று, என் தங்கையை வெறுத்து விட மாட்டான் என்பதற்கு, என்ன உத்தரவாதம்?"

தங்கை, தங்கை என்று, எத்தனை 'தங்கை', இவன் பேச்சில்? அந்த வார்த்தையே வெறுத்துவிட்டது மனோகரிக்கு!



பொறுமையிழந்து, "சே! எப்போதும், உங்கள் தங்கை தானா? என் மனம் என்னமாய் உடைந்திருக்கிறது! அதைப் பற்றியும், ஒரு தரம் நினைத்துப் பார்ப்பது தானே!" என்றாள் கசப்பும் வெறுப்புமாக.

"அப்போதே சொன்னதுதான்! மனம் ஒன்றும் கண்ணாடியாலோ மண்ணாலோ செய்யப்பட்டது இல்லை. அப்படி இலகுவாக உடைவதற்கு..."

"என்..."

"அப்படியே உடைந்தாலும், அதையும் ஒட்டி விடலாம்! பொறு. குறுக்கிடாமல் கேட்டுவிட்டுப் பேசு! புத்தம் புதிது போல இல்லை என்றாலும் ஓரளவேனும் ஒட்டுப் போட்டு விடலாம்!" என்றான் பிரியரஞ்சன்.

அவள் படும் துன்பம், அவனுக்குக் கிண்டலாகவா இருக்கிறது என்ற ஆத்திரத்துடன் அவனைப் பார்த்தாள் மனோகரி.

ஆனால், அவன் முகத்தில், கேலி கிண்டல் எதுவும் தென்படாதிருக்கவும், "அதற்கு, வாய்ப்பே கிடையாது" என்றாள் அழுத்தமாக.

"இருக்கிறது!" என்றான் அவனும் அதே குரலில்!

"எ... எப்படி?"

"ஒட்டகத் துரும்பாய், உன் மனதை உடைத்தது, அந்த வம்புக்காரப் பெண்களின் பேச்சு என்றாய்! அதைப் பொய்யாக்கி விட்டால்? ஓரளவேனும் ஒட்டுப் போட்டதாக, ஆகிவிடாதா?"

ஏளனமாக அவனைப் பார்த்தாள் மனோகரி. "தங்கை என்று சொல்லிவிட்ட அத்தானோடு, இனி



வேறு உறவு சாத்தியம் கிடையாது என்கையில், அந்தப் பேச்சை எப்படிப் பொய்யாக்க முடியும்? ஒரு வேளை அந்தப் பெண்களைத் தேடிப் பிடித்து, அவர்கள் காலில் விழுந்து, 'நீங்கள் பேசியது பொய். நீங்களே அதை நம்பாதீர்கள்!' என்று மன்றாடலாம் என்கிறீர்களா? கொக்கு வேட்டையில், நீங்கள் ரொம்பக் கெட்டிக்காரர் என்று நினைக்கிறேன்! அதன் தலையிலேயே வெண்ணெயை வைத்து நிறையவே பிடித்து விடுவீர்கள்!" என்றாள் எகத்தாளமாக! இளக்காரமாகவும்!

கண்கள் பளிச்சிட்டது தவிர அவனிடம் வேறு மாற்றம் இல்லை! "அங்கே, என் வேலை நடக்கும் இடத்தில், நிறையக் கொக்குகள் உண்டு! உன் புத்திசாலித்தனமான யோசனையைப் பின்னொரு காலத்தில், அங்கே பயன்படுத்திப் பார்க்கலாம்! ஆனால், உன் விஷயத்தில் நான் சொல்ல நினைத்தது வேறு!"

அலுப்பும், அவநம்பிக்கையுமாக மனோகரி பேசாதிருந்தாள்.

இவன் சும்மா நேரம் போக்குகிறான் என்று, அவளுக்குத் தோன்றத் தொடங்கிவிட்டது! அம்மா, அப்பா வரும்வரை, அவள் ஏதேனும் செய்து கொண்டு விடாமல் காப்பது ஒன்றே அவனது நோக்கம். அதுவரை சும்மா கதை சொல்லிக் காலம் போக்கிவிட்டு, அவர்களிடம் அவளை ஒப்படைத்து விட்டு ஓடப் போகிறான்!

அப்புறம்... எதையும் நினைத்துப் பார்க்கக்கூட, அவளுக்குப் பயமாக இருந்தது!

இருந்திருந்து, இவனிடம் மாட்டினாளே!

ஓரக் கண்ணால் அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, "உன்னிடம் என்னென்னவோ குற்றம் கண்டுபிடித்து, அதற்காக உன்னை, சுந்தருடைய குடும்பம் நிராகரித்ததாகத்தானே கதை கட்டினார்கள்' என்றாய்! அவர்களுக்கு எந்த விதத்திலும் குறைவற்ற, அத்தோடு, அவர்களோடு நெருங்கிய தொடர்பு உள்ள ஒரு குடும்பமே உன்னை விரும்பி ஏற்பதாக நிரூபித்து விட்டால்? அந்தக் குடும்பதைச் சேர்ந்த ஒருவன், சுந்தருக்குச் சமமானவன் உன்னை மணந்து கொண்டால், அதன் பின் அந்த வம்பர் மகாசபையின் பேச்சு, பொய்யென்று ஆகிவிடாதா?" என்று கேட்டான் பிரியரஞ்சன். "அப்புறம், உன் உடைந்த இதயமும் ஒட்டுப் போட்டதாகி விடும்!"

இவனுக்கு ஏதும் மறை கழன்று விட்டதோ என்று தோன்றியது மனோகரிக்கு!

"என்ன, பேச்சையே காணோம்?"

"என்னத்தைப் பேசுவது?" என்றாள் அவள்! "உங்கள் அருமையான திட்டத்தில், பூதாகாரமாக இரண்டு குறைகள்! ஒன்று, அத்தை குடும்பத்துக்குச் சமமான ஒரு குடும்பத்தைக் கண்டுபிடிப்பது!..."

"இரண்டாவது."

"சுந்தர் அத்தானுக்குச் சமமான வேறு ஆண்மகன் கிடையாது! அப்படியே எவனும் இருந்தாலும், அந்தக் கொம்பனை நான் மணந்து கொள்ள முடியாது!"

"வேறு வழியில்லை! நீ சம்மதித்துத்தான் ஆக வேண்டும்!"



"என்னமோ, அப்படி ஓர் ஆளைக் கண்டு பிடித்து விட்ட மாதிரி, என் சம்மதம் பற்றிப் பேசுகிறீர்களே! முதலில், அத்தானுக்குச் சமமான ஒருவரைக் கண்டு பிடியுங்கள் சார், அப்புறம் பார்ப்போம்!" என்றாள் அவள் அலட்சியமாக!

அவளைப் பொறுத்தவரை, அது ஒருபோதும் முடிகிற காரியம் அல்ல! நடக்காத ஒன்று!

ஆனால் "எப்போதோ கண்டு பிடித்தாகி விட்டது!" என்றான் பிரியரஞ்சன்.

அவள் நம்பாது நோக்கவும், "அவன், இங்கேதான், உன் எதிரேதான் இருக்கிறான்!" என்றான் திடமான குரலில், தெளிவாக!

பிரமித்து நோக்கினாள் மனோகரி!



## 7

சற்று நேரம், மனோகரிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை!

மெய்யாகவே, அவன், பிரியரஞ்சன் அப்படித்தான் சொன்னானா?

எப்படி முடியும்?

விரும்பியவனை இழந்ததற்காக உயிரையே விடத் துணிந்திருக்கும் ஒருத்தியிடம், தன்னை மணக்கும்படி எவனாவது சொல்வானா?



கண்ணில் கவனத்துடன் மனோகரியின் பதிலுக்காகக் காத்திருந்தவன், அவள் பேசுகிற நிலையில் இல்லை என்று உணர்ந்து, அவனே மேலே சொல்லலானான். "பார் மனோகரி, நிதானமாக வாதப் பிரதிவாதங்கள் செய்து விஷயத்தை அலசி ஆராய்ந்து முடிவு செய்ய, இப்போது நமக்கு அவகாசம் இல்லை! அதனால், நான் சொல்வதை மட்டும் சற்றுக் கவனமாகக் கேள். எனக்கு, என் தங்கையின் மகிழ்ச்சி மிகவும் முக்கியம்! அதற்காக நான் எதையும் செய்வேன்! நீ இப்படித் தற்கொலை செய்து கொண்டு உயிரை விட்டால், அவளது நிம்மதி போய்விடும்! அதை நான் ஒரு போதும் அனுமதிக்க முடியாது."

"நீங்கள் யார், அனுமதிப்பிற்கும், அனுமதி மறுப்பதற்கும்?" என்று எடுத்தெறிந்து பேசினாள் மனோகரி.

"இப்போது யாருமில்லை! அதனால்தான், அந்த உரிமையைப் பெறுவதற்காக, உன்னை மணந்து கொள்ளப் போகிறேன்..."

மீண்டும் குறுக்கிட்டு, "நான் ஒருநாளும் உங்களை மணந்து கொள்ளப் போவது இல்லை!" என்று, ஆத்திரத்துடன் அறிவித்தாள் அவள்!

-"மணப்பாய், மணந்துதான் ஆக வேண்டும்! இல்லாவிட்டால்..."

"இல்லாவிட்டால்? இல்லாவிட்டால் என்ன செய்து விடுவீர்களாம்? கொன்று விடுவீர்களா? சும்மா மிரட்டாதீர்கள். நான் ஒன்றும் உயிருக்குப் பயந்தவள் அல்ல!" என்றாள் மனோகரி அலட்சியமாக.



சாகத் துணிந்தவளிடம் என்ன சொல்லி மிரட்ட முடியும்?

என்ன சொல்லி மிரட்ட முடியும் என்று, பிரியரஞ்சன் காட்டினான்.

தன் சட்டைப் பையைத் தட்டிக் காட்டி, "இங்கே என்னவெல்லாம் இருக்கின்றன என்று தெரியுமல்லவா? நீ பிரித்து வைத்த தூக்க மாத்திரைகள் மட்டுமல்ல! மருந்துக் கடையில், நீ பேர், ஊர் எல்லாம் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாயே, அந்த பில்! கூடவே, ரொம்பவும் ஒழுங்காக நீ எழுதிய சுய மரண விளக்கங்களும், என்னிடம்தான் இருக்கின்றன! நீ என்னை மணக்கச் சம்மதிக்காவிட்டால், விவரங்களைச் சொல்லி, எல்லாவற்றையும், உன் தந்தையிடம் கொடுத்து விடுவேன்! என்ன சொல்லுகிறாய்? செய்யட்டுமா?" என்று அவளிடம் கேட்டான் அவன்.

அச்சமும், திகைப்புமாக அவளது கண்கள் விரிகையிலேயே, "யோசி, அப்படி நடந்தால், அவர்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்பதோடு, அதன் பிறகு, உன்னை விட்டு, ஒரு கணமேனும் அகலுவார்களா? அப்படி அவர்கள் காவல் காப்பதும், கவலைப்படுவதும் என்ன மாதிரி வதந்திகளை உருவாக்கக் கூடும்? அது, முன்னை விடக் கேவலமாக இராது? நீ மட்டுமின்றி, உன் பெற்றோரும், இன்னமும் அதிகமாக அவமானப்பட நேராதா? ஒன்றும் இல்லாமலே அவலை மென்ற அந்தப் பெண்கள், இன்னும் எவ்வளவு பேசுவார்கள்! வேதனை என்னவென்றால், உன் பெற்றோரோடு, நீயும் உயிருடன் இருந்து, அதைச் சகித்தாக

வேண்டும்! அல்லது, உன்னோடு சேர்ந்து அவர்களும்... கற்பனை செய்து பார். அதுதான் உனக்கு விருப்பமா?'' என்று ஒரு சில கணங்கள் அவளை யோசிக்க விட்டான் பிரியரஞ்சன்.

அவன் படம் பிடித்துக் காட்டிய காட்சி அவளை எவ்வளவு கலக்கியது என்பது, அவளது முகத்திலேயே தெரிந்தது! ஆயினும், சமாளித்துக் கொண்டு, ''அவ்வளவு கஷ்டம் நேருவானேன்? உங்கள் பைக்குள் இருப்பது எல்லாவற்றையும் தந்து விட்டால், நான் வேண்டுமானால், தற்கொலை செய்து கொள்வது இல்லை என்று உங்களுக்கு வாக்குத் தருகிறேன்!'' என்றாள் மனோகரி!

உதட்டைப் பிதுக்கினான் அவன். ''உன்னை நம்ப முடியாது!''

''நான் ஒன்றும் பொய்...''

''நன்றாகவே சொல்லுவாய்!'' என்று முடித்தான் அவன். ''குடும்பத்துக்கே தூக்க மாத்திரை வேண்டும் என்று, மருந்துக் கடையில், என்னமாக் கதை சொன்னாய்! அதை நேரடியாகப் பார்த்த பிறகும், உன் பேச்சை நம்புவதா? வாய்ப்பே கிடையாது!''

செய்கையற்ற சினத்துடன் அவள் முறைக்க, அவன் சொன்னான். ''இன்னொன்றையும் கற்பனை செய்து பார். சுந்தருடைய குடும்பத்துக்கு, எந்த விதத்திலும் குறைவற்றது எங்கள் குடும்பமும்! பெரிய தொழில் இருக்கிறது! பெருமை பேசுவதாக எண்ணாதே. மருந்து கடைக்காரரே என் கார்டைப் பார்த்து விட்டுத்தானே, உனக்கு மாத்திரையைக் கொடுத்தார்!



''அப்படிப்பட்ட உன்னோடு இணையப் போகிறவன் என்கிற நிமிர்வோடு நீ வளைய வா. உன் பெற்றோரும் பெருமையோடு நடமாட, அந்த வம்பிகளின் முகத்தில் அசடு வழிய... இந்தக் காட்சி எப்படி இருக்கிறது?''

தன்னை மீறி மனக்கண் முன் விரிந்த காட்சி நன்றாகத்தான் இருந்தது!

அதிலும், அந்த வம்பர் மகா சபையினரின் பேந்த விழிந்த முகங்கள்!

ஆனால், இதிலும் ஒரு பின்னடைவு இருக்கிறதே!

''இதை யார் நம்புவார்கள்?'' என்றாள் அவள் கம்மிய குரலில்.

''எல்லோருமே நம்புவார்கள்!'' என்றான் அவன் உறுதியாக. ''நானும் வந்ததிலிருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்! உன் பெற்றோர், உன்னைப் பார்க்கும் சமயங்கள் தவிர, முகத்தில் ஓரளவு மலர்ச்சியோடேயே எல்லா வேலைகளையும் கவனிப்பதைப் பார்த்தேன்! கன்னமும் தாடையும் வலிக்க, நீ சிரிப்பது போல உதடுகளைக் காதுவரை இழுத்து வைத்திருந்ததையும்தான்...''

''அதைத்தான் யாரும் நம்பவில்லை என்றேனே!''

''இன்று நம்பாதவர்கள், நாளை நேர் எதிர் மறையான நடப்பைப் பார்க்கும்போது நம்பித்தானே ஆக வேண்டும்? நாம் இருவரும் சேர்ந்து சுற்றுவதைப் பார்த்துவிட்டு, நிச்சயம் நம்புவார்கள்! சும்மா, மற்றவர்கள்தான் பேசினார்கள், மற்றபடி, இந்த அத்தை



மாமன் மகள் மனதில் அப்படி ஒன்றுமே இல்லை என்று எல்லோருமே எண்ணும்படி ஆகிவிடும்!''

''ஆனால், முன்னேப் பின்னே பழக்கமே இல்லாத நாம் இருவரும் எப்படிச் சேர்ந்து சுற்ற முடியும்? என் பெற்றோர்... எப்படி...''

''ஒரு திருமணத்தில் தொடங்கி எத்தனையோ திருமணங்கள் நடந்திருக்கின்றன! நாம் சேர்ந்து சுற்றச் சுற்ற, கண்டதும் காதல் என்று எண்ணிக் கொள்வார்கள்! மகளுக்குத் திருமணம் ஆகிறது என்றால், உன்னைப் பெற்ற அவர்களுக்கும் மகிழ்ச்சிதானே?''

பெற்றோர் விஷயம் எல்லாம் சரியாகத்தான் தோன்றியது! ஆனால், திருமணம் என்ற சொல் அவளை மருள வைத்தது.

அன்றுதான் முதல் முதலாகச் சந்தித்த இவனை எப்படி மணப்பது? இவன் எப்படிப் பட்டவனோ, என்னமோ?

அப்படிப் பார்த்தால், இந்தப் பிரியரஞ்சனும், அவளை அன்றுதான் முதல் முதலாகப் பார்த்திருக்கிறான்! அதுவும், இன்னொருவனை நேசிப்பவளாக! உயிராகவே! பின் எப்படி?

வெறுமனே, ஒரு பெண் என்று மட்டும் பார்க்கிறானா?

''இன்னொருவரை நினைப்பவளை மணக்க நீங்கள் என்ன முட்டாளா?'' என்று, வெறுப்புடன் கேட்டாள் மனோகரி.



''இன்னொருத்தியை விரும்பி மணக்கிறவனை நினைத்து அழுகிறவளை விடப் புத்திசாலிதான்!'' என்று, முகத்தில் அடித்தாற்போலப் பதில் வந்தது!

கேட்டிருக்கக் கூடாது!

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் தலையைத் திருப்பவும், ''என் தங்கையின் மகிழ்ச்சிக்காக நான் செய்யக்கூடாதது என்று, உலகில் ஒன்றுமே இல்லை, மனோகரி! உனக்குத் திருமணம் நடக்கிறவரை, அவளுக்கு, அந்த மகிழ்ச்சி முழுமையாகக் கிடைக்காது என்பது, எனக்கு நிச்சயம்! அதனால்தான்!'' என்றான் அவன்.

தொடர்ந்து, ''இப்போது என்ன முடிவெடுத்திருக்கிறாய்? திருமணமா? இல்லையென்றால், சொல்லிவிடு! உன் பெற்றோரைத் தேடிப் போக வேண்டும்! அவர்கள் படுக்கக் கிளம்புமுன் சொல்லிவிட வேண்டும் அல்லவா?'' என்று கேட்டான்.

எரிச்சலாகப் பார்த்துவிட்டு, ''சொல்ல வேண்டாம்!'' என்றாள் அவள், சுருக்கமாக!

ஒரு சிறு அமைதியின் பின், ''வெரிகுட்!'' என்றான் பிரியரஞ்சன். ''ஆனால், உன் பெற்றோரோ, நானோ துணையாக இல்லாமல் உன்னைத் தனியே விட எனக்குப் பிடிக்காததை, நீ புரிந்து கொள்வாய் என்று நினைக்கிறேன். குறைந்த பட்சமாக இன்று மட்டுமேனும்! நம் ஒப்பந்தத்தின் முதல் பகுதியாக, நாம் இருவரும் சேர்ந்து சாப்பிடப் போகலாம்!'' என்றான் அவன்.

குருநாதனும், செந்திருவும், சுந்தர், சௌமினியுடைய பெற்றோரும், மற்ற நெருங்கிய உறவினரும்கூட, அப்போதுதான் சாப்பிடத் தொடங்கியிருந்தார்கள்.

மகளைப் பார்த்ததும், "சாப்பிடாமல், எங்கே ரஞ்சி போயிருந்தாய்? உன்னைத் தேடிவிட்டு, இப்போது தான் உட்கார்ந்தோம்! உட்கார். நீயும் உட்காரம்மா!" என்றுவிட்டு "இன்னும் இரண்டு இலை போடுங்கள்!" என்று பிரியரஞ்சனுடைய தந்தை பரிசாரகர்களைப் பணித்தார்.

"என்னடாம்மா, தலைவலி பரவாயில்லையா?" என்று பரிவுடன் வினவினார் குருநாதன்.

"சுபிக்குட்டி, வந்து சொன்னதும், வெறும் வயிற்றோடு படுக்கிறாயே என்று மனதில் கவலைப் பட்டுக் கொண்டே இருந்தேன்! நல்லவேளை, பசித்துச் சாப்பிட வந்தாயே!" என்று ஆறுதலோடு கூறினாள் செந்திரு.

தந்தையைப் பார்த்து முறுவலித்துவிட்டுக் குருநாதன் தம்பதியிடம் திரும்பினான் பிரியரஞ்சன்.

"உங்கள் பெண், பசியறிந்து, தானாகச் சாப்பிட வந்ததாகவா நினைத்தீர்கள், ஆன்ட்டி? ஹைய்யோ, ராமா!" என்று தலையில் அடித்துக் கொண்டு இலகுவாகப் பேசியவன், பெரியவர்கள் கேள்வியாய் நோக்கவும், விளக்கம் சொன்னான்.

"எதிரே இருக்கும் மருந்துக் கடையில், மனோகரி மாத்திரை வாங்கியதைப் பார்த்தேன்" என்று அவளை உள்ளூர அதிர வைத்துவிட்டு, "அப்புறம், அந்தச் சுட்டிப் பெண்ணிடம் தூங்கப் போவதாகத் தகவல்



சொன்னதையும் கேட்டேன். மாமா மகள், தன் உடன் பிறவாத தங்கை என்று, சுந்தர் சொல்லுவான். அந்தத் தங்கை, பட்டினியாகத் தூங்கினால் அவனுக்கு எப்படி இருக்கும்?

"அத்தோடு, காலி வயிற்றில் வலி மாத்திரை போட்டால் காந்துமே என்று நினைத்தபோது, என்னாலேயே தாங்க முடியவில்லை! நல்லதற்குச் சொன்னாலும் கேட்டால்தானே? இவ்வளவு நேரம் வாதாடி, ஒரு வழியாகச் சாப்பிட அழைத்து வந்தேன்! ஆனாலும், பயங்கரப் பிடிவாதம், ஆன்ட்டி!" என்று விளக்கம் சொல்லிவிட்டு, மீண்டும் தந்தையைப் பார்த்து, "சாரிப்பா! இந்த பிடிவாதக்காரப் பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்ததில் எனக்கு நேரம் போனதே தெரியவில்லை! இதோ வந்து விடுகிறோம்!" என்றான்.

கடைசியாக அவன் மனோகரியிடம், "வா மனோ, கையைக் கழுவிவிட்டு வரலாம்!" என்று, கனிவுடன் கூறி, அவளைக் கை கழுவும் இடத்துக்கு அழைத்துச் சென்றதை, எல்லோருமே ஆச்சரியமாக நோக்கினர்!

அத்தோடு 'மனோ'வா?

'மனோ'வா என்று அவளுக்கும் ஆத்திரம்தான்!

மற்றவர்களின் கண் பார்வை மறைந்து, காதும் கேளாத தூரம் சென்றதும், "மாத்திரை பற்றிச் சொல்லித்தான் தீர வேண்டுமா?" என்று மனோகரி, தாழ்ந்த குரலில் சீறினாள்.

"பின்னே, உம்மென்று நின்றாயே! இப்போதானால், தலைவலியால் என்று எண்ணியிருப்பார்கள்! ஆனால்,



இனி, இப்படி இராதே! நீ ஒன்றும் நடிக்கத் தெரியாதவள் இல்லையே!"

மீண்டும் குத்தலா?

"இந்த மாதிரி நடித்து, எனக்குப் பழக்கம் இல்லைதான்!" என்றாள் அவள் வெடுக்கென.

திரும்பிப் பார்த்துவிட்டு, "தூக்க மாத்திரை மட்டும் பழக்கமா என்று நானும் கேட்க முடியும்! ஆனால், இனி அந்தப் பேச்சு வேண்டாம். நடிப்பது சிரமமாக இருந்தால், பேசுகிற பொறுப்பைப் பெருமளவு என்னிடம் விட்டுவிடு ஆனால், நான், உன்னிடம் ஏதாவது கேட்டால், என்னோடு ஒத்துப் பேசு! அதுவும், ஒற்றை வார்த்தைகளாக இல்லாமல் கொஞ்சம் கூடுதலாகப் பேச முயற்சி செய். முக்கியமாகச் சிரித்த முகமாய்!" என்றான் பிரியரஞ்சன்.

பெரிதாகக் கட்டளையிடுகிறானே என்று மனம் குமுறியபோதும், மனோகரியால் மறுத்துப் பேச முடியவில்லை!

ஆயுதங்கள் எல்லாமே அவன் கையில் இருக்கிற போது, மறுப்பதும், எதிர்ப்பதும் எப்படி முடியும்?

அத்தோடு, பெற்றவர்களின் பரிவைப் பார்த்த பிறகு, யாரோ, ஏதோ பிதற்றினார்கள் என்று உயிரை விடுவதற்கு வெறி பிடித்து முயன்றோமே என்று அவளுக்கே அவமானமாக இருந்தது! இன்னமும், வாழ்வதில் ஆர்வம் தோன்றாவிட்டாலும், சாக நினைத்தது படு முட்டாள்தனமாக அவளுக்கு, இப்போது தோன்றிவிட்டது!



ஆனால், இந்த மாற்றத்தைச் சொன்னாலும், இவன் நம்பப் போவதில்லை! நம்பாமல், ஆசை, பாசம் எதுவும் இல்லாத ஒருத்தியை மணந்தே தீருவது என்று பிடிவாதம் பிடித்தால், ஒரு வரண்ட வாழ்க்கையை, அவனும் அனுபவிக்க வேண்டியதுதான்! நன்றாக அனுபவிக்கட்டும்!

இந்த அழகில், அவளைப் பிடிவாதக்காரி என்கிறானே!

அதற்கும் சேர்த்துப் படட்டும்!

பிடிக்காத ஒருத்தியைக் கட்டாயப்படுத்தி மணந்தால், வாழ்க்கை எப்படி இருக்கும் என்று, இவனும், பாடாய் பட்டுத் தெரிந்து கொள்ளட்டும்!

அவள் ஒன்றும், இவனுடைய அன்பு மனைவியாக, இவன் காலடியில் விழுந்து கிடக்கப் போவது இல்லையே!

வெட்டுவது போலப் பார்த்து விட்டுச் சட்டென இமை தாழ்த்தி, "முடிந்தவரை முயற்சிக்கிறேன்!" என்றாள் எரிச்சலை உள்ளடக்கிய குரலில்.

"இது சரி!" என்று மெச்சினான் பிரியரஞ்சன். மெச்சியது அவள் ஒத்துக் கொண்டதற்காக மட்டும் இல்லை என்று சொல்லாமல் சொன்னான்!

"கண் காட்டிக் கொடுத்துவிடும் போலத் தோன்றினால், இப்படி இமை தாழ்த்தி, மனோ பாவத்தை மறைத்து விடு! விஷயம் தெரியாத மற்றவர்கள், அதை வெட்கம் என்று எண்ணிக் கொள்வார்கள்!"

அதாவது, இவன் அப்படி எண்ணப் போவதில்லையாம்! தெரிவிக்கிறான்!

சாது போல முகத்தை வைத்துக் கொண்டு, "சரிங்க, ர... ர... ஞ்சி! ரஞ்சிதானே?" என்று கேட்டாள் மனோகரி.

"அது மற்றவர்களுக்கு! நீ, உனக்குப் பிடித்த பெயர் சொல்லிக் கூப்பிடலாம்!"

"கரடி, புலி என்று கூடவா?"

கரடிப்பிடி, புலிவாலைப் பிடித்த நிலை என்று, இரண்டுமே பொருத்தமாகவும் இருக்கும் என்று எண்ணியவளுக்கு, நமட்டுச் சிரிப்புகூட வந்தது!

"அதுதான் உனக்குப் பிடிக்கும் என்றால், தாராளமாய்!" என்று ஒத்துக் கொண்டான் பிரியரஞ்சன். "ஆனால், ஏன் இந்தப் பெயர் என்று யாரேனும் கேட்டால், பொருத்தமான ஒரு காரணத்தையும் தயார் பண்ணி வைத்துக் கொள்வாயில்லையா?"

என்ன காரணம்? கரடிப் பிடியாகப் பிடித்த பிடியிலேயே இவன் நிற்கிறான் என்று சொல்ல முடியுமா? அல்லது, புலிவாலைப் பிடித்தவளாய், அவள் மாட்டிக் கொண்டிருப்பதைத்தான் யாரிடமும் கூற முடியுமா? பிடிக்காத மனைவியோடு அவன் வாழ்வும், அப்படிப் புலி வாலைப் பிடித்தவன் கதையாகத்தான் இருக்கப் போகிறது! ஆனால், இதையும், அவள் வெளியே சொல்ல முடியாதுதான்!

சரியாக ஊகித்துதான், காரணம் பற்றிப் பேசியிருக்கிறான் என்று புரிந்து எரிச்சல் வந்தது! "சரி சரி.



போகலாம்! இங்கேயே நின்று கொண்டிருந்தால், தப்பாகத் தோன்றும்!" என்று திரும்பினாள் அவள்.

"அது இன்னமும் நல்லது!"

சட்டெனத் திரும்பி, "பாருங்கள், இன்னமும், கட்டாயமாகக் கடைசிவரை நாடகத்தை நடத்தித்தான் ஆக வேண்டுமா? நான் நிச்சயமாக இனிமேல்..." என்றவளின் பேச்சைக் கையுயர்த்தி நிறுத்தினான் பிரியரஞ்சன்.

"'துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு' என்று, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வள்ளுவர் எழுதி வைத்திருக்கிறார்! எனவே, என்னளவில், எடுத்த முடிவில் மாற்றம் கிடையாது. நீ மாற்ற முயன்றால், விளைவு விபரீதமாக இருக்கும் என் பதிலும் அப்படித்தான். போவோமா?"

அவனுக்கு இணையாக மெல்ல நடந்தவளுக்கு, எரிச்சலை மீறி, உள்ளூர ஆச்சரியமாகவும் இருந்தது!

தங்கை மேல் உள்ள பாசத்தில், அவளது மகிழ்ச்சிக்காகத் தன் சொந்த வாழ்வையே பணயம் வைக்கிறானே! உடன் பிறந்தவள் என்றால், அவ்வளவு பிரியம் இருக்குமா?

தங்கை போல என்ற சுந்தருக்கும், தன் மீது, அப்படிப்பட்ட அன்பு இருக்குமா? இந்த அளவுக்கு இல்லா விட்டாலும், அவள் நல்லபடியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கத்தான் செய்யும் போலும்! மற்றபடி, அன்று ஓடைக் கரையில், அவ்வளவு கவலைப்பட்டுக் கேட்டிருக்க மாட்டான்!



சேறாகக் குழம்பிக் கிடந்த மனதில், ஏதோ ஒரு தெளிவு, இருள் விலகுவது போலத் தோன்றியது மனோகரிக்கு.

இரு மாதங்களுக்கு முன்பாக, வந்து கவிந்த இருட்டு!

அது விலகுவது என்றால், இது நல்ல திருப்பமாகத்தானே இருக்க வேண்டும்? அப்படியே இருக்கட்டும், கடவுளே என்று வேண்டிக் கொண்டாள் அவள்!

மனதை முகம் காட்டியதோ, என்னவோ?

கண்ணைத் திறந்தால், பிரியரஞ்சன் அவளை விசித்திரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்னவென்று கேட்பானோ என்று எண்ணுகையில், தன்னை மீறி, மனோகரியின் முகம் சிவந்தது!

நல்லவேளையாக எதுவும் கேளாமல், வெளியே கையைக் காட்டினான் பிரியரஞ்சன்.

காரிடாரின் ஒரு புறத்தை அடைத்திருந்த கண்ணாடியின் வழியே அவ்வளவு உயரத்திலிருந்து பார்க்கையில், ஆயிரக்கணக்கான ஒளி விளக்குகளுடன் இரவு நேரச் சென்னை அழகு வெகு அழகாகத் தெரிந்தது!


மனதின் இருள் பற்றி எண்ணியதற்கு ஏற்ப இருந்த, இந்த ஒளி மயமான தோற்றத்தில், மனோகரியின் மனம் மேலும் அமைதியுற்றது! அது பற்றிப் பேசவும் முடிந்தது!

வெளியே காணப்பட்ட காட்சியின் அழகைப் பற்றிப் பேசியவாறு வந்த இருவரையும், உணவுக் கூடத்தில் இருந்தவர்கள் வியந்து நோக்கினர்.



"சென்னை விளக்குகளைப் பார்க்கும்போது, பிர்லா பிளானட்டோரியத்தில், பால்வீதி நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்த மாதிரி இருக்கிறது என்கிறாள், உன் மாமா வீட்டுத் தங்கை! விஞ்ஞானத்தோடு இயற்கையையும் சேர்த்து ரசிக்கத் தெரிந்த கெட்டிக்காரி!" என்று நண்பனிடம் மெச்சிவிட்டு, "வா மனோ, நாமும் சாப்பிடுவோம்!" என்று பதார்த்தங்கள் பரிமாறித் தயாராக வைக்கப்பட்டிருந்த இலைகளை நோக்கி, மனோகரியை அழைத்துக் கொண்டு போனான் பிரியரஞ்சன்.

"நம்ம மச்சான் இவ்வளவு வேகமாக வேலை செய்கிறவன் என்று, நான் நினைத்ததே இல்லை!" என்று அருகமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த தன் வருங்கால மனைவி சௌமினியின் காதுகளில் கிசுகிசுத்தான் சுந்தர்!



## 8

கடைசிப் பந்தியாக, இரு வீட்டு முக்கியமானவர்கள் மட்டிலுமே அமர்ந்து உணவருந்தியதால், பொதுவான பேச்சு, அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் மறு நாளையச் சடங்குகள், விருந்துக்கான உணவு வகைகளின் குறை நிறைகள் பற்றிச் சுழன்றது!

அடிக்கடி அவன் பேசியது மட்டுமின்றி, மனோகரியின் அருகிலேயே அமர்ந்திருந்து, அபிப்பிராயம்

கேட்டு, அவளையும் பிரியரஞ்சன் பேச வைத்தான். ஏற்கனவே அவன் எச்சரித்திருந்ததால், அதற்குச் சரியாக, உள்ளூர எரிச்சலோடுதான் மனோகரி முதலில் பேசத் தொடங்கினாள்.

ஆனால், அந்த அளவிலேயே பெற்றோரின் முகங்களில் இயல்பான மலர்ச்சியைக் கண்டவளுக்கு, மனதுள் கழிவிரக்கம் பிருந்தது!

வெறுமனே, வாயை மட்டும் காதளவு நீட்டி வைத்திருந்தால் போதும் என்று எண்ணினாளே! இந்தச் சிறு பேச்சிலேயே, இவ்வளவு மாற்றம் என்றால் பெற்ற பாவத்துக்காக நேற்றிலிருந்து இவர்கள் என்ன பாடு பட்டிருக்க வேண்டும்?

இந்த மலர்ச்சியை வாட விடக்கூடாது என்று முயன்றவளுக்குச் சற்று நேரத்திலேயே, ஓரளவு இயல்பாக உரையாட முடிந்தது!

இதனூடே, அண்ணன் என்கிற உரிமையோடு, ''என்னம்மா, இனிமேல்தான் வாழ்க்கை முழுவதும் சுந்தரின் காது ஓட்டை விழும் அளவுக்கு, அவனோடு பேசப் போகிறாயே, இன்று மட்டுமேனும் எங்களையும் கண்டு கொள்ளலாமில்லையா? எங்கள் குரல்களெல்லாம், உன் காதிலேயே விழ மாட்டேன் என்கிறதே! நாளை மாலை வரவேற்புக்கு, என்ன நிறச் சேலை கட்டப் போகிறாய் என்று, பாவம், மனோகரி பத்து முறை கேட்டு விட்டாள்!'' என்று மணப்பெண் சௌமினியையும், தங்கள் பேச்சுக்குள் இழுத்தான், பிரியரஞ்சன்.



''சாரி, சாரி, நீ... நீங்கள் கேட்டதை, நான்... கவனிக்கவில்லை, மனோகரி என்று வருங்காலக் கணவன் வீட்டாரை அவமதித்ததாக ஆகி விடுமோ என்று, புதுப் பெண்ணாய் சௌமினி பதறிய விதத்தில் பரிதாபப் பட்டு, ''பத்துத் தடவையெல்லாம், யாரும் கேட்கவில்லை, சௌ... சௌமினி. உங்கள் அண்ணன் சும்மாச் சொல்கிறார்!'' என்று தன்னையறியாமல், அவளுக்குச் சமாதானம் சொன்னாள் மனோகரி.

சௌமினி இன்னமும் சிறு கலக்கத்துடனேயே நோக்கவும், ''உங்கள் அண்ணனைப் பற்றி, உங்களுக்குத் தெரியாதா? எல்லாம் கதை! முழுப் பொய்! உங்கள் சேலைகள் அழகாக இருந்தன. வரவேற்புக்கு என்ன நிறமோ என்று, என் அம்மாவிடம் சும்மா சொல்லிக் கொண்டிருந்தேன்! நடந்தது அவ்வளவுதான்!'' என்று மனோகரி மேலும் விளக்க, மற்றவளின் முகம் ஒருவாறு தெளிந்தது!

ஆனால், ''அடேயப்பா, வாங்கள், போங்கள் என்று, யார், யாரோ போல, என்ன மரியாதை! விரைவிலேயே, நெருங்கிய உறவாய், சிநேகிதிகளாக, இருக்க வேண்டியவர்கள்! இரண்டு பேரும், என்னையும், சுந்தரையும் போல ஒருமையிலேயே பேசிப் பழகுங்கள்! அதுதான், எப்போதும் பொருத்தமாக இருக்கும்!'' என்று பூடகமாகச் சொன்ன பிரியரஞ்சன், அத்தோடு நில்லாமல், ''என்ன மனோ, நான் சொல்வது சரிதானே?'' என்று அவளிடமே அபிப்பிராயம் வேறு கேட்கவும், ஒருவாறு மறந்து கொண்டிருந்த எல்லாம்.. அனைத்தும் நினைவு வர, இப்போது மனோகரி திகைத்துத் திணறிப் போனாள்.



இதற்கு என்னவென்று பதில் சொல்வது?

ஆம் என்று சொல்லப் பிடிக்காமல், இல்லை என்று சொல்லவும் முடியாமல் அவள் திணறுகையிலேயே, நல்ல வேளையாக, அவன் சொன்ன இன்னொன்று ஞாபகத்துக்கு வந்து விடவே, தன் நீண்ட இமைகளைத் தாழ்த்திக் கோபம் குமுறும் கண்களை மறைத்துத் தரையைப் பார்த்தாள் அவள்.

ஆனால், தொடர்ந்த சில கணங்கள் அங்கே பேச்சு நின்று, எல்லோரும் பரபரப்புடன் ஒருவரை ஒருவர் பார்ப்பதை உணர்ந்த மனோகரிக்குத் தன்னை மீறி முகம் சிவந்தது!

அதைத் தொடர்ந்து, ''மனோவை நாளைக்குச் சேலை கட்டச் சொல்லுங்கள், ஆன்ட்டி! இந்தப் பாவாடை தாவணி அழகாக இருந்தாலும், சின்னப் பெண் மாதிரியும் தெரிகிறது! அதனால்தான் கேட்கிறேன்!'' என்று செந்திருவிடம், பிரியரஞ்சன் சலுகையோடு வேண்டிக் கொள்ள, அந்தத் தாயின் முகம், ஆனந்தமாய் மலர்ந்தது!

எத்தனை மணிக்கு விழிப்பது, யார், யார் என்னென்ன செய்வது என்று பேசி முடித்துவிட்டு, இனிப் படுக்கப் போகலாம் என்று, எல்லோரும் கிளம்பினர்.

பெற்றோரோடு கிளம்பிய மனோகரியைத் தடுத்து நிறுத்தி, ''உன் பிளானட்டோரியத்தை இன்னொரு தடவை பார்த்துவிட்டுப் போகலாமே!'' என்று புன்முறுவலோடு அழைத்தான் பிரியரஞ்சன்!

மறுப்பின்றி உடனே சென்றவள், கண்ணாடித் தடுப்பை அடைந்ததும், வெளியே வானத்தைப் பார்க்கிற



பாவனையில் நின்று கொண்டு, ''எல்லாம்தான், நீங்கள் சொன்ன மாதிரியே செய்தேனே, அப்புறம், இன்னும் சொல்ல, என்ன இருக்கிறது?'' என்று வினவினாள்.

''ஏதோ சொல்ல அழைத்தேன் என்பதைப் புரிந்து கொண்டதோடு, மறுக்காமல் வந்ததற்கு சந்தோஷம்! உன் பெற்றோரின் முகங்களைப் பார்த்தாயல்லவா? முழுமையான மகிழ்ச்சி! அதைக் கெடுக்கும் விதமாக, இனியும், எதையும் செய்ய மாட்டாய் என்று நம்பலாமா?''

''அவர்கள் என் பெற்றோர்கள் என்பதை மறந்து பேச வேண்டாம்!'' என்றாள் அவள் சுருக்கெனு.

ஓர் அர்த்தமுள்ள கண நேரத் தயக்கத்தின் பின், ''இனிமேலேனும், அதை மறக்கப் போவதில்லை என்று மறைமுகமாக உறுதி தருகிறாய் என்று தோன்றுகிறது! ரொம்ப நல்லது! இனிப் போவோமா? காலையில் சீக்கிரமாக விழிக்க வேண்டும்!'' என்றான் அவன்.

தலையசைத்துத் திரும்பிப் போனவளின் முகத்தில் இருந்த இறுக்கத்தைக் கவனித்தவன், ''இன்னும் ஒன்று!'' என்று, அவளைத் தடுத்து நிறுத்தினான். ''நாக்கில் நரம்பில்லாமல் பேசினார்களே, அந்த வம்பர் மகாசபை அங்கத்தினரை, நாளைக்கு, நீ எனக்கு அடையாளம் காட்ட வேண்டும். அறிமுகம் செய்து வைத்தாய் என்றால், நன்றாக இருக்கும்! அத்தோடு நிறுத்திவிட்டு, நீ சந்தோஷமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்! எதற்கும், கொஞ்சம் பஞ்சு, அல்லது பழைய துணி வைத்துக் கொள். உன் கிளிஞ்சல் காதுகளில் தேன் சர்க்கரைப் பாகு மாதிரி

ஏதாவது பாய்ந்தால், துடைத்துக் கொள்ள வசதியாக இருக்கும்!'' என்று, சொல்லிப் பிரியரஞ்சன் கண் சிமிட்ட, மனோகரியின் முகத்தில் வியப்பும், ஆவலும் பரவின!

பாராதது போலப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவரின் முகங்களும் மலர்ந்தன!

மகளுக்கு எது விருப்பமோ, அதை அணியட்டும் என்று, நல்ல பட்டுச்சேலை, பாவாடை தாவணி செட்டோடு, மகளுக்காக இரண்டு விலை உயர்ந்த சுரிதாரும் கூடச் செந்திரு கொண்டு வந்திருந்தாள்.

சொத்து பத்து உள்ளவர்கள்! ஒரே பெண்ணுக்கு அணிவித்து அழகு பார்ப்பதில் அன்றளவும் கணக்குப் பார்த்தவர்கள் அல்ல என்பதால், உயர் ரகத் துணிமணி, நகைகள், மனோகரிக்கு நிறையவே இருந்தன!

சௌமினியுடைய அண்ணனும், சுந்தருடைய நண்பனுமாகப் பிரியரஞ்சன், வந்ததில் இருந்தே, எல்லாருடனும் கலகலப்பாகப் பழகினாலும், மகள் மனோகரியிடம், அவன் மேலும் ஆர்வத்தோடு பேசுவது போலவே, குருநாதன் தம்பதிக்குத் தோன்றியது!

அவளுக்கு, அவர்கள் அன்றுவரை அறிந்திராத விதமாகப் பிரியரஞ்சன் ஓர் அன்னிய ஆண் என்கிற ஒதுக்கமே இல்லாமல், அவனோடு பழகுவதாகவும் கூட எண்ணினார்கள்!

ஆனால், இது, அவர்களது ஆசை கொண்ட மனதின் கற்பனையாகவும் இருக்கலாமோ என்று, அவர்கள் இருவரும் கவலையோடு பேசிக் கொண்டபோது, சௌமினியும் சுந்தரும், அவர்களைத் தேடி வந்தார்கள்!



நாளைக்குப் பிரியரஞ்சன், அந்த வம்புக்காரக் கும்பலிடம் என்ன பேசப் போகிறான் என்று யோசித்ததும், மனோகரிக்கு ஒன்றும் சரியாகப் புரிபடவில்லை! ஆனால், அவன் நினைத்ததை நடத்தி முடிக்கிறவன்! ஏதோ ஒரு வகையில், அவனிடம், அவர்கள் குட்டு வாங்கி, அவர்கள் முகம் வாடி நிற்பது போலச் சுகமாகக் கற்பனை செய்தபடி புரண்டு படுத்த மனோகரிக்குப் பல நாட்களுக்குப் பிறகு, முதல் முறையாக, அன்று நன்றாகத் தூங்க முடிந்தது!

அவரவர் இயல்புக்கு ஏற்றபடி, பரிதாபத்துடனோ, வம்படிக்கும் ஆர்வத்துடனோயோ எதிர்பார்த்த எல்லோருக்குமே, தாமரைப்பூ வண்ணத்தில், நிறைய பூவும், கோடுகளுமாக ஜரிகை பின்னப்பட்டப் பட்டுச் சேலை உடுத்தி, உரிய நகைகளுடன், மின்னலைப் போல வளைய வந்த மனோகரியைப் பார்க்கையில், ஒரு விதமான ஏமாற்றம்தான்!

'பாவம்' என்று பரிதாபப்படத் தயாராக இருந்தவர்களுக்குக் கூட, அதற்கு வழியில்லாது போனது, சற்றுத் துணுக்கமாகத்தான் இருந்தது!

வம்படிக்கிற கூட்டத்துக்கோ, கல்யாண வயது வராத சின்னப் பெண்ணைப் போலக் காட்டவென்று, இன்றும் பாவாடை தாவணி அணிந்திருக்கிறாள் என்று சொல்ல வாய்ப்பற்றுப் போனதில் வருத்தமே!

அதிலும், அவள் தன்னந் தனியாக நின்று தவித்துக் கொண்டிராமல், பளிச்சென்றிருந்த ஒரு பையனோடு சுற்றியது, அந்தப் பையன், மணப்பெண் சௌமினியுடைய அண்ணன் என்று தெரிந்தபோது, அது, அவர்களுக்கு அடியோடு பிடிக்கவில்லை!



மணப்பெண்ணின் குடும்பமும் கல்வி, செல்வம் எல்லாவற்றிலும் சிறப்பானது என்று கேள்வி ஆயிற்றே! அத்தனையும் நிறைந்த அந்தப் பையனுக்கு, இவளிடம் என்ன பேச்சு?

எதையாவது சொல்லி, அவளை விரட்டி விடும் நோக்கத்தில், அந்தக் கும்பல் நெருங்கி வருகையில், ''சேலையும் அலங்காரமும் சூப்பர்!'' என்று பாராட்டி, மனோகரியை முகம் மலர வைத்துக் கொண்டிருந்தான் பிரியரஞ்சன்.

மகிழ்ச்சியோடு, சிறு கூச்சமும் ஏற்படவே, வெட்கத்துடன் தலையைத் திருப்பியவளின் கண்களில், வம்பர் கும்பல் நெருங்குவது தென்பட்டது!

இப்போதும், அவளது உள்ளம் லேசாகப் பதறியது. நாக் கூசாமல், அவர்கள் என்னவெல்லாம் சொன்னார்கள்!

அவளது முக மாறுதலைக் கவனித்துவிட்டு ''என்ன?'' என்று கேட்டவனிடம், ''அவர்கள்!'' என்றாள் மனோகரி குரலிலும் லேசான நடுக்கத்துடன்!

அவளை இன்னமும் அணுகி அவன் நின்றபோது, அவனது உடம்புச் சூட்டின் கதகதப்பில், அவளது நடுக்கம் மறைந்தது!

''நல்ல வாய்ப்பை, அவர்களே தருகிறார்களாக்கும்!'' என்று எண்ணிய பிரியரஞ்சன், ''சொன்னேனே, காதைத் துடைப்பதற்கு ஏதேனும் கொண்டு வந்திருக்கிறாயா? இல்லாவிட்டால், ஈ, எறும்பு மொய்த்துவிடப் போகிறது!'' என்று தொடர்ந்து கூறவும், தன்னையறியாமல், அவளுக்குச் சிரிப்பே வந்து விட்டது!



பாதிப் பேச்சைத் தொடர்கிற பாவனையில், ''நான் இப்போது சிற்றனை கட்டுகிற இடம் எவ்வளவோ மேல், மனோகரி! இதற்கு முன்னால் வேலை நடந்த இடத்தில், பொதுவாக பல பேருக்கு, மிகவும் குறுகிய புத்தி! வக்கிரம் என்று கூடச் சொல்லலாம்! சின்ன வயதுப் பெண்களைக் கண்டாலே அவர்களைப் பற்றிக் கேவலமாக ஏதாவது வம்பு பேசியாக வேண்டும்! இவள் அவனோடு போனாள்., அவளுக்கு அதனால் மருந்து வைத்துக் கலைக்க நேர்ந்தது என்று வாயில் வந்தபடி! இதைக் கேட்டுக் குடும்பமே அழும்! பல குடும்பங்கள், நம் வேலைத் தொடர்பு உடையவனாகவும் இருக்கும்! அவர்கள் அழுது வடிகிறபோது, நமக்கு எப்படி வேலை நடக்கும்? யோசித்துவிட்டு, ஒரு துப்பறியும் நிறுவனத்தைக் கொண்டு, விசாரிக்கச் சொன்னேன்! பிறகுதான் தெரிந்தது, இது வெறும் வக்கிரம் மட்டுமல்ல! சதி, சூழ்ச்சி!'' என்று நிறுத்தினான் அவன்.

தன்னுடன் எப்படிப் பேச வேண்டும் என்று பிரியரஞ்சன் ஏற்கனவே வழிமுறை சொல்லியிருந்த போதும், அந்த நினைவே மறந்து, ''சூழ்ச்சியா, என்ன சூழ்ச்சி? அதுவும், சின்ன வயது அப்பாவிப் பெண்களுக்கு எதிராகவா, அநியாயமாக இருக்கிறதே! ஏன் அப்படி?'' என்று திகைப்புடன் வினவினாள் மனோகரி!

''சூழ்ச்சியேதான். அந்த மாதிரி நாக்கில் நரம்பில்லாமல் பழி பேசியவர்கள் எல்லோருமே, உருப்படாத பிள்ளைகளைப் பெற்றவர்கள்! நல்ல வசதியுள்ள வீட்டு சாதுப் பெண்களைப் பற்றி, இப்படிக் கதை கட்டிப் பேரைக் கெடுத்துவிட்டால், அப்புறம், அந்தப் பெண்களை, அவர்களைப் போன்ற பெரிய இடங்களில் ஏற்க மாட்டார்கள்! ஏதோ இதுவாவது கிடைத்ததே என்று, இவர்களுடைய மோசமான மகன்களுக்குப் பெண்ணைக் கொடுப்பார்கள் அல்லவா? கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டால், அப்புறம், இந்த வீட்டுக்கு அவள் காமதேனுதானே?''

''என்ன அநியாயம்!?'' என்றாள் மனோகரி கொதிப்புடன்!

''அதே ஆத்திரம்தானம்மா, எனக்கும்! அந்தக் கோபத்தில், ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டி, அவர்களை வெளிப்படுத்திவிட்டேன்! எல்லோர் முன்னிலையிலும் அந்தச் சின்னப் பெண்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு, அபராதமும் கட்டினார்கள். அந்தச் சின்னப் பெண்களில் யாரேனும் விபரீத முடிவுக்குப் போயிருந்தால், தலையை மொட்டையடித்துக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்துவது, அந்த ஊர்ப்பழக்கமாம்! உனக்குத் தெரிந்து, அப்படி யாரேனும் இருந்தால்கூடச் சொல்லு, மனோ! நம் துப்பறியும் நிறுவனத்தைக் கொண்டே, அவர்களையும் பக்காவாக மாட்டி வைத்து விடலாம்! உங்கள் ஊர்ப் பஞ்சாயத்தில், தண்டனைகள் எப்படி இருக்கும் என்று, உனக்கு ஏதாவது தெரியுமா?''



முகத்தில் சவக்களையுடன், வம்பர் கூட்டம் திகைத்து நின்று, மெல்லப் பின்னோக்கி நகர்வதைக் கண்ட மனோகரிக்குச் சிரிப்பு வந்தது!

அப்போதுதான் அவர்களைப் பார்த்தவன் போல, ''நில்லுங்கள் ஆன்ட்டி! ஏன் மனோ, இவர்கள் எல்லோரும் உன் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றாலே எனக்குத் தனி ஆர்வம் வந்து விட்டது! உன்னைப் போல, எல்லோருமே நல்லவர்களாகத்தான் இருப்பார்கள் என்கிற நிச்சயம்! வா! வந்து சொல்லு, இவர்கள் பெயர் என்ன? உனக்கு என்ன உறவு?'' என்று மிகுந்த ஆர்வத்துடன் விசாரித்தான் பிரியரஞ்சன்!

மனோகரியும் உற்சாகத்துடன், ''இதோ இவர்கள், எனக்கு ஒன்றுவிட்ட அத்தை! பெயர் வடிவாம்பா! அவர்கள், பெரியம்மா முறை...'' என்று அறிமுகப் படலத்தைத் தொடங்க, அதில் குறுக்கிட்டு, ''அடடா! 'தில்லானா மோகனாம்பாள்' கதையில் வருகிற கெட்ட அம்மா பெயரைப் போய் வைத்திருக்கிறார்களே! மோசமான சூழ்ச்சிக்காரியின் பெயர்! ஆனாலும் அதற்காகக் கவலைப்படாதீர்கள் ஆன்ட்டி! மனோவின் ஊரில் கெட்டவர்கள் இருக்கக் கூடும் என்று, நான் நம்பவே மாட்டேன்! அப்படியே இருந்தாலும், இவள் முகத்தைப் பார்த்தாலே திருந்திவிட மாட்டார்களா? நீங்கள் என்ன ஆன்ட்டி, சொல்லுகிறீர்கள்?'' என்று எடுத்துக் கொடுத்தான் பிரியரஞ்சன்.

அதை அப்படியே அவசரமாகப் பின்பற்றி, ''நீ சொல்லுவது, நூற்றுக்கு நூறு நிஜம், தம்பி! நாங்கள் எல்லோரும், மனோவை மகாலட்சுமி அவதாரம்



என்றுதான் சொல்வது! படிப்பிலேயும் சரசுவதி! குணமோ, இவளைப் போல ஒரு பெண்ணைப் பெறக் குருநாதன் அண்ணன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பார்கள்! அவ்வளவு நல்ல பெண்! எங்கள் ஊருக்கே அவளால் பெருமை ஆயிற்றே!'' என்று மற்ற இரு பெண்டிரும் விழிப்பதைப் பொருட்படுத்தாமல் மனோகரியைப் புகழ்ந்து தள்ளினாள் வடிவாம்பாள்.

''காதைத் துடைத்துக் கொண்டாயா?'' என்று, நமட்டுச் சிரிப்புடன் மனோகரியைக் கேட்டுவிட்டு, ''மனோவின் காதுப் பக்கம், கொஞ்சம் பவுடர் அதிகமாக இருந்தது! அதனால்தான் துடைக்கச் சொன்னேன்!'' என்று விளக்கமும் கொடுத்தான்!

தொடர்ந்து, ''உங்களுடன் பேசிக் கொண்டிருப்பது, மிகவும் சுவாரசியமாகத்தான் இருக்கிறது! ஆன்ட்டி! ஆனால், மணமேடையில் சடங்குகளைத் தொடங்குகிறார்கள்! நாங்கள் அங்கே போக வேண்டும்! முக்கியமாக இவள்! வருகிறோம்!'' என்றுரைத்துத் திரும்பி, அவளை வழி நடத்தியபடி, ''என்ன மனோ, மறந்து விட்டாயா? தாலி கட்டும்போது, நாத்தனார் முடிச்சு நான்தான் போடுவேன் என்று நேற்றெல்லாம் குதித்தாயே...'' உரக்கக் கூறினான் பிரியரஞ்சன்!

நெருக்கமாக அடுக்கப்பட்டிருந்த நாற்காலிகளின் இடையே, இங்குமங்குமாகக் கிடைத்த சிறு சிறு இடைவழிகளில் நெளிந்து வளைந்து சமாளித்தபடி அவர்கள் சென்று கொண்டிருந்ததால், மனோகரியின் தடுமாற்றம் வெளியே தெரியாமல் போயிற்று!



சற்றுத் தள்ளிப் போனதும், பிரியரஞ்சனுக்கு நன்றி கூற வேண்டும் என்று முதலில் நினைத்தவளுக்கு, இப்போது, அது சுத்தமாய் மறந்து போயிற்று!

மணவிழா முழு நேரமும், இயன்றவரை பிரியரஞ்சன், மனோகரியின் அருகிலேயேதான் நின்று கொண்டிருந்தான்!

அவளோடு பேசியபடி., எதையாவது சொல்லி அவளைச் சிரிக்க வைத்தபடி., மணமக்களின் வழியில், அவர்களுக்கு விளக்கொளி காட்டியபடி, பின்னோக்கிச் செல்வது போன்ற தருணங்களில் அவள் தடுமாறி விடாமல் உதவியபடி...!

எனவே, திருமண ஆரவாரங்கள் முடிந்து, மாலை வரவேற்புக்கு முன், இரு வீட்டாரும் ஆசுவாசமாய் உட்கார்ந்திருக்கும்போது, மனோகரியின் கையைப் பற்றி வருடுகிற பாவனையில் குறிப்புணர்த்திவிட்டு, மனோகரியும் தானும் மணந்து கொள்ள விரும்புவதாகப் பிரியரஞ்சன் கூறியது, யாருக்கும் அதிசயமாகவே இருக்கவில்லை!



## 9

எப்படிப் பிரியரஞ்சன், மனோகரியோடான திருமணம் பற்றிப் பேசியது யாருக்கும் வியப்பளிக்கவில்லையோ, அதே போலவே, மனோகரி மறுத்து

எதுவும் பேசாததையும் எல்லோரும் இயல்பாகவே ஏற்ற விதம், அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது!

குறைந்த பட்சமாகத் தாயாராவது, ஜாதகப் பொருத்தம், கோவிலில் பூக்கட்டிப் பார்ப்பது என்று, ஏதாவது தொடங்குவாள் என்று எதிர்பார்த்த மனோகரி, அவள் எண்ணியதற்கு நேர் மாறாக, "மனப் பொருத்தம்தான் மகாப் பொருத்தம்!" என்று செந்திரு கூறவும் பெரிதும் ஏமாந்து போனாள்!

பிரியரஞ்சனின் திட்டத்துக்குத் தன் தாயார் மூலம் தடை வந்தே தீரும் என்று அவள் நிச்சயமாக எண்ணியிருந்தது புஸ்வாணமாகிப் போய் விட்டதில், திகைத்துக் கலங்கக் கூட, அவளால் முடியவில்லை!

பக்கத்திலேயே இருந்து கொண்டு, சட்டைப் பையைத் தடவியவாறு, "சிரி., சிரி!" என்று பிரியரஞ்சன் அவளை விரட்டிக் கொண்டே இருந்தான்.

மிரட்டினான் என்றும் சொல்லலாம்!

அவனிடம் மறுக்கத் தைரியம் இல்லாமல், 'ஈ' என்று இளித்த தோற்றத்துடன் அமர்ந்திருந்தாள் மனோகரி!

'நாய்க்கு ஒளித்தொரு சூலில்லை' என்பார்களே! நிச்சயமாகத் தாயார், தன் சிரிப்பின் பொய்மையை அறிந்து கொள்வாள்! அறிந்துகொண்டு, கேள்விகளால் துளைத்தெடுக்கப் போகிறாள் என்று, ஒருவித ஆவலுடன், கூடவே ஓர் இனம் புரியாத கவலையுடன் காத்திருந்த மனோகரிக்கு, அதிலும் ஏமாற்றம்தான்!

"நாங்கள் எல்லோரும்தான், முறை மாப்பிள்ளை அது இதென்று உளறிக் கொட்டி, வேண்டாத கற்பனை



களை உண்டாக்கி வைத்திருந்தோம் போல! பாரேன், உரிய ஆளைக் கண்டதுமே, அந்த வெற்றுக் கற்பனைகள் எல்லாம் போன இடம் தெரியவில்லையே! நேற்று வரை, உன்னை நினைத்து, அப்பா நெஞ்சைத் தடவி விட்டுக்கொண்டே, இரவெல்லாம் தூங்காமல், விழித்துக் கிடப்பார்! எத்தனை நாட்களுக்குப் பிறகு, நிம்மதியாகத் தூங்குகிறார், பார்!.." என்று, இந்த ரீதியில்தான் பெற்றவளின் பேச்சு இருந்தது!

'அப்படி ஒன்றும் இல்லை., அப்படி, ஒரொருவரைப் பார்க்கப் பார்க்க மனம் மாறிக் கொண்டே இருக்குமா, என்ன? என் மனம் ஒன்றும் அப்படியெல்லாம் ஒரு நாளும் மாறாது' என்று மனம் நினைத்த உண்மையைச் சொல்லித் தாய் தந்தையின் நிம்மதியைக் கெடுக்க மனம் வராமல், பிரியரஞ்சனின் யோசனைப்படி, இமை தாழ்த்தித் தரையைப் பார்த்தபடி இருந்து கொண்டாள் பெண்!

ஆனால், அதிலேயே மகிழ்ந்து, "அந்தத் தம்பி பிரியரஞ்சனோடு, கூடவே நீ அலைந்தாயா, எனக்கு அப்போது ஒன்றுமே புரியவில்லை! நம் பெண் இப்படி இருக்க மாட்டாளே என்று ஒரே குழப்பம்! பிறகு சுந்தரும் சௌமினியும் வந்து சொன்ன பிறகுதான், இது சினிமாவில் வருகிற மாதிரி, கண்டதும் கா... வந்து, அன்பு என்று புரிந்தது! பையன் கெட்டிக்காரனாம்! தானே தொழில் செய்து நிறையச் சம்பாதிக்கிறானாம்! என்னமோ, ஊராரின் கண்ட பேச்சைத் தாங்கிக் கொண்டு, கஷ்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் கடமை செய்ய வந்ததற்குக் கடவுள் தகுந்த பரிசாக,



சந்தோஷத்தைத் தந்திருக்கிறார்!" என்று மேலும், மேலும் அதே பாணியில் செந்திருவின் பேச்சு போய்க் கொண்டே இருந்ததுதான் மனோகரிக்குப் பெரும் துன்பமாக இருந்தது!

தாயார் சொன்னதே போலக் கஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு, கடனே என்று பொறுத்துக் கொள்ளும்படி ஆயிற்று!

கடைசியாகத் தூங்கிவிட்ட பாவனையில், மனோகரி 'ஊம்' கொட்டுவதை நிறுத்திய பிறகுதான், செந்திருவின் பேச்சும் நின்றது!

ஆனால், மறுநாள் காலையில் கண் விழித்ததுமே, கணவர் குருநாதனுடன் சேர்ந்து, மகளின் திருமணத்தை எப்படிப் பிரமாதமாக நடத்துவது என்று திட்டமிடத் தொடங்கிவிட்டாள்!

உள்ளூரச் சலிப்புடன் கேட்டுக் கொண்டிருந்த மனோகரிக்கு, ஏதோ தோன்றவும் சட்டெனத் தூக்கிவாரிப் போட்டது!

பிரியரஞ்சனைப் பொறுத்தவரையில், அவனுடைய தங்கையின் திருமணம் நல்லபடியாக நிறைவேறி, அவளுடைய இனிய இல்லறமும் உறுதியாகி விட்டது! இந்த நிலையில், மனோகரியை மணந்து கொள்ள, அவன் இன்னமும் விரும்புவானா?

அதுவும், இன்னொருவனை நேசிக்கும் மனோகரியை!

அவசியமே இல்லையே!

எவனாவது, தேவையற்ற வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளுவானா?



இந்த அம்மா, இவ்வளவு திட்டம் போடுகிறாளே என்று வருத்தமாகி விட்டது, அவளுக்கு! கடைசி நேரத்தில் நின்றுவிட்டால், பாவம் இந்தத் தாய், என்ன பாடு படுவாள்!

முதலில், அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினாள் பெண்.

"இப்படியே கொஞ்சம் வெளியே காலாற நடந்து விட்டு வருகிறேன், அம்மா!" என்று தெரிவித்துவிட்டு, அறையை விட்டு, வெளியேறியவள், நேரே பிரியரஞ்சனைத் தேடி, அவன் அறை இருந்த தளத்துக்குச் சென்றாள்.

நல்ல வேளையாக, அங்கே யாரிடமும் அவனைச் சொல்லிக் கேட்டுத் தேடும் பிரச்சனையின்றி, ஏதோ பத்திரிகையை, அவனே 'லிஃப்ட்' அருகிலேயே நின்று படித்துக் கொண்டிருந்தான்!

அவளைப் பார்த்ததும் வியந்து, "என்னம்மா?" என்று வினவினான்.

"உங்களிடம் தனியே பேச வேண்டும்!" என்றாள் அவள் மொட்டையாக.

பத்திரிகையை மடித்தபடி, "வார்த்தைகள் என்னென்னவோ உல்லாசக் கற்பனைகளைத் தூண்டிய போதும், முகம் வேறு சொல்வதால், வா, அந்த மூலைத் திருப்பத்தில் நின்று பேசுவோம்! வேண்டாத காதுகளில் எதுவும் விழாதிருக்கும்!" என்று, அவளை அழைத்துச் சென்றான் அவன்.

திருப்பத்தை அடைந்ததும், சொல்லு, என்று கையால், சைகை செய்தான்.

அவன் சொன்னதும், ''நான்தான் உன்னிடம் ஏற்கனவே, சொல்லியிருக்கிறேனே! என் தங்கைக்காக எதுவும் செய்வேன் என்று! கன்னியாக வாழும் மனோகரியால், வாழ்நாள் முழுவதும், அவளுக்கு உறுத்தல்தான். எனவே, திருமணம் நிச்சயம் நடந்தாக வேண்டும்! நடை பெறும்!'' என்றான் அவன் தீர்மானமாக.

அதென்ன அவ்வளவு தீர்மானமாக அவன் சொல்வது? ஒரு திருமணத்தை முடிவு செய்ய, இருவரின் சம்மதமும் வேண்டாமா என்று, மனம் முரண்டிய போதும், ஒரு வகையில் மனோகரிக்கு நிம்மதியாகவே இருந்தது!

அப்பா, அம்மாவுக்கு ஏமாற்றமாக இராதல்லவா? ஆனால்...

சற்று யோசித்துவிட்டு, ''வந்து... திருமணம் நடந்துதான் தீரும் என்றால், அதை இங்கேயே, சீக்கிரமாகவே நடத்திவிட்டால் என்ன?'' என்று வினவினாள்.

பிரியரஞ்சனின் பார்வையில் கூர்மை தெரியவும், அலட்சியம் போல லேசாகத் தோளைக் குலுக்கி, ''நீங்கள் சொல்லுவதுபோல, சௌமினி சீக்கிரமே நிம்மதியாக இருப்பாள் அல்லவா? மற்றபடி, என் பெற்றோர் விரும்புவது போலப் பெரிதாகத் திட்டம் போட்டு, ஊரில் எல்லோரையும் அழைத்துக் கல்யாணத்தைச் சிறப்பாக நடத்துவது என்றால், அந்த..



அந்த ஏற்பாடுகளுக்கே மாதக் கணக்கில் அவகாசம் தேவைப்படுமே! அவ்வளவு காலம், அவளுக்கு எதற்காக, அனாவசிய உறுத்தல்?'' என்றான் எங்கேயோ பார்த்தபடி.

குரலில் பிசிர் தட்டாமல் பேசுவது பெரும் பாடாக இருந்தது!

ஊரில், உடனொத்த தோழிகள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் எல்லோர் வாயிலும் விழுந்து, எழுந்து, அவர்களுக்கு விளக்கம் சொல்லிக்கொண்டு...

நினைத்துப் பார்க்கவே நடுக்கமாக இருக்கையில், குரல் அதைப் பிரதிபலித்து விடாமல், கவனமாகத் தானே இருந்தாக வேண்டும்?

ஆனால், அதே சமயம், இவனுக்குத் தெரியாத அந்தரங்கம் அவளிடம் என்ன இருக்கிறது என்று அலுப்பாகவும் இருந்தது! அவளது இதயக் கோயிலில் குடியிருப்பவன் யார் என்பது வரை அறிந்திருப்பவன்!

இவனிடம் என்ன கௌரவம் வேண்டிக் கிடக்கிறது?

பெற்றோரின் திட்டமிடலையும், அவளது கலக்கத்தையும் பற்றி, வெளிப்படையாகச் சொல்லி விடலாமா என்று எண்ணி, மனோகரி ''ஆனால் எனக்கு...'' என்று தொடங்குகையில், 'லிஃப்ட்' கதவு திறந்து, சுந்தரும் சௌமினியும் வெளியே வந்தார்கள்!

சந்தோஷமே உருவாக!

சுற்று வராண்டாவின் ஒரு மூலையில் மற்ற இருவரையும் பார்த்ததும், சௌமினியின் முகத்தில் குறும்பு நகை மலர்ந்தது!



''நாங்கள் அதிகாலைப் பறவைகளாகச் சீக்கிரமே வந்து, உங்களையெல்லாம் எழுப்ப வேண்டும் என்று ஓடோடி வந்தால், நீங்கள் என்னண்ணா, விடிந்தும், விடியாததுமாக, அதற்குள் ரகசியம் பேசத் தொடங்கி விட்டீர்கள்? அதுவும், இங்கே நின்று! இப்போது, நாங்கள் அங்கே வரலாமா, வரக்கூடாதா?'' என்று, குரலில் கேலி நகை இலங்க அவள் வினவக் கணவன் மனைவி இருவருமாகச் சிரித்தபடியே அவர்களை நோக்கி வந்தார்கள்.

அவள்தான் தேடி வந்ததாகப் பிரியரஞ்சன் உண்மையைச் சொல்லி விடுவானோ என்று ஓரக் கண்ணால் அவனைப் பார்த்த மனோகரி, சற்றுத் திகைத்தாள்!

சிரித்துப் பேசும்போதுகூடப் பிரியரஞ்சனிடம் ஓர் அழுத்தம், உறுதி இருப்பது போல, அவ்வப்போது, மனோகரிக்குத் தோன்றும்! இவ்வளவுதானே என்று யாரும் அலட்சியப்படுத்த முடியாத அழுத்தம்! யாரும் அவனைக் கைப்பிடிக்குள் நிறுத்திவிட முடியாது என்று, சொல்லாமல் சொல்லும் உறுதி! நிமிர்வு!

ஆனால், இப்போது, சௌமினியின் சுண்டு விரல் அசைவுக்கும் கட்டுப்படுவான் போல, அவனது முகம் இளகியிருந்தது!

ஒரு வினாடி, மனோகரியின் வயிறு காந்தியது!

இந்த சௌமினியிடம் என்ன இருக்கிறது?

இன்னொருவனை விரும்புகிறவள் என்று தெரிந்தும், அவளை மணந்து, தன் எதிர்கால இன்ப வாழ்வு



முழுவதையும் தியாகம் செய்யத் தயாராக, ஓர் அண்ணன்! அவனுக்காகவே வளர்ந்த முறைப் பெண்ணை ஒதுக்கிவிட்டு மணக்கிற கணவன்!

எல்லோரும், அவளுக்கு மட்டும்!

மனோகரிக்கானால், விருப்பம் போலச் சாகக்கூட, உரிமை இல்லையே!

இவளிடம், அப்படி என்னதான் இருக்கிறது என்று ஆராய்ந்தவள் மீண்டும் திகைத்தாள்!

இத்தனை நாளும் பாராத பார்வையாகப் பொதுவாகப் பாராமல் அருகில் நின்று உற்று நோக்குகையில், மனோகரிக்கே அவளைப் பிடித்துப் போகும்போல இருந்தது!

பிறக்கும்போதே புன்னகையோடு பிறந்தவள் போன்று, இயல்பாகவே சிரித்த முகம்! ஆர்வமும், கனிவுமாக, அதுவே தனி அழகாக இருந்தது! என்றேனும், யாரிடமேனும் இவள் கோபப்பட்டிருப்பாளா என்பது சந்தேகம்தான்!

அத்தான் இவளை விரும்பியதில், ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை போலும்!

மனோகரியின் ஆராய்ச்சி மனதின் புறமிருக்க, தங்கையை எதிர்கொள்ளச் சென்ற பிரியரஞ்சனின் பேச்சில் மறுபகுதி பதிந்தது!

''சரியான சமயத்தில் வந்தே நின்று விட்டு, வரலாமா என்று கேள்வி வேறா? தாராளமாக வாருங்கள், கரடி ஜோடியே!'' என்று அவன் சிரித்தபோது, தன்னை மீறி, அவள் முகத்திலும் முறுவல் அரும்பியது!

''பா...ருங்கள் சுந்தர், நம்மைப் பூஜை வேளைக் கரடி என்கிறார் அண்ணன்!'' என்று சௌமினி சிணுங்க, ''என்னம்மா, உனக்கும் அப்படித்தான் இருக்கிறதா? வேண்டுமானால், நாங்கள் போய்விட்டு, அப்புறமாக வரவா?'' என்று மனோகரியிடம் கேட்டான் சுந்தர்!

என்னவோ அவளும் பிரியரஞ்சனும் பெரிதாகக் காதலில் உருகிக் கொண்டிருக்கையில், இவர்கள் இடையூறாக வந்து விட்ட மாதிரி என்ன நாடகம் இது என்று உள்ளூர எரிச்சலாக இருந்தபோதும், அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், ''ஏன் போவது அத்தான்? உங்களுக்குத் தனிமை தேவைப் பட்டால் சும்மாச் சொல்லி விடுங்கள். நான்.. நாங்கள் இங்கிருந்து ஒதுங்கிப் போய்விடுகிறோம்!'' என்று அந்தக் கேலியையே தொடர்ந்து பேசிச் சமாளிக்க முயன்றாள் அவள்.

புதுப் பெண்ணின் முகம் குபீரென்று நாணமாய்ச் சிவக்கையில், ''ஏய் மனோ, உனக்கு எப்படித் தெரியும், கடந்த நாலு நாட்களாக இந்தப் பக்கம்தான் நாங்கள் தனியே பேச வருவோம் என்று?'' என்று அசட்டுச் சிரிப்புடன் சுந்தர் வினவினான்!

'அதுவும் இந்த இடத்தில்' என்று சௌமினி சொன்னதன் பொருள் விளங்க, மனோகரியின் முகமும் லேசாகக் கன்றியது!

இங்கே ஒரு காதல் நாடகம் நடந்துதான் இருக்கிறது! நிஜக் காதலர்களுக்கிடையே!



அவளுக்குத்தான் அப்படி ஒரு கொடுப்பினையும் கிடையாது!

மனோகரி சோகமாக எண்ணமிடும்போதே, பிரிய ரஞ்சன் உரக்கச் சிரித்தான்! ''ஓகோ! இந்த இடத்துக்கு, இப்படி ஒரு மகத்துவம் இருக்கிறதா? ஆக, இவ்வளவு காலையில், நீங்கள் இங்கே ஓடி வந்தது, 'மலரும் நினைவுகளு'க்காகவா? பலே, பலே!'' என்று மறுபடியும் நகைத்தான்!

அவனுக்குத் தங்கையின் காதல் கதை பற்றிப் பேச மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்! அதுவும், கல்யாணத் தில் நிறைவு பெற்றதாயிற்றே!

ஆனால் அவள்? இதை எவ்வளவு நேரம் தாங்குவது?

மனோகரியின் முகம் மாறத் தொடங்கியபோது, ''ஆனால், அப்படி நீங்கள் வந்ததும், நல்லதாயிற்று! இருவரும் எனக்கு ஓர் உதவி செய்யலாம்!'' என்று தொடங்கினான் பிரியரஞ்சன்.

''என்ன உதவி, ரஞ்சி?'' என்று, உடனே கேட்டான் சுந்தர்!

'உடுக்கை இழந்தவன் கை போல'வாக்கும் என்று அதுவும் மனோகரிக்கு எரிச்சலாகத்தான் இருந்தது! ஏளனமாகவும்!

''எங்களுக்கு ஒரு பிரச்சினைப்பா!'' என்று அவன் தொடங்கவும், ''அதற்குள்ளாகவா?'' என்றன இரு குரல்கள் கோரசாக!

முகத்தைச் சோகமாக வைத்துக்கொண்டு, ''ம்! ஆமாம்மா! தொடக்கத்திலேயே பிரச்சினை! அதைப்



பற்றிப் பேசத்தான், மனோகரி, என்னைத் தேடி. இங்கே வந்தாள்'' என்றுரைத்து அவளைப் பதற வைத்தான் பிரியரஞ்சன்!

இவர்களிடம், இவன் என்ன சொல்லப் போகிறானோ, என்ன உதவி கேட்கப் போகிறானோ, என்று மனோகரி கலக்கத்துடன் காத்திருக்க, ''ஊர் வழக்கப்படி, வாண வேடிக்கையும், சிலம்பாட்டமுமாக மாப்பிள்ளை அழைப்பு வைத்துத் திருமணத்தைப் பிரம்மாண்டமாகச் செய்ய வேண்டும் என்று, மனோவுடைய அப்பா அம்மாவுக்கு ஆசை! இவளுக்கும், ஊர்த் தோழிகளிடம் பெரிதாகக் காட்டிக் கொள்ள விருப்பம்...'' என்று அவன் அளந்தபோது, ''அதெல்லாமில்லை!'' என்று மனோகரி குறுக்கிட்டாள்.

அவளை லேசாகப் பார்த்து, ''இவர்களிடம் என்ன கூச்சம்?'' என்று விட்டு, மறுபடியும் மற்றவர்களிடம் திரும்பி, ''என் வேலை நெருக்கடிதான் உங்கள் இருவருக்குமே தெரியுமே! சும்மாச் சும்மா வேலையைப் போட்டுவிட்டு வந்து, கல்யாணம், சடங்குகள் என்று உட்கார்ந்திருக்க, என்னால் ஆகாது! அதனால், மனோ பெற்றோரிடம் போய், இங்கேயே இருந்து, அடுத்த முகூர்த்தத்திலேயே திருமணத்தை முடித்து, மாப்பிள்ளையோடு பெண்ணை அனுப்பி விடுங்கள் என்று சொல்ல வேண்டும்! அதே போலவே, நம் அப்பா, அம்மாவிடமும் அதே வேலை பண்ண வேண்டும், சௌமிம்மா!'' என்று, நயந்த குரலில் பிரியரஞ்சன் அவர்களைக் கேட்டுக் கொண்டான்.




''நீங்கள் சரியான ஆள்தான், அண்ணா! மனோகரியைப் பற்றி இரண்டு பெற்றோரிடமும் முதலில் எடுத்துச் சொல்லவும், நாங்கள்தான் வேண்டியிருந்தது! இப்போதானால், திருமணத்தை, எளிமையாக நடத்தச் சொல்கிற வேலையும் எங்களுக்கேதானா? வீட்டு மாப்பிள்ளையை நன்றாகத்தான் வேலை வாங்குகிறீர்கள்!'' என்று, செல்லமாகச் சிணுங்கினாள் தங்கை.

அவர்களது நெருக்கம் பற்றி ஊகித்துக் கொள்வதற்கு ஆவன செய்துவிட்டு, அதை உறுதிப்படுத்தவும், சௌமினி, சுந்தர் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறான்! தாயார்கூட, அது பற்றி ஐயம் காட்டவில்லையே என்று ஆச்சரியப்பட்டது, மனோகரிக்கு நினைவு வந்தது!

கெட்டிக்காரன் என்று தோன்றும்போதே, உள்ளூரக் கவலையாகவும் இருந்தது!

அவனது இந்தக் கெட்டிக்காரத்தனம், அவளுக்கு எந்த அளவுக்கு நல்லது? அல்லது கெட்டது?

என்றேனும் அவளுக்கு எதிராகப் பிரியரஞ்சன் செயல்படுவானேயானால், அதிலிருந்து மனோகரி எப்படித் தப்புவாள்?



## 10

மனோகரியின் மனம் ஏதேதோ எண்ணிக் குட்டையாய்க் குழம்பித் தத்தளித்தபோதும், முகம் அதைக்

காட்டிவிடாமல் கவனமாக இருந்தபடி, மற்றவர்களின் பேச்சை கவனித்தாள்.

அவளது உணர்ச்சிக் கொந்தளிப்புகள் மற்ற யாருக்கும் இல்லாததால், அவர்களது உரையாடலும் இயல்பாகவே தொடர்ந்தது!

கேலியும் விளையாட்டுமாக!

"எல்லாம் நம் வீட்டு மாப்பிள்ளையின் வீட்டுக்கு மாப்பிள்ளையாக, நான் ஆவதற்காகத்தானே?" என்று, தங்கைக்குப் பதில் சொன்னான் பிரியரஞ்சன். தொடர்ந்து, மேடை ரகசியம் பேசும் குரலில், "எல்லாம் உனக்காகத்தான், சௌமி! சுந்தருடைய தங்கையை நான் மணந்து கொண்டால், அப்புறம் உன்னிடம் எதற்கேனும், இவன் எகிற முடியுமா? எகிறுவது இருக்கட்டும்., போடு தோப்புக்கரணம் என்றால் கூடப் போட்டுத்தானே ஆக வேண்டும்! எப்படி ஐடியா?" என்று, சட்டைக் காலரைத் தூக்கிப் பெருமை காட்டினான்!

அதிர்ச்சியுற்றவன் போல, "ஆகா! என்ன சூழ்ச்சி! என்ன சதி! இது தெரியாமல், எங்கள் வீட்டுப் பெண் வேறு, இவனிடம் மயங்கித் தொலைத்து விட்டாளே! ஆனால், கவலைப்படாதே மனோக்குட்டி. இவன் திட்டத்தையே, அப்புறமாய், நாமும் திருப்பிப் படித்து விடலாம்! தோப்புக்கரணம் போட்டுப் போட்டு, இவன் கால் ஓய்கிற வரையில் விடக்கூடாது!" என்றான் சுந்தர் உற்சாகமாக!

எல்லோரும் சிரிக்கையில், மனோகரியிடம் கூடச் சேர்ந்து பாவனை செய்தாள்.



பிரியரஞ்சன் தோப்புக்கரணம் போடுகிற மாதிரியான கற்பனைக் காட்சியில், மெய்யாகவே புன்னகை தோன்றியபோதும், அவனது உள்நோக்கம் வேறு என்பதும் அவளுக்குப் புரிந்தது!

மனதளவில், மனோகரி, சுந்தருக்குத் தங்கைதான் என்று மறைமுகமாக உறுதிப்படுத்துகிறான்!

அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகருமாம்! அது போலத் திருப்பித் திருப்பிச் சொல்லி, மனோகரியின் மனதில் பதிய வைக்கிறானாம்!

கூடவே, அவனுடைய அருமைத் தங்கை சௌமினிக்கு, மனதில் கொஞ்ச கொஞ்ச உறுத்தல் இருந்தாலும், அதைப் போக்கி விடுவதற்காகவும் இருக்கலாம்!

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் போல, இரு லாபங்களையும் சேர்த்தே, அவன் திட்டமிட்டும் இருக்கலாம்! அன்றி, ஒன்றைத் திட்டமிடும்போது, உபரி லாபமாக இன்னொன்று கிடைப்பதாகவும் இருக்கலாம்!

எப்படியோ, இந்தக் கேலி கிண்டலுக்கிடையில், பிரியரஞ்சன் தன் காரியத்தையும், சிரித்தவாறே சாதித்தான்!

அதன் விளைவாக, சுந்தரும் சௌமினியும், மீண்டும் தூது போனார்கள்!

"உன் அண்ணன் சரியான திருட்டுப் பயல், சௌமி! மனோவை விட்டுப் பிரிந்து, 'சைட்'டுக்குத் தனியாகப் போக, அவனுக்கு மனமில்லை! அதை வெளிப்படை



யாகச் சொன்னால், என்ன, ஓர் இரண்டு மாதங்கள் காத்திருக்க மாட்டாரா என்று கேட்டு, நாளை இழுத்து விடுவார்களோ என்ற பயத்தில், நம்மை விட்டு, முடுக்குகிறான்! சரி, எல்லா வகையிலும், நம் மனோவுக்குப் பொருத்தமாக இருக்கிறானே என்கிறதால், அவனது கோரிக்கையை ஒத்துக் கொண்டு, இருவருமாகப் போய் வருவோம்" என்று, தன் புத்தம் புது மனைவியை விட்டுப் பிரிய மனமற்று, அவளையும் கூட்டிக் கொண்டு, இரு வீட்டுப் பெரியவர்களிடமும் சென்றான் சுந்தர்!

பிரியரஞ்சனுடைய நண்பனும், தங்கையும் அல்லவா? புதுப்பெண், புது மாப்பிள்ளை என்கிற சலுகை வேறு! சென்ற தூதில், ஜெயித்தும் வந்தார்கள்!

அதன் விளைவாக, பிரியரஞ்சன் திட்டமிட்டபடியே, அவனுக்கும் மனோகரிக்கும் அந்த வாரமே, திருமணம் நடைபெற்றது!

ஊருக்குப் போய், உடனொத்த மற்ற தோழியர் முகத்தில் விழிக்கவோ, விளக்கம் சொல்லவோ தேவையில்லை என்பது, மனோகரியின் முகத்தைத் தெளிய வைத்தது! சூழ்நிலைக் கேற்ப நடிப்பதும் எளிதாயிற்று!

சில மாதங்களாகவே பழகிவிட்ட ஒன்றுதானே, அந்த நடிப்பு?

திருமணத்துக்கான நகை, துணிமணி என்று அலைந்ததில் வேறு எதையும் நினைத்துக் கலக்க நேரமும் இல்லாது போய்விடத் திருமணத்தன்றுதான், அவள் திகைத்தாள்.



திருமணம் என்றால், திருநாண் பூட்டுவதோடு முடிந்து விடுவது இல்லையே!

அவளது கையைப் பிடித்துப் பிரியரஞ்சனின் கையில் வைத்துத் தந்தை தாரை வார்த்துக் கொடுக்கிறார் என்றால், இனி, அவளது வாழ்வு அவனோடு என்றல்லவா, அர்த்தம்?

பழைய காலம் போல, 'அடித்தாலும், மிதித்தாலும், அவரேயன்றி, யார் துணை' என்று வாழ வேண்டியது இல்லைதான். என்றாலும், அவளுக்கும் வரையறுக்கப்பட்ட சிலபல கடமைகள் உண்டுதானே?

எல்லோரும் அறியத் திருமணத்தை ஏற்றுவிட்டு, மற்றது பிடிக்கவில்லை என்றால், சும்மா இருப்பார்களா?

அருகில் நின்ற மனைவியின் இறுக்கத்தை உணர்ந்தவன் போல, மாலைகளின் மறைவில் மனோகரியின் கையைப் பற்றி, லேசாக அழுத்தினான், பிரியரஞ்சன்.

பரிசுடன் வந்த ஓர் உறவினரை அறிமுகம் செய்யும் பாவனையில், அவள் புறமாகக் குனிந்து, "என் குறிக்கோள் உனக்குத் தெரியும்! அதற்கு மேல், உனக்குப் பிடிக்காதது எதுவும் நடக்காது! வீணே பயப்படாதே!" என்று மனோகரியிடம் கிசுகிசுக்க, மனோகரிக்கு, 'அப்பாடா' என்று ஆயிற்று!

ஆனால், கூடவே சிறு எரிச்சல்!

அவள் பயப்படுவதாக யார் சொன்னார்கள்? ஏன் பயப்பட வேண்டும்?

சும்மா, ஒரு கலக்கம்! அவ்வளவுதானே? அதற்குப் போய், இவன் என்ன பெரிய தாதா மாதிரி, அஞ்சேல் என்று அபயம் கொடுப்பது?

திருமணத்தை ஒட்டிய சடங்குகள் எல்லாம் நிறைவேறும் வரையில் காத்திருந்துவிட்டு, அதன் பிறகு, தனக்கும், மனோகரிக்குமாக, இரண்டு டிக்கட்டுகளைக் காட்டி, அன்றே கிளம்பப் போவதாகப் பிரியரஞ்சன் கூறவும் எல்லோருமே திகைத்துப் போயினர்!

மனோகரிக்கும் திகைப்புதான்!

ஆனால், 'நான் எதைச் சொன்னாலும், ஒத்துக் கொண்டு தலையாட்டிவிட்டு' என்று அவளிடம் கிசுகிசுத்துவிட்டே அவன் சொன்னதால், முகம் மாறாமல் காத்தபடி அவள் அமைதியாகவே நின்று விட, அதுவும், பிரியரஞ்சன் விரும்பிய பலனைத் தந்தது!

"நாளைக்கு நான் அங்கே என் வேலை இடத்தில் இருந்தாக வேண்டும்! முதலிலேயே சொன்னால் ஒப்ப மாட்டீர்கள் என்று யோசித்தே, மனோகரியும் நானுமாக, இப்படித் திடுமெனச் சொல்லிவிட்டுக் கிளம்புவது என்று முடிவு செய்தோம்!..."

"எதற்கும், ஒரு கிளிப் வாங்கக்கூட, என்னிடம் அபிப்பிராயம் கேட்டுச் செய்கிற என் பெண்ணா? ஒரு வார்த்தை சொல்லாமல், கமுக்கமாக இப்படி, எப்படி? இப்போது, உன்னை எனக்கு அடையாளமே தெரியவில்லையே!" என்று, செந்திரு குமுற, மனோகரிக்கு வாய் திறக்க முடியவில்லை!



அவளுக்குமே, இது செய்திதான் என்று, எல்லோரும் அறிய அவளால் எப்படிச் சொல்ல முடியும்?"

சொன்னால், அதிலிருந்து தொட்டுத் தொட்டு, அன்று வரை போட்ட நாடகம் முழுவதும் வெட்ட வெளிச்சமாகிவிடும்! எனவே, அது முடியாத காரியம்!

விட்ட இடத்திலிருந்து, பிரியரஞ்சன் தொடர்ந்தான். "...நானோ, மனோகரியோ பச்சைக் குழந்தைகள் அல்ல! இருவரும் நன்றாக யோசித்துதான் முடிவு செய்திருக்கிறோம். தயவு பண்ணி, அதை மாற்ற, யாரும் அனாவசியமாக முயற்சி பண்ண வேண்டாம்!"

தீர்மானமாக அவன் இப்படிச் சொல்லிவிட்ட பிறகு, யார், என்ன பேச முடியும்?

அவனுடைய தந்தையே ஒரு புரியாத பார்வையின் பின், "பெண்ணும் பிள்ளையும் முடிவு செய்திருக்கிறோம். தயவு பண்ணி, அதை மாற்ற, யாரும் அனாவசியமாக முயற்சி பண்ண வேண்டாம்!"

தீர்மானமாக அவன் இப்படிச் சொல்லிவிட்ட பிறகு, யார், என்ன பேச முடியும்?

அவனுடைய தந்தையே ஒரு புரியாத பார்வையின் பின், "பெண்ணும் பிள்ளையும் முடிவு செய்து விட்டால், அதற்கு மேல் நாம் சொல்ல என்ன இருக்கிறது?" என்று ஒதுங்கிக் கொள்ளவும், மற்றவர்களும் அப்படியே செய்ய நேர்ந்தது!

திகைப்பும் வருத்தமுமாகச் செந்திரு, மகளுக்குப் பெட்டியடுக்கச் சென்றாள்.



மாப்பிள்ளை, பெரிய தோரணையில் சொல்லி விட்டாலும், அங்கே போய், மகள் உடுமானத்துக்குக் கூடக் கஷ்டப்பட்டு விடக் கூடாதே!

பெற்றோரின் முகபாவம் வருத்த, "பாவம்! அம்மா முகம் வாடிப் போயிற்று! கொஞ்சம் மெதுவாகவே கிளம்பினால், என்ன?" என்று வினவினாள் மனோகரி!

ஒரு பார்வை பார்த்துவிட்டு, "தாராளமாக! ஆனால், சுந்தரையும் சௌமியையும் அவர்களது திருமணத்தன்று இரவில் தனியே அனுப்பி வைத்தார்களே, அது பரவாயில்லையா?" என்று பிரியரஞ்சன் ஒரு மாதிரிக் குரலில் கேட்க, வாயைக் கப்பென்று மூடிக் கொண்டாள் அவள்!

அவன் யோசித்துத்தான் செய்திருக்கிறான்! அது புரியாமல், மட்டி மாதிரி வாயைக் கொடுத்தாளே!

ஆனால், உள்ளூர ஏதோ உறுத்தியது!

தங்கையின் மன அமைதிக்காகத்தான் இந்தத் திருமணம்! அதற்கு மேல், எந்த உறவுக்கும் தான் தயாராக இல்லை என்று வாய்விட்டுச் சொல்லாமலே அவளுக்கு உணர்த்துகிறானா?

போகட்டுமே!

அவனுக்கு மட்டும்தான், அப்படியா? அவளுக்கும், அந்த மாதிரி உறவை நினைக்கக்கூட முடியாதே! அதனால், இப்போது எவ்வளவோ நிம்மதிதான் என்று எண்ணிக்கொண்ட போதும், உறுத்தல் முழுமையாக மறைவேனா என்றது!



ஏதோ ஒரு விதத்தில், அவன் தன்னை உதாசீனப் படுத்தி விட்ட மாதிரியான ஓர் உணர்ச்சி, அவளை உள்ளூரக் குடைந்து கொண்டேதான் இருந்தது!

யோசித்தபடி மனோகரி நிற்கையில், சுந்தர் வந்து, பிரியரஞ்சனின் கையைப் பற்றிக் குலுக்கினான். "இந்த துணிச்சல் எனக்கு இல்லையே, ரஞ்சி! மணமாகி ஒரு வாரத்துக்கு மேலே ஆகிவிட்டது. இன்னும் சௌமியைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது! தனிமையோ...! நீங்கள் இருவரும் கிளம்பிய பிறகாவது, நாங்கள் தேனிலவுக்குப் போக முடியுமா என்று பார்க்க வேண்டும்!" என்று பெருமூச்சு விட்டான் அவன்!

"ஏய்ய், என் மேல் கண்ணைப் போடாதேப்பா! உன் தேனிலவு பற்றி, நான் வேண்டுமானால், அப்பாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறேன்!" என்று வாக்களித்தான் பிரியரஞ்சன்!

"ரொம்ப நன்றிப்பா!" என்று சுந்தர், மற்றவனின் கையைப் பற்றிக் குலுக்கிய தினுசில், மனோகரிக்கே, சிரிப்பு வந்தது!

பாவம்தான்! ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்துவிட்டு, மனைவியை விரும்பியபோது பார்க்கக்கூட முடிவது இல்லை என்றால், பரிதாபம்தான்!

ஆனால், என் மனைவி, இங்கே எங்கள் விருப்பத்துக்கு மேல் ஒன்றும் கிடையாது என்று பிரியரஞ்சனைப் போல உறுதியோடு நிற்க, இவனுக்குத் தெரியவில்லையே என்று சற்றுக் குறைவாகவும் அவளுக்குத் தோன்றியது!

கோவை ரயில் நிலையத்துக்குக் கார் வந்திருந்தது!

காரைப் பார்த்த மனோகரிக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது!

சௌமினி வீட்டார், நல்ல வளம் படைத்தவர்கள் என்று சொல்லக் கேட்டிருந்ததால், அவள் எதிர்பார்த்ததே வேறு! ஆனால்.. என்று, அவள் யோசிக்கும் போதே, "இங்கே, நம் வேலை நடக்கிற இடம் மலைப் பாங்கானது! அங்கே, இந்த மாதிரி ஜீப் மாதிரியான 'யூட்டிலிட்டி'கள்தான் உபயோகமாக இருக்கும்!" என்று விளக்கம் சொன்னான் பிரியரஞ்சன்.

அவளது மனதைப் படித்தவன் போல அவன் பேசிய விதத்தில் சற்றே அதிர்ந்து, இவன் முன்னிலையில், முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல், இனிக் கவனத்துடன் இருக்க வேண்டும் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள் அவள்.

நடு வயது தாண்டிய காரோட்டியின் ஆவலும், அதிசயமுமான பார்வையில் முறுவலித்து, "என்ன மாதேயன், என் மனைவிதான். மனோ, இவர் நம் காரோட்டிகளுள் ஒருவர். பெயர் மாதேயன். பழங்குடி மக்களைச் சேர்ந்தவர். மிகவும் நம்பிக்கையானவர்!" என்று இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தான், பிரியரஞ்சன்.

"சாரு திடீர்னு கண்ணாலம் கட்டிக்கிட்டார்னதுமே, அம்மா ரெம்ப அளகா இருப்பாங்கன்னு நெனைச்சமுங்க! அது சரியாப் போச்சுதுங்க!" என்று வெள்ளைச் சிரிப்புடன் மாதேயன் கூறிய விதம், மகிழ்ச்சியை



அளிக்க, மனோகரியும் சினேகமாகப் புன்னகைத்து, அவனிடம் நலம் விசாரித்தாள்.

"இன்றைக்குக் கம்பெனிக்குச் சாமான் வாங்க வரும் டிரக்கில், உங்களுக்கு ஏதேனும் வேண்டுமானால், வாங்கிக்கொண்டு, நீங்களும் சேர்ந்து விடுங்கள், மாதேயன். இந்த வண்டியை நான் எடுத்துப் போகிறேன்!" என்று நூறு ரூபாயை எடுத்துக் கொடுத்து விட்டுக் காரோட்டியிடம் இருந்த சாவியை வாங்கிக் கொண்டான் பிரியரஞ்சன்.

கார் செல்லச் செல்லச் சுற்றிலும் அடர்ந்து தென் பட்ட பசுமை பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது! தூரத்து மலைகளில் ஆங்காங்கே வெள்ளிக் கோடுகளாக நீர் வழிவதைப் பார்க்கப் பார்க்க, அவளுக்குத் தெவிட்டவில்லை!

அது பற்றி, அருகில் இருப்பவனோடு பகிர்ந்து கொள்ளத் திரும்பினால, உளி கொண்டு செதுக்கியது போன்ற அவனது பக்கவாட்டுத் தோற்றம், அவளைத் திகைக்க வைத்தது!

பத்து நாட்களுக்கு முன், இவன் யாரென்று கூடத் தெரியாது! எந்தத் தைரியத்தில், இந்த அன்னியனோடு, அவள் தனியாகச் சென்று கொண்டிருக்கிறாள்?

மனோகரியின் பார்வை உணர்ந்தவன் போல, "சுற்றுச் சூழல் பிடித்திருக்கிறதா? நாம் வசிக்க வேண்டிய இடம், இன்னும் உயரத்தில், சுத்தமான காற்றும், வண்ணப் பூச்சுகளுடன் காட்டுத் தாவரங்



களுமாக, இன்னும் அழகாக இருக்கும்" என்றான் பிரியரஞ்சன்.

அவளது மனநிலையை ஒட்டிப் பேசியதாலோ என்னவோ, சற்று முன் தோன்றிய கலக்கம் மறைந்து, அவளுக்கு ஆறுதலாக இருந்தது!

எப்படியும், அவளைப் போலவே, இயற்கை அழகை ரசிப்பவன்! பேசிப் பழகுவதற்குப் பொதுவான விஷயம் ஒன்றேனும் இருக்கிறதே!

ஜீப்பை ஓட்டியபடியே அவன் தொடர்ந்து பேசினான். "திடீரென்று திருமணம் நடந்து, மனைவியோடு வருவதாக, அலுவலகத்தில் தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கு எந்த ஆர்ப்பாட்டமும் வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறேன்..."

"ஆர்ப்பாட்டமா? ரொம்பக் கலாட்டா செய்வார்களா?" என்று கவலைப்பட்டாள் மனோகரி.

"இரண்டு வருஷம். மூன்று ஆண்டுகள் என்று, நகரத்தை விட்டு உறவினரை விட்டுத் தனியாக ஒதுங்கி வாழ்கிறார்கள் அல்லவா? சின்னக் காரணம் கிடைத்தாலும், பெரியதாகக் கொண்டாடுவார்கள்! இதுவோ, திருமணம் அதுவும், அவர்களுள் முக்கிய அதிகாரியான என்னது! எனவே, கட்டாயம் கொண்டாட்டம் இருக்கும்! ஆனால், நானே சொல்லியிருப்பதால், இன்று சும்மா இருப்பார்கள்! ஆனால், நாமும் மறுத்துக் கொண்டே, இருக்க முடியாது. அநேகமாக, வரும் ஞாயிறன்று வைக்கக் கேட்பார்கள் என்பது, என் யூகம்!



அதற்குள்ளாக, உனக்கு இங்கே பழகிவிடும் அல்லவா? அப்புறமாக, அவர்கள் என்ன கலாட்டா செய்தாலும் உன்னால், சமாளிக்க முடியும் என்று நினைத்தேன்!"

அவளுக்காகப் பார்த்திருக்கிறான்!

அவளது விருப்பு வெறுப்புகளை அவன் இன்று வரைக் கொஞ்சமும் மதித்ததில்லை., மதித்திருந்தால், இன்று அவள், இந்த இடத்தில் இருக்க மாட்டாளே! வம்புக்கார அத்தையை மிரட்டியதுகூட, அவனது திட்டப்படி அவளை நடக்க வைப்பதற்காகவேதான் என்று ஏற்கனவே கண்டு பிடித்திருந்தாள்!

ஆனாலும், இன்றையக் கனிவு நெஞ்சைத் தொட, "சமாளித்து விடுவேன்! நீங்கள்தான் கூடவே துணையிருப்பீர்களே!" என்றாள் மனோகரி!

"அந்த நம்பிக்கை உனக்கு இருக்கும் வரைக்கும், நம் வாழ்வில் எந்தவிதப் பிரச்சனையும் வராது!" என்று பிரியரஞ்சன் கூற, மீதிப் பயணம் நல்லபடியாக நிறைவேறிற்று.

வழியில் ஒரு 'பூத்'தில் போன் போட்டுக் கொடுத்தான்.

கணவன் மனம்போல் நடந்து கொள்ளும்படித் தயார் கொடுத்த புத்திமதியில், எப்போதடா ரிசீவரை வைப்போம் என்று ஆகிவிட்டது அவளுக்கு!

பிரியரஞ்சன் சொன்னது போலவே, ஒரு வேலையாளைத் தவிர, அவனது வீட்டில் வேறு யாரும் இருக்கவில்லை!

''வழக்கமாகப் போலா எனக்கு வேண்டியதைக் கவனித்துவிட்டுக் கூடவே 'சைட்'க்கு வந்து விடுவான். இன்று, உனக்கு உதவியாக இங்கேயே விட்டுப் போகிறேன். ஏதாவது செய்ய வேண்டும் என்றால், அவனிடம் சொல்லு! சாப்பாடு வரும். மற்றது, மாலையில் பேசிக் கொள்ளலாம்!'' என்று விட்டுப் பிரியரஞ்சன் வேலையைப் பார்க்கக் கிளம்பிவிட்டான்.

அப்படி ஒன்றும், கணவனிடம் ஒட்டுறவு ஏற்பட்டு விடவில்லை என்றாலும், எங்கோ திக்குத் தெரியாத காட்டில், தனித்து நின்று தவிப்பது போன்ற ஓர் உணர்வு அவன் சென்றதும், மனோகரிக்கு உண்டாயிற்று!

அப்படிப் பார்த்தால், இந்தக் கணவனும்தான், யார்? அறியாத அன்னியன்தானே? திசையறியாத காட்டின் ஒரு பகுதிதான் அல்லவா? எப்படிப்பட்டவனோ, என்னவோ?

அவள் கலங்கி நின்றபோது, ''நான் உள்ளே வரலாமோ?'' என்று கேட்டபடி, ஒரு பெண் வரவும், எல்லையற்ற ஆறுதலில், மனோகரியின் கண்கள் பனித்தன!



## 11

கூடவே உள்ளே வந்த போலா, அந்தப் பெண் யார் என்று கூறி அறிமுகப்படுத்தினான்.

''மூணு வீடு தள்ளி இருக்கிறாங்கோம்மா! இவங்க அண்ணாத்தை, நம்ம அய்யா கிட்டக்கத்தான் வேலை பண்ணறாங்கோ!'' என்றான் அவன்.



''நீ போய்க் குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வா, போலா!'' என்று, சொந்த இடம் போலப் போலாவை ஏவினாள் அந்தப் பெண்.

அவன் சென்றதும், ''பேசுகிற அழகைப் பாருங்களேன்! ஊர், உலகத்தை விட்டுத் தன்னந் தனியாக ஒரே இடத்தில் வேலை செய்கிற கும்பல்! இதில், கிட்டக்க இருந்து வேலை செய்யாமல், பத்துக் கிலோ மீட்டர் தூர நின்றா, பணிபுரிய முடியும்? நாள் கூலிக் காரனும், கிட்டக்கத்தான் நிற்பான். ஐந்து இலக்கத்தில் சம்பளம் வாங்குகிற அதிகாரியும் அங்கேதான். அதே இடத்தில்தான் நின்றாக வேண்டும்! இது புரியாமல் உளறுகிறான்!'' என்றாள் அவள்.

பிரியரஞ்சன் கீழ், இவளுடைய அண்ணன் பணி புரிவதாகப் பொருள் படும்படி, போலா கூறியது இவளுக்குப் பிடிக்கவில்லை என்று மனோகரிக்குப் புரிந்தது!

பிரியரஞ்சனும், முக்கிய அதிகாரி என்று தன்னைச் சொன்னானே தவிரத் தலைமை அதிகாரி என்பது போலக் கூறிக் கொள்ளவில்லை!

இருவருமே, கிட்டத்தட்டச் சமநிலை அதிகாரிகளாக இருக்கக் கூடும்! அல்லது, இவள் அண்ணன் பதவி உயர்வை நெருங்கிக் கொண்டிருக்க வேண்டும்!

லேசாக முறுவலித்து, ''நீங்கள் சொன்ன பொருளில் அவன் கூறியதாகத்தான் நினைத்தேன்!'' என்றாள் மனோகரி, இதமாக!



சற்றுத் திகைத்து நோக்கிவிட்டு, ''இங்கே இருப்பவர்கள் எல்லோருமே, ஒருவருக்கொருவர், உறவாக, ஒரே குடும்பம் போலப் பழக வேண்டும் என்பது, மேலிடத்து வழி காட்டல். அப்படியானால்தான், நான் பெரியவன், நீ எனக்குக் கீழ்ப்பட்டவன் என்று இல்லாமல், ஒற்றுமையாக வேலையைப் பார்ப்பார்கள் என்பது, அடிப்படைக் கருத்து! விட்டால், இந்த மாதிரி அடிநிலை ஆட்கள் எல்லாவற்றையும் கெடுத்து விடுவார்கள்!'' என்று மேலும் விளக்கினாள் வந்தவள்.

மாதேயனிடம், பிரியரஞ்சன் நூறு ரூபாய் கொடுத்தது, மனோகரிக்கு நினைவு வந்தது. அவனது தோற்றமும் பழகும் முறையும், கவடற்ற இந்த மக்களின் மரியாதையைப் பெற்று, அவனைத் தலைவனாக எண்ண வைத்திருக்கக் கூடும்! இதைப் பெரிதாக எண்ணுவானேன்?

அவள் யோசனையோடு பார்க்கையிலேயே, வந்தவளின் முகம் மாறியது!

இதழ்களில் புன்னகை மலர, ''பாருங்களேன், வந்த வேலையை மறந்து, இந்த முட்டாள்களைப் பற்றி பேசி, மூடைக் கெடுத்துக் கொண்டிருக்கிறேன்! புது இடமாயிற்றே, ஏதோ நம்மாலான உதவியை உங்களுக்குச் செய்யலாம் என்று வந்தேன்! பாலுக்கு, துணி துவைக்க, வீடு பெருக்கக் கொள்ள வேலைக்கு ஆள் இதெல்லாம் ஏதாவது பிரியன் ஏற்பாடு செய்திருக்கிறாரா? அல்லது, 'அம்போ' என்று விட்டுவிட்டு, வேலையைப் பார்க்கப் போய் விட்டாரா?'' என்று சிரிப்புடனே கேலிக் குரலில் விசாரித்தாள்.



''பத்து நாட்களாக, இங்கே வேலையைப் பாராததால் என்னவோ என்று, அவருக்கு ஒரே கவலை! அப்போதும் எனக்கு உணவுக்கு ஏற்பாடு செய்துவிட்டுதான் போயிருக்கிறார்! மற்றது வந்து பார்ப்பார்!'' என்று அவனை விட்டுக் கொடாமல் பதிலிறுத்தாள் மனோகரி.

'அடேயப்பா!' என்று விழி விரித்து வியந்தாள் விருந்தாளி! ''சிறு வார்த்தைக்குக் கூடப் பிரியனுக்காக வரிந்து கட்டுகிறீர்களே! அவ்வளவு ஆசையாக்கும்! இவ்வளவு அழகு வேறு! பிரியன் ரொம்பக் கொடுத்து வைத்தவர் என்று தெரிகிறது!'' என்று அவள் சிரிக்கவும், தன்னையறியாமல் மனோகரியின் முகம் சிவந்தது!

மெய்யாகவே அவள் பிரியரஞ்சனைத் தாங்கிப் பேசியிருக்கிறாள் என்பது, அவளுக்கே ஆச்சரியமாகத் தான் இருந்தது!

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்க, மற்றவள் கலகலவென்று சிரித்துவிட்டு, ''சரிம்மா! உங்கள் அருமைக் கணவரைப் பற்றி, இனி ஒரு வார்த்தை பேசுவதில்லை. ஆனால், அவர் வந்து பாலுக்கு ஏற்பாடு செய்வதானால், நாளைக்கு காலைக் காபி கலந்தாகி விடும்! அதனால், மதியம் வருகிற போது இங்கேயும் வந்துவிட்டுப் போகும்படி, எங்கள் பால்காரனிடம் சொல்லி அனுப்புகிறேன். முடிந்தால், மாலைக் காபிக்குக் கொஞ்சமேனும் தரும்படி அப்புறம், வீட்டு வேலைக்கு, என் வேலைக்காரியையே

வரச் சொல்லுட்டுமா? திருட்டு, புரட்டு இல்லாதவள்...'' என்று, ஒவ்வொன்றாகச் சொல்லவும், மனோகரி, மனம் மகிழ்ந்து போனாள்.

இவள் எவ்வளவு நல்லவளாக இருக்கிறாள்! அவ ளாகக் கேட்கக்கூட இல்லை! ஆனாலும், தானாக வலிய வந்து உதவுகிறாளே!

அதுவும், ஒரு புதிய குடித்தனத்துக்கு, மிகவும் தேவைப்படும் உதவிகள் என்று யோசித்து வந்து செய்து கொடுக்கிறாள்!

ஏதோ குளிர் பானத்தைக் கண்ணாடித் தம்ளர்களில் ஊற்றிக்கொண்டு வந்து, அவர்கள் முன்னே வைத்து விட்டு, வாசலுக்குப் போனான் போலா!

''எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று உபசரித்து விட்டு, ''வந்து... உங்களுக்கு ரொம்ப நன்றி மிஸ்...'' என்று இழுத்தாள் மனோகரி.

''சரளா. ஆனால், இந்த 'மிஸ்' எல்லாம் வேண்டாம்! நாம் சினேகிதிகளாக இருக்க முடியாதா, மனோகரி? எனக்கென்னவோ, உங்களைப் பார்த்தால், கூடப் பிறந்தவள் போல, ரொம்பவும் பிடித்துப் போயிற்று!'' என்றாள் விருந்தாளி!

கூடப் பிறந்தவர்கள் என்று யாரும் இல்லாத மனோகரிக்கு, அவள் சொன்னது பிடித்தது!

''நிச்சயமாக, சரளா! இந்தப் புது இடத்தில், எனக்கு உதவத் தோன்றி வந்திருக்கிறீர்களே! அந்த நல்ல குணத்துக்காகவே, எனக்கும் உங்களைப் பிடித்துதான் இருக்கிறது!''



சரளாவின் முகத்தில் பரவிய மகிழ்ச்சிப் புன்னகை, விரைவிலேயே மறைந்து, யோசனை பரவியது.

''என்ன சரளா?''

''இல்லை... நாம் தொடர்ந்து இப்படிச் சினேகிதி களாகப் பழகுவது முடியுமோ... நான் இங்கே வந்ததே தப்போ என்று எனக்கு சந்தேகம்!''

''அர்த்தமில்லாத சந்தேகம்!'' என்றாள் மனோகரி பளிச்சென்று!'' எனக்கு மிகமிக அவசியமான எத்தனை உதவிகள் செய்கிறீர்கள்! அதுவும், நான் கேளாமலே, நீங்களாகவே வந்து செய்வது என்றால், அந்த நன் றிக்காகவே, உங்களிடம் நான் நட்போடிருக்க வேண் டாமா?'' என்று குரலில் உறுதியோடு கூறினாள், அவள்.

''பெரிதாக நன்றி என்பதெல்லாம் வேண்டாம், மனோகரி. ஆனால், விதிதான் உன்னை இங்கே கூட்டி வந்து, நம் இருவரையும் இணைத்து வைத்திருக்கிறது என்பது என் கருத்து! இல்லாவிட்டால், தனியாகப் புது இடத்தில் என்ன கஷ்டப்படுகிறாயோ என்று, எனக்கு ஏன் தோன்ற வேண்டும்? ஆனால், என்னைப் போல மற்றவர்களுக்குத் தோன்ற வேண்டுமே!'' என்று கவலைப்பட்டாள் சரளா.

''அந்த மற்றவர்களா, இந்தப் புது இடத்தில் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஓடி வந்தார்கள்? அத்தோடு சினேகிதியாய் உங்களை ஏற்பதும் ஏற் காததும், என் சொந்த விஷயம்! மற்றவர்கள் ஏதேனும் நினைப்பதற்கு, இதில் என்ன இருக்கிறது?'' என்றாள் மனோகரி!



சிறு தயக்கத்தின் பின், ''நா...ன் வெளி ஆட்களைப் பற்றிக் கவலைப்படவில்லை, மனோகரி! பி... பிரியனுக்கே பிடிக்காதோ என்றுதான்... என்று இழுத் தாள் சரளா.

''ஏனோ? முன்னேப் பின்னே அறியாத பிரதேசத்தில், எனக்கு உதவிக்கு வந்திருக்கிறீர்கள், உங்களை, அவருக்கு எப்படிப் பிடிக்காமல் போகும்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள் மனோகரி.

ஒரு கணம் அமைதியாக இருந்து விட்டு, ''இப்படிக் கேட்டால், நான் என்ன சொல்லட்டும்? நா..ன்.. எனக்கு மறைத்துப் பேசத் தெரியாது! எதையும் போட்டு உடைத்து விடுவேன்! அதனாலேயே, நிறையப் பேருக்கு என்னைப் பிடிக்காது! இங்குள்ள டாக்டர், சிவில் இஞ்சினீயர், அவர் மனைவி... இப்படி! பிரியனுக்கும் அதனால்... அப்படி ஏதாவது... இருக்கக் கூடும்...'' என்று தடுமாறினாள் சரளா.

புரியாமல் பார்த்தாள் மனோகரி.

இவள் என்ன சொல்ல வருகிறாள்? பிரியரஞ்சனின் வாழ்வில், மனோகரியிடம் மறைக்கப்பட வேண்டிய ரகசியம் இருக்கிறது என்கிறாளா?

அப்படி ஒன்றும்.. என்று மறுப்பதற்கு வாயெடுக்கும் போதே, அவளுக்குப் பேச்சு வர மறுத்தது!

உண்மையாகவே, பிரியரஞ்சனைப் பற்றி, அவ ளுக்கு என்ன தெரியும்?



அவளுடைய அத்தை மகளுடைய மனைவிக்கு அண்ணன் படித்தவன், பெரிய குடும்பத்தைச் சேர்ந் தவன் என்பது தவிர, அவனது சொந்த வாழ்வு, குணம் பற்றி, அவளுக்கு என்ன தெரியும்?

பிரியமாக உதவ வந்த இவள், பிரச்சினையைக் கிளப்பி விடக் கூடுமா?

ஆனால், அதில் இவளுக்கு என்ன லாபம்?

எப்படியும், கணவன் என்று ஆகி விட்டவனை விட் டுக் கொடுக்க மனமற்று, ''ரஞ்சன் அப்படி யாரையும் வெறுக்கிறவர் அல்ல!'' என்று பொதுவாகக் கூறியவள், மற்றவள் மீண்டும் கணவனைப் பற்றி ஏதேனும் சொல்லி விடுவாளோ என்ற அச்சத்தில், ''நீங்கள் இங்கே வந்து எவ்வளவு காலம் ஆயிற்று? உங்கள் வீட்டில் வேறு யார், யார் இருக்கிறார்கள்?'' என்று பேச்சை வேறு திசைக்குத் திருப்பினாள்.

மனோகரியின் விருப்பத்தைப் புரிந்து கொண்டவள் போல, சரளாவும், தன் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைச் சொல்லலானாள்!

அங்கே வேலை நடத்தும் நிறுவனத்தின் முக்கியப் பங்குதாரருடைய நெருங்கிய உறவினள் அவள் என்று அறிந்தபோது, போவா அறிமுகம் செய்த விதம் அவ ளுக்குப் பிடிக்காமல் போனது ஏன் என்று, மனோ கரிக்குப் புரிந்தது!

உரிமையாளருடைய உறவினர் எனும்போது, தனக்கு அதிக உரிமை உண்டு என்பது போன்ற பிரமை தோன்றுவது, இயல்புதானே?

அவள் சென்றபின், வீட்டை ஒழுங்கு படுத்துவது போன்ற சில வேலைகளைச் செய்ய, மனோகரி முயன்றாள்.

இரண்டு பெரிய முற்றங்களும், சுற்றுக் கட்டுத் தாழ்வாரங்களும், நிறைய அறைகளும், சுற்றிலும் பெரிய தோட்டமுமாகக் கிராமத்து வீட்டுக்குப் பழகியிருந்த மனோகரிக்கு, இரண்டே அறைகளும், சமையல் பகுதியுமாக அந்த வீடே, கை கால்களை இயல்பாக நீட்டி மடக்க முடியாமல் இடிப்பது போல இருந்தது!

ஆனால் இவையெல்லாம், இரண்டு மூன்று ஆண்டுகள் மட்டுமே பயன்படுத்திவிட்டு, அங்கே வேலை முடிந்ததும், விட்டு விட்டுப் போகிறவை. அதனால் வீடுகள் எல்லாமே சின்னதாகத்தான் இருக்கும் என்று, வரும் வழியிலேயே பிரியரஞ்சன் அவளிடம் சொல்லியிருந்தான்.

இவர்கள் செய்ய வந்த வேலையை முடித்த பிறகு, அடுத்துப் பராமரிப்புக்கு வருகிறவர்கள் அந்த வீடுகளைப் பயன்படுத்தவும் செய்யலாம். அந்தப் பகுதியில் உள்ளவர்களையே பராமரிப்பு வேலைக்கு நியமித்தால், இந்த வீடுகள் வீணாகியும் போகலாம்! மற்றபடி, வாடகை மதிப்பு எதுவும் இராது என்பதால், இந்த வீடுகளை முடிந்த அளவு சின்னதாகவும், செலவுக் குறைவாகவும்தான் கட்டுவது என்று, வீடுகளைச் சிறியதாகக் கட்டுவதன் காரணத்தையும், அவளுக்குத் தெளிவாக, விளக்கிக் கூறினான்.



ரயில் நிலையத்திற்கு வந்திருந்த காரை, அவள் பார்த்த பார்வைக்குப் பிறகு, முதலிலேயே சொல்லித் தயார்ப்படுத்தி விடுவது மேல் என்று எண்ணி, விவரம் தெரிவித்தான் போலும்!

ஆனால், தனியாக வாழ்ந்த பிரியரஞ்சன், அந்தச் சின்னஞ்சிறு வீட்டையும், ஓர் அலுவலகமாகவே பயன்படுத்தி வந்திருப்பான் போல. ஃபைல்கள், கணக்குப் புத்தகங்கள் போன்றவைகளே நிறைந்து இருக்க, அவற்றைத் தொடவும் அவளுக்குத் தயக்கமாக இருந்தது!

இவள் சீராக வைப்பதாக எண்ணித் தன் போக்கில் அடுக்கி வைக்க, அவன் வைத்த இடத்தில் தேடத் தொடங்கி, அதைக் காணாமல் கத்தினால், எவ்வளவு கஷ்டமாக இருக்கும்?

வந்த அன்றே, அது போன்ற பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ள விருப்பம் இல்லாமல், மனோகரி அந்த முயற்சியைக் கைவிட்டாள்.

சமையல் பகுதியில், காஸ் சிலிண்டரும் அடுப்பும் இருந்த போதும், சமையல் என்று நடந்த மாதிரி இல்லாததால், அங்கேயும் ஒன்றும் சொல்வதற்கில்லாது போயிற்று!

வீட்டை விட்டு வெளியே போகவும் யோசனையாக இருந்தது! ஏதேனும் பூச்சி, பொட்டுகள் நடமாடக் கூடிய இடமோ, என்னவோ?

எனவே, அந்த அறைகளுக்குள்ளேயே, குட்டி போட்ட பூனையைப் போலச் சுற்றிச் சுற்றி வருவதும்,



சும்மா உட்கார்ந்திருப்பதும், கொட்டாவி விடுவதுமாகப் பொழுதைக் கழித்தாள் அவள்!

மாலையில் பிரியரஞ்சன் திரும்பி வருவதற்கும், மிகவும் தாமதம் ஆயிற்று.

இருள் பரவும் வேளையில்தான் வந்தான் என்றாலும், தாமதம் பற்றிய சேதியை, முன்னதாகவே ஆளிடம் சொல்லி அனுப்பியிருந்தான்.

சில உணவு வகைகளும் அந்த ஆள் மூலமே வந்து சேர்ந்தன.

அதில் எளிமையான மதிய உணவோடு, ஒரு பால் பவுடர் டின், காபித்தூள், பிஸ்கட் போன்றவையும் இருக்கவே, கணவன் தன்னை அப்படி ஒன்றும், அடியோடு மறந்துவிடவில்லை என்று, அவளுக்கு ஆறுதலாக இருந்தது!

ஆனால், வந்து சேர்ந்ததில் இருந்து, அனுபவித்த தனிமைதான், அவளுக்கு அச்சமூட்டிக் கலங்க வைத்திருந்தது!

இன்றைக்கு, சரளா வந்திருந்தாள். பாதி நேரம் நல்லபடியாகவே கழிந்தது! ஆனால், தினமும் அவளை எதிர்பார்க்க முடியுமா? எனக்கு நல்லபடியாகப் பொழுது போவதற்காக, நீ உன் வீட்டைப் போட்டு விட்டு வா என்று, அவளைக் கூப்பிட்டால்தான் நன்றாயிருக்குமா?

எனவே, இந்தத் தனிமைதான் அவளது தலைவிதி!



இதுதான் தலைவிதி என்று இல்லை என்றால், புத்தி கெட்டுப் போய்த் தற்கொலை செய்ய எண்ணுவாளா?

அதில் தொடங்கியது தானே?

இதிலிருந்து, ஊர், பெற்றோர், சுந்தரும் சௌமினியும் என்று 'மனம் ஒரு குரங்கு' என்பதற்கு இணங்க, அவளது எண்ணங்கள் எங்கெங்கோ தாவலாயின!

சே! ஊர்க்காரர்கள், அப்படி எத்தனை நாட்கள் அவளைப் பற்றியே பேசிக் கொண்டிருக்க முடியும்? அவரவருக்கு அவரவர் வேலை இல்லையா? நாலு நாட்கள், பல்லைக் கடித்துச் சகித்திருந்தால், எல்லோரும் அவளை மறந்தே போயிருப்பார்கள்!

என்னமோ சொல்லுவார்களே, 'மூட்டைப் பூச்சிக்குப் பயந்து, வீட்டைக் கொளுத்திய கதை' என்று! அதைப் போல, ஊராரின் நாள் பேச்சுக்குப் பயந்து, வாழ்க்கை முழுவதற்கும் இப்படி ஒரு காட்டில் வந்து, தனியாக மாட்டிக் கொண்டாளே!

இங்கே, பிரியரஞ்சன் அவளைக் கொன்றே போட்டால் கூட, கேட்பதற்கு நாதியில்லை!

அவளிடம் அன்பே இல்லாமல், அவனுடைய தங்கைக்காக மட்டுமே, அவளை மணந்தவன் தானே, செய்தாலும் செய்வான்!

அன்பு கொஞ்சமேனும் இருந்தால், எக்கேடும் கெடட்டும் என்று, புது இடத்தில் இப்படி விட்டு விட்டுப் போவானா?

பைத்தியக்காரத்தனமாகக் கண்டபடி யோசிக்கிறோம் என்று அறிவு பூர்வமாகத் தெரிந்தாலும்கூட,

மனதைக் கட்டுப்படுத்த முடியாமல், அதன் வழியே செல்லவிட்டுக் கலங்கிச் சற்று நேரம் கண்ணீரும் விட்டாள் அவள்.

மாலையில் பிரியரஞ்சன் திரும்பி வந்தபோது வீட்டினுள் வரும்போதே, ''சாரிம்மா!'' என்று வருத்தம் தெரிவித்தபடிதான் வந்தான்.

''நான் கிளம்பி வந்ததிலிருந்து, இந்தப் பத்து நாட்களில் நடக்க வேண்டியதில் பாதி வேலைதான் நடந்திருக்கிறது! என்னவோ, தினக் கூலிக்காரர்களில் இரு குழுக்களுக்கிடையே தகராறாம்! ஒருத்தருக்குத் தெரியாமல், அடுத்தவரைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதை விடுத்துச் சண்டை வெட்டுக் குத்தில் முடிந்து விடுமோ என்று பயந்து, 'சைட்'டையே மூடிப் போட்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் கஷ்டம்! எல்லாரையும் சமாதானப்படுத்தி, வீணான நேரத்தை ஈடு பண்ண அதிகப்படி வேலை செய்ய வைத்து... அது தான் இவ்வளவு நேரம் ஆகி விட்டது! உனக்கு ரொம்பவும் போரடித்ததாம்மா?'' என்று அவன் அக்கறையோடு கேட்க, அவளுக்கு மனம் இளகியது!

''கொஞ்சம்!'' என்று மெல்ல முணுமுணுத்து விட்டு, ''உங்களுக்குக் காபி போடவா?'' என்று கடமை மனைவியாக விசாரித்தாள்!

முறுவலித்து மறுத்துவிட்டு, ''மெஸ்சிலிருந்து சாப்பாடு கொண்டு வந்தேன். அதை எடுத்துப் பிரித்து வைக்கிறாயா? அதற்குள், நான் குளித்து விட்டு வந்து விடுகிறேன். இரண்டு பேரும் சேர்ந்தே சாப்பிடுவோம்!'' என்று குளிக்கப் போனான் அவன்.



உணவருந்தும்போது, வேலைத் தொடர்பான சில சுவாரசியமான தகவல்களை அவன் சொல்ல, அவளுக்குச் சிரிக்க முடிந்தது.

பேசிக் கொண்டிருக்கும்போதே, திடுமென நினைவு வர, ''இன்று முற்பகலில், மூன்று வீடு தள்ளி இருக்கிறாளே, அந்த சரளா இங்கே வந்தாள்!'' என்று, கணவனிடம் கூறினாள் மனோகரி.

எடுத்த கவளத்தோடு கை அப்படியே நிற்க, மனோகரியைக் கூர்ந்து பார்த்தான் அவளுடைய கணவன்.



## 12

சும்மா என்றால், பிரியரஞ்சனின் திகைப்பு, பார்வை எதையும், மனோகரி பெரிதாக எண்ணியிருக்க மாட்டாள். ஆனால், 'பிரியனுக்குப் பிடிக்காதோ' என்று சரளா ஏற்கனவே கவலைப்பட்ட நினைவு இருக்கவே, அவனது பார்வையில் வேறுபாட்டை உணர்ந்து, தோழியாக ஏற்றுக் கொண்டவளுக்காகச் சட்டென சண்டைக் கோழியாகச் சிலிர்த்தாள்.

''ஏன்? அவள் இந்த வீட்டுக்கு வரக்கூடாது என்று, ஏதேனும் விதிமுறை இருக்கிறதா?'' என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினாள்.

அந்த மாதிரி விதிமுறை ஏதும் இருந்தால், அதைத் தூக்கி அடுப்பில் போட்டு விடுவேன் என்று சவால் விடுகிற குரல்!



சட்டென முறுவலித்து, ''அப்படிக்கூட, விதிமுறைகள் ஏதும் இருக்குமா, என்ன?'' வியந்தான் அவன்.

ஒரு கணம் திகைத்த போதும், ''பின்னே, அப்படிப் பார்த்தீர்களே?'' என்று கேட்டாள் மனோகரி.

''நேற்றுதான் திருமணம் செய்த கணவன்! மனைவியைப் பார்க்கக் கூடக் கூடாது என்று விதிமுறை ஏதும் இருக்கிறது என்று எனக்குத் தெரியாதே! உண்டா, மனோ?''

தன் வார்த்தைகளையே பிரியரஞ்சன் திருப்பிப் படித்த விதம், மனோகரிக்குச் சிரிப்பு மூட்டிற்று!

ஆனால் உடனேயே, எல்லாக் கணவன்மாரையும் போல, அவன் ஒன்றும் அவளை ஆசையில் மணந்தவன் அல்ல உண்மை மனதை வாட்டிக்கொண்டு நினைவு வர, ''இதில் நீங்கள் விதிவிலக்கு என்று எனக்கு, உங்களுக்குமே தெரியும்! அந்தப் பார்வையும் அப்படிப்பட்டது அல்ல! சொல்லுங்கள், ஏன் அப்படிப் பார்த்தீர்கள்?'' என்று விடாமல் கேட்டாள் அவள்.

சும்மா இலகுப் பேச்சில் சமாளிக்க முடியாது என்று, அவனுக்கும் தோன்றி விட்டது போலும்!

எனவே கேலிச் சிரிப்பைக் கைவிட்டு, ''நிறுவனத்திலிருந்து வந்து, இங்கேயே வசிப்பவர்கள் அதிகம் இல்லை. இருபதே பேர். அதிலும், தனி ஆட்கள் போகக் குடும்பத்தோடு வந்திருப்பவர்கள் பத்துப் பேர்தான். வேலை செய்கிறவர்கள் வெளியே போய் விட்டால், வீட்டினர், பொழுதுபோக்கு, கடை கண்ணி என்று எங்கும் சுற்ற முடியாமல், ஒருவர் முகத்தை



ஒருவர் பார்த்துத்தான் வாழ்ந்தாக வேண்டும். எல்லோரும் ஒரே குடும்பம் போலப் போட்டி பொறாமை, சண்டை சச்சரவு இல்லாமல் பழகினால் மட்டுமே, அங்கே நாங்கள் நிம்மதியாக வேலையைப் பார்க்க முடியும்! இங்கே நான் கொஞ்சம் முக்கியமானவன். என் மனைவியான நீயும், பாரபட்சம் இல்லாமல், யாரிடமும் தனிப் பிரியம் காட்டாமல், எல்லோரிடமும் ஒரே மாதிரிப் பழகுவதுதான் நல்லது!'' என்று பிரியரஞ்சன் சொல்லிவந்தபோது, மனோகரி குறுக்கிட்டு, ''அதற்காக, வீட்டுக்கு ஒருவர் வந்தால், அவர்களிடம் பேசாதிருக்க முடியுமா?'' என்று சிறு வேகத்துடன் வினவினாள்.

அவளது குறுக்கீட்டை ஒதுக்கிவிட்டு, ''நம் நிறுவனத்தவர்கள் எல்லோரையும், ஒரே இடத்தில், ஒரே சமயத்தில் நீ சந்தித்தால், சரியான அபிப்பிராயம் கொள்ளச் சரியாக இருக்கும் என்று எண்ணினேன்! அதற்காகவே, விருந்தன்றே, எல்லோரையும் மொத்தமாகச் சந்தித்துக் கொள்ளலாம். நாங்களும் வீட்டில் சாமான்களை, அடுக்கி முடித்து விடுகிறோம். அதற்கு முன் யாரும் வந்து, பார்க்கப் பழகத் தேவையில்லை. அனாவசியமாக வீட்டுக்கு வர வேண்டாம் என்று, நேற்றே நான் கிளம்பு முன்னரே செய்தி அனுப்பியிருந்தேன்...'' என்று அவன் கூறியபோது, மனோகரி மறுபடியும் இடையிட்டாள்.

''அதற்காக? ஒரு காபிக்குக் கூட வழியில்லாமல், நான் பட்டினி கிடக்க வேண்டுமா என்று, ஒரு மனிதாபிமானத்தோடு நினைத்துக்கூட சரளா வந்திருக்கலாம்

அல்லவா? அதைத் தப்புச் சொல்ல முடியாதே!" என்று தோழியாக ஏற்றுக் கொண்டவளுக்கு ஆதரவாக வாதாடினாள்.

"இருக்கலாம்! அல்லது, கட்டின மனைவியை நான் பட்டினி போட்டுவிட மாட்டேன் என்று நம்பி, என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து வராமலும் இருந்திருக்கலாமே! நீ பட்டினி கிடக்க நேர்ந்ததா, சொல்லு!"

இல்லைதான்! அவன் எல்லாமே அனுப்பி வைத்திருந்தான்!

உண்மையை ஒத்துக்கொண்டு அசடு வழிய மனமின்றி, "அது.. அவள் வந்தது, தேவை இல்லைதான்! ஆனால், சும்மா ஒரு பேச்சுத் துணைக்காகக்கூட சரளா வந்திருக்கலாமே! எப்படியும், அவளது நோக்கம் தவறு என்று சொல்ல முடியாதுதானே?" என்றாள் மனோகரி விடாமல்!

"அவளது நோக்கத்தைப் பற்றி, எனக்கு அக்கறை இல்லை! ஆனால், அதற்காக நீ அவள் பக்கம் சார்ந்து பேசுவதுதான் தவறு! ஒருவர், உதவி செய்வதாக வருவதால் மட்டுமே, அவர்கள் உத்தமராகி விட மாட்டார்கள்! ஓர் அபிப்பிராயத்தை உருவாக்குமுன், ஒரு முறைக்கு நாலு தடவை யோசித்து முடிவு செய்ய வேண்டும். அதனால், மற்றவர்களைச் சந்திக்கும் வரை, சரளாவைச் சற்றுத் தூரவே நிறுத்தி வை! முக்கியமாக, அவளை ரொம்பவும் நம்பிவிட வேண்டாம்!" என்று முடித்தான் பிரியரஞ்சன்.

நம்பி?



மனதில் இருப்பதைக் கொட்டிவிடுவாள் என்று எண்ணுகிறானா?

ஓகோ! அவர்களது வாழ்க்கை ரகசியம் வெளியாகி விடுமோ என்று அஞ்சுகிறான்!

ஆனால், அதையெல்லாம் அடுத்தவரிடம் மனோகரி சொல்வாளோ, என்ன? அவளுக்கும் தன்மானம் என்று ஒன்று இருக்கிறதுதானே?

அவனுடைய தங்கையின் மகிழ்ச்சிக்காக மட்டுமாகப் பிரியரஞ்சன் அவளை மணந்து, இங்கே அழைத்து வந்திருக்கிறான் என்பது, அவளுக்கு ஒன்றும் பெருமை சேர்ப்பது இல்லையே!

பகலில் அழுதுகொண்டே சற்று நேரம் கண்ணயர்ந்து விட்டதாலோ என்னவோ, மனோகரிக்கு இரவில் சரியாகத் தூக்கம் வர மறுத்தது!

ஆனால், நாள் முழுவதும் உழைத்ததன் பலனாகப் பிரியரஞ்சன் அயர்ந்து உறங்கி விட்டான் என்பது, அவனது சீரான மூச்சுச் சத்தத்தில் தெரிந்தது!

அதே அறையின் ஒரு புறத்தில், அவன் உறங்குவதும், அவளது தூக்கமின்மைக்குக் காரணமாக இருக்கலாம்!

"இது சின்ன சமூகம், மனோ. கணவன் மனைவி என்று சொல்லிக்கொண்டு, நாம் இருவரும் வெவ்வேறு அறைகளில் இரவைக் கழிக்க முடியாது! ஏதோ ஒரு வகையில், அது வெளியே பரவி விட்டால் நன்றாயிராது! அப்படி ஒன்றும், இருளில் உன் மீது பாய்ந்து



விடுவேனோ என்று பயப்பட மாட்டாய் என்று நம்புகிறேன். அப்படிப் பாய்கிறவனுக்கு, இந்த அறை, அடுத்த அறை எல்லாம் ஒன்றுதானே?" என்று பிரியரஞ்சன் கூறியபோது, வெறும் தலையசைப்பு தவிர, அவள் மறுத்துப் பேசவில்லை!

எதற்குப் பயப்பட வேண்டும்?

ரஞ்சன் ஒன்றும், அவள் மேல் ஆசையில், அவளை வற்புறுத்தி மணக்கவில்லையே! அவனுடைய தங்கைக்காக, அவன் செய்த தியாகம்! அதற்கு மேல், அவனுக்குத் தேவை எதுவும் கிடையாது என்று, அவளுக்குத் தெரியும்! நன்றாகவே!

இதில் 'புல்லுக்கும் ஆங்கே பொசியும் நீராக' சில சங்கடமான சூழ்நிலைகள், அவளுக்கும் தவிர்க்கப் பட்டிருக்கின்றன!

பெண்கள் இருவருக்கும் நல்லதாகத்தான் தோன்றுகிறது என்று எண்ணும்போதே, அன்று வந்ததும், பிரியரஞ்சன் இதற்கு ஒத்து வருவதுபோல ஏதோ சொன்னானே என்று அவளது நினைவு ஓடிற்று!

'ஒருத்தருக்குத் தெரியாமல், அடுத்தவரைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கியிருக்க வேண்டும்' என்றான்...

அதாவது இரு சாராருக்கும் நல்லது செய்வதோடு, அவனுக்கு வேண்டியதையும் நடத்திக் கொள்கிற கெட்டிக்காரத்தனம் அவனுக்கு இருக்கிறது! அதை, வெற்றிகரமாகப் பயன்படுத்தி ஜெயித்துக் கொண்டிருக்கிறவனும் கூட!



அப்படிப் பார்த்தால், சௌமினிக்கு அதிகமாகவும் தனக்கு ஓரளவும் நன்மை செய்ததில், பிரியரஞ்சனுக்கு என்ன லாபம்?

என்ன யோசித்தும், அவனுக்கென்று ஒரு சிறு நல்லதைக்கூட, மனோகரியால் கண்டு பிடிக்க முடியவில்லை!

தங்கையின் மகிழ்ச்சி இன்று பெரிதாகத் தோன்றலாம்! ஆனால், அவனுக்குக் கிடைத்தது, அவனை நேசிக்காத, நேசிக்க முடியாத மனைவியோடு வாழும் வறட்டு வாழ்க்கைதானே, ஆயுள் முழுமைக்கும்?

அவனாக இழுத்துக் கொண்டதுதான் என்றாலும், பாவம்தான் என்று பரிதாபப்பட்டபடியே உறங்கிப் போனாள் அவள்.

மறுநாள் காலையில், சற்றுத் தாமதமாக மனோகரி விழித்தெழுந்தபோது, அங்கங்கே வைக்கப்பட்டிருந்த ஃபைல்கள் எல்லாம் அடுக்கப்பட்டுக் கட்டியும் வைக்கப் பட்டிருந்தன!

பிரியரஞ்சன் காலையிலேயே விழித்து வேலை செய்திருக்கிறான்.

அப்போதும், ஒரு ஃபைல் கட்டைத் தூக்கி மற்ற ஃபைல் கட்டுகளின் மேல் வைத்துக் கொண்டிருந்தவன், அவளைக் கண்டதும் புன்னகை செய்தான். "காபி ரெடி' பால் காய்ந்து, டிக்காஷனும் போட்டு வைத்து விட்டேன்! அம்மையார் பல் சுத்தம் பண்ணி விட்டு வந்தால், இருவருமாகக் காபி குடிக்கலாம்!" என்று அழைத்தான்.

அவளது வீட்டில், அடுப்பு தொடர்பான எல்லாமே, அன்னையின் பொறுப்புதான்! ஆண்கள் அடுப்படியில் நிற்பதை, அங்கே நினைத்துப் பார்க்கவும் முடியாது! இவனானால், முக்கால் காபியைத் தயார் பண்ணியாயிற்று!

உள்ளூரக் கூசி, ஓடிப்போய் அவசரமாகப் பல்லை விலக்கி விட்டு, சமையலறைக்குச் சென்று, அவளே இருவருக்கும் காபியைக் கலந்து எடுத்து வந்தாள்.

காபியின் சுவையைப் பாராட்டிவிட்டு, அவளுக்குச் சமையல் தெரியுமா என்று விசாரித்தான் அவன்!

'என்னதான் படித்தாலும், ஓர் ஆண் பிள்ளையின் இதயத்தை, அவனது நாக்கு வழியேதான் அடைய வேண்டும் என்பார்கள்! சுந்தர் தம்பிக்கும் பிடித்தாற் போல, நல்லதாக நாலு தினுசு படித்துக்கொள்' என்று தாயார் கற்றுத் தந்தது நினைவு வர, மனோகரியின் மனம் வாடியது!

வேண்டாத நினைவு என்று ஒதுக்க முயன்றவளாய், "சாதாரணச் சமையல் தெரியும். ஒன்றிரண்டு சிறப்புப் பதார்த்தங்களும் செய்வேன்" என்று அவனுக்குப் பதில் சொன்னாள்.

"எனக்கும் நிறையத் தெரியும்பா! ரொட்டித் துண்டுகளுக்கு இடையே காய்கறி வைத்து 'சான்ட்விச்' செய்வேன். குக்கரில் சரியான அளவு தண்ணீர் வைத்து சோறு செய்து, திடீர்ப் புளியோதரை ஜூஸ் கலந்து புளியோதரை அப்புறம் சிப்ஸ் பாக்கெட்டை உடைத்து சிப்ஸ்.. முக்கியமானதை மறந்து விட்டேனே, நூடுல்ஸ்!



பாக்கெட் வாங்கி, அதை அப்படியே கொதிக்க வைத்து, அதையும் பிரமாதமாகச் செய்வேன்!" என்று அவன் பெருமையாக உரைக்கவும், மனோகரி கலீர் என்று நகைத்தாள்.

"ஆக, இதெல்லாம்தான், உங்களுக்குத் தெரிந்த 'நிறைய'ச் சமையலா?"

"இல்லையா, பின்னே? சில சமயம், நம் இஞ்சினீயர்கள், பர்சனல் மேனேஜர் எல்லோருடனும், அல்லது அவர்களில் ஒவ்வொருவரோடு தனித்தனியே நான் பேச வேண்டியிருக்கும்! நிலைமைக்குத் தக்கபடி சேர்ந்தோ, தனித்தோ இங்கே வருவார்கள்! எல்லோருக்கும், ஐயாவின் நளபாகம்தான்! உனக்கு எதுவும் தெரிய வேண்டுமானால், என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள், பெண்டாட்டி!" என்று, அவன் மீண்டும் பீற்றவும், "ஐயோ பாவம், உங்கள் விருந்தை விழுங்க நேர்ந்தவர்கள்!" என்று மனோகரி பரிதாபப் பட, இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது!

பின்னர் இருவருமாகச் சமையல் அறையில் என்னென்ன தேவை என்று பட்டியல் இட்டார்கள்!

பிரியரஞ்சன் வேண்டும் என்று செய்தானோ, அல்லது, உண்மையாகவே அவனது சமையலறை ஞானம் குறைவுதானோ, லிஸ்ட் போட்டு முடிக்கு முன், இருவருக்கும் சிரித்துச் சிரித்து வயிறு வலித்துப் போயிற்று!

பட்டியலைக் கணக்கிட்டு, சரி பார்த்துவிட்டுப் பிரியரஞ்சன் வேலைக்குச் செல்லத் தயாராகவும், அதற்குள்



செல்ல வேண்டுமா என்று, மனோகரிக்கு எரிச்சல்கூட உண்டாயிற்று!

கிளம்புமுன், "இந்தச் சாமான்கள் எல்லாம், மாலையில்தான் வரும். அதனால், இன்றும் மெஸ் சாப்பாட்டையே அனுப்பி விடுகிறேன். நேற்று சில கதைப் புத்தகங்கள் கொண்டு வந்தேன். அதுவும் ரொம்பப் போரடித்தால், போலாவைக் கூட்டிக் கொண்டு உலாவப் போ! வரட்டுமா?" என்று விடை பெற்றுச் சென்றான் அவன்.

ஜீப் செல்வதைக் கண்ணுக்கு மறையும் தூரம் வரை பார்த்துக் கொண்டு நின்று விட்டு, ஒரு பெருமூச்சுடன் உள்ளே சென்றாள் அவள்!

பேசுவதற்கு ஆளில்லாமல், போரடிக்குமே என்று எண்ணும்போதே, எதைப் பற்றியும், ரஞ்சனுடன் இலகுவாகப் பேச முடிவதைப் பற்றி வியப்பாகவும் இருந்தது, அவளுக்கு!

ஆனால், அறிந்தவர், தெரிந்தவர் என்று யாரும் இல்லாத இந்த அத்துவானக் காட்டில், அவனிடம் மட்டும்தானே, அவள் பேசியாகவும் வேண்டும்!

ஆனால், ரொம்ப நாளைக்குப் பிறகு, அவ்வளவு சிரிக்க முடிந்தது அதிசயம்தான்!

மாலையில் அவனது வரவுக்காகக் காத்திருந்தாள்.

நல்ல வேளையாக, அவனும் சற்றுச் சீக்கிரமே வந்து விட, இருவருமாகக் காபியை அருந்தியபடி, மேலும் கதைகள் பேசினார்கள்!



மறுநாள், அவர்கள் பட்டியலிட்ட சாமான்கள் வந்துவிட, மனோகரி முதல் முதலாகப் பிரியரஞ்சனுக்குச் சமைத்துப் போட்டாள்!

வீட்டுச் சாப்பாட்டுக்கு, நாக்கு ஏங்கிப் போயிருப்பான் போலும்! மனோகரியின் சாதாரணச் சமையலையே, தேவாமிருதம் என்று பாராட்டினான் அவன்.

"இந்தச் சாப்பாட்டுக்காகவே, இனிமேல், இதற்கு, அதற்கு சின்னச் சின்ன விஷயத்துக்கும் கலந்து பேச வேண்டும் என்று, இங்கே ஓடி வருவார்கள், பார்!" என்று அவன் மேலும் கூறியபோது, உச்சி குளிர்வது என்றால் என்னவென்று புரிந்தது, அவளுக்கு.

இத்தனைக்கும், தாயார் செந்திருவின் சமையலில் கால் பங்கு ருசிகூடத் தனக்கு வரவில்லை என்பது, மனோகரியின் அபிப்பிராயமே! ஆனால், 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பது போலச் செய்யச் செய்யச் சுவையும் மணமும் கூடி வரும், கண்ணு என்பாள் தாய்!

ஆனால், அதையே நன்றாயிருக்கிறது என்கிறானே என்று அவள் எண்ணுகையில், அதற்கு மேலும் ஒரு படி போய், "முன்னெல்லாம், அவர்களைக் காதைப் பிடித்து முறுக்கி, இழுத்து வர வேண்டியிருக்கும்! 'எதற்கும், மற்றவர்கள் எல்லோரும் போன பிறகு, இங்கே 'சைட்' அலுவல் அறையிலேயே தங்கியிருந்து பேசி விடுவோமே, சார்' என்று கெஞ்சுவார்கள்! என் விருந்திடம் அவ்வளவு பயம்!" என்று, பிரியரஞ்சன் பாவனையோடு சொல்லவும், அடக்க முடியாமல் நகைத்தாள் மனோகரி.

நகைப்பினூடே, "நேற்று முன்தினம், வேறே மாதிரியல்ல அளந்தீர்கள்!" என்று மடக்கினாள் அவள்!

"இதற்குத்தான், மனைவி புத்திசாலியாக இருக்கக் கூடாது என்கிறார்கள் போல! ஞாபகம் வைத்து மடக்குகிறாயே!" என்று, மறைமுகமாக அவளைப் புத்திசாலி என்று அவன் கூற, இன்னும் அதிகமாக அக மகிழ்ந்து போனாள் அவள்!

மறுநாள் அவர்களுக்கு வரவேற்பு விருந்து தினம்!

கொஞ்சம் படபடப்பாக இருந்தது மனோகரிக்கு!

இங்கே பிரியரஞ்சன் முக்கியமானவன் என்பது, நன்றாகவே தெரிந்தது. இங்கே, அவனது மதிப்புக் குறையும் விதமாக, அவள் நடந்து கொண்டு விடக் கூடாதே!

எல்லோரும், ஒருவரோடு ஒருவர் கலந்து பழகும் ஒரே அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள்! வேலை நிமித்தம் ஒன்று சேர்ந்து ஒரே குடும்பம் போல இருப்பார்கள்!

ரொம்ப விலை உயர்ந்ததாக அணிந்து, மற்றவர்களிடம் இருந்து வித்தியாசப்படுத்திக் கொள்ளாமல், அதே சமயம் அன்றையக் கதாநாயகி என்பதால் பளிச் சென்று தோன்றும் விதமாகவும்...

யோசித்துத் தேர்ந்தெடுத்து, அவள் அணிந்திருந்த சேலையைப் பார்த்ததும் சற்றுத் திகைத்து நின்று விட்டு, விசிலடித்தான் அவன்.

"நல்லவேளை, நாம் இருவரும் சாதாரணக் கணவன் மனைவி இல்லை! அப்படி இருந்திருந்தால், இன்று வீட்டை விட்டுக் கிளம்பவே முடிந்திராது!



கணவனாகி விட்டவனின் பேச்சில் உட்பொருள் தோற்றுவித்த கற்பனைகளில் மனோகரியிடம் முகம் கன்றிச் சிவந்து போயிற்று!

அவன் சொன்னதுபோல, அவர்கள் சாதாரணக் கணவன் மனைவி அல்ல என்றாலும், இது போன்ற ஏதோ தோற்றங்கள் மனதில் தோன்றித்தானே, ரஞ்சனும் அப்படிச் சொல்லியிருக்க வேண்டும்!

ஆனால், நிஜமாகவே, அப்படியெல்லாம் எண்ணியிருக்கக் கூடுமா?

சற்று நேரம் அவனை நேராகப் பார்க்கவே, அவளால் முடியவில்லை!



## 13

பெரிதாக வரவேற்பு என்று பெயரே தவிர, ஒரு பெரிய கொட்டாய் மாதிரி இடத்தில், ஒரு சிறு மேடை அமைத்து, வரிசையாக நாற்காலிகளைப் போட்டு வைத்திருந்தார்கள்.

பிரியரஞ்சன் ஏற்கனவே சொல்லியிருந்தபோதும், சில தினங்களுக்கு முன்பாகச் சென்னையில் சிறப்பாக நடைபெற்ற ஒரு வரவேற்பைப் பற்றிய நினைவே, அவளால் தடுக்க முடியவில்லை!

சௌமினியும், சுந்தரும் பூரிப்புடன் நின்ற தோற்றத்தையும்!



இடத்தைப் போலவே, இவர்களுக்கும், அவர்களுக்கும்தான் எவ்வளவு வேறுபாடு! வேண்டாத நினைவுகளில் இருந்து, மனதை மீட்க முயன்றவளாகப் பிடிவாதமாகச் சுற்றினாலும் பார்வையை ஓட்டி ஆராய்வதில் ஈடுபட்டாள்.

வெறும் சிமென்ட் ஓடு போட்ட கொட்டாய்தான். ஆனால், அதையும், காட்டுக் கொடிகளாலும், பூக்களாலும், அங்கங்கே வண்ணக் காகிதங்கள், பலூன்களாலும் நன்றாகவே அலங்கரித்திருந்தார்கள். வண்ணக் கலவை கொஞ்சம் காலை வாரியபோதும். ஏனோதானோ என்று இல்லாமல், முழு மனதோடு முயற்சி செய்திருப்பது நன்றாகவே தெரிந்தது!

ஏதோ ஒரு வகையில், அந்த முயற்சி மனோகரிக்கு இதமாகவும் இருந்தது!

அவள் ஆறுதலோடு பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, சரளா அருகில் வந்து, "என்ன மனோகரி, இங்கே மாடு, கன்று எதையும் காணோமே என்று தேடுகிறீர்களா? நமக்கு இடம் வேண்டுமே என்று, அதுகளை ஓட்டி விட்டிருப்பார்கள்! எந்த வைபவத்துக்கும், இந்த மாட்டுக் கொட்டகையை விட்டால், இங்கே வேறு இடம் கிடையாது. மனோகரி!" என்றாள் ஏளனமாக.

என்னதான் தோழியாக ஏற்றுக் கொண்டிருந்த போதும். அவள் சொன்னது மனோகரிக்கு அநியாயமாகப் பட்டது!

வெறும் பத்துக் குடும்பங்களின் விழாக்களுக்காக, ஏசி அறைகளும், ஹாலுமாகப் பெரிதாகத் திருமண



மண்டபமா, கட்டி வைக்க முடியும்? அதிலும், இரண்டு மூன்று ஆண்டுகளில், இங்கே வேலை முடிவு பெற்றதும், இன்னோர் இடத்துக்குக் குடி பெயர்ந்து போகப் போகிறவர்கள்!

இந்தக் கொட்டகை போன்ற இடத்தைக் கூடச் சிறப்பாகக் காட்ட வேண்டும் என்று முயன்று அலங்கரித்திருந்தவர்களுக்கு எப்படி இருக்கும்?

அங்கிருந்த பலரின் முகங்கள் வாடுவதைக் கவனித்துவிட்டு, "மாட்டுக் கொட்டகையைக் குறைவாக எண்ணாதீர்கள், சரளா. சுற்றுப் புறத்தை ஒளிர வைத்துக் கொண்டு, ஏசுபிரான் பிறந்ததே, மாட்டுக் கொட்டகையில்தான் என்பது, நினைவிருக்கட்டும்! இத்தனை அலங்காரங்களுடன், இந்தக் கொட்டகையும் ஒளிர்வது போலத்தானே, தெரிகிறது?" என்றாள் மனோகரி.

நியாயம் என்று நினைத்ததைத்தான் மனோகரி சொன்னாள். ஆனால், படபடவென்று கைதட்டு விழவும், அவளே அதிர்ந்து போனாள்.

"நீங்கள், மிகவும் அதிருஷ்டசாலி, பிரியன்! நீங்கள் திட்டமிட்டுக் கட்டியதைக் குறைவு படுத்தி ஒருவர் சொன்னால், எப்படி வக்காலத்து வாங்குகிறார்கள், பாருங்களேன்! எப்போதும், எதையும் குறை கூறுகிற சில பேர், உங்கள் மனைவியிடம் இனிமேல் எச்சரிக்கையோடு இருப்பார்கள் என்று நம்புவோமாக!" என்று கூறிய ஒருவர், பிரியரஞ்சனின் கையைப் பிடித்துக் குலுக்கி, வாழ்த்துத் தெரிவித்தார்!

''இவர்தான், நம் இடத்தின் சிவில் இஞ்சினீயர். பெயர் நாராயணன். அருகில், அவருடைய திருமதி. இங்கே பொதுவாகக் குறிப்பிடுவது, சிவில் சார், சிவிலம்மா என்று!'' என்று கணவன் மனைவி இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தான் பிரியரஞ்சன்!

இதே போல, எலக்டிரிகல், மெக்கானிக்கல் இஞ்சினீயர்கள், டிராஃப்ட்மேன், கணக்கர், இப்படிப் பலரையும், பிரியரஞ்சன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

சரளாவுடைய அண்ணன், எலக்ட்ரிகல் இஞ்சினீயராக இருந்தான். அவனுடைய தங்கையாகச் சரளாவும், மீண்டும் ஒரு தரம் அறிமுகப்படுத்தப்பட்டாள்.

கரம் குவித்து வணங்கியவள், அருகிலேயே நின்று கொண்டு, ''என்ன, மனோ, நான் லேசாகக் கேலி பேசினால், என் காலை, அப்படி வாரி விட்டு விட்டீர்களே! நல்ல பாடம் ஒன்று கற்றுக் கொண்டேன். அசந்து மறந்து கேலியாகக் கூடப் பிரியனை எதையேனும் சொல்லி, இனி உங்களிடம் நான் மாட்டிக் கொள்ள மாட்டேன்ப்பா!'' என்று கூறி, இயல்பாகச் சிரித்தாள் அவள்.

எந்தவிதமான பந்தாவும் இல்லாமல் நட்புடன் பழக வந்தவளின் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்று உள்ளூரத் தவிப்புடன் இருந்த மனோகரிக்கு, சரளாவின் சிரிப்பு நிம்மதியைத் தந்தது!

இவள் நல்லவள் என்ற எண்ணமும் வலுப்பெற்றது.



அன்று எல்லோரையும் சந்தித்துப் பழகியதில், மனோகரி பல விஷயங்களை அறிந்து கொண்டாள்.

பொதுவாகப் பிரியரஞ்சனிடம் அவர்கள் எல்லோருக்குமே, மதிப்பும் மரியாதையும் அதிகம் இருந்தது!

அணைக்கட்டு கட்டுவது, மலைப் பாதை போடுவது, போன்ற பெரிய அரசு வேலைகளை, ஒரு பெரிய அகில இந்தியக் கூட்டுமான நிறுவனம் செய்து வருகிறது. அந்த நிறுவனம், தான் செய்ய இருக்கும் பெரிய வேலையைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து, சின்ன நிறுவனங்களிடம் 'சப் காண்ட்ராக்ட்' விடும்.

அந்த மாதிரி 'சப் காண்ட்ராக்ட்' எடுத்துச் செய்யப்படும் வேலைதான் இங்கே நடப்பது! ஓரளவு மழை மறை பிரதேசம் என்றாலும், பருவக் காற்று வீசும் காலங்களில், இங்கும் கணிசமான அளவு மழை பெய்யும். அந்த மழை நீர் வீணாகி விடாமல் சேமிப்பதற்காக, இந்த மலைப் பகுதியில் நாலைந்து இடங்களில் சிற்றணைகள் கட்டுகிற திட்டத்தில், நீர்த் தேக்கத்துக்கான இடத்தைத் தேவையான அளவு ஆழப்படுத்திச் சுற்றுச் சுவர் கட்டுவதோடு இவர்களது பொறுப்பு முடியும்!

அணைக்குரிய மதகுகள், நீர் வரத்துக்கும், வெளியேற்றத்துக்கும் வழியமைப்பது, கூடவே மின்சார உற்பத்தி போன்றவைகளை, இவர்கள் வேலை முடிந்து சென்ற பின், இன்னொரு நிறுவனம் செய்யும்.

இந்த மாதிரிப் பொறுப்பேற்றுச் செய்யும் கிளை நிறுவனம் ஒன்றைத் தொடங்கி, பிரியரஞ்சனும், அவ



னுடைய இன்னொரு நண்பன் விபாகரனும் நடத்தி வருகிறார்கள். முதலில், சிறு ஓடைகளுக்குப் பாலம் கட்டுவதில் தொடங்கி, இந்த அளவு வளர்ந்திருக்கிறார்கள்!

மனோகரி பிரமிப்புடன் நோக்கவும், ''நானும் விபுவும் சுயம்புவாய், முழுக்க முழுக்க எங்கள் முயற்சியில் மட்டுமாக வளர்ந்து விடவில்லை, மனோகரி. பின்புலமாக, எங்கள் இருவருடைய பெற்றோரும் பெரும் உதவி செய்திருக்கிறார்கள்! பெருமளவு பண உதவி! அத்தோடு, அவர்கள் எங்களுக்குப் பின்னே இருக்கிறார்கள் என்பதால்தான், இது போன்ற ஒப்பந்தங்கள் எங்களுக்குக் கிடைக்கத் தொடங்கியதே! அவர்களது பெயர் மட்டும் இல்லையென்றால், பல அலுவலகங்களில், எங்களை உள்ளே நுழையக்கூட அனுமதித்திருக்க மாட்டார்கள்! அதனால், எங்களை ரொம்பப் பெரிதாக எண்ணிவிட வேண்டாம்!'' என்றான் பிரியரஞ்சன்.

உருப்படியாக ஒன்றும் சாதிக்காமல், சும்மா வாய் பேச்சிலேயே, எல்லாம் தானே என்று தம்பட்டம் அடிப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்! ஆனால், இவன் எவ்வளவு அடக்கமாகப் பேசுகிறான்!

கணவனைப் பற்றி, உள்ளூர ஒரு பெருமிதம் வளர்வதை மனோகரி உணர்ந்தாள்.

''விபு என்றீர்களே, அவரைக் காணவில்லையே!'' என்று, மென் குரலில் வினவினாள்.



''மகாராஷ்டிராவில் ஒரு வேலை எடுத்திருக்கிறோம். அதை, அவன் பொறுப்பேற்றுச் செய்து கொண்டிருக்கிறான்'' என்று, சிறு முறுவலுடன் பதிலிறுத்திவிட்டு, வாயிலை எட்டிப் பார்த்தான் பிரியரஞ்சன்.

இன்னும் வரவேண்டியவர்கள் இருக்கிறார்கள் போலும் என்று மனோகரி எண்ணிக் கொண்டாள்.

வெளியே அரவம் இல்லாது போகவும், அருகில் நின்ற ஆண்களின் புறம் திரும்பி ஏதோ பேசலானான் அவன்.

''விபு அண்ணன் எங்கள் பெரியப்பா மகன். ஊரில், நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம் போலத்தான் இருப்போம்! இந்தத் தடவை ராக்கி பரிசாக, விபு எனக்கு வைர டிராப்ஸ் வாங்கிக் கொடுத்தான்!'' என்றாள் அருகில் இருந்து, கணவன் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சரளா.

அந்த அளவு பாசப் பிணைப்பு இருப்பதால்தான், இவளுக்கும், இந்த நிறுவனத்திடம் உரிமை உணர்வு தோன்றியிருக்கிறது என்று எண்ணினாள் மனோகரி.

மனோகரி, சரளா அருகே, இன்னும் இரண்டு பெண்களும் நின்று கொண்டிருந்தார்கள்.

''வாருங்களேன். மனோகரி, அப்படி உட்கார்ந்து பேசுவோம்!'' என்று சரளா எல்லோரையும் அழைத்தாள்.

சிவில் இஞ்சினீயரோடு பேசிக் கொண்டிருந்த கணவனை, மனோகரி பார்க்கவும், ''ஊகூம். பிரயோஜனம் இல்லை!'' என்றாள் தொடர்ந்து, ''இங்கெல்

லாம், ஆண்கள் தொழிலைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டால், பெண்களைப் பற்றிய நினைவே, மறந்து போகும், செய்கிற தொழிலில், இங்கே அத்தனை ஈடுபாடு! அப்படி ஊக்குவித்தது பிரியனே என்பதால், அவர் என்ன சொல்லுவாரோ என்று கவலைப்பட்டு, இங்கேயே நிற்கத் தேவையே இல்லை. வேண்டு மானால், இவர்கள் அத்தனை பேரையும் கேட்டுப் பாருங்கள்!''

மற்ற இரு பெண்களும் ஒப்புதலாகத் தலை யாட்டினர்.

கணவன் தன்னைக் கவனிக்கவில்லை என்பதைவிட, முழுமையான ஈடுபாட்டுடன் எல்லோரும் இணைந்து பணிபுரிகிறார்கள் என்பதில், மனோகரிக்கு மகிழ்ச்சி தான் உண்டாயிற்று!

''அத்தோடு, வர வேண்டிய எல்லோருமே வந்தும் ஆயிற்று! பிறகு எதற்கு, நின்று நின்று காலைக் கடுக்க வைப்பது?'' என்று அவள் மீண்டும் சொல்ல, சரிதான் என்று, அவர்களோடு சேர்ந்து செல்ல மனோகரி திரும்புகையில், ''ஆனால், இன்னும் டாக்டர் வர வில்லையே!'' என்றாள் ஒருத்தி.

''இவ்வளவு நேரம் ஆகிவிட்டது. இதற்கு மேல், எங்கே வரப் போகிறாள்? ஆனால், வரவும், அவ ளுக்குப் பிடிக்காதுதானே, பாவம்!'' என்றாள் சரளா, ஒரு விதமான சிரிப்புடன்!

அவளது குறிப்பை மறுப்பது போல, ''அவளுக்கு ஏதாவது வேலை வந்திருக்கும்!'' என்றாள் மற்ற பெண்களுள் ஒருத்தி!



''ஆமாம் இங்கென்ன, லட்சம் பேரா வசிக்கிறார்கள், ஒருவர் இல்லாவிட்டால் இன்னொருவர், ஏதோ போச்சு என்று வாயைப் பிளக்கத் தயாராக இருப்பதற்கு? உள்ளவர்கள் எல்லோரும், இங்கேதானே இருக்கி றோம்! அப்புறம், டாக்டருக்கு எங்கிருந்து வேலை வரும்?'' என்று சரளா வாதாடினாள். ''எனக்கென்னவோ, இன்றைக்கு, இங்கே வர அவளுக்கு மனம் வந்திராது. அதனால்தான் வரவில்லை என்றுதான் தோன்றுகிறது! பிரியன் இப்படித் திடுமென மனைவியோடு வந்து நிற்பார் என்று, அவள் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டாள்...''

சரளா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, விலை உயர்ந்த சென்ட்டின் மணம் கும்மென்று வீசியது.

'''யானை வரும் முன்னே, மணியோசை வரும் பின்னே' என்கிற பழமொழி தெரியுமா? இந்த மாதிரி மூக்கைத் துளைக்கிற மாதிரி சென்ட் வாசனை முன்னே வந்தால், பின்னே டாக்டர் வருகிறாள் என்று அர்த்தம்! அதோ, டாக்டரம்மா வருகிறார்கள்! பராக்!'' என்று, மனோகரியின் காதுகளில் கிசுகிசுத்தாள் சரளா.

திகைப்புடன் திரும்பிப் பார்க்கையில், அதி நாகரீக மான உடையணிந்த ஒரு பெண் அந்த வரவேற்பு ஹாலுக்குள் வந்து கொண்டிருந்தாள்.

அவளது வயது பின்னிருபதுகளில்... பிரியரஞ்ச னோடு ஒட்டியதாக இருக்கக் கூடும் என்று மனோகரி எண்ணுகையிலேயே, ''கல்லூரியை எட்டும் வரை உடன் படித்தவள். பெயர் சாயா. இங்கே, நிறுவனத்து



மருத்துவராகப் பணிபுரிகிறார்கள்!'' என்று அவளை அறிமுகப்படுத்தினான், அவளுடைய கணவன்.

வயது பற்றி தன் ஊகம் சரியாக இருந்ததில், மனோகரிக்கு உள்ளூரப் பெருமையாக இருந்தது!

மேலும் தொடர்ந்து, என் மனைவி என்று அவன் சொல்லுமுன்பாகவே, ''வாட் எ பியூட்டி!'' என்று மனோகரியின் கைகளைப் பற்றிக் குலுக்கினாள், அந்தச் சாயா.

அத்தோடு நிறுத்தாமல், மனோகரியைத் தோளோடு அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு, ''ஏய் ரஞ்சி, நீ ரொம்ப லக்கிடா! இந்த மாதிரி அழகை மனதில் வைத்துக் கொண்டுதான், அப்போதே என்னிடமிருந்து கழன்று கொண்டாயா? கெட்டிக்காரன்யா?'' என்று சிரித்தாள்.

மனோகரியின் வீட்டில், தொட்டுப் பழகுவது பழக்கம் இல்லை! செந்திருகூட, மகளுக்குத் தலை கோதி விடுவது, சென்னியைத் தொட்டு நெட்டி முறித்து திருஷ்டி கழிப்பது தவிர, அனாவசியமாகத் தொட மாட்டாள். அப்படி வளர்க்கப்பட்டவளுக்கு, முன்பின் அறியாத ஒருத்திக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக் கவும், ஒரே கூச்சமாகி விட்டது.

தட்டி விடவும் முடியாமல், சங்கடத்துடன் நெளிந்த படி, முயன்று புன்னகை செய்து, வணக்கம் தெரிவித் தாள் மனோகரி.

''ஐயோ... என்ன மாதிரி ஐஸ்கிரீம் சிரிப்பு!'' என்று, மனோகரியின் முகவாயைத் தொட்டுத் தன் உதட்டில்



வைத்துவிட்டுப் பிரியரஞ்சனின் முதுகைத் தட்டி, ''ரஞ்சி, என்னைக் கூப்பிடாமல் திருமணம் செய்து கொண்டதற்கு, உன்னை மன்னித்து விட்டேன்பா! பெண்ணான எனக்கே பார்த்துக் கொண்டே இருக் கலாம் போலத் தோன்றுகிறதே! மனோவை அங்கே விட்டு விட்டு வர, உன்னால் எப்படி முடியும்'' என்று, காரண காரியத்தை ஒத்துக் கொண்டு நகைத்தாள்.

உடனேயே, ''என்னப்பா, எப்போது சாப்பாடு? எனக்கு வயிறு காந்தலெடுத்து விட்டதே! சும்மாவே பசி! அதற்கு மேல், உன் மனைவியின் அழகைப் பார்த்து, அது வேறு வயிற்றெரிச்சல்! அல்சர் வந்து விடும்பா! சீக்கிரமாகச் சாப்பாட்டையாவது, போடு! வயிறேனும் கொஞ்சம் குளிரட்டும்!'' என்று சாயா கூற, அருகில் நின்ற ஆண்கள் சிரித்தனர்.

''டாக்டர் நீங்கள்! வயிறு காந்துகிற அளவுக்கு பசிக்க விடாமல், சற்று முன்னதாக வந்திருக்கலாம் அல்லவா? அதைவிட்டு, அல்சரைப் பற்றி நீங்களே பயப்பட்டால், நன்றாகவே இல்லை, சாயா!'' என்று, உதட்டைப் பிதுக்கினாள் சரளா.

''என்னம்மா செய்வது? பசித்தால் அல்சர் வரும் என்று, எனக்குத் தெரிகிறது. உனக்குத் தெரிகிறது! ஆனால், இந்த நேரம் பார்த்துப் பிறவியெடுத்த அந்தக் குழந்தைக்குத் தெரியவில்லையே! தொப்புள் கொடியை அறுத்துப் பிள்ளையைக் கையில் கொடுத்து விட்டு, ஓடிப் போய் குளித்து உடை மாற்றிக் கொண்டு, இங்கே ஓடோடி வருகிறேன்!'' என்று, தன் தாமதத்தை வேடிக்கை

யாக விளக்குகிற மாதிரி, அவளுக்குப் பதில் கொடுத்தாள் சாயா.

டாக்டருக்கும், சரளாவுக்கும் அவ்வளவாகப் பிடித்தம் கிடையாதோ என்ற ஐயம் மனோகரிக்கு உண்டாயிற்று!

ஆனால், பல காலமாக நன்கு பழகியவர்களின் இடையேயான கிண்டலாகவும் இருக்கலாம் என்று அவள் காரணம் கண்டுபிடிக்கையிலேயே, குழந்தையா? நம் குடியிருப்பிலா? இன்னும் பத்து மாதம் கழித்து, மனோகரிக்கு அந்த வைதத்தியம் பார்க்கிற நிலை உங்களுக்கு வரலாம்! மற்றபடி, பிள்ளை பெறுகிறாற் போல, இங்கே யாரும் இல்லையே! என்ன டாக்டர், தனியாக, சைடு சம்பாத்தியமா?'' என்று, கண் சிமிட்டிக் கேலியாகக் கேட்டாள் சரளா.

கேலியோ, அல்லவோ, தன் பெயரை இழுக்காமல் இருந்திருக்கலாமே என்றிருந்தது, மனோகரிக்கு! குழந்தைச் செல்வம் என்பது, அவள் வாழ்வில், அடக்க முடியாத பேறு அல்லவா?

''மருத்துவத்தைப் பிறருக்குப் பணி புரியும் உயர்வான தொழில் என்பார்கள். அது, உனக்குத் தெரியாது என்று, எனக்கு இப்போதுதான் தெரிகிறது? அந்த மாதிரி வலி முற்றிய நிலைமையில் ஒரு பெண்ணைப் பார்த்து விட்டு, 'நீ வெளி ஆள்., உனக்கு வைத்தியம் செய்ய மாட்டேன்' என்று எந்த டாக்டரும் சொல்ல மாட்டார்கள்!'' என்றதோடு பேச்சை முடித்துக் கொண்டு, பிரியரஞ்சனிடம் திரும்பி ஏதோ பேசத் தொடங்கினாள் டாக்டர்!



டாக்டருக்கும் சரளாவுக்கும், அவ்வளவாக ஒத்து வராதோ என்று தான் எண்ணியது சரிதான் என்று, மனோகரிக்கு நிச்சயமாயிற்று!

அதற்கு நிருபணம் போலச் சாயாவை ஒரு தரம் முறைத்து விட்டு, அதன் பிறகே, சரளா தலையை வேறு புறம் திருப்பினாள்.

வரவேற்பு விருந்துக்குப் பிறகு, அந்தக் குடியிருப்புகளில் வசித்த மற்றப் பெண்மணிகளும், மனோகரியின் வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருக்கத் தொடங்கினர்!

பெரும்பாலும், அன்றையச் சமையல், என்ன, யாருக்கு உடம்பு சரியில்லை, அதற்கு என்ன மாதிரி உணவு, டி.வி. நிகழ்ச்சி என்று உப்பு சப்பற்ற பேச்சு தான். அல்லது, சீட்டு, கேரம் என்று ஏதாவது விளையாட முனைந்தார்கள்.

சமையல், வீட்டு பொறுப்பு போக, எல்லோருமே போரடித்துப் போயிருந்தது, நன்றாகவே தெரிந்தது!

சரிதான் என்று வித்தியாசமாக, வார்த்தை ஜாலம், குவிஸ் போல ஏதாவது சுவாரசியமாகச் செய்து பொழுது போக்கலாம் என்று மனோகரி, முயன்றால், வயது, பின்புலத்தின் வேறுபாடுகள் இடைஞ்சலாக இருந்தன.

சற்று யோசித்துவிட்டு, அவள் இன்னொரு வழி கண்டு பிடித்தாள்.



சுந்தருடைய குடும்பத்துக்கு ஏற்ற சகல கலா வல்லியாக மனோகரியைத் தயார் செய்ததில், ஓவியம், அலங்காரத் தையல்கள், மணி வேலைகள் என்று, பல்வேறு கைவினைகள் அவளுக்குக் கற்றுக் கொடுக்கப் பட்டிருந்தன. அவற்றை, இப்போது பயன்படுத்த முடிவு செய்து, தேவையான பொருட்களை வாங்கி வரச் செய்தாள்.

ஒரொருவருக்கு ஒவ்வொன்றில் ஓரளவு பழக்கமும் இருக்க, எல்லோருக்குமே இந்தக் கலைகளில் ஈடுபாடு வந்தது. பொழுதும் சுவாரசியமாகக் கழிந்தது!

''கொஞ்ச காலமாக, நம் பெண்மணிகள் தலைவலி, படபடப்பு என்று வரவே காணோமே என்று சாயா ஆச்சரியப்பட்டாள்! இதுதான் காரணமா?'' என்று பிரியரஞ்சன், நடந்து கொண்டிருந்த வேலைகளைப் பார்த்துவிட்டு, மிகவும் பாராட்டினான்.

பாராட்டியதோடு மட்டுமின்றி, அவைகளை நகரத்தில் விற்பதற்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறவே, எல்லோருக்குமே இந்த வேலைகளில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரித்தது!

பொழுது போவதற்காக தொடங்கியதில், வருமானமும் வருகிறது என்றால், சும்மாவா?

இன்னொரு மாற்றமும் நிகழ்ந்தது!





## 14

**தா**ன் வெளியூரில் இருந்தபோது பின் தங்கியிருந்த வேலையைக் கூடுதலாக உழைத்துச் சமன் செய்த பிறகு, பிரியரஞ்சன் மாலை வேளைகளில் மனோகரியை, உலாவ அழைத்துச் சென்றான்.

மேற்கு மலைத் தொடர்ப் பகுதி என்பதால் சூரியன் தாமதமாக மறைவது, வெகு நேரம் வெளிச்சம் தந்து, அவர்கள் மலைப் பகுதிகளில் சுற்றுவதற்கு வசதியாக இருந்தது!

அவர்களது குடியிருப்பு இருந்த பகுதி, கொஞ்சம் சமதளமாக இருந்தது.

அங்கிருநது சற்று தூரம் சென்றால், இடையில் பள்ளத்தாக்கும் அதைத் தாண்டி அடுத்து மலைக்குச் செல்ல, ஒரு கயிற்றுப் பாலமும் இருந்தன. கொஞ்சம் ஆபத்தான பாலம்தான். தள்ளித் தள்ளிப் பின்னப்பட்ட கயிறுதான்! கையும் காலும் சேர்ந்து வழுக்கினால், கொஞ்சம் பிரச்சனைதான். ஆனால் இரு கைகளாலும் இருபுறமும் பிடித்துக் கொண்டு, மெல்ல நடந்தால் எளிதாகக் கடந்து விடலாம்.

உதவிக்குப் பிரியரஞ்சனின் கையைப் பிடித்துக் கொண்டு, உடல் கனத்துக்குத் தகுந்தவாறு அழுத்திக் கொடுக்கும் கயிற்றுப் பாலத்தின் மீது நடந்து செல்வது,

புது அனுபவமாக மனோகரிக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

இதேபோல, சுமார் ஒரு கிலோ மீட்டர் இடை வெளியில், இன்னும் இரு கயிற்றுப் பாலங்கள் இருப்ப தாகவும், அவை ஆபத்தானவை என்றும், பழக்கப் பட்ட மலைவாசிகள் தவிர, மற்றவர்கள் அவைகளைப் பயன்படுத்துவது இல்லை என்றும் பிரியரஞ்சன் விவரம் சொன்னான்.

மறு புறத்து மலையின் சரிவு சோலைவனமாக மிகுந்த எழிலுடன் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது. தானாக வளர்ந்த வாழை, பலா போன்ற மரங்களும், காய், கனிகளுடன் சிறப்பாக வரையப் பட்ட சித்திரங்களாகக் காட்சியளித்தன.

மனிதர்களால் எட்ட முடியாதபடி, சரிவுகளில் உய ரத்தில் இருந்த பழங்களைக் குரங்குகளும், அணில் களும், பறவைகளும் உண்பதுகூட பார்க்கத் தெவிட் டாத காட்சியாகவே இருந்தது!

ஒவ்வொரு நாளும், இந்த மாலை நேரத்து உலா வலுக்காகவே பொழுது விடிவது போல, மனோகரி உணரத் தொடங்கினாள்.

ஆனால், வேலை முடிந்து களைப்போடு இருக்குப் பிரியரஞ்சனை, மேலும் அலைய வைக்கிறோமோ என்ற குற்ற உணர்ச்சியும் அவளுக்கு ஏற்பட அது பற்றி அவனிடம் எப்படிக் கேட்பது என்று யோசித்துவிட்டு. ''இன்று வேலை கடுமை என்றால், இன்னொரு நாள் உலாவப் போகலாமே!'' என்று ஒரு நாள்.



''என்ன திடீரென்று? மலையில் ஏறுமுகமாக நடப்பது உனக்குக் கஷ்டமாக இருக்கிறதா?'' என்று அவளைக் கேட்டான் அவன்.

அவளது காரணத்தை அறிந்ததும் ஏதோ காரண மாகப் பொங்கிச் சிரித்தான் அவன்.

அவள் புரியாமல் நோக்கவும், ''பெண்டாட்டி, நமக் காகப் பார்க்கிறாளே என்று சந்தோஷம்தான்!'' என்று அவன் இலகுவாகக் கூறவும், அவளது முகம் லேசாகச் சிவந்தது!

சமாளித்துக் கொண்டு, ''வேலை முடிந்தால், களைப் பாக இருக்கும் என்பது, பொது இயல்புதானே? அதனால்தான்... மற்றவர்களுக்கு நம்மால் எதற்குக் கஷ்டம் என்று கேட்டேன்!'' என்றாள் அவள் மிடுக் காக.

புன்னகையுடனேயே, ''என்னைப் பொறுத்த வரை யில், அன்றாட வேலை எனக்குக் களைப்பாக இருந்தது கிடையாது. மனோ! மனதுக்குப் பிடித்தமான தொழிலைச் செய்கிறோம் என்பதோடு, இந்த இயற்கை அழகைப் பார்க்கும்போதே, உடம்பும் மனமும் உற் சாகமடைந்து விடுவதும், எனக்குப் பழக்கமே! இங்கே வேலை தொடங்கியதில் இருந்தே, அடிக்கடி இந்தப் பக்கம் வந்து சுற்றுவேன். தன்னந் தனியாகச் சுற்றியவன், இப்போது ஒரு துணையோடு சுற்று கிறேன். அவ்வளவே!'' என்றான் அவன். ''நீயும் என்னை ஒத்தவளாக இருப்பது பற்றி, எனக்கு மிகவும் சந்தோஷம்!''



அதற்குப் பிறகு, நடை விஷயத்தில், அவளது மனச்சாட்சி அவளை உறுத்தியதே இல்லை எனலாம்.

இந்த உலாவுதலில் இன்னொரு நன்மையும் இருந்தது!

இரண்டு பேராகச் சேர்ந்து நடக்கும்போது, இரு வரும் நிறையப் பேசினார்கள்.

ஆகாயத்தின் கீழ் உள்ள அத்தனை விஷயங்களைப் பற்றி மட்டும் அல்ல, அதற்கு அப்பால் வானவெளி பற்றியும், இரண்டு பேரும் கருத்துப் பரிமாறிக் கொண்டனர்.

நிறைய விஷயங்களில், இருவருக்கும் ஒத்த கருத்து இருந்தது. மனோகரிக்கு வியப்புதான்.

பிரியரஞ்சன் உலகம் அறிந்தவன், நாலைந்து ஆண்டு களாகத் தனியே தொழிலே செய்கிறவன்! ஆயினும், இருவரும் பார்க்கும் விதம் ஒன்றாகவே தோன்றிற்று!

ஒரு வேளை, இவர்கள் இருவரும்தான் ஒருவருக் கொருவர் பொருத்தமானவர்களோ? அதனால்தான் அந்தக் கடவுள், என்னென்னவோ செய்து, அவர்கள் இருவரையும், எப்படியோ கணவன் மனைவியாக ஒன்று சேர்த்து வைத்தாரோ?

அப்படி இல்லை என்றாள் சரளா!

அன்றைய வரைதல், மணி ஒட்டுதல் போன்ற வேலைகள் முடிந்து, மற்ற பெண்மணிகள் வீடு திரும்பிய பிறகும், ''இந்தப் படத்தில் கண் வரைவது சரியாகவே வரவில்லை!'' என்று சொல்லிக் கொண்டு சரளா மட்டும் உட்கார்ந்திருந்தாள்.



அவளது படத்தில் கண் பாப்பாவை மனோகரி சரிப்படுத்திக் கொடுக்கையில், ''நேற்று அண்ணன் பழைய படத்து சிடி ஒன்று கொண்டு வந்தான். மந்திரி குமாரி என்று பெயர். அதைப் பார்த்ததில் இருந்து, எனக்கு மனதில் ஓர் உதைப்பு! அசட்டுத் தனம் என்று, எனக்கு நானே எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டேன். ஆனாலும், உன்னிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டால்... சொல்லிவிட வேண்டும் என்று ரொம்பவும் தோன்றியது! அப்புறமாக ஏதாவது... தப்பு கிப்பு நடந்து போனால்... நடக்காதுதான்... ஆனாலும், நூற்றிலே ஒரு வாய்ப்பாக ஏதேனும் நடந்ததனால், எச்சரிக்காமல் போனோமே என்று, மனது அடித்துக் கொள்ளும், பார்! அதனால்தான்...'' என்று இழுத்தாள்.

புரியாமல் நோக்கி, ''எதற்கு, இவ்வளவு பீடிகை, சரளா? சொல்ல வேண்டியது என்று நினைத்தால், வெளிப்படையாகப் பட்டென்று சொல்லி விட வேண் டியதுதானே!'' என்று இளம் புன்னகையோடு இயம் பினாள் மனோகரி.

இந்த மூன்று வாரங்களில், குடியிருப்பில் இருந்த எல்லாப் பெண்களுமே மனோகரியிடம் பிரியமாகப் பழகியபோதும், சரளா ரொம்பவே ஒட்டிக் கொண் டாள் எனலாம்.

''பெரியப்பா வீட்டிலிருந்து, பலகாரம் வந்தது, உனக்குத் தராமல் வாயில் போட மனமில்லை'' என்று கொண்டு வந்து கொடுப்பாள்.

மனோகரி ஏதாவது வேலை செய்து கொண்டிருந்தால், கையிலிருந்து பிடுங்கிச் செல்வாள்.

"அண்ணன் வேலை நிமித்தமாகக் கோவைக்குப் போயிருந்தானாம். இந்த சி.டி கொண்டு வந்தான். போட்டுப் பார்!" என்று கொடுப்பாள்.

தன்னைப் பற்றி நிறையச் சொல்லுவாள். பெற்றோரை இழந்தது., பெரியப்பா வீட்டினர் பாசம். அதிலும் விபாகரனின் அன்பு எல்லாம் சொல்லுவாள்.

இடையிடையே, மனோகரியின் திடீர் திருமணம் பற்றி வியப்பாள்.

எவ்வளவோ பிரியமாகப் பழகிய அப்போதும்கூட, தன் கதையைச் சொல்ல, மனோகரிக்கு வாய் வராது! பிரியரஞ்சனுடைய தங்கையின் திருமணத்தில் சந்தித்தோம். பெற்றவர்களுக்கும் பிடித்தது. முறைப்படி திருமணம் ஆயிற்று என்று கணவன் வெளியிட்டதற்கு மேல், அவள் ஒன்றும் சொன்னதில்லை!

சரளாவோடு நெருங்கிப் பழகுவது ரஞ்சனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லையோ என்று அவளுக்குச் சில சமயம் தோன்றும்! அவனது விருப்பத்தை மீறி, முதல் நாள் சரளா வீட்டுக்கு வந்த கோபம் அவனுக்கு இன்னமும் ஆறவில்லை போலும்!

ரஞ்சன், அது பற்றிப் பேசினால், உதவும் ஆர்வத்தில் சரளா வந்தது பற்றியும், அவளது மற்ற குணநலன்கள் பற்றியும் எடுத்துச் சொல்லி, அவனுக்குப் புரிய வைக்க அவள் உறுதியோடு காத்திருந்தால், எப்படியோ, அதற்



குரிய வாய்ப்பு அவளுக்குக் கிடைக்காமலே போய்க் கொண்டிருந்தது!

தானாகச் சரளாவின் பேச்சை எடுத்து, அவளுக்காகப் பரிந்து பேசவும் மனோகரிக்குத் தயக்கமாக இருந்தது! பாரபட்சம் காட்டுகிறாய் என்றாலேயானால்?

கட்டாயம் சொல்லுவான்! யாரிடமும் தனி அன்பு காட்டக்கூடாது என்று முதலிலேயே கூறியிருந்தானே!

முடிந்தவரை அப்படித்தான் நடந்து கொண்ட போதும், சரளா பிரியமாக வரும்போது, அவளைத் தவிர்க்க, மனோகரிக்கு மனம் வரவில்லை!

எனவே, மரியாதைப் பன்மை மறைந்து, ஒருவருக்கொருவர் ஒருமையில் அழைக்கும் அளவு அவர்களிடையே நட்பு வளர்ந்திருந்தது!

எனவே, நினைப்பதைத் தாராளமாகச் சொல்லும்படி மனோகரி மீண்டும் கூற, அதன் பிறகும் தயக்கத்துடனேயே, சரளா விஷயத்துக்கு வந்தாள்.

"அந்தப் படத்தில், கதாநாயகியை, அவளுடைய கணவன் மலைமேல் கூட்டிப் போய்க் கொல்ல முயற்சி செய்கிறான்..."

வியப்புடன் அவளைப் பார்த்தாள் மனோகரி.

சரளா குறிப்பிடுகிற அந்த 'மந்திரி குமாரி' திரைப்படக் காசெட், அவள் வீட்டிலும் இருக்கிறது! அவளுடைய பெற்றோர் இருவருக்குமே, எம்.ஜி.ஆர். சிவாஜி இருவரின் படங்கள் பிடிக்கும். ஓய்வாக இருக்கிற சமயங்களில், எதையாவது போட்டுப் பார்ப்பார்கள்!



அவ்வப்போது மனோகரியும் கூட உட்கார்ந்து, கிண்டலடிப்பாள். பழைய படங்களில், உடை, பேச்சு முறை என்று, அவள் கிண்டலடிக்கவும் நிறைய இருக்கும்!

அப்படி, இந்த மந்திரிகுமாரியையும் பார்த்த நினைவு, அவளுக்கு இருந்தது!

அதில் கணவன் மலைமீது... மனைவியை...

சட்டெனக் கண்கள் விரிய, "என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு, இது சரளா? ரஞ்சன் எதற்காக என்னை... சேச்சே!" என்றாள் அவள்.

சிறு மௌனத்தின் பின், "உனக்குச் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன்! ஆனால்... இதுகூட, எல்லாமே நான் கேள்விப் பட்டதுதான்! படிக்கும்போதே, அந்த வயதிலேயே, பிரியனுக்கும் சாயாவுக்கும் ஒரு... ஒரு நெருக்கம் உண்டு என்கிறார்கள். பள்ளிப் படிப்பு முடிந்ததும், இருவரும் வெவ்வேறு கல்லூரி! அவள் டாக்டர் ஆகும்போதே, திருமணம் ஆகி விட்டதாம்! அப்புறம் பார்த்தால், ஐந்து மாதங்களுக்கு முன்பு திடீரென்று அவளை இங்கே கூட்டி வந்து நிற்கிறார், பிரியன்! அவள் டைவர்ஸ் வாங்கப் போகிறாள் என்றார்கள்! கிட்டத்தட்ட விவாகரத்து கிடைக்கிற நிலை என்றும் சொன்னார்கள்! ஆனால், அதற்கு முன் இங்கே கூட்டி வந்து... எங்கள் பெரியப்பா, பிரியனைக் கூப்பிட்டுக் கேட்டதாகக் கூடக் கேள்வி! அதனால் தான், பிரியனின் திடீர்த் திருமணம் நடந்ததோ என்ற பேச்சுக்கூட, உண்டு! ஆனால், எனக்கு அதில் நம்



பிக்கை இல்லை! மனைவி என்று வருகிறவள், கேள்வி கேட்க மாட்டாளா? அப்புறம், அப்புறம், இரண்டு பேருக்கு நடுவில் நடுங்கிக் கொண்டு நிற்கப் பிரியன் என்ன முட்டாளா?" என்று சீரியசாகத் தொடங்கிய போதும், கடைசியில் வேடிக்கையாகக் கேட்டு முடித்துக் குலுங்கிச் சிரித்தாள் சரளா!

அது போன்ற கற்பனைக் காட்சியில் மனோகரிக்கும் சிரிப்பு வந்துவிட, அந்தப் பேச்சு, அப்படியே போயிற்று.

சரளாவின் பேச்சின் முற்பகுதியை, அவள் பெரிதாக எண்ணவில்லை! வெறும் வதந்தி என்பது, அவளுக்கு நிச்சயம்! ஏனெனில், அவளது திருமணம் எப்படி நடந்தது என்பதுதான், அவளுக்கு நன்றாகத் தெரியுமே!

அடுத்தடுத்த வேலைகளிலும், அடுத்த நாளைக்கான திட்டங்களிலுமாக, சரளாவின் எச்சரிக்கை பற்றி மீண்டும் நினைவுகூட மனோகரிக்கு வரவில்லை!

ஆனால், அன்று மாலையில் ரஞ்சனனோடு உலாவப் போனபோது, மலை மேலே ஏற.. ஏற, உள்ளூர ஒரு விதிர்விதிர்ப்பை மனோகரி உணர்ந்தாள்.

எங்கெங்கிருந்து விழுந்தால், ஓர் எலும்புகூட உருப்படியாக மிஞ்சாது என்று கணக்கிட்டு, உள்ளம் சிலிர்த்தது!

உள்ளத்தின் சிலிர்ப்பை, உடல் பிரதிபலித்ததோ?

"குளிர்கிறதா?" என்று கேட்டான் பிரியரஞ்சன். "எதற்கும், நாளைக்கு வரும்போது, ஒரு சால்வை எடுத்து வா, குளிராது!"

ஏதோ ஒரு விதமாக, அவனது அந்த 'நாளைக்கு' என்ற பதம், அவளுக்கு அமைதியைத் தந்தது! அன்று, அவளது கதையை முடித்துவிடத் திட்டமிடுகிறவன், நாளையைப் பற்றி ஏன் பேசப் போகிறான்!

ஒரு சிநேகிதி, நட்பில் விளைந்த அக்கறையில், எதற்கும் இருக்கட்டும் என்று, ஒரு வார்த்தை எச்சரித்து வைத்தாள்! அதைப் பெரிதாக எண்ணி, மனதைக் குழப்பிக் கொள்வது, எவ்வளவு முட்டாள்தனம்!

அவ்வப்போது, இப்படி முட்டாள்தனம் செய்வதே வழக்கமாகி விட்டது!

மனோகரி தன்னைத் தானே மனதுக்குள் சாடிக் கொண்டிருந்தபோது, பிரியரஞ்சன், "இங்கே, கொக்குப் பிடிக்கக் கூடிய இடம் காட்டுகிறேன் என்றேனே! நினைவிருக்கிறதா?" என்று, உதட்டோரம் மட்டும் துடிக்க, சாதுவாக வினவினான்.

எப்போது ...? சுந்தர் அத்தான், சௌமினி திருமணத் துக்கு முந்திய நாள்! ஆனால், இப்போது ஏன், அதை நினைவு படுத்துகிறான்?!

திடுக்கிட்டு, அவனைப் பார்த்தாள் அவள்.

புன்னகை செய்து, "இன்று அந்த இடம் பார்க்கப் போகலாம்!" என்றான் அவன் இலகுவாகவே!

உள்ளே பிரியமற்று, தங்கைக்காகச் செய்யும் தியாகமாக அவளை மணந்தவன்!

அன்றைய நடப்புகள் அத்தனையும் நினைவு வர, வேண்டாம் என்று கத்தலாம் போல இருந்தது, அவளுக்கு!



ஆனால், என்ன காரணம் சொல்லி மறுப்பது?

அவளது பயத்தைச் சொல்லி ஒரு மாற்றும் இல்லை! நஷ்டம்தான்!

சந்தேகம் உண்மையாக இருந்தால், என்றோ நடத்தத் திட்டமிட்டது, இன்றே நடந்து விடும்! இந்த மலையில், அவனிடமிருந்து தப்புவது கடினம்!

தவறாக இருந்தாலோ, அநியாயக் குற்றச்சாட்டால், அவனை வருத்துவது மட்டுமின்றி, அவளுக்கும் முட்டாள் பட்டம் நிச்சயம்! ஒன்றும் பேசாமல், வாயை மூடிக் கொண்டு, கவனத்தோடிருப்பது உத்தமம்!

"இங்கே சற்று ஆபத்தான இடம்! அதனால்தான், மலையில் நடப்பது பழகிய பிறகு பார்க்கலாம் என்று, இத்தனை நாள் தள்ளிப்போட்டேன்! எதற்கும், கையைப் பிடித்துக் கொள்!" என்று, அவளது கையைப் பற்றி அழைத்துப் போனான், அவளுடைய கணவன்!

விட்டால், திரும்பி ஓடி விடுவாள் என்று, பிடித்து இழுத்துக் கொண்டு போகிறானோ?

கைப்பிடியில் அவள் இருந்தால், தள்ளி விடுவதும் எளிதாக இருக்குமோ?!



## 15

**அன்று** பிரியரஞ்சன் மனோகரியை அழைத்துச் சென்ற பகுதி, அன்று வரை, அவர்கள் சென்றிராத இடம்.



அது, பொது இடம் அல்ல என்பதைக் குறிப்பது போல, மூன்றடி உயரத்தில் சிறு வேலி ஒன்று, இரு புறமுமாகக் கண்ணுக்கெட்டிய தூரம் வரை சென்றது.

'இந்த வேலியில் இருந்து, நம் வேலை நடக்கிற சிற்றணைப் பகுதி தொடங்குகிறது.'' என்று அதிக உயரமற்ற அந்த வேலியை எளிதாகத் தாண்டிய பிரியரஞ்சன், அவளது இடையில் கைவைத்து, அவளும் தாண்டிவர உதவி செய்தான்.

அவர்களது வேலை நடக்கும் இடத்தை அவளுக்குக் காட்ட எண்ணியிருக்கிறான்!

அவ்வளவு நேரம் மனோகரியுள் இருந்த படபடப்பு, மெல்ல அடங்கியது!

சற்றுத் தூரம் சமதரையைக் கடந்தபின், மறுபடியும், இன்னொரு வேலி ஓடியது!

"அது தாண்டிப் போவது, அவ்வளவு பாதுகாப் பில்லை, மனோ, ஆனால், இங்கிருந்து பார்த்தால், சரியாகத் தெரியாது! என்னை இறுகப் பிடித்துக் கொண்டு பார்!" என்று, அடுத்த வேலியையும் தாண்டி, அவளையும் கூட்டிச் சென்று காட்டினான் பிரியரஞ்சன்.

பிரமிப்பாக இருந்தது, மனோகரிக்கு!

கொடைக்கானல் சாவு முனையைப் போல கிடுகிடு பள்ளம்! அடியில் கொஞ்சம் தண்ணீர் கிடப்பது போலத் தோன்றியது! ரொம்பத் தூரத்தில் கீழே கட்டுமானப் பணி நடப்பது தெரிந்தது.



"அதுதான் நம் வேலை நடக்கும் இடம்! ஆழம் அதிகமாக, ஆகத் தண்ணீரின் அழுத்தம் அதிகம் ஆகு மல்லவா? அதற்கேற்றபடி பலமாகக் கட்ட வேண்டும்! தென் மேற்குப் பருவமழை தொடங்கும்முன் ஓரள வேனும் உயரம் வந்துவிட்டால், நிறையத் தண்ணீர் வீணாகாமல் காக்கலாம்!'' என்று, ஆர்வத்துடன் விவரித்தான் ரஞ்சன்!

"எவ்வளவு ஆழத்தில், எவ்வளவு பெரிய இடம்! இது நிறையத் தண்ணீர் என்றால்... அடேயப்பா! சின் னக் கடல் மாதிரி ஆகிவிடும்! இதைப்போய்ச் சிற் றணை என்கிறீர்களே!" என்று வியந்தாள் மனோகரி!

"இது சின்னதுதான், மனோ! ஸ்ரீசைலம் அணைக் கட்டு பார்த்திருக்கிறாயா? மேலே, கார் பஸ் எல்லாம் போகிற பெரிய ரோடு இருக்கிறது! அங்கிருந்து பார்த்தால், கீழே நிற்கிற கார், மனிதர்கள் எல்லாம் விளையாட்டு பொம்மைகள் போலத் தெரிவார்கள். அந்த அணையில் தண்ணீர் நிரம்பி இருக்கும்போது, நீ சொல்லுகிற கடல் போன்ற தோற்றம் அதற்கு வரும்!"

பேச்சு ஒரு புறம் நடக்க, அவனது கையணைப்பில் நிற்பது, கதகதவென்று தனிச் சுகமாக இருக்க, அங்கிருந்து அசையவே, அவளுக்கு மனமில்லை!

அவனுக்கும் அந்த நிலை பிடித்திருந்ததோ, அல் லது, அது பற்றிய எண்ணமே இல்லையோ, அப்படியே நின்றபடி தன் வேலையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனான்.

ஆனால், எதற்கும் ஒரு முடிவு உண்டல்லவா?

திடுமெனச் சுய நினைவுக்கு வந்தவன் போலக் கைகடிகாரத்தைப் பார்த்து, 'நேரமாகிவிட்டது, மனோ! இதற்கு மேல், இங்கே நிற்பது நல்லதில்லை! இரவில் சுற்றும் பூச்சு பொட்டுகள், மிருகங்கள் எல்லாம், சீக்கிரமே வெளிவரத் தொடங்கிவிடும். நேரடியாக, மேலே பாய்கிற பெரிய மிருகங்கள் இங்கே இல்லை என்றாலும், உடனே கிளம்பி விடுவது, நல்லது! வா, போகலாம்!'' என்று ரஞ்சன் அவளை வேலி தாண்டித் தூக்கிவிட்டுவிட, சற்று விரைவாகவே நடந்து, இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்!

பாதுகாப்புக்காகத்தான் என்று தனக்குத்தானே பலமுறை சொல்லிக் கொண்ட போதும், ரஞ்சனின் நெஞ்சுத் துடிப்பையும், உடல் சூட்டையும் உணர்ந்தபடி மலை மேல் நின்றது, திரும்பத் திரும்ப மனோகரிக்கு நினைவு வந்தது!

அந்தக் குளிருக்கு, அவனது கையணைப்பின் கதகதப்பு எவ்வளவு சுகமாக இருந்தது!

அதன் பிறகு, தினமுமே, அந்த மலைப் பகுதிக்குப் போய் வருவதும் வழக்கமாயிற்று!

இப்படி மூன்று தினங்கள் சென்ற பிறகு, திடுமென மேகங்கள் சூழ்ந்து, காற்றுடன் கூடிக் கன மழை பெய்யலாயிற்று!

பருவ மழை பற்றிக் கணவன் சொன்னது நினைவு வரக் கவலையுடன் அவள் பார்த்தபோது, ''இது இங்



குள்ள பருவ மழையல்ல, மனோ! அது, தாரையாக ஊற்றும்! இந்த மழை, வங்கக் கடலில் உருவான புயல், மேற்கு நோக்கித் தரையைக் கடப்பதால் வந்தது! ஓரிரு நாட்களில், மழை நின்று, வேலையைத் தொடங்கிவிடலாம்'' என்றான் அவன்.

ஆனால், மழை நிற்குமுன் பெரும் பிரச்சனை ஒன்றைப் பிரியரஞ்சன் சமாளிக்க வேண்டியதாயிற்று!

டவர் இல்லாத காரணத்தால், அங்கே செல்போன் வசதி கிடையாது!

தரைவழி போனும், வீடுகளுக்குக் கிடையாது! அதிக பட்சமாக இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒரு வேலையை இழுத்துக் கொண்டிருப்பது இல்லை என்பதால், அந்தக் குறுகிய காலத்துக்காக, டெப்பாசிட் கட்டி டெலிபோன் எடுப்பது வீண் என்பது நிர்வாகத்தின் முடிவு. அவசியம் என்றால், நிறுவனத்தின் நிர்வாக அறைக்குச் சென்று, உரிய பணத்தைச் செலுத்தி விட்டுப் பேசிக் கொள்ள, எல்லோருக்குமே அனுமதி இருந்தது!

மனோகரியும் அப்படித்தான், அவ்வப்போது வீட்டினருடன் பேசிவிட்டு வருவாள்.

இது அவளுக்குப் பல வகையில் வசதியாகவே இருந்தது!

நீ சுகமா? நான் நலமே, வெள்ளைப் பசு கன்று போட்டதா? சின்னப் பாட்டியுடைய கடைசி மருமகளுக்காவது, அவர்கள் ஆசைப்பட்டபடி பெண்



குழந்தை பிறந்ததா? கோவில் உற்சவம் நன்றாக நடந்ததா? என்று, இந்த மாதிரிக் கேள்விகளை அடுக்கிவிட்டு, ''நேரமாகிவிட்டதும்மா, வைக்கிறேன்'' என்று பேச்சை முடித்து, சிக்கலான கேள்விகளுக்கு இடம் கொடாமல் போனை வைத்துவிட முடிந்தது!

கண்ட நேரத்தில் யாரும் போன் செய்து வம்படிப்பதற்கும் வழியிருக்கவில்லை!

அன்று மழை காரணமாக யாரும் வீட்டை விட்டு வெளியே வராததால், பிரியரஞ்சன் வீட்டில் இருக்க, அவரவரின் சிறு வயது, படித்த காலம், இன்னும் மனதில் தோன்றிய கதையெல்லாம் இருவருமாகப் பேசியபடி பொழுதைக் கழித்தது, மனோகரிக்கு மிகவும் பிடித்தது!

எல்லாக் கணவன் மனைவியும் இப்படித்தானே இருப்பார்கள்?

சுந்தரும், சௌமினியும் கூட, இப்போது இதே போலத்தான் இருப்பார்கள்! சிரிப்பும் கேலியுமாக, வேடிக்கையும் விளையாட்டுமாக!

ரஞ்சனும் மனோகரியும் கூடக் கிட்டத்தட்ட அப்படித்தானே இருக்கிறார்கள்?

கிட்டத்தட்ட...

எல்லோரையும் போன்றதான வாழ்வு, தனக்கு ஏன் அமையவில்லை என்று ஒரு கணம் மனோகரியின் மனம் மிகவும் ஏங்கியது!

ஆனால், உடனேயே, 'எல்லாமே கிடைத்துவிட்டால், மனிதன் கடவுளை அடியோடு மறந்து போவான்'



என்று, தந்தை ஒருதரம் சொன்னது நினைவு வந்தது. அவளை அமைதிப் படுத்தியது!

எல்லாமே முழுகிப் போனதாக எண்ணி, ஒருமுறை தற்கொலைக்கே முயன்றவள்தானே, அவள். இந்த அளவு கடவுள் தரவில்லையா? இன்னமும் தருவார்!

''ஹேய், என்ன? காய்களை, இப்படி நகர்த்தி, அப்படித் தாக்கி, அப்புறம் வைத்து என்று, நீளமாய்ப் பயங்கரத் திட்டம் போடுகிறாய் போல! ஒன்று செய்யட்டுமா? நீ அடுத்த காய் நகர்த்தியதும் கூப்பிடு! நான் அதற்குள் ஒரு சின்னத் தூக்கம் போட்டுவிட்டு வந்து விடுகிறேன்.'' என்று கொட்டாவி விடுவது போலப் பிரியரஞ்சன் பாவனை செய்யவும், மனோகரிக்கு மனநிலை மாறிச் சிரிப்பு வந்தது!

பின்னே?

இரவு உணவு முடிந்து, இருவருமாகச் செஸ் விளையாடும்போது, அவன் குனிந்து காயை நகர்த்த யோசிக்கையில், அவனது கருத்தடர்ந்த சிகையைப் பார்த்துவிட்டு, அவள் தன் போக்கில் வேறு ஏதேதோ எண்ணமிடத் தொடங்கிவிட்டால், அவன் அப்படித்தானே ஏதாவது கேட்பான்?

ஆனால், கொட்டாவியெல்லாம் ரொம்ப அதிகப்படி! அதற்குமேல், தூங்குவானாமே!

''அடடா! நீங்கள் இப்படிப்பட்ட தூங்கு மூஞ்சி என்று தெரியாமல் கழுத்தை நீட்டி விட்டேனே!'' [illegible]று பெரிதும் கவலைப்படுவது போல அவள் [illegible] கொடுக்க, இருவருமே சிரித்தார்கள்!

இந்தச் சிரிப்பொலியினூடே, சுருதி தப்பினாற் போல, இன்னொரு சத்தம் கேட்டது.

யாரோ அவசரமாகக் கதவைத் தட்டும் ஒலி!

இந்த நேரத்தில் யார்?

நகைகள், அதிகப் பணம் என்று யார் வீட்டிலும் வைத்துக் கொள்வது இல்லை என்பதோடு, குடியிருப்புப் பகுதியின் காவலுக்கு ஆளும் உண்டு என்பதால், அங்கே திருட்டுப் பயம் இருந்ததில்லை!

கதவைத் தட்டுவதோடு, "ஐயா, அய்யா!" என்று யாரோ பதட்டத்துடன் அழைக்கும் குரலும் கேட்கவே, பிரியரஞ்சன் வேகமாக போய்க் கதவைத் திறந்தான்.

கதவை தட்டியவன், ரஞ்சனுக்கு அறிமுகம் ஆனவனே என்பதால், "என்னப்பா சுருளி, என்ன விஷயம்?" என்று வினவினான்.

அவன், அப்படியே ரஞ்சனின் காலடியில் விழுந்து விட்டான்! "அய்யா, நீங்கதானுங்கோ, என்ற புள்ளையக் காப்பாத்த வேணுமுங்கோ! மனைத்தண்ணி வளுக்கு மின்னு சொல்லச் சொல்லக் கேக்காம, அம்மா வாசைக்கு மின்னே தேனெடுக்க வேணுமின்னு, சரிவுல உள்ள மரத்து மேலே ஏறி விழுந்து, எலும்பு ஒடஞ்சு ரத்த காயம் ஆகிப் போச்சுதுங்கோ! தூக்கிட்டுப் போயி, டாக்கிடரம்மா கிட்டப் போட்டமுங்கோ! அம்மிணி, புது ரத்தம் ஏத்தாங் காட்டிப் பொளைக்காதுண்றாங்கய்யா. பாவிப் பயலுக்குப் போன மாசந்தான் கண்ணாலம் கட்டி... அந்தப் பொண்ணு



மொகத்தப் பார்க்க முடியலைய்யா! அய்யாதான் பெரிய மனது பண்ணி, டவுனுக்குக் கூட்டிக்கிட்டுப் போயி, எங்கூட்டுப் பிள்ளையைக் காப்பாத்த வேணுமுங்கோ! இந்த மழையில, வேறே யாரும் வண்டி எடுக்க மாட்டாங்கய்யா! நீங்கதான் வரணுங்கோ, என்ற சாமி!" என்று ரஞ்சனின் காலில் விழுந்தான் வந்த மலைவாசி.

வயிறு கலங்கியது மனோகரிக்கு!

அங்கே ஓர் உயிர்! பெற்றவனையும், கட்டியவளையும் விட்டுப் பிரிய மனமற்றுத் தவித்துக் கொண்டு இருந்தது.

ஆனால், இந்த இருட்டு, மழையில், அகலக் குறைவான மலைப் பாதையில், ஜீப்பை எப்படி ஓட்ட முடியும்? ஓட்டுகிறவனுக்கும் சேர்த்து ஆபத்தாயிற்றே!

உன் பிள்ளையின் தப்புதானே என்று மறுத்துவிட மாட்டானோ என்று எண்ணும்போதே, ரஞ்சன் மறுக்க மாட்டான் என்பதும் அவளுக்குத் தெளிவாயிற்று!

இது போன்ற பல்வேறு உதவிகளைப் பலன் கருதாது செய்வதாலேயே, அந்த மலைப் பகுதி மக்களுக்கு ரஞ்சனிடம் மிகுந்த பிரியம். அவனது வார்த்தைக்கு அங்கே பெரு மதிப்பு என்று, அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

உலாவச் செல்லும்போது எதிர்ப்பட்டால், மரியாதையோடு வணங்கி, 'பளம் ஏதாணும் பறிச்சுத் தரட்டுங்களா, அய்யா?' என்று கேளாமல், எந்த



மலைவாசியும் தன் வழியே சென்று, அவளே பார்த்ததில்லை.

அவர்களில் ஒருவன் நம்பி வரும்போது, ரஞ்சன், அவனை எப்படிக் கைவிடுவான்?

அதற்கு ஏற்றாற்போல அவனும், "நீ முதலில் போய், உன் மகனைப் பயணத்துக்குத் தயார் பண்ணும்படி, டாக்டரம்மாவிடம் சொல்லு, அவர்களும் கூடவே வரட்டும். அப்போதுதான் வழியில் ஏதேனும் பிரச்சினை என்றாலும் சமாளிக்க முடியும். ஷெட்டுக்குப் போய் வண்டியை எடுத்துக் கொண்டு, நான் பின்னோடு வந்து விடுகிறேன்." என்று அந்த மலைவாசி சுருளியை அனுப்பிவிட்டு, வேகமாக உள்ளே போய், வண்டிச்சாவியை எடுத்து வந்தான்.

முகம் வெளுத்து நின்ற மனைவியைப் பார்த்ததும், அவளது கன்னத்தைத் தொட்டு, "ஆபத்தான நிலையில் இருக்கும் ஓர் உயிரைக் காப்பாற்ற வேண்டும், மனோ! இதில், நம்மை மட்டும் பார்த்துக் கொண்டு, சும்மா இருக்க முடியாது!" என்றான் மெதுவாக.

மின்னலைப்போல், மூளைக்குள் ஏதோ பளிச்சிட்டது!

அன்றைக்கும், அவளது உயிரைக் காப்பாற்றத்தான், பிடிவாதமாக மணந்தானா? அப்போதும், அவன் தன்னை நினைக்கவில்லைதானே? அவனது எதிர்காலம் பற்றி... மகிழ்ச்சியான இல்லறம் பற்றி...

வெளியேயும் மின்னலொன்று வெட்டியது! மனோகரியின் மனமும், நிகழ்வுக்குத் திரும்பியது!



கண் கூசும் மின்னலும், அமாவாசை இருட்டும், வழுக்கும் மழையும்!

"ஆனால் இந்த இருட்டில்... மழை வேறு... மலைப் பாதையில் இறங்குவது... ஆபத்தில்லையா?" என்றபோது, அவளது குரல் நடுங்கியது.

ஆறுதலாய் அவளது தலையை வருடி, "பழகிய பாதைதானே? கவனமாக இருப்பேன்! கவலைப்படாதே!" என்றான் அவன்.

அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தவளுக்கு, நெஞ்சை அடைத்துக் கொண்டு வர, எதிலிருந்தோ காப்பவள் போல, இரு கைகளாலும் அவனை இறுக அணைத்தாள்.

உடனேயே, அங்கே தவித்துக் கொண்டிருக்கும் உயிரும், அதைக் காப்பாற்றத் துடிக்கும் கணவனின் மனமும் நினைவு வரச் சட்டென விலகி, வழி விட்டாள்.

நிறுவனத்தாரின் குடியிருப்பு வீடுகள் தொடங்கும் இடத்துக்கு முன்னதாகச் சற்று ஒதுக்கமாக, வாகனங்களை நிறுத்தும் இடம் இருந்தது!

கண்ட நேரத்தில், ஜீப்பை, லாரியைக் கிளப்ப வேண்டியிருக்கும், அனாவசியமாக அடுத்தவர் தூக்கம் கெடுவானேன் என்பது பிரியரஞ்சனின் வாதம்!

எப்போதும், எல்லோருக்கும் நன்மை எண்ணுகிற மனம்! அவனை என்னென்னவோ நினைத்தாளே!

ஷெட் வரை நடந்து சென்ற ரஞ்சன் காரைக் கிளப்பி, அது செல்லும் ஓசை தேய்ந்து மறையும்வரை, மனோகரி அங்கேயே, அசையாமல் நின்று கொண் டிருந்தாள்.

நிஜமாகவே, பிரியரஞ்சன் நல்லபடியாகத் திரும்பி வருவானா?

அவன் சொல்லியிருக்கிறான்! சொன்னபடி, கவன மாகவே இருப்பான் என்று, அவளது உள் மனது சொல் லத்தான் செய்தது!

அவன், தன்னை நினைக்கிறானோ, இல்லையோ, ஓர் உயிரைக் காப்பாற்றும் துடிப்புடன் செல்கிறவன், அந்த உயிருக்கு ஆபத்து நேர விடமாட்டான்?

அந்த உயிர் மட்டுமின்றி, ரஞ்சனை அழைக்க வந்த அந்தச் சுருளி, அவசரச் சிகிச்சைக்காக உடன் செல்லும் டாக்டர் சாயா... எல்லோரின் பொறுப்பும், அவனது தானே?

அவர்களுக்காகவும் ரஞ்சன் அதிகப்படி கவனத் துடன்தான் வாகனத்தை ஓட்டுவான்.

ஆனால் என்னதான் கவனத்துடன் ஓட்டினாலும், மனித முயற்சியைக் காட்டினாலும் வலுவுள்ளதாய், விதி என்று ஒன்று இருக்கிறதே!

கடவுள் இனமும் நல்லது செய்வார் என்று இன்று தானே நினைத்தாள்! ஆனால் விதி, மழையும் இருட் டும் மிகுதியாக இருக்கும் இந்த நேரத்தில் வளைந்து செல்லும் மலைப் பாதையில், அவனை ஜீப்பை ஓட்ட வைத்திருக்கிறதே!



அவனைத் தப்பாக நினைத்ததற்காக, அவனுக்குத் தண்டனையா?

என்னென்னவோ எண்ணிக் கலங்கிய மனோகரி வாய் விட்டுப் புலம்பாத குறைதான்!

தன்னந்தனியே உட்கார்ந்து, இப்படியெல்லாம் அவள் தன்னைத்தானே வதைத்துக் கொண்டிருந்த போது, குடையைப் பிடித்துக் கொண்டு, சரளா வந்து சேர்ந்தாள்.

தனிமைக் கொடுமையிலிருந்து விடுதலை என்று, மனோகரி அவளை உள்ளூர ஆறுதலோடு அவளை வரவேற்க, "என்ன மனோகரி, பிரியன் ஜீப்பை எடுத்துக் கொண்டு வேகமாகச் செல்வதைப் பார்த் தேனே! இந்த இரவில், உன்னை இங்கே தனியே விட்டுவிட்டு, அவ்வளவு அவசரமாக எங்கே போகி றார்?" என்று முகத்திலும், குரலிலும் கவலையுடன் கேட்டாள், மற்றவள்!

"வேகமாகவா? வேகமாகவா போகிறார்? கவ னத்துடன் ஓட்டுவேன் என்றாரே!" என்று கவலைப் பட்ட மனோகரியைச் சமாதானப்படுத்தி, சரளா மீண்டும் விவரம் கேட்டாள்!

விஷயம் அறிந்ததும், "அடப் பாவமே! முன்னே தான், இப்படி என்றால், இப்போது, திரும்பவுமா தொடங்கிவிட்டார்கள்?" என்று, ஆச்சரியமும், அருவருப்புமாகக் கூவினாள் அவள்!

அவள் சொல்வது புரியாமல், திகைப்புடன் விழித் தாள் மனோகரி!





# 16

சற்றுத் திகைத்துவிட்டு, "ஏன் சரளா, மலைவாசிகள் காட்டில் தேன் எடுப்பது, விற்பது எல்லாம் வழக் கம்தானே? இங்கே ஏதும் தடை இருந்து, அதை மீறி, அவன், அந்தச் சுருளியுடைய மகன் தேனெடுத் தானா?" என்று வினவினாள் மனோகரி!

ஆனால் அதில் இப்படி அருவருப்பதற்கு என்ன இருக்கிறது!

"ஐயோ!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் சரளா. "நீ இப்படி இருந்தால் எல்லோரும், எல்லாம் தான் செய்வார்கள்!" என்று சலிப்புடன் நொந்து பேசினாள்.

"நீ சொல்வது, எனக்கு ஒன்றுமே புரியவில்லை, சரளா, என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் கலங்கிப் போயிருக்கிறது! இந்த இருட்டு, மழையில் மலைப் பாதையில், ரஞ்சன் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருக் கிறாரே என்று அதே கவலையும் பயமுமாக இருப் பதால், எனக்கு வேறு எதுவும் மனதில் படமாட்டேன் என்கிறது! அதனால், எதைச் சொல்வது என்றாலும், கொஞ்சம் தெளிவாகப் புரியும்படி சொல்லு!" என்ற மனோகரி ஓர் இடி இடிக்கவும் நடுங்கி, மழையில் எதனாலோ பிரேக் சரியாகப் பிடிக்காது என்பார்களே! நம் நிறுவனத்து ஜீப்பில் பிரேக் எப்படி என்று,



உனக்குத் தெரியுமா, சரளா?" என்று கவலையுடன் வினவினாள்!

அவளை ஒரு பார்வை பார்த்து, "அதெல்லாம் பக்காவாக, நன்றாகத்தான் இருக்கும்! மலைப் பாதை யில் ஓட்டுவது என்பதால், வண்டிகளைச் சரியான நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதில், பிரியன் ரொம்பக் கண்டிப்பாக இருப்பார் என்று அண்ணன் சொல்வான்! அப்படி இருந்தால்தான், எதையாவது சொல்லிவிட்டு, நினைத்த நேரத்தில் வாகனங்களை எடுக்க வசதியாக இருக்கும்!" என்றாள் சரளா, ஒரு மாதிரியாக!

மனோகரி சற்று ஆசுவாசமாகப் பெருமூச்சுவிடவும், "ஆனால், நான் சொல்ல நினைத்தது, பிரேக் பற்றி யல்ல!" என்றாள் எரிச்சல் கலந்த குரலில்!

நினைவு வந்தாற்போல, "ஆமாமில்லை? அந்தச் சுருளியுடைய பையன் தேன் எடுத்தது பற்றி ஏதோ சொல்..." என்ற மனோகரியை இடைமறித்து, "சொல்ல வில்லை!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்தாள் சரளா.

மனோகரி திகைப்புடன் பார்க்கவும், "சுருளியுடைய மகன் தேனை எடுத்தாலும், எடுக்காவிட்டாலும், அந்தத் தேன் முழுவதையும் அவன் ஒருவனாகவே குடித்து, வாந்தி பேதி எடுத்து செத்தாலுமே, அது பற்றி, நமக்கு என்ன வந்தது, மனோகரி?" என்று, அவளையே கேள்வி கேட்டாள் மற்றவள்.

மேலும் திகைத்து, "ஐயோ! ஓர் உயிர், சரளா! தேன் எடுக்கப் போய்க் கீழே விழுந்ததில், சுருளி மகனுக்கு

உயிருக்கே ஆபத்தாகிவிட்டது! அதனால்தான், ரஞ்சனும், டாக்டரும் அவனை நகரத்து மருத்துமனைக்கு அழைத்துப் போயிருக்கிறார்கள்!'' என்றாள் மனோகரி பதிலாக.

''பின்னே? ஏதாவது ஒரு சாக்கு வேண்டாமா?''

யோசனையோடு அவளைப் பார்த்தாள் மனோகரி.

''இதோபார் மனோகரி, உனக்குப் புரியும் வித மாகத் தெளிவாகப் பேசச் சொன்னாய். இதோ சொல்லி விடுகிறேன்... கேட்டுக் கொள்! இங்கே பிரியனைப் பற்றியும், சாயாவைப் பற்றியும் நிறையப் பேச்சு அடிபட்டிருக்கிறது! சும்மா ஏதாவது சின்னக் கார ணத்துக்காக நகரத்துக்குப் போய், இருவரும் தங்கி விட்டு வருவதும், உண்டுதான்! டாக்டருக்கு விவாக ரத்து கிடைக்கப் போகிறது என்றாலும், .... எப்படி என்று எல்லோரும் கிசுகிசுப்பார்கள்... அதுதான்...'' என்று ஓர் இழுப்புடன் முடிந்தாள் சரளா!

சரளாவின் பேச்சின் பாதியிலேயே சுளித்த புருவம் மாறாமல், ''அவனுக்கு ரத்தம் ஏற்றாவிட்டால், செத்து விடுகிற நிலை! இது, சின்னக் காரணம் ஆகுமா? என்ன?'' என்றாள் மனோகரி!

''சே! செத்துவிடுகிற நிலை என்றால், எவ்வளவு பெரிய விஷயம்! நம் முட்டாள் ஜனங்கள், இதைப் புரிந்து கொள்ளவே மாட்டார்கள்! ஒன்றும் புரியா மலே, தெரிந்து கொள்ளவும் முயலாமல் ஏதாவது உளறுவார்கள்! கம்பெனியில், காரோட்டி என்று எதற்கு வைத்திருக்கிறார்கள் என்பார்கள்! அதைக்கேட்டு.



நானும் வந்து உளறினேன், பார்!'' என்று தன்னைத் தானே, ரொம்பவே நொந்து கொண்டாள் சரளா.

''போகிறது. விடு சரளா, உனக்கு முதலில் விஷயம் முழுதாகத் தெரியாதில்லையா?''

''தெரிந்தாலும், பாதிப்பேர் ஒத்துக் கொள்ள மாட் டார்கள், மனோகரி! மாதேயன்தானே காரோட்டி... அவனை அனுப்ப வேண்டியதுதானே என்பார்கள்! என்னதான் பழக்கப்பட்ட காரோட்டி என்றாலும், மாதேயனையெல்லாம் நம்பி, அனுப்ப முடியாது தானே? அத்தோடு, சாயா மாதிரிப் பெண்களுக்கு... அதாவது, டாக்டருக்குத் தேவையானது பார்த்துச் செய்யவும், மற்றவர்களுக்கு... அதாவது, மாதேயன் மாதிரி ஆட்களுக்குத் தெரியாது! சாயா சொல்கிற மருந்தை வாங்கிக் கேட்டு வாங்கிக் கொடுக்கக்கூடத் தெரியாது எனும்போது, பிரியன்தானே போயாக வேண்டும்! இதெல்லாம் தெரியாமல் உளறுகிறவர்கள், என்ன வேண்டுமானாலும் உளறித் தொலைக்கட்டும்! நாம் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல், கண்ணை யும், காதையும் மூடிக் கொள்ள வேண்டியதுதான்!'' என்று நீளமாக, மனோகரிக்கு ஒத்து ஊதும் வித மாகவே பேசி முடித்தாள் சரளா.

''யாருக்கு, என்னவோ, என்று ஓடி வந்தேன், யாருக்குக் கஷ்டம் என்றாலும், நமக்கு எப்படி மனம் பதறுகிறது பார்! ஆனால், நிறையப் பேருக்குக் கல் மனசு! சுருளி பையனுக்கு அடிபட்ட விஷயத்தையே நம்ப மாட்டார்கள்! பிரியனிடம் உள்ள விசுவாசத்தில், அவனுக்காகப் பொய் சொல்லியிருப்பான் என்றுகூடச்



கூசாமல் சொல்லுவார்கள்! ஆனால், இதையெல்லாம் நீ நம்பவேகூடாது, மனோ! வரட்டுமா?'' என்று விடை பெற்றவள், அதற்கு மேல் நில்லாமல், தன் வீட் டுக்குக் கிளம்பிப் போய்விட்டாள்!

குடையைப் பிடித்துக் கொண்டு சரளா செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்ற மனோகரிக்கு மீண்டும் மனம் குழம்பியது!

இப்படியெல்லாம் கூடவா, பேசுவார்கள்?

என்னவோ, சரளாவுக்கு எடுத்துச் சொல்லி, நம்ப வைத்தாயிற்று! ஆனால், அவள் சொன்ன மற்ற வர்கள்? யார், அந்த மற்றவர்கள்?

இங்கே குடியிருப்பில் உள்ளவர்கள் நன்றாகத்தான் பழகுகிறார்கள்! அவர்களில், யார் இப்படிப் புறம் பேசுகிறவர்கள்?

அல்லது, வீட்டு வேலைக்கு வருகிறவர்களா?

மற்ற தொழிலாளர்களா?

ஆனால், எல்லோருக்கும் நல்லது பண்ணும் ரஞ்சனைப் போய்த் தப்பாக எப்படிப் பேசுவார்கள்?

'சும்மா ஏதாவது சின்னக் காரணத்துக்காக நகரத்துக்குப் போய், இருவரும் தங்கிவிட்டு வருவது உண்டுதான்' என்று சரளா சொன்னது, திடுமெனக் காதில் ஒலித்தது!

அதை, அவள் ஒன்றும், அடுத்தவர் சொன்னதாகச் சொல்லவில்லையே! நிஜம்போல, நிச்சயமாகத் தெரிந் ததைச் சொல்வது போல அல்லவா, கூறினாள்!

அப்படியானால்...



சாயாவின் உடையும், அவள் தொட்டுத் தொட்டுப் பழகுவதும் நினைவு வர, மேலும் அவள் மனம் கலங்கியது!

ஏதோ ஒரு நெருக்கம் இல்லாமல், இது எப்படி முடியும்

ஒருவேளை... ஒருவேளை, அப்படியொரு நெருக்கம் நிஜமாகவே இருந்தது, அந்தச் சமயத்தில் தங்கையின் திருமணத்துக்காகச் சென்னைக்கு வந்தவன், மனோ கரியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அப்போது அவளை மணந்திருப்பானோ?

இப்போது, அந்தப் பழைய அன்பையும் விடமுடி யாமல்...

இல்லை. அப்படி ஏதும் இராது!

சாயா எப்படிப்பட்டவளோ, தெரியாது! ஆனால், பிரியரஞ்சன் தவறான வழியில் இன்பம் தேடுகிறவன் அல்ல! அவன் நல்லவன்! சுந்தர் அத்தானுடைய உயிர் நண்பன், ஒருபோதும் கெட்டவனாக இருக்க முடி யாது! அப்படிக் கெட்டவனாக இருந்திருந்தால், சுந்தரே, இந்தத் திருமணத்தைத் தடுத்திருப்பான்! அத்தோடு, ஒரு கெட்டவனால், இத்தனை பேருடைய அன்பையும் மரியாதையையும் நிச்சயமாகப் பெற முடியாது!

தனக்குள்தானே இப்படிப் பல்வேறு வாதப் பிரதி வாதங்கள் செய்து, தனக்குத்தானே நம்பிக்கையூட்டிக் கொண்டு மனோகரி ஒருவாறு அமைதியுற்றபோது, மழை நின்று, விடிகாலை வெளிச்சம் பரவத் தொடங்கி யிருந்தது!

சற்றுப் பொறுத்துத் திரும்பி வந்து, 'மாரி பிழைத்துக் கொண்டான்!'' என்று பிரியரஞ்சன் கூறியபோது மனோகரிக்கும் பெரிதும் நிம்மதியாக மட்டுமே இருந்தது!

கூடவே வந்த சாயா, ''அவளைக் கொட்டும் மழையில் கூட்டிப் போனது மட்டுமின்றி, அவனுக்கு ரத்தமும் கொடுத்துப் பிழைக்க வைத்தான் ரஞ்சி!'' என்று சொன்னபோது, அதில் சிறு சந்தேகம்கூட, அவளுக்குத் தோன்றவுமில்லை!

அவளுடைய கணவன் அப்படிச் செய்கிறவன்தான்!

''இவனை, இன்று அலுவலுக்குச் செல்ல விடாதே, மனோகரி! ரத்தம் கொடுத்தது மட்டுமின்றி, இரவு முழுவதும், ரஞ்சி தூங்கவும் இல்லை!... ஹையோ, உன்னைப் பார்த்தாலும், தூங்காத மாதிரித் தோன்று கிறதே! இந்தக் காற்று, மழையில் எப்படி ஓட்டிக் கொண்டு போனானோ என்று பயந்துவிட்டாயா? சரிசரி, இரண்டு பேருமாக, நன்றாகத் தூங்குங்கள், ரஞ்சி வரமாட்டான் என்று, கிளினிக் செல்லும்போது, அலுவலகத்தில் நான் விவரம் சொல்லி விடுகிறேன்!'' என்றாள் சாயா.

''நீங்களும்தானே தூங்கியிருக்க மாட்டீர்கள்?'' என்றபடி காபியை நீட்டினாள் மனோகரி!

''ஊகூம்! ஹவுஸ் சர்ஜனாகப் பயிற்சி பெற்றபோதே, கிடைத்த நேரத்தில் தூங்கக் கற்றுக் கொண்டவள் நான். அங்கே மருத்துவமனையில் ரஞ்சி ரத்தம் கொடுக்கத் தொடங்கி, மாரி பிழைத்துக் கொள்வான் என்று ஆனதுமே, அங்கே உள்ளவர்கள் பார்த்துக்



கொள்வார்கள் என்று, பார்வையாளர் [illegible] ஒன்றில் படுத்து நான், கும்பகர்ணியாகத் தூங்கிவிட்டேன்!'' என்று சாயா அபிநயத்தோடு விவரிக்க, மனோ கரிக்குச் சிரிப்பு வந்தது!

அன்றையத் தினம், ஏதோ இருட்டு முழுமையாக நீங்கி, வெளிச்சத்துக்கு வந்துவிட்ட மாதிரி, மனோகரி உணர்ந்தாள்!

பிரியரஞ்சனைப் பற்றி, உள்ளங்கை நெல்லிக்கனி என்பார்களே, அது போலத் தெளிவு!

அவனைப் பற்றி சுந்தர், அவளுடைய பெற்றோரிடம் வர்ணித்தது எல்லாம் மெய்தான்!

நல்லவன், அதே சமயம் தொழிலிலும் கெட்டிக் காரன்! மனிதாபிமானம் உள்ளவன். அதே சமயம், அவனை ஏமாற்றவும் முடியாது...இப்படி ஏகத்துக்கு அவன் புகழ்ந்ததைக் கேட்ட பிறகுதான், அவர்களது திடீர்த் திருமணத்துக்குக் குருநாதன் ஒத்து வந்ததே!

தன் குற்ற உணர்ச்சியைப் போக்கிக் கொள்வதற் காக, அவளை ஒருவன் தலையில் கட்ட, சுந்தர் விரும்பு கிறான். அதற்காகவே பிரியரஞ்சனைப் பற்றி இப்படி யெல்லாம் பேசுகிறான் என்று? மனோகரி அப்போது நினைத்தாள்!

ஆனால், இப்போது, சுந்தரை விடவும் அதிகமாக, ரஞ்சனின் புகழ்பாட அவள் தயாராக இருந்தாள்! ஆர்வமாக என்றும் சொல்லலாம்.

அது ஏன் என்பதிலும், அவளுக்கு ஓர் ஊகம் இருந்தது!



அன்றிரவு, ரஞ்சனின் உயிருக்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற தவித்த தவிப்பு, சரளா வந்து, சாயா, ரஞ்சன் பற்றிச் சொன்னதும் அவளை ஆட்டிப் படைத்த இன்னொரு விதமான பரிதவிப்பு, ரஞ்சன் திரும்பி வந்தபின் ஏற்பட்ட ஆறுதல்...

எல்லாவற்றுக்கும் அவள் கண்டுபிடித்த விடை அவளுக்கு வியப்போடு, பரவசத்தையும் ஏற்படுத்தியது!

அதே போல, இந்தப் பரவசத்துக்கு, அவனிடமும் பதில் இருப்பதாகவும், அவளுக்குத் தோன்றியது!

அவளைப் பற்றி ஒரு நிச்சயத்துக்காகக் காத்திருக் கிறாள் என்றும்!

விரைவிலே, அவர்களது அன்பு முழுமை அடை வது உறுதி என்ற தெளிவும் அவளுக்கு இருந்தது!

காய் பழுத்துக் கனியாவது போல, அது, இயற்கை யாக நடக்கும் என்பதும் அவளுக்கு நிச்சயமே!

வாழ்க்கையை ஆராய்ந்து, ஒரு நல்ல முடிவுக்கு வந்ததுபோல, இன்னொரு விஷயத்திலும், மனோகரி யோசித்து ஒரு தீர்மானத்துக்கு வந்து, அதைச் செயல் படுத்தவும் தொடங்கினாள்.

சாயாவையும் ரஞ்சனையும் பற்றிய வதந்திகளை, அவளிடமே நேரடியாக வந்து சொன்ன ஒரே ஒருத்தி, சரளாதான்!

மற்றவர்கள், அந்த இருவரையும் பற்றிப் பேசவே இல்லை என்று சொல்ல முடியாது! ஆனால், நெருங் கிய சினேகிதர்கள் என்பதற்கு மேலாக, அந்தப் பேச்சில் ஒன்றுமிராது!



இளவயது ஆண், பெண் என்கையில், அவர்களுக் கிடையே இருப்பது வெறும் நட்பு மட்டும்தான் என்பதைப் பலர் ஒத்துக் கொள்வதில்லை! எனவே சாயாவை, ரஞ்சன்தான் இங்கே அழைத்து வந்தான் என்பதால், அது பற்றியும், அவரவருக்கு, வேறு வேறு அபிப்பிராயங்கள் இருக்கக்கூடும்!

ஆனால், மற்ற யாவரும் மனோகரியின் முன்னிலை யில், அதைச் சற்றும் காட்டிக் கொண்டது கிடையாது!

நாகரீகம் கருதியும், அந்தப் பேச்சைத் தவிர்க்கலாம், அல்லது, நேரில் பாராத ஒன்றை, சம்பந்தப்பட்டவ னுடைய மனைவியின் முன் சொல்லி, அவளை வருத்தக் கூடாது என்ற நல்ல எண்ணமாகவும் இருக் கலாம்!

ஆனால் அந்த இரண்டுமே இல்லாமல், சரளா அதுபற்றியே பேசி, இரண்டு முறை அவளைக் கலங்க வைத்தது, சரியே அல்ல என்று மனோகரிக்கு இப் போது தோன்றியது!

மனோகரிக்கு நல்லது செய்வதற்காகவே கூட, அவள் சொல்லியிருக்கலாம்! ஆனால், நல்லதற்காகக் கூட, மனோகரியின் சொந்த வாழ்வில் தலையிடும் துணிவு, அவளுக்கு எப்படி வந்தது? மனோகரி, அவளிடம் தனிப்பட்ட நெருக்கம் காட்டியதால்தானே?

அந்த நெருக்கம் காட்டுவதை, மெல்ல நிறுத்தினாள் மனோகரி.

கைவினைப் பொருட்கள் செய்ய வரும்போது, மற்றவர்களுக்கு முன்னதாக வந்து, எல்லோரும்

சென்றபின் சற்று நேரம் தங்கியிருந்து திரும்பிப் போவது. அவ்வப்போது சரளா செய்வது! அந்த நேரங்களில் இருவருமாக எதையாவது பேசிக் கொண்டிருப்பார்கள்.

அப்படி அவளுடன் உட்கார்ந்து பேசுவதை, வேலை இருப்பதாகச் சொல்லி, மனோகரி தவிர்த்தாள்.

இரண்டே நாட்களில், நல்ல வேளையாகச் சரளாவுக்கும் வேறு வேலைகள் ஏற்பட்டுவிட, அவளாகவே, மனோகரியின் வீட்டில் அதிகநேரம் தங்குவதை நிறுத்திவிட, மனோகரிக்கு நிம்மதியாயிற்று!

மலைக்காட்டினுள், கணவனும் மனைவியுமாகக் கை, கோர்த்து சுற்றுவதிலும், இப்போது ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது!

வேலை நடக்கும் இடத்தில் இருந்து, அவர்களது வீட்டுக்கு வந்து, அவளைக் கூட்டிச் செல்லும்போது. மலைப் பகுதியில் அதிக நேரம் சுற்ற முடியவில்லை என்று கண்டு, அதைச் சீர்படுத்த, ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள்!

கண்டுபிடித்தார்கள், என்ன? கண்டுபிடித்தவன் ரஞ்சன்தான்!

ஆனால் அவளுக்கு இந்த மலைப் பாதைகள் நன்கு பழகிவிட்டதா என்று கேட்டு, கயிற்றுப் பாலத்தின் மீது, குறுக்கும் நெடுக்குமாக நாலுதரம் நடக்க வைத்துத் திருப்தியுள்ள பிறகே, ரஞ்சன், தன் யோசனையைச் சொன்னார்.

மாலை ஐந்து மணியளவில், வீட்டிலிருந்து கிளம்பி கயிற்றுப் பாலத்தின் வழியே அவர்கள் உலாவு



மலைப்பகுதிக்கு மனோகரி வந்துவிட்டாள். வேலை நடக்கும் இடத்திலிருந்து, குறுக்குச் சரிவில் ஏறி, ரஞ்சன், நேரே அங்கே வந்துவிடுவான்.

இதில், அவர்களுக்கு அரைமணி நேரம் கூடுதலாகக் கிடைக்கும்?

எதையாவது பேசியவாறு, ஒட்டி உராய்ந்தபடி நடப்பதும், நின்று இயற்கைக் காட்சிகளை ரசிப்பதுமாக, அந்த அதிகப்படி நேரத்தை ஆனந்தமாகக் கழிக்கலாம்! அதுவும், வேறு யாரும் இல்லாத தனிமையில், எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலில்!

இந்த விதமாகத் துள்ளும் உள்ளத்துடன் மனோகரி, பிரியரஞ்சனோடு குதூகலமாகச் சுற்றியது, நாலே நாட்களே!

ஐந்தாவது நாள், எல்லாமே தலைகீழாக மாறிப் போய், தோழியின் நன்மைக்காக, சரளா சூசகமாகக் குறிப்பிட்டவற்றை அலட்சியம் செய்தது எவ்வளவு பெரிய பிழை என்று மனோகரி நொந்து பரிதவித்து, சொந்த உயிருக்குப் பயந்து, திக்குத் தெரியாமல் அந்தக் காட்டில் அலையும்படி நேர்ந்தது!



## 17

அந்த ஐந்தாம் நாள் விடிந்தது என்னவோ, நல்லபடியாகத்தான் இருந்தது!

அங்கங்கே மேகக் கூட்டங்கள் இருந்தபோதும், அவையும் அழகாகக் காற்றில் அலைபாய்ந்து, துள்ளி



ஓடும் கன்றுகளையே, மனோகரிக்கு நினைவுபடுத்தின.

பிரியரஞ்சனுக்கு அதைக் காட்டி, "தாயை நோக்கி ஓடும் கன்றுக் குட்டிகளைப் போலத் தோன்றவில்லை?" என்றாள் அவள்.

"ஓடுவது சரிதான்... ஆனால், காதலர்கள், ஒருவரை ஒருவர் நாடி விரைந்து செல்வதாக ஏன் சொல்லக் கூடாது?" என்று கேட்டுப் புன்னகை செய்தான் அவன்.

சட்டென மூச்சடைத்தது அவளுக்கு!

முகம் சிவப்பதைத் தவிர்க்க, மனோகரி முயன்று கொண்டிருக்கும்போதே, அருகில் வந்து, ஒற்றை விரலால் அவளது கன்னத்தை வருடி, "அல்லது கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நாடி விரைவதாகக் கூடச் சொல்லலாம் இல்லையா? அதுகூடப் பொருத்தம்தானே?" என்று விட்டு, டவலை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனான் ரஞ்சன்.

அவளது மனம், அவனுக்குப் புரிந்துதான் இருக்கிறது!

அவனுக்கும் அப்படித்தான் என்று, சொல்லாமல் சொல்லுகிறான்!

குளித்துவிட்டு வந்தவனை, நிமிர்ந்து பார்க்கவே மனோகரியால் முடியவில்லை!

அரைகுறையாகவே பார்த்து அவனுக்கு வேண்டியதைப் பரிமாறி, அவன் உண்டு முடிந்ததும். காபியையும் கொண்டு வந்து கொடுத்தாள்.



காபியை வாங்கிக் குடித்துவிட்டு, "இந்தச் சட்டையின் காலரைத் தையல்காரர் அழகாகத் தைத்திருக்கிறாரில்லை?" என்று கேட்டான் பிரியரஞ்சன்.

திகைப்புற்று அவள் நிமிர்ந்து பார்க்கவும், "பார்வை அதற்கு மேல் உயரவே இல்லையா, இந்தக் காலரைத், தான் ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாயோ என்று நினைத்தேன்!" என்று சாதுவாகச் சொல்லிக் கண்ணால் சிரித்தான் அவன்.

கட்டுப்படுத்தவே முடியாமல், குபீரென்று முகம் சிவந்து போயிற்று அவளுக்கு!

சின்னச் சிரிப்புடன், அவளது கன்னத்தைத் தட்டிவிட்டுச் சென்றான் ரஞ்சன்!

அன்று முழுவதுமே, மனோகரிக்குத் தரையில் கால் பாவாத நிலை!

அந்த மேகத்தைப் போலவே, காற்றில் மிதப்பதாகவே உணர்ந்தவள் அவள்!

விட்டால், ரஞ்சன் சொன்னது போலக் கணவனை நாடி ஓட, அவள் தயார்தான்! ஆனால், பார்ப்பதற்குத்தான், பைத்தியக்காரத்தனமாகத் தெரியும் என்று, முகத்தில் நகையுடனேயே நினைத்தாள்!

அன்றையப் பகலை, மனோகரி நெட்டித்தான் தள்ள வேண்டியிருந்தது!

'தொலையாப் பகலே, விடியா இரவே' என்பது போலத் தொலையாப் பகல்தான்!

பொழுதைக் கழிக்க வேண்டி, மதிய நேரத்தில், செடிகளுக்குப் பூவாளியில் மொண்டு, தண்ணீர் ஊற்றினாள்!

மலைவாசி போலத் தோன்றிய ஒருவன், அலுவலகச் சீருடையில், சற்றுத் தொலைவில், சரளா வீட்டுப் பக்கமிருந்து, திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே செல்வது தெரிந்தது.

நிறுவனப் பணியில், மலைவாசிகள் நிறையப் பேர் உண்டுதான்.

ஆனால், இந்த நேரத்தில், இந்த ஆள், இங்கே, எங்கே வந்தான என்று யோசித்துவிட்டு, யார் வீட்டுக்காவது, ஏதாவது சாமான் கொண்டு வந்திருப்பான், சரளா வீட்டுக்கேகூட வந்திருக்கலாம் என்று அசட்டையாகத் தோளைக் குலுக்கித் திரும்பினாள் அவள்!

கடிகார முள் ஐந்தைத் தொட்டதோ, இல்லையோ, மனோகரி மலைக்குக் கிளம்பிவிட்டாள்!

அங்கே, அவளுடைய நாயகன் காத்திருப்பானே!

பிரியரஞ்சனையே நினைத்தபடியே வேகமாகச் சென்றதில், கயிற்றுப் பாலத்தில் ஒரு தரம், அவளது கால்கூடப் பிசகிப் போயிற்று! அவளுடைய ரஞ்சன் கற்றுக் கொடுத்திருந்தபடி, எப்போதும் கைகளால், மேல் கயிற்றை இறுகப் பற்றியிருந்ததால், மனோகரி கீழே விழாமல் தப்பித்தாள்!

எப்படியும், தனக்கு முன்னதாகப் பிரியரஞ்சன் வந்திருப்பான் என்று நிச்சயமான எதிர்பார்ப்புடன் சென்ற மனோகரிக்கு, அவன் அங்கே இல்லை என்றதும், ஏமாற்றத்தில் கண்ணீரே சுரந்துவிட்டது!

இரண்டு சொட்டுக் கண்ணீரை விட்ட பிறகு, 'சே, அவளுக்குள் ஆசை என்றால், வீட்டை ஓரளவு



ஒதுக்கிவிட்டு, எந்த நேரமும் கிளம்பி விடலாம்! சீக்கிரமாகத்தான் வந்தும் இருக்கிறாள். ஆனால், பாவம்! ரஞ்சனால் அப்படிக் கிளம்ப முடியுமா? அவனுக்கு அலுவல் இடத்தில் எத்தனை வேலையோ? எத்தனை திடீர்ப் பிரச்சினையோ? அவற்றையெல்லாம், அவன் தானே, பார்த்தாக வேண்டும்! விரைவாக வேலையை முடித்துவிட்டு, எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக வந்துவிடுவான்' என்று கணவனை நியாயப்படுத்தித் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு, அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடத்தில் உட்கார்ந்து, அவனுக்காகக் காத்திருந்தாள் மனோகரி!

மனோகரி கிளம்பிச் சென்று சற்று நேரத்துக்குப் பிறகு, அவளது வீட்டுப் பக்கம் வந்து, எட்டிப் பார்த்துவிட்டுப் போனாள் சரளா!

அரைமணி நேரத்துக்கும் மேலாகக் காத்திருந்தும், பிரியரஞ்சன் வருவதற்கான அறிகுறி எதுவும் தென்படாது போகவும், மனோகரி கவலையுற்றாள்!

ரஞ்சனுக்கு வேலை மிகுதியா?

உடம்புகிடம்பு சரியில்லையா?

வேலை இடத்தில் ஆபத்து, விபத்து ஏதும் நேர்ந்திருக்குமா?

அப்படி எது என்றாலும், அவளுக்குச் சொல்லி அனுப்பியிருக்கலாமே! அவன் நிச்சயமாகத் தெரிவித்திருப்பான்!

வேலையில் சிறு சிக்கல், அதை முடித்துவிட்டுப் போய்விடலாம் என்று நினைத்து, அது முடியாமல் இழுத்துக் கொண்டே போய்விட்டதா?



அப்படியே ஆனாலும், 'சைட்'டில் வேலை செய்யும யாராவது மலைவாசியிடம் அவளுக்குத் தகவல் தெரிவிக்கும்படி அனுப்பியிருக்கலாமே! அவர்களில் யாரும், அவளைத் தெரியாதவர்கள் இல்லையே!

ஒன்றும் புரியாமல் மேலும் சற்று நேரம் மனோகரி காத்திருந்து பார்த்தாள்.

காத்திருந்து, காத்திருந்து, அங்கே இருளே பரவத் தொடங்கவும் கணவன் இனி, இங்கே வரப் போவதில்லை என்று அவளுக்கு நிச்சயமாயிற்று!

ரஞ்சனுக்கு என்னவோ நேர்ந்துவிட்டது, அந்தப் பரபரப்பில், அவளைப் பற்றி மற்ற எல்லோரும் மறந்திருக்கலாம் என்று ஓர் ஊகம் தோன்றவும், அவளுக்கு நெஞ்சுக்கூடு காலியாகிப்போயிற்று!

மலைப் பகுதியில் மேகங்களும் சேர்ந்து கொள்ளச் சுற்றுப்புறம், சட்டென இருட்டிப் போயிற்று!

அவ்வளவு நேரம் இங்கே இருந்ததே தப்பு!

ரஞ்சன் கூறியிருந்த இருளில் வெளிவரும் பூச்சி பொட்டுகள், மிருகங்களின் நினைவோடு, கணவனுக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலையுமாக, வேகமாகக் கயிற்றுப் பாலத்தை நோக்கி மனோகரி விரைந்தாள்.

பெரிய மரங்களும், அங்கங்கே குண்டு குண்டாகப் புதர்களும், புதர்களுக்குள் எழுந்த சலசலப்புச் சத்தமும், ஆந்தை, கோட்டான் போன்ற இரவுப் பறவைகளின் குரலும் அவளுக்கு அச்சமூட்டிய போதும்,. ரஞ்சனைப் பற்றிய கவலை, அதைவிட



அதிகமாக இருக்கவே, முன்னவைகளை ஒதுக்கி, மனோகரியால் விரைவாகவே நடக்க முடிந்தது!

கயிற்றுப் பாலத்தைத் தாண்டிவிட்டால், அந்தப் பக்கம், இதுபோல வழி மறைக்கும் பெரிய புதர்கள் இராது! சின்னச் செடிகள் தான்! இலகுவாக வீட்டுக்குப் போய்விடலாம்!

பரவியிருந்த முக்கால் இருளில், இருமுறை வழி தவறி, ஒருவாறு கயிற்றுப் பாலத்தை அடைந்தவள், அங்கே பாலத்தையே காணாமல் சட்டெனத் திகைத்து நின்றாள்.

மீண்டும் வழி தவறிவிட்டாளா?

இல்லையே!

கயிற்றுப் பாலத்தில் நடக்கையில் கைகளால் பிடித்துக் கொள்ளும் மேல் கயிறு கட்டப் பட்டிருக்கும் சட்டங்கள் அதே இடத்தில்தான் இருந்தன!

ஆனால் பாலம்?

கண்களை இறுக மூடிமூடித் திறந்து, இருளுக்கு மேலும் பழக்கப்படுத்தி, இருளைத் துளைத்துப் பார்த்தவள் மேலும் திகைத்தாள்.

ஏனெனில், பாலம், மறுபுறப் பிணைப்பின்றி, தொங்கிக் கிடந்தது!

அப்படியானால், அவளால் எப்படி வீட்டுக்குப் போக முடியும்?

எப்படிப் பிரியரஞ்சனைப் பற்றி அறிய முடியும்?

கணவனைப் பற்றிய கவலையே பெரியதாக மறந்திட, பணியிடத்திலிருந்து அவன் ஏறி வரும்

மறுபக்க வழி மூலமாக இறங்கிச் செல்ல, மனோகரி முடிவு செய்தாள்.

ரஞ்சனோடு பேசிக் கொண்டே செல்லும்போது, இதோ வந்துவிட்டதே என்று எண்ணிய இடம், இப்போது இருளில் துழாவியவாறு செல்லும்போது, தொடுவானம் போலச் சென்றடைய முடியாத தூரமாகத் தெரிந்தது!

கண்ணால் தெளிவாகப் பார்க்க முடியாததால், ஒரு பாதையை மனதுக்குள் நிர்ணயித்துக் கொண்டு சென்றால், செல்லும் வழியில் திடீர் திடீர் என்று மரங்களும் புதர்களும் முளைத்து நின்றன.

எப்படியோ சுற்றி வளைத்துச் செல்லுகையில், ஒரே இடத்தை மூன்று தரம் சுற்றி, அதை ஒருவாறு கண்டுபிடித்து, மீண்டும் திசையை யோசித்துச் சென்று ஒரு வழியாய், ரஞ்சன் ஏறிவரும் இடத்தை அடைந்து, இறங்கலாம் என்று கீழே பார்த்தால், அவளுக்குத் தலை சுற்றியது!

ரஞ்சன் எதை எதைப்பற்றி எப்படி ஏறி வந்தானோ, பிடித்துக் கொண்டு இறங்குவதற்கு, அங்க ஒன்றுமே இல்லை!

அல்லது அந்த இருளில் கண்ணுக்குத் தெரிகிற அளவு பெரிதாக ஒன்றும் இல்லை!

எப்படியோ சமாளித்துத் தடவித் தடவி இறங்கலாம் என்றாலும், ஒரே சரிவு! அதிலும், ஒரு சிறு வளைவுக்குப் பிறகு, பாதையே இல்லை! அதாவது, அந்த



இருட்டில் பாதை போல எதுவும், மனோகரியின் கண்ணுக்குத் தெரியவில்லை!

ரஞ்சன் ஏறி வந்த விதம் அவனுக்குத்தான் வெளிச்சம்!

வெளிச்சம்! அந்த வெளிச்சம் கொஞ்சமேனும் இருந்தால், மலைவாசிகள் பயன்படுத்தும் ஒற்றையடிப்பாதை எதையாவது கண்டு பிடித்து, ஏதேனும் ஓர் இடத்துக்கு, அவர்களது குடியிருப்புக்கேனும் போய்விடலாம்!

ஆனால், முக்கால் இருட்டு, இப்போது கும்மிருட்டு ஆகிவிட, அவளது கையையே அவளால் காண முடியாது போயிற்று!

அப்படியானால், இந்தக் காட்டிலிருந்து, அவளால் வெளியேறவே முடியாதா?

சட்டென்று, அவளுக்கு நெஞ்சுக்குள் சிலீரென்றது!

அப்படித்தான், இந்தக் காட்டிலிருந்து அவள் உயிரோடு வெளியேறக் கூடாது என்பதுதான் திட்டமா? யார் திட்டமிட்டது?

சேச்சே! அப்படியெல்லாம் இராது! இந்த இருளும், ரஞ்சனைப் பற்றிய கவலையும், செய்வதறியாத பதட்டமும் சேர்ந்து, அவளைக் கட்டுப்பாடின்றி கண்டபடி நினைக்க வைக்கின்றன!

மற்றபடி, அவளது உயிருக்கு உலை வைக்க யார் இருக்கிறார்கள்?

யாருமே கிடையாது என்று, தனக்குத்தானே அழுத்தத்துடன் கூறியவாறு, அதே அழுத்தத்துடன் பொத்



தென்று பலமாக வைத்த கால் சறுக்கிவிட, அனிச்சைச் செயலாய் அவளது கை அருகில் இருந்த செடியைப் பற்றியதால் மட்டுமே, உருண்டுபோய்க் கீழே விழுவதிலிருந்து, மனோகரி தப்பினாள் எனலாம்!

விழுந்திருந்தால்... என்று எண்ணும்போதே, உடம்பு நடுங்கியது!

ஆபத்தான இடம் என்று அணைத்துக் கொண்டு நிற்பானே!

அணைப்பின் சுகத்தில் மனதில் படாத ஆபத்து, இப்போது புரிந்தது!

இந்தப் பகுதியில் தனியே நிற்பதே தப்பு!

அவசரமாக, அதே சமயம் கவனத்துடன் வேலியைத் தாண்டி உட்புறம் சென்றால், மனோகரியின் பயம் குறைவதற்குப் பதிலாக மேலும் அதிகமாயிற்று!

அங்கங்கே புதர்களில் தெரிந்த இரட்டை ஒளிப் பொட்டுகள் அவளை நடுங்க வைத்தன.

அவை எல்லாம், ஏதோ மிருகங்களின் கண்கள் தானே?

சிங்கம்... புலி... சிறுத்தை... அந்த மாதிரி பெரிய மிருகங்கள் அங்கே கிடையாது என்று ரஞ்சன் சொல்லியிருக்கிறான்!

ஆனால், ஓநாய்? அது, மாமிச பட்சிணிதானே?

இல்லையில்லை! இதெல்லாம் சின்னச் சின்னக் கண்கள்! எலி, பெருச்சாளி, குறுமுயல் போன்ற சிறு பிராணிகளின் கண்களாகத்தான் இருக்கும்!



ஆனால், இந்தக் கண்டு பிடிப்பினால் ஆறுதல் அடைவதற்குப் பதிலாக, அவளது அச்சம், இன்னும் அதிகம் ஆயிற்று!

இந்தச் சிறு பிராணிகள்தானே, பாம்புகளின் உணவு?

எந்தவித அரவமும் இல்லாது நகரும், அந்தக் கொடிய அரவங்களின் வழியில் மாட்டிக் கொள்ளாமல், அவள் எப்படி விலகிப் போவது?

கடைசியாகப் பாம்பு கடித்துத்தான் அவள் சாகப் போகிறாளா?

பாம்புகள் மட்டுமின்றி தேள், நட்டுவாக்கலி, பூரான் என்று தரையில் ஊர்ந்து செல்லும் எத்தனை விஷ ஜந்துக்கள்!

பெரு முயற்சி செய்து, பதட்டத்தை அடக்கி, யோசித்து, நடுங்கிய கைகளால் துழாவி, ஒரு குச்சியை எடுத்து, லேசாகத்தரையில் தட்டியபடியே முன்னேறினாள் அவள்.

அந்தத் தட்டலின் அதிர்வுக்குப் பயந்து பூச்சி, பொட்டுகள் அவளது வழியிலிருந்து ஓடிவிடாதா?

ஆனால் அவளது வழி என்பதுதான் என்ன?

சும்மா, ஒரே இடத்தில் நிற்கப் பயந்து, மனோகரி நடந்தாளே தவிர, எங்கே போகிறோம், என்ன என்று, அவளுக்கு எந்த விதத் தெளிவும் இருக்கவில்லை!

அப்போதும், பின்னிருந்து, பக்கவாட்டிலிருந்து, ஏன் எதிரில் இருந்துகூட, என்ன மிருகம், எப்போது தன் மீது பாயப் போகிறதோ என்ற நடுக்கம்தான்!

இத்தனை பயம், நடுக்கத்துக்கும் மேல், ரஞ்சனுக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலை வேறு. மனோகரியின் மனதின் ஒரு மூலையில் அரித்துக் கொண்டே இருந்தது!

அவனுக்கு ஏதேனும் ஆபத்து என்றால், முதல் பரபரப்பில் மற்றவர்கள் மனோகரியை மறந்திருந்தாலும், இவ்வளவு நேரத்தில், மனைவியான அவளிடம் விஷயத்தைத் தெரிவிக்க முயன்றிருப்பார்களே!

இந்த நேரத்தில், மனோகரி மலைப் பகுதியில் உலாவ வருவது, எல்லோரும் அறிந்த விஷயம் என்பதால், கட்டாயமாக, இங்கேயும் அவளைத் தேடி வந்திருப்பார்களே! கயிற்றுப் பாலம் அறுந்து கிடப்பதைப் பார்த்ததும், கட்டாயமாக, மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்து, அவளைக் காப்பாற்றியும் இருப்பார்கள்!

ஆனால், பிரியரஞ்சனுக்கு ஒன்றும் இல்லை என்றால், இவ்வளவு நேரத்துக்கு, அவனே, அவளைத் தேடி வந்திருக்க மாட்டானா?

வராதிருக்க வேறு காரணம்...

சட்டென அதிர்ச்சியுற்று நின்றாள் மனோகரி!

'மந்திரிகுமாரி என்று பழைய படம் பார்த்தேனா... அதில், கணவன், மனைவியை..'

பக்கத்துப் புதரில் பாம்போ, வேறதுவுமோ இரையைப் பிடித்துக் கொண்டது போலும்!

பிடிபட்ட பிராணியின் மரணக் கூச்சலில் மிரண்டு, தன்னிலை மறந்து கண் மண் தெரியாமல் ஓடிய மனோகரி,



கடைசியில் ஒரு மரத்தின்மீது வலுவாக மோதிக் கொண்டு நின்றபோது, அடிபட்ட வலி, வேதனை, எதுவுமே அவளுக்குத் தெரியவில்லை!

மாறாக முன்னந்தலையில் அடிபட்டு, அரை மயக்கத்தில் இருந்த அப்போதும், தனக்கு இந்தத் துரோகம் செய்தவன் கணவனா என்ற தவிப்பை மட்டும்தான் அவளால் உணர முடிந்தது!



18

சற்று நேரம் மனோகரிக்குச் சுற்றுப்புறமே மறந்து போயிற்று!

காடு, காட்டுப் பிராணிகள், இருட்டு, இதனுள், தப்ப வழியின்றி தன்னந்தனியே நிற்பது எதுவுமே அவளுக்கு நினைவுகூட வரவில்லை!

பிரியரஞ்சன், மெய்யாகவே இதைச் செய்திருப்பானா என்ற திகைப்பு மட்டும்தான், அவளது மூளை முழுவதும் நிரம்பியிருந்தது!

இருக்காது, இருக்காது என்று பலமுறை உள்ளம் புலம்பியபோதும், எப்படியெப்படி யோசித்துப் பார்த்தாலும், அவன்தான் குற்றவாளியாகத் தெரிந்தான்.

அவன்தான், இங்கே உலாவ அழைத்து வந்து பழக்கினான்.

இன்று அவள் இங்கே வருவதையும், காலையில் ஒரு சிறு காதல் நடிப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டான்.



பிறகு...

ஏன் அப்படிச் செய்தான் என்பதற்கும், சரியான விளக்கம் இருந்தது!

சரளா கூறிய விளக்கம்!

ஆனால், சாயாவோடான பழக்கத்தை, மற்றவர் கண்ணுக்கு மறைப்பதற்காக மட்டுமே, அவன் தன்னைக் கட்டாயப்படுத்தி மணந்தான் என்று, இப்போதும் மனோகரி எண்ணவில்லை!

அவன் ஒழுக்கக் கேடாக நடந்திருப்பான் என்பதையும், இப்போதும் அவளால் முழுமையாக நம்ப முடியவில்லைதான்!

ஆனால், நம்பிக்கை வேறு நடப்பு வேறு என்றல்லவா, இன்று ஆகிவிட்டது!

அவள் அறிந்த பிரியரஞ்சன், முழுக்க முழுக்க வேறு மனிதன் ஆயிற்றே! அவன் நல்லவன், உயிரைக் காப்பவன்!

இப்போதானால்...

திடீரென்று இப்போது ஏன் இப்படி என்று யோசிக்கும்போதே, சாயாவுக்கு விவாகரத்து கிடைத்துவிடும் போல இருக்கிறது என்று சரளா சொன்னது, மனோகரிக்கு நினைவு வந்தது!

பாவம், சரளா! சினேகிதிக்காக எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள், ஆனால், அவளையே அல்லவா, மனோகரி விலக்கி வைத்தாள்!

அந்தப் பாவம்தானோ?



அன்று சரளா சொன்னதுபோல, சாயாவுக்கு மணவிலக்கு கிடைத்துவிட்டது போலும்!

அதனால், மனோகரி, அவர்களது இன்ப வாழ்வுக்குப் பெரும் தடையாகத் தோன்றுகிறாள்!

தடைகல்லைத் தூக்கித் தூரப் போடுவதைப் போல, மனோகரியையும் தூர விலக்கிவிட பிரியரஞ்சன் முடிவு செய்விட்டான்!

ரொம்ப தூரம்! இந்த உலகம் அளவு தூரம்!

ஆனால், அவனுக்கு வேண்டாதவள் ஆகிவிட்டால், அதற்காகச் சாகடிப்பதா?

ஓர் உயிரைப் போக்குவது, அவ்வளவு எளிதாகவா இருக்கிறது? 'நீ வேண்டாம், போ!' என்றால், மனோகரி விலகிப் போய்விட மாட்டாளா என்று வலியுடன் எண்ணமிடும்போதே, பிரியரஞ்சனின் காரணம் இப்போது, இன்னமும் மிகத் தெளிவாகப் புரிந்தது!

சௌமினி! அவனுடைய அருமைத் தங்கை! சுந்தர் தங்கையாகப் பாவிக்கும் மனோகரியை ரஞ்சன் விலக்கினால், அப்புறம், அவனுடைய தங்கை சந்தோஷமாக வாழ்வது இயலாது!

அதுவே, மனோகரி தானாக மலையில் சுற்றப்போய் இறந்துவிட்டாள் என்று ஆனால், அது வேறு விஷயம்!

அப்படியே செத்துத் தொலைந்துவிட்டால் என்ன என்றுகூட, ஒரு கணம் மனோகரிக்குத் தோன்றியது!

ஆனால், அவள் இறந்துவிட்டால், அவளுடைய பெற்றோர் எவ்வளவு வேதனைப் படுவார்கள்! அவர்களுக்காகவேனும் அவள் சாகக் கூடாதே!

எந்த நிலையிலும், அவர்களுக்கு, அவள் வேண் டாதவள் ஆக மாட்டாள். நொந்து வந்தவளை, அன்புச் சிறகால் அணைத்து, ஆறுதல் தருவார்கள்!

அந்தக் கணத்தில், பெற்றோரின் அருகாமைக்காக மனோகரி பெரிதும் துடித்துப் போனாள்.

அதிகம் தொட்டுப் பழகுகிறவள் அல்லதான். ஆயினும், அந்தத் தாயின் மடியில் முகம் புதைத்து அழவேண்டும்போல, அவளது மனம் தவித்தது!

ஒரு தரம் அப்படி அழுதால், பாதித் துயரம் குறைந்து போகும்!

அதற்கு, அவள் உயிரோடு இருக்க வேண்டுமே!

இங்கிருந்து எப்படி மீள்வது?

மீள்வது பற்றி யோசித்ததும், மனோகரிக்குச் சுற்றுப் புறம் பற்றிய உணர்வும் வந்தது!

இருட்டு, இரவு விலங்குகள், பறவைகளின் ஒலிகள், சலசலப்புகள்...

எங்கே இருக்கிறாள் என்ன என்று அவளுக்கு ஒன்றும் புரியவில்லை!

ஆனால், முட்டிக் கொண்டு நின்ற மரம், ஏதோ அறிந்த ஒன்று மாதிரித் தோன்றியது!

கயிற்றுப் பாலம் கடந்து வந்தால், சற்றுத் தூரத்தில் கப்பும் கிளையுமாக ஒரு பெரிய மரம் இருக்கும்!! அது இந்த மரமாகவே இருக்கலாம்!

இருந்தால் நல்லது!



எப்படியும், காலை வேளையில் மலைவாசி மக்கள், பக்கத்துக் கிராமங்களுக்குச் செல்ல, இந்தக் கயிற்றுப் பாலத்துக்கு வருவார்கள்! அவர்கள் கயிற்றுப் பாலத்தைச் சீர் செய்வார்கள். இல்லாவிட்டாலும், அவர்கள் மூலமாக, இந்தக் காட்டில் இருந்து வெளி யேற வழி தேடலாம்!

ஆனால், அதுவரை? இதுவரை தப்பிப் பிழைத் ததே பெரிய அதிசயம்! ஆனால், காலை வரை நிச்சயம் தாங்காது!

இரவில் உலவும் நரிகள், செந்நாய்கள் கூட்டங்கள் போன்றவை, அவளை உயிரோடு விட்டு வைக்கும் என்று நம்ப முடியாது! வைக்காது!

பிழைப்பதற்குக் கொஞ்சநஞ்சம் உதவக் கூடிய ஒரே வழி, இந்த மரத்தின் மீது ஏறி, சற்று உயரமான இடத்தில் உட்கார்ந்து கொள்வதுதான் என்று மனோ கரிக்குத் தோன்றியது!

மரத்தில் ஏற எண்ணிக் கையை வைத்தபோது, அழுழுவென்று எதன் மீதோ கை பட்டது!

அவளுக்கு உடல் நடுங்கிவிட்டது!

ஆனால், இதற்காப் பயந்து கீழேயே நிற்க முடியாதே!

உடல் பதறப் பதற, மரத்தின்மீது ஏறி, சற்று உயரத்தில், கிளை பிரிந்த ஓர் இடத்தில் முடிந்தவரை, கீழே விழுந்து விடாத வகையில் அமர்ந்து, விடியலுக்காகக் காத்திருந்தாள் மனோகரி!

ஆனால், வாழ்க்கைதான் அஸ்தமித்துவிட்டது என்று துக்கத்தோடு நினைத்தாள் அவள்!



மனோகரி காத்திருந்தது, விடிவதற்காக! ஆனால், அதற்கு மிகவும் முன்னதாகவே, வேறு குரல்கள் கேட்கலாயின!

பிரியரஞ்சனின் குரலும், கூடவே சாயாவின் குரலும் கேட்கவும், மனோகரி அப்படியே பீதியில் உறைந்து போனாள்?

இவர்கள் இருவருமாக, இப்போது, இங்கே எதற்கு வருகிறார்கள்?

அவள் செத்துவிட்டளா என்று பார்ப்பதற்காகவா? மீறி, உயிரோடு இருந்தால், தலையில் கல்லைப் போட்டுக் கொன்று விடுவதற்காகவா?

அவர்கள் கையில் சிக்கிக் கொள்ளக்கூடாது என்று, கைகால்களைக் குறுக்கிக் கொண்டு, ஒடுங்கி அமர்ந் தாள் அவள்.

ஆனால், படீர், படீர் என்று நெஞ்சு அடிக்கும் ஓசை, அவர்களுக்குக் கேட்டு விடுமோ என்று அஞ்சும் அளவுக்கு, அவளது இதயம் படபடத்தது!

பிரியரஞ்சன், சாயா இருவரிடமும் 'டார்ச்' விளக் குகள் இருந்தன!

ஒன்று மாற்றி ஒன்றைச் சுற்றிலும் அடித்துப் பார்த்த படி இருவரும் வந்து கொண்டிருந்தார்கள்!

அவளைத்தான் தேடுகிறார்கள்! அவளையா? அல்லது, அவளது உடலையா?

"எதற்கும் இன்னொரு தரம் கூப்பிட்டுப்பார், ரஞ்சி! இந்த இருட்டில் மிரண்டு, என்ன நிலையில் இருக்



கிறாளோ? பதில் சொல்லக்கூடத் தெம்பில்லாமல் இருக்கலாம்! இங்கேயும் குரல் கொடுத்துப் பார்க் கலாம்!" என்றாள் சாயா.

அத்தோடின்றி, மனோகரியின் பெயர் சொல்லிக் கூப்பிடவும் செய்தாள்.

பயத்தில் உறைந்து போயிருந்த மனோகரி, பதில் சொல்ல எண்ணியிருந்தால்கூட, தொண்டை ஒத் துழைத்திருக்காது!

ஒரு கணம் பதில் குரலுக்காகக் காத்திருந்துவிட்டு, "எனக்கு நம்பிக்கை இல்லை, சாயா! படித்திருந் தாலும், மனோ கிராமத்துப் பெண். சற்றுப் பயந்த சுபாவம்! இந்தக் காட்டில், இந்த இருட்டில், எதைக் கண்டு மிரண்டு எங்கே விழுந்து கிடக்கிறாளோ என்று..." என்ற ரஞ்சனின் குரல் உடைந்தது!

"ஏய், ரஞ்சி! ஈஸி, ஈஸிடா! நீயே, இப்படிப் பயந் தால் எப்படி? இன்னும் தேடுவோம்! இந்தக் காட் டில், இன்னும் எவ்வளவு இடம் இருக்கிறது! நல்லதே நினை!" என்று ரஞ்சனைத் தேற்றினாள் சாயா.

மனோகரிக்கு சற்று மனம் குழம்பியது! அவள் உயிரோடு இருக்க வேண்டும் என்பது போலல்லவா பேசுகிறார்கள்!

"எப்படி நினைப்பது? இவ்வளவு நேரம் தேடி விட்டோம்... ஆனால், மனோ இருக்கும் அறிகுறியே இல்லையே! அவள் வந்ததை, ஆட்கள் பாத்திருக் கிறார்கள்! ஆனால், திரும்பி வரவில்லையே! இல்லை, சாயா இதற்குமேல், என்னால் தாங்க முடியாது! நான்,

இங்கே இறங்கிப்' பார்க்கப் போகிறேன்!'' என்றான் பிரியரஞ்சன்.

இந்தப் பள்ளத்தாக்கில் இறங்கிப் பார்ப்பதா? ஆபத்தாயிற்றே!

மனோகரி நினைத்ததையே, சாயாவும் சொன்னாள். கொஞ்சம் வேகமாக.

''சுத்தப் பைத்தியக்காரத்தனம்!'' என்றாள் அவள். ''கைப்பிடிப்புக்கு அதிகமாக ஒன்றும் கிடையாது. வழுக்கினால், அப்புறம் சொர்க்கம்தான்! அத்தோடு மனோகரி இந்த இடத்தில்தான் விழுந்திருக்க வேண்டும் என்றும் உறுதியில்லையே!''

''மனோ கீழே விழுந்திருந்தால், இது இந்த இடம் தான், சாயா. முதலில் வரும்போதே பாலம் அறுந்து, அதனால் அதிர்ந்து கைப்பிடியை விட்டிருக்கலாம்! அல்லது, ஆசைக்கு ஒருதரம் உலாவிவிட்டு, வேகமாகத் திரும்பி வரும்போது, பாலம் அறுந்து விழுந்திருக்கலாம்! இரண்டுமே இந்த இடமாகத்தான் இருக்க முடியும்? அதனால்தான், இங்கே இறங்கப், போகிறேன்!'' என்றான் ரஞ்சன்.

மனோகரிக்குப் புரியவில்லை! இவன், இப்போது, தன் உயிரைப் பணயம் வைக்கப் பார்க்கிறானே! ஏன்?

''ஆனால், ஆபத்து, ரஞ்சி! நிச்சயமாக உன்னால், இதில் முழு வழியும் இறங்க முடியாது! வீணாக ஏன், உயிரை விடப் பார்க்கிறாய்?''

ஏன்? அவளது சாவுக்கு வேண்டியதெல்லாம் செய்து விட்டு, எதற்காக, இப்படி என்று? மனோகரிக்கும் புரியவில்லைதான்!



அவன் சொன்னான். ''இரவு முழுவதும் இந்தப் பள்ளத்தாக்கில் கிடந்தால், மனோ பிழைக்க மாட்டாள், சாயா! அவள் இல்லாமல், நான் நிச்சயமாக இல்லை! அதனால்தான்... நூற்றிலொரு வாய்ப்பாக, ஒருவேளை என் மனோ உயிரோடு கிடைத்தால்... ஆனால், ஆனால், மனோ ஏன் இப்படிச் செய்தாள்? வர வேண்டாம். மாரிக்கு ரத்தம் கொடுத்துவிட்டு நான் திரும்ப நேரமாகிவிடும் என்று கடிதம் கொடுத்து அனுப்பிய பிறகு, மனோ, இங்கே ஏன் வந்தாள் என்பதே எனக்குப் புரியவில்லையே! எப்படியோ, கடிதத்தைப் படிக்கத் தவறிவிட்டாளா? ஆனால், பிரிக்கப்பட்ட கடிதம் ஜன்னலருகே, கடிதம் வீட்டில் கிடந்ததே! எல்லாம் என் தலைவிதி, சாயா! இல்லாவிட்டால், பாலம் பிய்ந்திருக்குமா? என்னைத் தடுக்காதே, ப்ளீஸ்! எனக்கு ஒன்றும் ஆகாது! நினைவில்லையா? படிக்கும்போது நாம் இருவருமே, சாரணர் படை, மலை ஏறி இறங்கிப் பழக்கம்தானே!''

அவனது பேச்சின் பின் பகுதி, மனோகரியின் மனதில் பதியவில்லை!

ஆனால், அவன் குறிப்பிட்ட கடிதம்! அப்படி ஒன்று வரவே இல்லையே!

யோசிக்கும்போதே, செடிக்குத் தண்ணீர் ஊற்றும் போது, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போன சீருடை மலைவாசி நினைவு வந்தான்.

அவன், சரளா வீட்டருகே இருந்து சென்றானே!

ஐயோ! சரளாதானா?



அவள்தான், மனோகரியின் எண்ணத்தில் விஷத்தைக் கலக்க முயன்றவளும்கூட!

கடவுளே! அவளுடைய அன்புக் கணவனை என்னவெல்லாம் நினைத்துவிட்டாள்!

ரஞ்சன் கயிற்றுப் பாலத்தின் பக்கமாகச் செல்வதைப் பார்த்ததும் பயந்துபோய், ''ரஞ்ச..ன்..'' என்று அவள் அழைத்தது, அவளுக்கே கேட்கவில்லை!

ஆனால், ரஞ்சன் சட்டென நின்று, ''ஏதோ பலமான மூச்சு மாதிரிக் கேட்கவில்லை?'' என்று சாயாவிடம் வினவினான்.

சாயா சிறு பரிதாபத்துடன் பிரியரஞ்சனைப் பார்க்கையிலேயே, இன்னும் கொஞ்சம் பலத்தைக் கூட்டி வைத்துக் கொண்டு, தன் கணவனை அழைத்தாள் மனோகரி!

''ஆகா இந்த பக்கம்!'' என்று சாயா ஒளிவிளக்கை அடித்துப் பார்க்கையில், மரத்திலிருந்து இறங்க முயன்ற மனோகரி, அவ்வளவு நேரம் அவளை ஆட்டிப் படைத்த உணர்ச்சிக் கொந்தளிப்பும், மன உளைச்சலும், கூடவே களைப்பும் சேர்ந்து தாக்க, அப்படியே உணர்விழந்து சரிந்துவிட்டாள்.

நல்லவேளையாக, அதற்குள் அருகில் வந்திருந்த பிரியரஞ்சன், அவள் கீழே விழாமல் தாங்கிக் கொள்ளவே, மறுபடியும் அடி படாமல், தப்பினாள்!

சோர்ந்து விழுந்தபோதும், கணவனின் அணைப்பில் மனோகரி சீக்கிரமே தெளிவும் அடைந்து விட்டாள்.



'ட்ரெக்கிங்' பழகியிருந்த சாயாவும், ரஞ்சனும் உதவ, அவர்களோடு சேர்ந்து, மலைவாசிகளின் ஆபத்தான பாலத்தின் மூலமாக, மனோகரி வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டுக்கு வந்ததும், அங்கே ஜன்னல் அருகே விழுந்து கிடந்த தன் கடிதத்தை எடுத்து மனைவியிடம் காட்டினான் ரஞ்சன்.

''இதைப் பார்த்த பிறகும், மலைக்கு எப்படி உலாவப் போனாய்? இருட்டும் வரை, அங்கே ஏன் இருந்தாய்?'' என்று கோபக் குரலில் அவளிடம் விவரம் கேட்டான்.

அவனுக்கும் மட்டான மன உளைச்சல் இல்லையே!

அவள் கிளம்பும்வரை கடிதம் கைக்கு வராததையும், மதியம் சீருடை அணிந்த மலைவாசியைப் பார்த்ததையும், மனோகரி சொல்லவும், சாயா பாய்ந்தாள்.

''அவள்தான்! சரளாவேதான்! சும்மா, அடுத்தவரைக் கலவரப்படுத்தி, கஷ்டப்படுத்தப் பார்ப்பதற்காகவே, இப்படிச் செய்யக் கூடியவள் அவள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்! அதனால்தான், அவளை அழைக்க வேண்டாம் என்று, அப்போதே உன்னைத் தடுத்தேன், ரஞ்சி!'' என்றாள் அவள். ''ஆனால், அவள் இந்த அளவுக்குப் போனது, எனக்கே அதிர்ச்சிதான்!''

வியப்புடன் நோக்கி, ''அவளை மணப்பதாக இருந்தீர்களா?'' என்று கணவனிடம் கேட்டாள் மனோகரி.

லேசாகத் தோளைக் குலுக்கி, "அது..." என்று இழுத்தான் அவன். உடனேயே தொடர்ந்து, "அவளுக்குத் தாயார் சரியில்லை என்று, விபாகரன் அப்பாவுக்கு, அவளிடம் ஒரு பரிதாபம்! நானும் விபுவும் இந்த நிறுவனத்தைத் தொடங்கியதும், எங்கள் தொழில் பிணைப்பை மேலும் பலப்படுத்துவதாக எண்ணி, சரளா பற்றிப் பேசினார். யாரும் மறுக்க நினைக்கவில்லை என்று வையேன்! ஆனால், சாயாதான், அவளை மணக்காதே என்று ஒரே பிடியாக நின்றாள்.

"எனக்கு மூன்று நல்ல நண்பர்கள், மனோ! சுந்தர், விபு, சாயா! மூவருமே, எனக்கு நல்லது தவிர, வேறு எண்ண மாட்டார்கள்! எனவே, சாயா சொல்லைக் கேட்டு, நான் திருமணத்தை மறுத்து விட்டேன். விபுவும், அதற்காக ஆத்திரப்படாமல், இது என் தனிப்பட்ட சொந்த விஷயம் என்று என் முடிவை ஏற்றுக் கொண்டான். அத்தோடு விஷயம் முடிந்தது என்று நினைத்திருந்தேன்.

"ஆனால், சரளாவுக்கு எப்படியோ விவரம் தெரிந்திருக்கிறது! ஒரு மோசமான திருமணத்திலிருந்து, சாயாவைக் காப்பாற்றி, இங்கே கூட்டி வந்த பிறகு, அவ்வப்போது, குத்துவது போல, ஏதாவது பேசுவாள். ஏதாவது செய்யட்டுமா என்று கேட்டாள். 'விட்டுத் தள்ளுடா., தேவைப்பட்டால், திருப்பிக் கொடுக்க எனக்குத் தெரியாதா' என்று சாயா சொல்லுவாள். அதனால்தான், அவளோடு நீ நெருங்கிப் பழகியது, எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை'



ஆனால், இதிலெல்லாம் தலையிடுவது எனக்குப் பிடிக்கவில்லை! தடுத்தால், அதுவே எதிர்மறையான வீம்பை உண்டாக்கி விடுமல்லவா? புத்திசாலி என்பதால், எப்படியும் நீயே, அவளைச் சீக்கிரமாகப் புரிந்து கொள்வாய் என்று நினைத்தேன்! புரிந்து கொண்ட மாதிரியும் தோன்றியது!" என்றான் பிரியரஞ்சன்.

மாரியின் விபத்துக்குப் பிறகு, மனோகரி ஒதுங்கியதைக் கவனித்திருக்கிறான்.

இன்று மாலையில் நினைத்ததைச் சொல்லலாமா என்று நினைத்துவிட்டு, வேண்டாம் என்று விடுவித்தாள் அவள். ஒற்றைத் தலைவலி மாதிரிச் சற்று நேரம் அவளைத் துன்புறுத்திவிட்டு, அடியோடு மறைந்து போன ஒன்றைச் சொல்லி, அவனை வருத்துவானேன்?

"உங்கள் இருவரையும் பற்றிக் கொஞ்சம் மோசமாகப் பேசினாள். அது பிடிக்காமல்... அதனால் தான்... ஒதுங்கினேன். இனியும் கவனமாக இருப்பேன்!" என்றதோடு நிறுத்தினாள்.

"இனியுமா? இந்த அளவுக்குப் போயிருக்கிறாள். இன்னும் அவளை, இங்கே இருக்க விடுவதா? அது மட்டுமல்ல ரஞ்சி, நீ அலுவலக ஆளிடம் மனோகருக்குக் கடிதம் கொடுத்து அனுப்பியது, அவள் அண்ணன் கேசவன் மூலமாகத்தானே, அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்!

முதலில் தன் வீட்டிற்குப் போகும்படி, அவன்தான் அலுவலக ஆளிடம் சொல்லியிருக்க வேண்டும். மனோகருக்கு. இங்கே உன் இருக்கை, தலைமைப் பதவிக்கு வர ஆசை. ரஞ்சி! எப்படியோ, தானே

கொடுத்து விடுவதாகச் சொல்லி, உன் கடிதத்தைச் சரளா வாங்கியிருக்க வேண்டும்! அப்புறமாக, விஷயமே தெரியாமல் மனோ கிளம்பிச் சென்றபின், இங்கே வந்து, ஜன்னல் வழியே கடிதத்தைப் போட்டிருக்கிறாள்! மனோ திரும்பி வர மாட்டாள் என்று அவ்வளவு நிச்சயம்! பாலம்கூட, எனக்குச் சந்தேகம் தான், ரஞ்சி! அது ஒன்றும், தானாக இற்றுப் போகக் கூடியது அல்ல! கோர்ட்டுக்குப் போய் நிரூபிக்க முடியாவிட்டாலும், சதிவேலை யாருடையதாக இருக்கும் என்று, நீயே, ஊகித்துக் கொள்ளலாம்! இவர்களை, இன்னமும் இங்கே இருக்க விடுவது, மகாத் தப்பு!" என்று பொரிந்து கொட்டினாள், சாயா.

"கொலை என்கிற அளவுக்குத் திட்டமிட்டிருக்க மாட்டார்கள், சாயா! மனோவை, மிரட்டி, விரட்ட நினைத்திருக்கலாம்!" என்று ரஞ்சன் கூறியபோது, சாயா மீண்டும் பாய்ந்தாள்.

"மனோகரி உயிரோடு கிடைத்து விட்டதால், தைரியமாகப் பேசுகிறாய். சற்று முன் எப்படி உடைந்து போனாய் என்பது நினைவில்லையா? நீ விபுவுக்காகப் பாராதே. இது பெரிய விஷயம்! ஏன், விபுவே கூட, உன் வாழ்க்கை கெடுவதை விரும்புவானா? யோசி. இன்னொரு தரம், இந்தத் தவிப்பைத் தாங்க உன்னால் முடியுமா?" என்று வாதாடினாள்.

"விபுவிடம் சொல்லி, அண்ணனையும் தங்கையையும், அங்கே அனுப்ப ஏற்பாடு செய்கிறேன்!" என்று ரஞ்சன் சொன்ன பிறகுதான் விட்டாள்.

இந்த விஷயம் முடியவும் "மாரிக்கு, மறுபடி என்ன?" என்று விசாரித்தாள் மனோகரி.



"மருத்துவமனையில நோயாளிக் குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுகிறேன் என்று, ஏறிக் குதித்து, விழுந்திருக்கிறான். காயத்திலேயே மீண்டும் அடிபட்டுத் தையல் பிரிந்து விட்டது! நிலைமை புரிந்து, மேலும் காயத்தைப் பார்க்கச் சாயாவையும் அழைத்திருந்தார்கள். அதுதான், இருவருமாகப் போய் ரத்தம் கொடுத்து விட்டு, வரத் தாமதம் ஆகி விட்டது!" என்றான் ரஞ்சன்.

"அவ்வளவுதானாக்கும்! பெண்டாட்டிக்கு, இதை வாங்க வேண்டும்., அதை வாங்க வேண்டும் என்று, அங்கே கடைவீதி முழுவதும் சுற்றி அலைந்தாயே! அதை, அவளிடம் சொல்லவில்லையே! ஆனாலும், கருக்கம்ப்பா, நீ!" என்று கேலியாகச் சிரித்தாள் சாயா!

இவளைத் தவறாக எப்படி எண்ண முடியும் என்று நினைத்தபடி, "அது என்ன?" என்று ஆர்வம் காட்டினாள் மனோகரி!

"அந்த ஞுஞ்ஞு மிஞ்ஞு எல்லாம், உங்களுக்குள் தனியாக வைத்துக் கொள்ளுங்கப்பா! நான் கிளம்புகிறேன்!" என்று எழுந்து, தன் வீட்டை நாடிப் போனாள் சாயா!

சிறு மௌனத்தின் பின், "அங்கே மலையில் வைத்து, என் மனதை நீ அறிந்திருப்பாய்! உன் நிலையையும், சொல்லலாம், அல்லவா?" என்று, சிறு இறுக்கத்துடன் கேட்டான் ரஞ்சன்.

வியப்புடன் அவனைப் பார்த்தாள் மனோகரி.

அதை, அவள் சொல்லித்தானா, அவனுக்குத் தெரிய வேண்டும்?!

மலையில் சற்று நேரம் பதறிய நினைவு வரவும், வியப்பு மறைந்தது.

இதயம் சம்பந்தப்பட்ட விஷயத்தில், ஒரு நிச்சயம் வருவது சிரமம்தான் போலும்!

ஆனால், இதையெல்லாம் வாய்விட்டு எப்படிச் சொல்லுவது?

முகம் லேசாகச் சிவக்க, "நம் நாட்டில், தாலி மகிமை என்று ஒன்று சொல்லுவார்கள். அது என்ன மகிமை என்று, நம் விஷயத்தில் இப்போதுதான் தெரிந்து கொண்டேன்!" என்று சன்னக் குரலில் இயம்பி விட்டுக் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டாள் அவள்!

அவளது கைகளை மென்மையாகப் பிரித்து, "என்னைப் பொறுத்தவரை, அது மட்டும் காரணம் அல்ல, மனோ! அன்று, சென்னையில் அந்த ஹோட்டல் 'லிஃப்டி'ல், உன்னை முதல் முதலாகப் பார்த்ததுமே, ஓர் ஈர்ப்புதான்! அதனால்தான், உன்னைக் கவனித்துக் கொண்டே இருந்தேன். உன்னை அணுக, சுந்தரிடம் அனுமதி கூடக் கேட்டேன்! அவனும் ஓர் அண்ணன் ஆயிற்றே!" என்று அவன் கூறவும் விழி விரிய வியப்புடன் அவனைப் பார்த்தாள் மனோகரி!

"அப்... ப்போதேயா? அப்போது நான்..." என்றவளின் முகம் லேசாகக் கன்றியது!

அவள் என்ன மாதிரி நினைத்துக் கொண்டிருந்தாள்!

புரிந்தவன் போல, அவளது கன்னத்தை வருடினான் பிரியரஞ்சன். "அது, உண்மையான காதல்



இல்லை, மனோ! வெறும்... வெறும் அறியாப் பருவத்து இயக்கம்! ஆங்கிலத்தில், 'பப்பி லவ்' என்பார்கள். அது, அப்போதே எனக்கு நிச்சயம்!" என்றவன், அவள் நம்பாமல் நோக்கவும், குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டு, "நிஜம்மா! மற்றபடி, சில முக்கியமான தருணங்களில், ஜோக்கடிக்கவும், ஜோக்கை ரசிக்கவும், உன்னால் நிச்சயமாக முடிந்திராது! அத்தோடு, நீ தூக்க மாத்திரை வரை போனது, காதல் தோல்வியால் அல்லவே. அந்த வம்புக்காரக் கும்பலின் பேச்சுக்காகவும், அடுத்தவர் முன் தலைகுனிவுக்காகவும்தானே? சுந்தர், சௌமினியை மணப்பதுதான், எப்போதோ முடிவாகி விட்டதாயிற்றே! அதனால் ஏற்பட்ட மனதின் பாதிப்புக்காக என்றால், நீ அப்போதே அல்லவா, மாத்திரையைத் தேடியிருப்பாய்? அப்போதெல்லாம், அந்த மாதிரி எண்ணமே இல்லைதானே?" என்று விளக்கினான்.

யோசித்துப் பார்க்கையில், அவளுக்கும், அது சரியாகவே தோன்றவும், அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் அவள்!

"என்னடா? ம்?" என்று கனிவுடன் கேட்டான் அவன்.

"என்னைவிட, என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்! ஆனால்."

"ஆனால்?"

"ஆனால், சற்று முன் மட்டும் என்னிடம் மனது நோகக் கேட்டீர்களே!"

''என்னுடையது, தொண்ணூற்றொன்பது சதவீதம் நிச்சயமான ஊகங்கள் கணமணி! ஆனால், மனம் சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஊகத்தில் எதை முழு உறுதியாகச் சொல்ல முடியும்? உறுதி செய்யும், அந்த நூறாவது சதவீதம் முத்திரைத் துணுக்கு, உன்னிடம் இருந்துதானே, வரவேண்டும்! அத்தோடு..'' என்றவனின் கண்ணோரங்கள், ரகசியச் சிரிப்பில் சுருங்கின.

''என்ன?'' என்று ஆவலுடன் கேட்டாள் அவள்.

''எனக்கு ஓர் அனுமதி தேவைப்பட்டது!'' என்று அவன் குறுஞ் சிரிப்புடன் கூறவும், அவள் முகம் குபீரெனச் சிவந்து போயிற்று!

ரசனையுடன் நோக்கி, ''என் கண்மணி!'' என்று, ஆவலுடன் அவளை அணைத்தான் அவளுடைய ரஞ்சன்!

☆